# வைக்கம் போராட்டம்
## (1924-2023)
## நூற்றாண்டு மலர்



# வைக்கம் போராட்டம்
# (1924-2023)
# நூற்றாண்டு மலர்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வெளியிட,

மாண்புமிகு கேரளா மாநில முதலமைச்சர்

திரு. **பினராயி விஜயன்** அவர்கள் பெற்றுக்கொண்டார்



# வைக்கம் போராட்டம்

## (1924-2023)

## நூற்றாண்டு மலர்!

**மு.க.ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

31.10.2023

## வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர் வாழ்த்துரை

*“வைக்கத்து வீரர் என யாரைச் சொன்னோம்?*
*‘வை கத்தி!’ தீண்டாமைக் கழுத்தில் என்று*
*வரிப்புலியாய்க் களம் சென்று வாகை சூடி*
*வைத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம் வீரர்!”*

என்று தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது கனல் தெறிக்கும் வரிகளால் எழுதினார். அத்தகைய உணர்ச்சிமிகு எழுச்சிமிகு போராட்டம் தான் வைக்கம் போராட்டம். அது ஏதோ ஒரு தனிப்பட்ட ஊரில் நடந்த போராட்டம் அல்ல. அதற்குப் பின்னால் உலகம் முழுக்க ஒடுக்கப்பட்டோர் எழுச்சிக்கு உரமூட்டிய போராட்டம் தான் வைக்கம் போராட்டம்.

வைக்கம் கோவில் இருக்கும் சாலையில் ஒடுக்கப்பட்ட சமூகத்து மக்கள் நடந்து செல்லக் கூடாது என்ற தடையை நீக்க 1924–ஆம் ஆண்டு தொடங்கிய மாபெரும் மனித உரிமைப் போராட்டம் அது. தடையை மீறி அந்த சாலையில் பயணித்த கேரள சமூகசீர்திருத்தத் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்ட பிறகு – அந்தப் போராட்டத்தின் அடுத்த கட்டம் என்ன என்ற கேள்விக்குறி எழும்பிய போது அன்றைய தினம் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்கள் அங்கு சென்று போராடினார். அவரோடு அவர் மனைவி நாகம்மையாரும், சகோதரி கண்ணம்மாவும் சென்றார். களம் காண்பதிலும் குடும்பமாகக் களம் கண்ட இயக்கம் தான் திராவிட இயக்கம்.

கேரள சமூகநீதி இயக்கத் தலைவர்களான டி.கே.மாதவன், கே.பி.கேசவமேனன், ஜார்ஜ் ஜோசப், போன்றவர்களும் தமிழ்நாட்டுச் சமூகநீதி இயக்கத் தலைவர்களான தந்தை பெரியார், கோவை அய்யாமுத்து போன்றவர்களும் சேர்ந்து நடத்திய மகத்தான போராட்டம் இது. 1924 மார்ச் 30–ஆம் தேதி தொடங்கிய போராட்டம் 1925 நவம்பர் 23–ஆம் தேதி தான் வெற்றியைத் தொட்டது.

தந்தை பெரியார் அவர்கள் 74 நாட்கள் கேரளாவில் சிறை வைக்கப்பட்டார்கள். 67 நாட்கள் கேரளாவில் தங்கி வெவ்வேறு வகையில் போராடினார்கள். மொத்தம் 141 நாட்கள் வைக்கம் போராட்டத்துக்கு தன்னை ஒப்படைத்துக் கொண்டார். வைக்கம் வெற்றிவிழா பொதுக்கூட்டத்திற்குத் தந்தை பெரியாரும், நாகம்மையாரும் கலந்து கொண்டார்கள்.

இத்தகைய மகத்தான வெற்றிப் போராட்டத்துக்கு இது நூற்றாண்டு விழா ஆண்டு ஆகும். இந்நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட தமிழ்நாடு சட்டமன்றத்தில்

விதி எண் 110–இன் கீழ் 30.03.2023 அன்று அறிக்கை அளித்தேன். தமிழ்நாடு அரசைப் போலவே கேரள அரசும் வைக்கம் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. கேரள முதலமைச்சர் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்கள் 01.04.2023 கேரளத்தில் நடத்திய வைக்கம் நூற்றாண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு நான் உரையாற்றினேன். தமிழ்நாடு அரசின் சார்பில் 30.12.2023 அன்று சென்னையில் வைக்கம் நூற்றாண்டு விழா நடைபெற இருக்கிறது.

வைக்கம் நூற்றாண்டு விழாவுக்கு மகுடமாக 'வைக்கம் நூற்றாண்டு மலர்' வெளி யிடப்படுகிறது. நூறு ஆண்டு காலச் சமூகநீதிப் போராட்டங்களுக்குத் தொடக்கமாக அமைந்த வைக்கம் போராட்டத்தின் வரலாற்றை வருங்காலத் தலைமுறை அறிந்து கொள்ளும் பெட்டகமாக இம்மலர் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கியமான சிறப்பு என்னவென்றால் தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மூன்று மொழிக் கட்டுரைகளும் இணைந்த தொகுப்பாக அமைக்கப்பட்டுள்ளது. எல்லைகளைக் கடந்தும் பரவவேண்டியது சமூகநீதிக் கோட்பாடு என்பதால் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் அவர்கள் மிகச்சிறந்த கட்டுரையை வழங்கி உள்ளார்கள். பெரியவர் வே.ஆனைமுத்து, பழ.அதியமான், அ.கா.பெருமாள், வாலாசா வல்லவன், பெருமாள் முருகன், கோ.ரகுபதி, நிர்மால்யா, ப.திருமாவேலன், கி.தளபதிராஜ், ஐஸ்வர்யா ஆகியோரின் தமிழ் கட்டுரைகளும் – டி.டி.ஸ்ரீ குமார், ரவிவர்மா தம்புரான், சுரேஷ் மாதவ், கே.கே.கொச்சு, ஒ.கே.சந்தோஷ், எஸ்.ஷாஜி ஆகியோரின் மலையாளக் கட்டுரைகளும் அவற்றின் தமிழாக்கங்களும் – ராபின் ஜெப்ரீ, வி.பாலாம்பாள், டி.கே.ரவீந்திரன், மேரி எலிசபெத் கிங், சன்னி எம்.கப்பிக்காடு, பழ.அதியமான், கே.ஏ.ஷாஜி ஆகியோரின் ஆங்கிலக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. கட்டுரையாளர்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழரசு' இதழின் சார்பில் இச்சிறப்பு மிகு மலரை தயாரித்துள்ள அதன் ஆசிரியரும் செய்தித் துறை இயக்குநருமான த.மோகன் அவர்களுக்கும் 'தமிழரசு' ஆசிரியர் குழுவுக்கும், மலர்க் குழுவினருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தகைய கசப்பான காலத்தை பல்வேறு போராட்டங்களின் மூலமாக நாம் கடந்து வந்துள்ளோம் என்பதை இன்றைய இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும். இது போன்ற போராட்டக் களங்களை ஆவணப்படுத்த வேண்டும்.

வைக்கம் தியாகிகள் வாழ்க!

சமூகநீதிப் போராட்டங்கள் வெல்க!

அன்புள்ள,



(மு.க.ஸ்டாலின்)

GOVERNMENT OF KERALA

Pinarayi Vijayan

CHIEF MINISTER

No. 891/Press/CMO/23

20 October, 2023

# MESSAGE

I am glad to note that the Government of Tamil Nadu is compiling articles on the Vaikom Satyagraha and bringing out a Vaikom Movement Centenary Special Issue.

Vaikom Satyagraha stands apart among the people's struggles in Indian history. It is unparalleled because the renaissance movement and the national movement came together at Vaikom to struggle for the people's right to access public roads. In a sense, it served as a beacon light in our march forward from monarchy to democracy and united us amidst our diversities, in that effort.

As far as Kerala and Tamil Nadu are concerned, the Vaikom Satyagraha is a reminder of our shared history. Periyar E V Ramasamy Naicker had participated in the struggle, and was subsequently arrested and jailed. Several of our Tamil brothers and sisters who were part of various social reform movements had expressed support to the cause and some of them even participated in the struggle expressing their soulful solidarity to those who braved the repression of caste Hindus and their lords. Kerala and Tamil Nadu are siblings who share the cherished heritage of this glorious people's movement.

Vaikom Satyagraha presents the model of standing together, shoulder to shoulder, in the struggles for our people. It is a telling example of India's foremost ideal, unity in diversity, being put to practice. When there are orchestrated attempts around us to sow hatred and reap

GOVERNMENT OF KERALA
Pinarayi Vijayan
CHIEF MINISTER

No. 891/Press/CMO/23

20 October, 2023

- 2 -

discord, to divide us by misrepresenting our diversities as differences, the memory of Vaikom Satyagraha and the celebration of its centenary serve as sources of immense strength to resist the machinations and devious designs of the communal fascistic forces behind them.

It is in the fitness of things that Thiru M K Stalin, the Chief Minister of Tamil Nadu took the Initiative in commemorating the 100th anniversary of the historical occasion, that augmented the course of history through unchartered realms of progressive heights. I take this opportunity to congratulate him too.

My best wishes to the Vaikom Movement Centenary Special Issue being brought out by the Government of Tamil Nadu. May it enable Kerala and Tamil Nadu to further strengthen our bonds and amplify our struggles for the people.

Pinarayi Vijayan

141, 3rd Floor, North Block
Government Secretariat
Thiruvananthapuram Pin 695001

T 0471 2333241, 2333812, 2333610 F 0471 2333489
E chiefminister@kerala.gov.in
facebook.com/cmokerala twitter.com/cmokerala
www.keralacm.gov.in

Residence
Cliff House
T 0471 2318406, 2314853

மு.பெ. சாமிநாதன்
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

19.10.2023
நாள்.........................

நுழைவாயில்

"என் வாழ்வில் வசந்த காலம் என்பது தந்தை பெரியாரோடு
நான் இளைஞனாக வலம் வந்த காலம்தான்"
– என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

"எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடி ஒலியாய்,
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
எம் தந்தைப் பெரியாரும் வாழ்ந்திட்டார்"
– என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

"தந்தைப் பெரியார் அவர்கள் மானமும், அறிவும் உள்ள மனிதர்களாக ஆக்குவதற்கு அறிவுலக ஆசானாக இந்த நாட்டை வலம் வந்தார், அவர் நடத்திய போராட்டங்கள் யாராலும் காப்பி அடிக்க முடியாத போராட்டங்கள்"
– என்றார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

அத்தகைய இன உணர்வுப் போராளியாக விளங்கிய வங்கத்து தாகூர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், தந்தைப் பெரியார் அவர்களை போற்றும் விதமாக, வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் ஓராண்டு காலம் நடத்தப்படும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 110 விதியின் கீழ் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில் தந்தை பெரியார் அவர்கள் இச்சமுதாயத்திற்காக ஆற்றிய சேவைகள் குறித்து விளக்கும் சிறப்புக்கட்டுரைகளை பல்வேறு ஆளுமைகளிடமிருந்து பெற்று, அதனை தொகுத்து "வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர்" ஒன்றினை, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' சார்பாக உருவாக்கியிருப்பதை எண்ணி பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

வைக்கம் போராட்ட இந்நூற்றாண்டு சிறப்பு மலரினை அனைவரும் படித்து, வைக்கம் போராட்ட வரலாற்று நிகழ்வுகளை தெரிந்துகொள்ள அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்.

அன்புடன்
20/10/2023
(மு.பெ.சாமிநாதன்)

சிவ் தாஸ் மீனா
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

## முன்னுரை

திராவிட சமுதாயத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தவரும், மக்களிடையே சமூக நீதியை நிலைநிறுத்தப் பல்வேறு வகையில் சுயமரியாதைப் போராட்டங்களை நடத்தியவரும் பகுத்தறிவுப் பகலவன் என்று அழைக்கப்படும் தந்தை பெரியார் ஆவார்.

அவர் மேற்கொண்ட போராட்டங்களில் மிக முக்கியமானது கேரளா மாநிலத்தில் நடைபெற்ற வைக்கம் போராட்டமாகும்.

இம்முக்கியத்துவம் வாய்ந்த வைக்கம் போராட்டம் துவங்கிய 1924 மார்ச் 30ஆம் நாளினை வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவாக ஓராண்டு காலம் கொண்டாட தமிழ்நாடு அரசு முடிவெடுத்து, சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, இவ்வைக்கம் போராட்டத்தின் வரலாற்றை அனைத்துத் தரப்பினரும் தெரிந்து கொள்ளும் வகையில், தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை தமிழரசு பத்திரிகை வாயிலாக வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர் ஒன்றினை உருவாக்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

இம்மலரினை வாசிப்போம், வைக்கம் வரலாற்றை போற்றிப் பாதுகாப்போம்.

அன்புடன்,

சிவ்தாஸ் மீனா

தொலைபேசி: 044–25671555 நிகரி: 044–25672304 மின்அஞ்சல்: cs@tn.gov.in

முனைவர் இரா. செல்வராஜ், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

# வாழ்த்துரை

சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூகநீதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கை தந்தைப் பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்டு, இந்த நூற்றாண்டில் அனைத்து சமூகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டு வாழும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

சமூகநீதியின் சிந்தனையை விதைக்கும் அடையாளமாக அறிவுலக மேதையான தந்தைப் பெரியார் அவர்கள் 1924 மற்றும் 1925-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவினை கொண்டாட வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள்.

அதன்படி, சமூகநீதிக்காக எல்லைகளைக் கடந்து போராடி வரலாற்றில் இடம்பெறும் வகையில் வைக்கம் போராட்டத்தை பல புரட்சிகள் மூலம் வெற்றி கண்ட தந்தைப் பெரியார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்புத்துறை, 'தமிழரசு' சார்பில் "வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர்" ஒன்றினை படைத்திருக்கிறது.

தமிழ்நாடு மற்றும் கேரள மாநில ஆளுமைகளிடமிருந்து பெறப்பட்ட இக்கட்டுரை முத்துக்களை மிக நேர்த்தியாகத் தொகுத்து மலராக வெளியிட்டிருப்பது பாராட்டுதற்குரியது.

இச்சிறப்பு மலர் தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒரு மணிமகுடமாகத் திகழ ஓய்வின்றி உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

இரா. செல்வராஜ் 26/10/23
(இரா. செல்வராஜ்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 600 009. மின்னஞ்சல்: tdinfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044–25672887, நிகரி : 044–25672021

**த. மோகன்,** இ.ஆ.ப.
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
நாமக்கல் கவிஞர் மாளிகை (9–வது தளம்)
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தொலைபேசி : 044–25671300
நிகரி : 044–25677777
மின்னஞ்சல் : dipr@tn.gov.in

**மலர் ஆசிரியர் உரை**

தந்தை பெரியார் அவர்கள் தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் மட்டும் சொந்தமானவர் அல்ல, அவர் மொழி கடந்தவர், நாடு கடந்தவர்.

தந்தை பெரியாராக போற்றப்படுவதற்குக் காரணமான போராட்டக் களங்கள் பல உண்டு. அதில் ஒன்றுதான் காலத்தால் மறக்க முடியாத கேரளா மாநிலத்தின் "வைக்கம் போராட்டம்".

இந்தியாவின் கோயில் நுழைவுப் போராட்டங்கள் அனைத்திற்கும் முன்னோடியாகத் திகழ்ந்த இந்த வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா ஓராண்டு காலம் கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 110 விதியின் கீழ் 30.03.2023 அன்று அறிவித்தார்கள்.

அவ்வறிவிப்பினைத் தொடர்ந்து, தந்தை பெரியார் அவர்களைப் போற்றும் வகையில், நூற்றாண்டு கண்ட வைக்கம் போராட்டம் நூற்றாண்டு குறித்து அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்களின் கருத்துகளைத் தொகுத்து தமிழ்நாடு அரசின், செய்தி மக்கள் தொடர்புத்துறை 'தமிழரசு' சார்பில் "வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்" என்ற சிறப்பு மலரினை உருவாக்கி வெளியிட்டிருக்கிறது.

இந்த வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்கும் வகையில் இச்சிறப்பு மலர் மூலம் செய்தி மக்கள் தொடர்புத்துறையானது தந்தை பெரியார் அவர்களைப் போற்றி பெருமைப்படுத்தியிருக்கிறது என்றால் அது மிகையாகாது.

வைக்கம் போராட்ட இந்நூற்றாண்டு மலரினை உருவாக்க அரும்பாடுபட்டு பணிபுரிந்த துறை அலுவலர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

அன்புடன்

(த.மோகன்)

# தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது : ஐப்பசி - கார்த்திகை
**நவம்பர் 2023**

## வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்

### சிறப்பு மலர்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் - வெளியிடுபவர் | : | **த. மோகன், இ.ஆ.ப.,**<br>இயக்குநர்,<br>செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்<br>அலுவலால் அரசு இணைச் செயலாளர் |
| நிருவாக ஆசிரியர் | : | **இரா. அண்ணா**<br>இணை இயக்குநர் (வெளியீடுகள்) |
| முதன்மைப் பொறுப்பாசிரியர் | : | **அ. மகேஸ்வரி**<br>உதவி இயக்குநர் |
| பொறுப்பாசிரியர்கள் | : | **க.அ. முகம்மது ரசூல்**<br>**எஸ். உதயா கதிரவன்**<br>**ச. மஞ்சுளா**<br>செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் |
| உதவி ஆசிரியர்கள் | : | **மு. மணிமேகலை**<br>**சி. சுஜிதா**<br>**இரா. பாலாஜி**<br>**கு. சுபாஷ்** |
| நிருபர்கள் | : | **எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்**<br>**ஜெ.ஜெயசிம்ஹன்** |
| ஓவியர் | : | **இரா. உமாமகேஸ்வரி** |
| இதழ் உதவியாளர் | : | **நி. ஷீலா** |
| கணினி வடிவமைப்பு | : | **தி. ஜெய்சங்கர்**<br>**க.இரா. உமாமகேஸ்வரி** |
| முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர் | : | **கோ. சந்திரசேகர்** |
| இளநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர் | : | **த. பிரியா** |

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
**தமிழரசு அலுவலகம்**
எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 044 – 2254 2221 / 22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in,
இணையதளம் : www.tndipr.gov.in

“ சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூகநீதி, இன உரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கையைத் தந்தைப் பெரியார் அவர்கள் உருவாக்கினார்கள். அதுதான் கடந்த நூற்றாண்டில் இந்தச் சமூகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது. எதிர்காலத்துக்குப் பாதை அமைத்துத் தரப்போகிறது. ”

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



# பொருளடக்கம்


**இராமசாமியாக இருந்தவர் தந்தை பெரியாராக வளரக் காரணமான வைக்கம் போராட்டக்களம்!** ........ 16

**இந்தியாவுக்கே வழிகாட்டிய வைக்கம் போராட்டம்!** ........ 22

**வைக்கம் சத்தியாகிரகம் கேரளத்துக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டுக்கும் பெருமை!** ........ 30

**வைக்கம் போராட்டம் கால நிரல்** ........ 34
- பழ.அதியமான்

**பெரியார் விவரிக்கும் வைக்கம் காட்சிகள்** ........ 40

**வைக்கம் போராட்டம்: தலைவர்கள் பார்வையில்** ........ 46

## கட்டுரைகள்

**கடந்த நூற்றாண்டில் இந்தியாவில் வெற்றியைத் தழுவிய முதல் மனித உரிமைப் போராட்டம்!** ........ 56
- கி.வீரமணி

**கேரளத்தில் ஏழு நாட்கள்** ........ 64
- வே.ஆனைமுத்து

**அன்று இருந்த சூழ்நிலைகள்** ........ 70
- வாலாசா வல்லவன்

**பெரியாரும் சுசீந்திரம் கோவில் நுழைவுப் போராட்டமும்** ........ 76
- அ.கா.பெருமாள்

**வைக்கம் போராட்டம்: வரலாற்றுச் சாதனை** ........ 84
- பெருமாள்முருகன்

சமத்துவத்துக்கான விவாதங்கள் ........................................ 92
- கோ.ரகுபதி

டி.கே.மாதவனுடன் ஒரு தலித் போராட்ட நாயகன் ...................... 98
- நிர்மால்யா

வைக்கம் வீரர் மட்டுமல்ல... கேரள வீரர்! .................................. 106
- ப.திருமாவேலன்

விடை கொடுக்க மறுக்கும் வைக்கம் நினைவுகள் ........................116
- கி.தளபதிராஜ்

வைக்கத்தில் ஈரோட்டுப் பெண்கள்! .........................................124
- ஐஸ்வர்யா

## மலையாளத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரைகள்

வைக்கம் சத்தியாகிரகத்தின் நூறு வருடங்கள் .............................132
- முனைவர் டி.டி.ஸ்ரீகுமார்

கேரள மறுமலர்ச்சியில் தமிழ் மரபின் வேர்கள் ............................140
- ரவி வர்மா தம்புரான்

வைக்கம் சத்தியாகிரகத்தின் முதல் ரத்தசாட்சி ..............................146
-முனைவர் சுரேஷ் மாதவ்

வைக்கம் சத்தியாகிரகம்: சாதி எதிர்ப்பும் பெரியாரும் ....................154
- கே.கே.கொச்சு

வைக்கம் சத்தியாகிரகம்: வரலாறும் சமகாலமும் ..........................164
- முனைவர் ஒ.கே.சந்தோஷ்

சாதியமைப்பும் வைக்கம் சத்தியாகிரகமும் ...................................170
- முனைவர் எஸ்.ஷாஜி

## ஆங்கில கட்டுரைகள் (ARTICLES)

Temple-entry Movement in Travancore, 1860-1940 ................ 180
- ROBIN JEFFREY

E.V.R and vaikom satyagraha ............................................... 186
- V. Balambal

Eight Furlongs of Freedom ............................................... 196
- Dr T.K.RAVINDRAN

Gandhian Nonviolent Struggle and Untouchability in South India ....................................... 200
- Mary Elizabeth King

Historical Significance of Thanthai Periyar .....................210
- SUNNY M KAPIKKAD

Gandhi at Vaikom ........................................................216
- Pazha. Athiyaman

Periyar, the Hero of Vaikom ........................................... 220
- Pazha. Athiyaman

Thanthai Periyar's role and his many differences with Gandhi ............................................................... 224
- K.A.Shaji

## മലയാള ലേഖനങ്ങൾ

ഡോ. ടി ടി ശ്രീകുമാർ ...................................................... 230
രവിവർമ തമ്പുരാൻ ........................................................... 238
ഡോ. സുരേഷ് മാധവ് ........................................................ 244
ഡോ.ഒ.കെ.സന്തോഷ് ........................................................ 252
ഡോ. എസ്. ഷാജി ............................................................. 260

தமிழ்ப் போராட்டக்காரர்கள் ............................................. 268

ஆவணங்கள் ................................................................. 272



# வைக்கம் போராட்டம்
## (1924-2023)
## நூற்றாண்டு மலர்!





# இராமசாமியாக இருந்தவர் தந்தை பெரியாராக வளரக் காரணமான வைக்கம் போராட்டக்களம்!



***தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 30–03–2023, அன்று வைக்கம் போராட்டம் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் குறித்து, விதி 110இன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த அறிக்கை***

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வரலாற்றிலே ஒரு முக்கியமான நாள். 1924ஆம் ஆண்டு, மார்ச் 30 அன்று, மாபெரும் சமூக சீர்திருத்தத்திற்கு அடையாளமாக விளங்கும் வைக்கம் போராட்டம் தொடங்கியதன் நூற்றாண்டு தொடக்க நாள் இன்று.

அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நாளில் வைக்கம் போராட்டம் வெற்றி பெறக் காரணமாக இருந்த பகுத்தறிவுப் பகலவன் வைக்கம் வீரர் தந்தை பெரியாரைப் போற்றும் விதமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு ஒன்றை விதி 110இன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, இந்த மாமன்றத்தில் வெளியிடுவதை என் வாழ்வில் கிடைத்தற்கரிய நல்வாய்ப்பாக எண்ணி மகிழ்கிறேன்.

தந்தை பெரியார் அவர்களைப் பற்றி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய கவிதை வரிகள் சிலவற்றை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு**
**பொங்குற்ற வேங்கை போல்**
**நிமிர்கின்ற பார்வை உண்டு**
**செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு**
**வெண் சங்கொத்த கண்களிலே**
**விழியிரண்டும் கருவண்டு**
**அதில் சாகும்வரை ஒளி உண்டு!**
**பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றியபின்**
**இவரோ, படுகிழமாய்ப் போன பின்னும்**
**பம்பரமாய்ச் சுற்றி வந்தார்;**
**எரிமலையாய்ச் சுடுதழலாய்**
**இயற்கைக் கூத்தாய்**
**எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடி ஒலியாய்**
**இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்**
**இழிவுகளைத் தீர்த்துக்கட்டும் கொடுவாளாய்**



**இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்**
**எப்போதும் பேசுகின்ற ஏதென்ஸ் நகர் சாக்ரடீசாய்**
**ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்**
**எம்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்.**

இவை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களைப் பற்றி எழுதிய கவிதை வரிகள்.

திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முறையாக, 1967ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, 'இந்த ஆட்சியே தந்தை பெரியாருக்குக் காணிக்கை' என்றார் பேரறிஞர் அண்ணா. உடனடியாக பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் முதலானோர், திருச்சி சென்று பெரியாரைத்தான் முதன்முதலில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். இப்போது ஆறாவது முறை ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசும்,

இப்போது தந்தை பெரியார் காட்டிய சமூக முன்னேற்றப் பாதையில்தான் பயணிக்கிறது.

“ஈ.வெ.இராமசாமி என்கிற நான், திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல, மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு, அதே பணியாய் இருப்பவன். இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ, இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணியைச் செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு, தொண்டாற்றி வருகிறேன்” என்று அறிவித்து, 95 வயது வரை, இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களுக்காக சமூகநீதியை நிலைநிறுத்திடவும் அவர் நடத்திய சுயமரியாதைப் போராட்டங்கள் பற்பல. அவற்றில் மிக முக்கியமான போராட்டம்தான் வைக்கம் போராட்டம்.

1924–1925ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த வைக்கம் போராட்டம் என்பது, இந்தியாவின் சமூக சீர்திருத்த வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது; இந்தியாவின் கோயில் நுழைவுப் போராட்டங்கள் அனைத்திற்கும் முன்னோடியாகத் திகழ்ந்தது; ஒடுக்கப்பட்டவர்கள் சமத்துவ உரிமையைப் பெறுவதில் முதற்படியாக அமைந்தது என்று சொன்னால், அது மிகையல்ல.

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் உள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றிலும் அமைந்துள்ள தெருக்களில், ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக் கோரி நடந்ததுதான் வைக்கம் போராட்டம்.

1924ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள், கேரளத் தலைவர் டி.கே.மாதவன் அவர்களால் தொடங்கப்பட்டது அந்தப் போராட்டம். அந்தப் போராட்டம் தொடங்கிய சில நாட்களிலேயே, அதே பகுதியைச் சேர்ந்த முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். தலைவர்கள் இன்றி போராட்டம் தவித்தது. இந்தச் சூழலில், கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அப்போது இருந்த தந்தை பெரியார் அவர்கள், வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார்.

பல நாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்தார். வெகுமக்களிடம் அந்தப் போராட்டம் குறித்து பரப்புரை செய்து, போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். போராட்டக் காலத்தில் இரண்டு முறை பெரியார் கைது செய்யப்பட்டார். முதல்முறை, ‘அருவிக் குட்டி’ என்ற ஊரின் காவல் நிலையச் சிறையில், ஒருமாத காலம் சிறை தண்டனை அனுபவித்தார். இரண்டாம் முறை வழங்கப்பட்ட நான்குமாதக் கடுங்காவல் தண்டனையை, திருவனந்தபுரம் சிறையில் கழித்தார். மற்றவர்கள் அனைவரும் அரசியல் கைதிகள் போல நடத்தப்பட்டார்கள். ஆனால் தந்தை பெரியார் அவர்களின் கையிலும், காலிலும் விலங்கு போடப்பட்டு, கழுத்தில் மரப்பட்டை அணிவிக்கப்பட்டு வைக்கப்பட்டு இருந்தார். சாதாரண கைதியைப் போலவே தந்தை பெரியார் நடத்தப்பட்டார்.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும், உடனே திரும்பாமல், வைக்கம் சென்று மீண்டும் போராடினார் தந்தை பெரியார். வைக்கம் போராட்டத்தில்

ஈடுபட்டு 74 நாட்கள் சிறையில் இருந்தார்; 67 நாட்கள் அங்கேயே தங்கி போராடினார்; மக்களைத் திரட்டினார். ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்ற வைக்கம் போராட்டம், 1925 நவம்பர் 23ஆம் நாள் முடிவுக்கு வந்தது. 1925 நவம்பர் 29ஆம் நாள் பெரியார் தலைமையில் வைக்கத்தில் வெற்றி விழாவும் நடைபெற்றது. 'வைக்கம் வீரர்' என்று பெரியாரைப் பாராட்டினார் 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. அவர்கள். 'திருவனந்தபுரம் சிறையில் இருக்கும் தீரரைத் தமிழ்நாடு பாராட்டுகிறது' என்று சுதேசமித்திரன் இதழில் எழுதினார் மூதறிஞர் ராஜாஜி அவர்கள்.

போராட்டக்காரர்களுக்கும், மன்னருக்குமான பேச்சுவார்த்தையை நடத்திய அண்ணல் காந்தியடிகள் அவர்கள், தந்தை பெரியாரையே உடன் அழைத்துச் சென்றார். கோயில் தெருவில் அனைவரும் நடக்கலாம் என்ற உரிமையைப் பெற்றுத்தந்த வெற்றி விழாவுக்கு, தந்தை பெரியாரும், நாகம்மையாரும் அழைக்கப்பட்டார்கள். 1929ஆம் ஆண்டு மகர் போராட்டத்தைத் தொடங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தனக்கு ஊக்கமளித்த போராட்டமாக வைக்கம் போராட்டத்தையே குறிப்பிடுகிறார். இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகின்றன. இன்று வரையில் வைக்கம் போராட்டம் என்பது சமூகநீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

எளிய மக்களுக்காக எல்லைகளைக் கடந்து போராடி, வரலாற்றில் இத்தகைய புரட்சிகளை நிகழ்த்தி வெற்றி கண்ட தந்தை பெரியார் அவர்களின் நினைவைப் போற்றவும், சமூகநீதிக் கருத்துகளைத் தொடர்ந்து வலியுறுத்தவும், "வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா" நிகழ்ச்சிகளை, தமிழ்நாடு அரசு சிறப்பாக நடத்தத் திட்டமிட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் உண்மையிலேயே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வைக்கம் போராட்டம் தொடங்கிய மார்ச் 30ஆம் நாளில், வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசு தொடங்கவுள்ளது. வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிகழ்ச்சிகள், 2023ஆம் ஆண்டு, மார்ச் 30ஆம் நாள் தொடங்கி, ஓராண்டு முழுவதும் நடத்தப்படும். போராட்டத்தின் வரலாற்றையும், நோக்கத்தையும், வெற்றியையும் பொதுமக்களும், மாணவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகள் செய்யப்படும்.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா, பின்வரும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக இருக்கும் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

1. வரும் ஏப்ரல் 1, 2023 அன்று, கேரள அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா" நிகழ்ச்சியில், மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களோடு நானும் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்கிறேன். வைக்கம் போராட்டம் நடைபெற்ற இடத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நினைவுத் தூணுக்கு மரியாதை செலுத்துகிறோம்.

2. தமிழ்நாட்டில் மிக முக்கியமான ஆய்வாளர்களில் ஒருவரான பழ.அதியமான் அவர்கள் எழுதிய "வைக்கம் போராட்டம்" என்ற தமிழ் நூலின் மலையாள மொழிபெயர்ப்பு வெளியிடப்படுகிறது.

3. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் கேரளாவில் உள்ள டி.சி.பதிப்பகம் ஆகியவற்றின் கூட்டு வெளியிடாக இது வெளியிடப்படவுள்ளது. இந்த நூலின் தெலுங்கு, கன்னடம், ஆங்கிலப் பதிப்புகளும் விரைவில் வெளியிடப்படும்.

4. இந்த ஆண்டு நவம்பர் 29 அன்று, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இருமாநில முதலமைச்சர்கள் மற்றும் பல்வேறு ஆளுமைகள் பங்கேற்கக்கூடிய வகையில், வெகு சிறப்பான நிகழ்ச்சி ஒன்று தமிழ்நாடு அரசால் நடத்தப்படும்.

5. எல்லை கடந்து சென்று வைக்கத்தில் போராடிய பெரியார் அவர்களை நினைவுகூரும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் "வைக்கம் விருது" சமூகநீதி நாளான செப்டம்பர் 17ஆம் நாளன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்படும்.

6. கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீனமுறையில் மறுசீரமைக்கவும், பெரியார் தொடர்பான நினைவுப் பொருட்கள் கூடுதலாக இடம் பெறுவதற்கும் 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு முதன்முதலாக சிறை வைக்கப்பட்டிருந்த 'அருவிக்குட்டி' கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்று புதிதாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

8. வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நினைவாக சிறப்பு நினைவு அஞ்சல் தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

9. தமிழ்நாட்டின் முக்கிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் வைக்கம் போராட்டம் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படும். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் வினாடி – வினா உள்ளிட்ட போட்டிகளை நடத்திப் பரிசுகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த விழிப்புணர்வை மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்கக்கூடிய வகையில், 64 பக்க

நூல் ஒன்று கொண்டுவரப்படும். அது தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலமாக வெளியிடப்பட்டு, விற்பனை செய்யப்படும். இந்த நூல், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒலிப்புத்தகமாகவும் வெளியிடப்படும்.

11. வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகள் பலவற்றை பல்வேறு அறிஞர்களிடமிருந்து பெற்று தொகுத்து வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர் ஒன்று 'தமிழரசு' அச்சகம் மூலம் கொண்டு வரப்படும்.

இவை அனைத்தும் வரும் ஓராண்டு காலத்திற்குள் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

ஒரு சீர்திருத்த இயக்கம், அரசியல் பரிணாமம் பெற்று, ஆட்சியைப் பிடித்து, பேசிய கொள்கைகளை நிறைவேற்றும் சட்டங்களை இயற்றும் தகுதியை அடைந்தது, இந்திய அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கத்துக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகப் பெரிய பெருமை. அத்தகைய பெருமைமிகு திராவிட மாடல் ஆட்சி நடந்து கொண்டு இருக்கும்போது, வைக்கம் நூற்றாண்டு விழா வருவது பொருத்தமான ஒன்று. சாதாரண இராமசாமியாக இருந்தவர் தந்தை பெரியாராக வளரக் காரணமான போராட்டக் களம் அது. அத்தகைய சமூக சீர்திருத்த நோக்கம் கொண்டவர்களாக இன்றைய இளைய சமுதாயம் திகழ, இதுபோன்ற கடந்தகால வரலாறுகளை நாம் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

பெரியார் என்பவர், தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் மட்டும் சொந்தமானவர் அல்ல; அவர் மொழி கடந்தவர்; நாடு கடந்தவர் என்பதை அவரது கருத்துகளின், செயல்களின் மூலம் நிரூபித்துக் காட்டியவர். சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூகநீதி, இன உரிமை ஆகியவை உலகளாவிய கொள்கைகள். நேற்றைய கிளர்ச்சிக்கும், இன்றைய முயற்சிக்கும், நாளைய வளர்ச்சிக்கும் அடிப்படையானவை தந்தை பெரியாரின் கருத்தியல்கள். அத்தகைய சுயமரியாதைச் சமதர்மப் பாதையில் நமது திராவிட மாடல் அரசு தொடர்ந்து செயல்படும் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

# இந்தியாவுக்கே வழிகாட்டிய
# வைக்கம் போராட்டம்!



***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.04.2023 அன்று கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் நடைபெற்ற வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.***

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்துள்ள மாண்புமிகு கேரள முதலமைச்சரும் எனது அன்புக்குரிய தோழருமான திரு. பினராயி விஜயன் அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

மாண்புமிகு கேரள சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே,

மாண்புமிகு சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே,

தி.மு.க. பொருளாளர் திரு. டி.ஆர். பாலு அவர்களே,

தமிழ்நாடு CPM செயலாளர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களே,

எஸ்.என்.டி.பி. பொதுச்செயலாளர்,

கே.பி.எம்.எஸ். பொதுச்செயலாளர்,

கேரள நவோதன சமிதி பொதுச் செயலாளர் உள்ளிட்ட கேரள அனைத்துக் கட்சித் தலைவர்களே,

என் அன்புக்குரிய, திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மலையாள மொழி பேசும் கேரள சகோதரி, சகோதரர்களே,

உங்கள் அனைவருக்கும் வணக்கத்தையும், தமிழ்நாடு மக்கள் சார்பில், இந்த விழாவை ஏற்பாடு செய்ததற்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மார்ச் 6ஆம் நாளன்று நாகர்கோயிலில் நடந்த தோள்சீலைப் போராட்டத்தின் 200ஆவது ஆண்டு விழாவில் நானும் கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களும் கலந்து கொண்டோம்.

அந்தக் கூட்டத்தில் பேசிய நான், "வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகப் போகிறது. அதனைத் தமிழ்நாடு அரசும், கேரள அரசும் இணைந்து வைக்கம் நூற்றாண்டு வெற்றிவிழாவைக் கொண்டாட வேண்டும்" என்று நான் வேண்டுகோள் விடுத்தேன்.

எனக்குப் பிறகு பேசிய மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள், அதனை உறுதிப்படுத்திப் பேசினார்கள்.



நாங்கள் நடத்துகிறோம் – நீங்கள் வருகை தாருங்கள் என்று எனக்கு அந்த மேடையில் வைத்தே அழைப்பு விடுத்தார்கள். உடலால் நாம் வேறு வேறு என்றாலும் உணர்வால் ஒருவர் என்பதை அந்த மேடையிலேயே திரு. பினராயி விஜயன் அவர்கள் நிரூபித்தார்கள்.

சில நாட்களில் கேரள அமைச்சர் திரு. சாஜி செரியன் அவர்களை சென்னைக்கு அனுப்பி வைத்து என்னைச் சந்திக்க வைத்தார்கள்.

வைக்கம் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு சகோதரர் திரு. பினராயி விஜயன் அவர்கள் அழைத்து நான் இதுவரை வராமல் இருந்தது இல்லை.

தமிழ்நாட்டில் இப்போது சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்து கொண்டு இருக்கிறது. என்றாலும் வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவுக்கு நிச்சயம் சென்றாக வேண்டும் என்று நான் இங்கே வந்துள்ளேன்!

கேரளாவே இங்கு திரண்டு வந்திருக்கிறது என்று சொல்லத்தக்க அளவில் மிகப்பிரமாண்டமாக நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வைக்கம் – என்பது இப்போது கேரள மாநிலத்தில் இருந்தாலும், தமிழ்நாட்டுக்கு எழுச்சியை – உணர்ச்சியை ஏற்படுத்திய ஊர்!



1924ஆம் ஆண்டு வைக்கத்தில் நடந்த போராட்டம் என்பது, கேரளத்தின் சமூகநீதி வரலாற்றில் மட்டுமல்ல – தமிழ்நாட்டு சமூகநீதி வரலாற்றிலும் மகத்தான போராட்டம்! இன்னும் சொன்னால் இந்தியாவுக்கே வழிகாட்டிய போராட்டம்!

"வைக்கம் போராட்டம்தான் மகர் போராட்டத்தை நடத்துவதற்கு எனக்குத் தூண்டுதலாக அமைந்திருந்தது" என்று அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பிற்காலத்தில் எழுதினார்கள்.

வைக்கம் போராட்டத்தின் தூண்டுதலால்தான் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் அண்ணல் காந்தியடிகள் அவர்கள் அதிகம் கவனம் செலுத்தினார்கள்.

தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஈரோட்டிலும் சுசீந்திரத்திலும், திருவண்ணாமலையிலும், மதுரையிலும், திருச்சியிலும், மயிலாடுதுறையிலும் கோவில் நுழைவுப் போராட்டங்களை நடத்துவதற்கான தூண்டுகோலாக இருந்தது வைக்கம் போராட்டம்தான். எனவே, சுயமரியாதை–சமூகநீதிப் போராட்டத்தின் தொடக்கமான வைக்கம் மண்ணில் நிற்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன். வெற்றிப் பெருமிதத்துடன் நான் இங்கே கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறேன்.

சூத்திரர்கள் என்றும், பஞ்சமர் என்றும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களைத் தலைநிமிர வைக்க கேரளத்திலும் தமிழ்நாட்டிலும் சீர்திருத்த இயக்கமானது பல்லாண்டு காலமாகச் செயல்பட்டு வருகிறது. இதனைச் சீர்திருத்த இயக்கமாக மட்டுமே சுருக்கிச் சொல்லி விட முடியாது. இவைதான் புரட்சி இயக்கங்கள்!

**கேரளாவில் புரட்சி இயக்கம் என்பது**

* நாராயணகுரு
* டாக்டர் பல்ப்பு பத்மநாபன்
* குமாரன் ஆசான்
* அய்யன்காளி
* டி.கே.மாதவன் – ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது!

**தமிழ்நாட்டு புரட்சி இயக்கமானது**

* இராமலிங்க வள்ளலார்
* அய்யா வைகுண்டர்
* அத்திப்பாக்கம் வெங்கடாசலனார்
* பண்டித அயோத்திதாசர்
* டி.எம்.நாயர்
* தந்தை பெரியார் – ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது!

இதில் கேரளாவைச் சேர்ந்த டி.கே.மாதவன் அவர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தந்தை பெரியாரும் இணைந்து நடத்திய வெற்றிப் போராட்டம்தான் வைக்கம் போராட்டம்!

ஒடுக்கப்பட்ட சமூகத்து மக்கள் வைக்கம் கோயில் தெருவில் நடந்து செல்லத் தடை விதிக்கப்பட்டதை உடைக்க தீண்டாமை ஒழிப்புக் குழு அன்றைய காங்கிரஸ் கட்சித் தலைவர்களால் அமைக்கப்பட்டது.

1924ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் அன்று, தடையை மீறி அந்த தெருவுக்குள் நுழையக்கூடிய சத்தியாகிரகம் தொடங்கப்பட்டது. தொடர்ச்சியாக காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். முக்கியமான 19 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், இந்தப் போராட்டமே இனி நடக்காது என்ற நிலைமை உருவானபோதுதான் – அந்த நேரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த தந்தை பெரியாருக்குக் கேரளத் தலைவர்கள் கடிதம் எழுதி வரவழைக்கிறார்கள். 'நீங்கள் வந்து இந்த போராட்டத்திற்கு உயிரூட்ட வேண்டும்' என்று அந்தக் கடிதத்தில் இருந்தது. உடனடியாக பெரியார் அவர்கள் இங்கு வந்துவிட்டார்கள்.

எந்த மன்னருக்கு எதிராக இந்தப் போராட்டம் நடத்துவதற்காக தந்தை பெரியார் அவர்கள் இங்கு வந்தார்களோ, அந்த மன்னர் ஆட்சியே அவருக்கு பெரிய வரவேற்பைக் கொடுத்தது. ஏனென்றால் அந்த மன்னர் குடும்பத்துக்கு தந்தை பெரியாரை நன்கு தெரியும். ஈரோடு வந்தால் மன்னர் குடும்பத்தினர் பெரியாரின் வீட்டில்தான் தங்குவார்கள். அந்தளவுக்கு நட்பாக இருந்துள்ளார்கள்.

ஆனால், அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் மன்னருக்கு எதிராகவே போராடினார் தந்தை பெரியார் அவர்கள். கேரளா முழுவதும் பரப்புரை செய்தார். மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அதனாலேயே தந்தை பெரியார் அவர்களையும் கோவை அய்யாமுத்து அவர்களையும் கூட்டத்தில் பேசுவதற்கு தடை விதித்தார்கள். தடையை மீறிப் பேசியதற்காகக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள்.




விடுதலை செய்யப்பட்ட பிறகும், நேராக ஊருக்குத் திரும்பாமல் வைக்கம் சென்று மீண்டும் போராடினார் தந்தை பெரியார். மீண்டும் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். தந்தை பெரியார் அவர்களுக்கு என்ன சிறப்பு என்றால், இந்தப் போராட்டத்தில் கைதான மற்ற தலைவர்கள் அனைவரும் அரசியல் கைதிகளாக நடத்தப்பட்டார்கள். ஆனால், தந்தை பெரியாரை மிக மோசமாக நடத்தினார்கள். கையிலும் காலிலும் விலங்கு போட்டு கழுத்தில் மரப்பலகையை மாட்டி அடைத்து வைத்திருந்தார்கள். இந்தப் போராட்டத்தில் கைதாகி சிறையில் இருந்த தலைவர்களில் ஒருவரான கே.பி.கேசவமேனன் அவர்கள் 'பந்தனத்தில் நின்னு' என்ற தலைப்பில் மலையாளத்தில் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார்.

அதன் சில வரிகளை மட்டும் நான் படிக்கிறேன்...

"தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும் ஈரோடு முனிசிபல் கவுன்சிலின் சேர்மனாக இருந்தவரும் ஒரு பெரும் பணக்காரரும் உத்தம தேசாபிமானியுமான – ஈ.வெ.இராமசாமி அவர்களுக்கு காலில் சங்கிலி மாட்டப்பட்டு இருந்தது. கைதிகளது தொப்பி மாட்டப்பட்டு இருந்தது. முழங்கால் வரையில் வேட்டி அணிந்திருந்தார். கழுத்தில் மரக்கட்டையை மாட்டி கொள்ளைக்காரர்கள் மற்றும் கொலைகாரர்களுடன் வைக்கப்பட்டுள்ளார். கேரளாவின் தீண்டாமைச் சாதிக்காரர்களது சுதந்திரத்திற்காக தமிழ்நாட்டின் மேல்குலத்தைச் சேர்ந்த இந்து ஒருவர்



இப்படிப்பட்ட தியாகத்தைச் செய்தது எங்களுக்கெல்லாம் புத்துயிர் தந்தது" என்று கே.பி.கேசவமேனன் எழுதி இருக்கிறார்கள்.

தந்தை பெரியார் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருந்து ஏராளமான தியாகிகள் இங்கு வந்து போராடினார்கள். பெரியாரின் மனைவி நாகம்மையார் அவர்களும், அவருடைய சகோதரி கண்ணம்மாள் அவர்களும் இங்கேயே வந்து தங்கி போராடினார்கள். பெரியார் அவர்கள் 74 நாட்கள் இங்கே சிறையில் இருந்தார்கள். 67 நாட்கள் கேரளாவில் தங்கிப் போராடினார்கள். மொத்தம் 141 நாட்கள் வைக்கம் போராட்டத்திற்காக தன்னை ஒப்படைத்துக் கொண்டார் தந்தை பெரியார். காங்கிரஸ் தலைவர் என்கிற அடிப்படையில் அண்ணல் காந்தியடிகளை ராணி பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்.

இந்தப் போராட்டத்திற்கு தலைமை வகித்தவர் என்ற அடிப்படையில் பெரியாருடன் பேசி முடிவெடுத்துவிட்டுத்தான் காந்தி அவர்களும் ராணியுடன் பேச்சுவார்த்தை நடத்தச் சென்றார்.

'கோயிலுக்குள் நுழைவோம் என்று ஈ.வெ.இராமசாமி சொல்வதை நிறுத்தச் சொல்லுங்கள். தெருவைத் திறந்து விடுகிறோம்' என்று ராணி சொல்ல அதனைப் பெரியாரிடம் வந்து காந்தியடிகள் சொல்ல – 'நமது இறுதி இலக்கு கோயில் நுழைவுதான் என்றாலும் இப்போதைக்கு முதல் கட்ட வெற்றியைப் பெறுவோம்' என்று பெரியார் அவர்கள் சொன்னார்கள்.

அதனடிப்படையில் வைக்கம் கோயில் சாலைகள் அனைவருக்கும் திறந்து விடப்பட்டது. இதன் வெற்றி விழா வைக்கத்தில் நடந்தபோதும் மறக்காமல் பெரியாரை அழைத்துப் பாராட்டினார்கள் கேரளத்து தலைவர்கள்.

அந்த வகையில் 100 ஆண்டுகள் கழித்தும் தமிழ்நாட்டை மறக்காமல் எங்களை அழைத்துள்ளார் கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள். வைக்கம் பொன்விழாவானது 1975ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் தலைமையில் நடந்தது. திராவிடர் கழகத்தினுடைய தலைவர் அன்னை மணியம்மையார் அவர்களும் – திராவிடர் கழகத்தினுடைய பொதுச்செயலாளர் அய்யா ஆசிரியர் கி.வீரமணி அவர்களும் வந்து அந்த நிகழ்ச்சியிலே பங்கேற்றார்கள். 1985ஆம் ஆண்டு பெரியாருக்கு வைக்கத்தில் நினைவுச் சின்னம் அமைக்க அடிக்கல் நாட்டு விழாவும் நடந்தது. 03.11.1985 அன்று நடந்த விழாவில், அன்றைக்கு தமிழ்நாட்டினுடைய நிதி அமைச்சராக இருந்த நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்களும் கேரள வருவாய்த் துறை அமைச்சர் திரு. பி.ஜே.ஜோசப் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

தந்தை பெரியாரின் புரட்சி மொழிகள் அந்த நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு அப்போது வெளியிடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இந்த விழாவை ஏற்பாடு செய்திருப்பது மிகமிக பொருத்தமானது. தமிழ்நாடு கேரள தலைவர்கள் சேர்ந்து போராடிய போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியை இன்றைக்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

தந்தை பெரியார், டி.கே.மாதவன், கே.பி.கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப், கேளப்பன், குரூர் நீலகண்டன் நம்பூதிரி, மன்னத்து பத்மநாபன், கோவை அய்யாமுத்து, எம்பெருமாள் நாயுடு, காந்திராமன், தாணுமாலையப் பெருமாள் போன்ற தியாகிகளை இந்த நாட்டு மக்களுக்கு மீண்டும் நாம் அறிமுகம் செய்தாக வேண்டும். அவர்களது உணர்வை நம் மாநிலத்து மக்கள் பெற்றாக வேண்டும்.

நேற்று முன்தினம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் வைக்கம் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில் விதி எண் 110இன் கீழ் அறிக்கை ஒன்றை நான் அளித்தேன்.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நினைவாக பல்வேறு முன்னெடுப்புகளை தமிழ்நாடு அரசின் சார்பில் செய்ய இருப்பதாக நான் சொல்லி இருக்கிறேன்.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் முதல் படிகளில் ஒன்றாக, பழ.அதியமான் அவர்கள் எழுதிய 'வைக்கம் போராட்டம்' நூலின் மலையாள மொழிபெயர்ப்பு இன்று வெளியிடப்படுகிறது.

இந்த முன்னெடுப்பில் தமிழ்நாடு அரசுடன் இணைந்து பணியாற்றியுள்ள கேரளத்தின் முன்னணி பதிப்பாளர்களான D.C.Books நிறுவனத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார் நினைவகம் சீரமைக்க 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட இருக்கிறது. பெரியார் சிறை வைக்கப்பட்ட அருவிக்குட்டி சிறை வளாகத்தில் புதிய நினைவகம் அமைக்கவும் தமிழ்நாடு

அரசு நினைக்கிறது. உரிய முறையான அனுமதிக் கடிதத்தை கேரள அரசுக்கு நாங்கள் விரைவில் அனுப்பி வைப்போம்.

தமிழ்நாட்டில் பிறந்து விட்டதால் தந்தை பெரியார் அவர்கள் தமிழர்களுக்கு மட்டுமான தலைவர் அல்ல. இந்தியாவுக்கு மட்டுமான தலைவர் அல்ல. உலகம் முழுமைக்குமான தலைவர்தான் தந்தை பெரியார் அவர்கள். அவர் முன்மொழிந்த கொள்கைகள் அனைத்தும், அனைத்து நாட்டுக்கும், அனைத்து மக்களுக்கும் பொதுவான சிந்தனைகள்!

எனக்கு எந்தப் பற்றும் இல்லை, மனிதப் பற்று மட்டுமே உண்டு என்று சொன்னவர் தந்தை பெரியார் அவர்கள்.

1. **சுயமரியாதை** - self-respect
2. **பகுத்தறிவு** - rationality
3. **சமதர்மம்** - socialism
4. **சமத்துவம்** - equality
5. **மானுடப்பற்று** - Humanism
6. **ரத்த பேதமில்லை** - Non-discrimination based on blood.
7. **பால் பேதமில்லை** - Non-discrimination based on Gender.
8. **சுய முன்னேற்றம்** - self development
9. **பெண்கள் முன்னேற்றம்** - women empowerment
10. **சமூகநீதி** - social justice
11. **மதசார்பற்ற அரசியல்** - secular politics
12. **அறிவியல் மனப்பான்மை** - scientific temper

இவைதான் பெரியாரியத்தின் அடிப்படை. இவை உலகம் முழுமைக்குமான கருத்தியல்கள்தான். இந்த கருத்தியல்களை வென்றெடுக்க நாம் அனைவரும் உழைத்தாக வேண்டும்.

எத்தகைய சனாதனக் காலத்தை பல்வேறு போராட்டங்களின் மூலமாக நாம் கடந்து வந்துள்ளோம் என்பதை இன்றைய இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும் பணியை இரு மாநில அரசுகளும் செய்தாக வேண்டும். மீண்டும் சனாதன வர்ணாசிரம சாதியவாத மதவாத சக்திகள் கோலோச்ச நினைக்கும் காலத்தில் நமக்கு இந்தக் கடமை அதிகம் இருக்கிறது. இதற்குப் பெரியார் என்ற பெருவிளக்கு நமக்குப் பயன்படும். வைக்கம் போராட்டம் கலங்கரை விளக்காக அமையும்.

100 ஆண்டுகளுக்கு முன்னால் எத்தகைய ஒற்றுமையுடன் போராடி வென்றோமோ அதேபோன்ற ஒற்றுமையுடன் செயல்படுவோம்.

வைக்கம் வீரர் வாழ்க!

சமூகநீதி போராட்டங்கள் வெல்க!

**நன்றி, வணக்கம்.**



# வைக்கம் சத்தியாகிரகம் கேரளத்துக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டுக்கும் பெருமை!

**கேரள மாநிலம் வைக்கத்தில் 01.04.2023 அன்று நடந்த வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டு விழாவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடன் இணைந்து சுடர் ஏற்றி துவக்கி வைத்தபின் மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள் ஆற்றிய உரை:**

‘‘தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டு துவக்க விழாவில் பங்கேற்பது அந்த போராட்டத்தில் தமிழ்நாட்டுக்கு உள்ள முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. கேரளத்தில் மார்பு மறைக்கும் போராட்டம், அரிவிப்பறம்பு திஸ்டா, வில்லுவண்டி பயணம், கல்லு மாலை போராட்டம், குருவாயூர் சத்தியாகிரகம் என ஏராளமான சீர்திருத்த முன்னேற்றங்களை உள்ளடக்கிய சங்கிலியில் மிகச்சிறந்த கண்ணி வைக்கம் போராட்டம். வைக்கம் சத்தியாகிரகம் ஒப்பிட முடியாத ஒன்று. சமூக முன்னேற்றத்திற்கான வழி, தேசியப் போராட்டத்துக்கான வழி திறந்தது வைக்கம் போராட்டமாகும். அது வரை சீர்திருத்த தலைவர்களும், சமூக அமைப்புகளும் அவரவர் நிலையில் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனால், வைக்கம் சத்தியாகிரகத்தில் சமுதாய சீர்திருத்த இயக்கங்களும் தேச விடுதலை இயக்கமும் ஒன்றிணைந்தன. இதுதான் வைக்கம் சத்தியாகிரகத்தின் வரலாற்று ரீதியான சிறப்பு.







## வழிகாட்டிய முன்னோடிகள்

இதற்கு முன்பு சமுதாய சீர்திருத்த இயக்கங்களும் அரசியல் இயக்கமும் இணைந்து இதுபோன்ற ஒரு போராட்டம் நடக்கவில்லை. ஸ்ரீநாராயண குரு, சட்டம்பி சுவாமிகள், அய்யங்காளி போன்ற சீர்திருத்த தலைவர்களின் முன்னுதாரணங்கள் இல்லாமல் போயிருந்தால் வைக்கம் சத்தியாகிரகம் போன்ற முற்போக்கான ஒரு போராட்டம் கேரளத்தில் நடந்திருக்காது. ஸ்ரீநாராயணகுரு ஒரு ரிக்சா வண்டியில் வைக்கம் கோயிலின் அருகில் சென்றுகொண்டிருந்தபோது ஒரு சவர்ண வகுப்பு (ஆதிக்க சாதி) பெண் தடுத்தார் எனவும், அதில்தான் வைக்கம் சத்தியாகிரகத்துக்கான வழி திறக்கப்பட்டது எனவும் அப்போது வாழ்ந்த மூலூறஸ் பத்மனாப பணிக்கர் ஒரு கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

வைக்கம் போராட்டத்தை தேசியப் போராட்டத்துடன் இணைத்ததில் டி.கே.மாதவன் வகித்த பங்கும் அவரைப் போன்றோர் அனுபவித்த வலிகளும் முக்கியமானவை. அந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான் டி.கே.மாதவன் காந்திஜியை சந்திக்கச் சென்றார். காந்தியின் தலையீட்டிற்கு பிறகுதான் தேசிய இயக்கத்துடனான இணைப்பு அதிகரித்தது. காந்தியின் முதல் கேரள பயணமும் வைக்கம் சம்பந்தப்பட்டதாக இருந்தது. நடமாடுவது குடிமக்களின் அடிப்படைச் சுதந்திரம்; ஆனால் அதைத் தடுக்கும் நிலை நமது நாட்டில் இருந்தது.

கோயிலைச் சுற்றியுள்ள வழிகளில் பெரும்பாலான மக்களுக்கு நடமாடும் சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்தது. மனிதாபிமானத்துக்கு எதிராக, அதை அறிவிப்பு செய்து பலகை வைத்திருந்தனர். இது மனித உரிமைக்கு எதிரான செயல் என்பதை உணர்ந்து வைக்கம் சத்தியாக்கிரகமாகவும், பின்னர் குருவாயூர் சத்தியாகிரகமாகவும் வளர்ச்சி பெற்றது. கோயில் நுழைவுப் போராட்டத்துக்கு வழிகாட்டியதும் வைக்கம் சத்தியாகிரகம் மூலம் வலுப்பெற்ற போராட்டப் பாரம்பரியமே ஆகும்.

## தமிழகத்துக்கும் பெருமை

வைக்கம் சத்தியாகிரகம் கேரளத்துக்கு மட்டுமல்ல, இங்கு தமிழ்நாடு முதல்வர் குறிப்பிட்டதுபோல் தமிழ்நாட்டுக்கும் பெருமைகொள்ள வழி வகுத்துள்ளது. தமிழ்நாட்டில் பிராமணிய எதிர்ப்புப் போராட்டத்துக்கு தலைமை வகித்த ஈ.வெ.ரா.பெரியார், அங்கிருந்து வந்து இந்தப் போராட்டத்தில் பங்கேற்றதுடன் இங்கு சிறை வாசமும் அனுபவித்தார். அவர் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருந்து ஏராளமானோர் வைக்கத்தில் நடந்த போராட்டத்தில் பங்கேற்றனர். ஜார்ஜ் ஜோசப், சி.ராஜகோபாலாச்சாரி, சீனிவாச ஐயங்கார், ஐயா முத்துக்கவுண்டர் என தமிழ்நாட்டில் இருந்து பல பெரியோர்கள் வந்தனர். எனவேதான், தமிழ்நாடு முதல்வர் இந்த விழாவில் பங்கேற்றது மிகுந்த முக்கியத்துவமும் அழகும் பெறுகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டு மக்களும் கேரள மக்களும் ஒரே விதமான போராட்ட உணர்வையும் உறவையும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

தோள்சீலை போராட்டத்தின் 200ஆவது ஆண்டு விழாவில் நாங்கள் இருவரும் பங்கேற்றோம். அது குறித்து தமிழக முதல்வர் விரிவாக இங்கே பேசினார். வைக்கம் போராட்டம் ஒரு முன்மாதிரியை காட்டிச் சென்றுள்ளது. அது, போராட்டத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்பதற்கான முன்மாதிரி. அது இனி வரும் காலங்களிலும் நீடிக்கும். சகோதரத்துவமாக அது மேலும் வலுப்படும். இந்தியாவுக்கே புதிய முன்மாதிரிகளை அது படைக்கும் என்பதை மகாத்மா காந்தி, ஸ்ரீநாராயணகுரு, தந்தை பெரியார் போன்றோரின் நினைவுகள் நிரம்பி நிற்கும் வைக்கத்தின் மண்ணில் நின்று கொண்டு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தனியான போராட்டம் அல்ல...

வைக்கம் சத்தியாகிரகம் மற்றொரு முன்மாதிரியையும் நம்முன் உயர்த்திக்காட்டுகிறது. சீர்திருத்த இயக்கம் என்பது சமூக அமைப்புகளால் மட்டும் நிறைவு பெற்றுவிடாது. இப்போதும் சாதியப் பாகுபாடுகளை சந்திப்போர் அதற்கு எதிராக தன்னந்தனியாக வேறுபட்டு நின்று நடத்த வேண்டிய போராட்டம் அல்ல என்பதுதான் அது. கே.கேளப்பன், கே.பி.கேசவ மேனன், மன்னத்து பத்மநாபன், திரூர் நீலகண்ட நம்பூதிரி பாடு, டி.கே.மாதவன், டி.ஆர்.கிருஷ்ணசாமி ஐயர், கண்ணன் தோடத்து வேலாயுத மேனன் போன்ற ஏராளமானோர் வைக்கம் சத்தியாகிரகத்தில் தலைமைப் பாத்திரம் வகித்தனர். மந்நத்து பத்மநாபன் தலைமையில் வைக்கத்தில் இருந்து திருவனந்தபுரத்துக்கு நடந்த நடைபயணம் குறித்து இங்கே விளக்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவருக்கு எதிரான தண்டனையை மன்னத்து பத்மநாபன் தானே ஏற்றுக் கொண்டு அந்த நபரை பாதுகாத்ததை நினைவுகூர வேண்டும்.

## ‘அவர்ணருக்காக’ போராடிய ‘சவர்ணர்கள்’

‘அவர்ணர்’ என வரையறுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நடமாடும் சுதந்திரம் வேண்டும் என்பதே மன்னத்து பத்மநாபன் தலைமையில் நடந்த சவர்ணர்களின் நடைபயணம். காக்கிநாடாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் டி.கே.மாதவன் தீண்டாமைக்கு எதிராகவும், கோயில் நுழைவை ஆதரித்தும் முன் மொழிந்த தீர்மானமும் அதற்கு காந்திஜி வழங்கிய ஆதரவும், அந்த நேரத்தில் ஸ்ரீநாராயணகுருவின் வைக்கம் வருகை, தனது ஆசிரமத்தையே போராட்டக்காரர்களுக்கு விட்டுக்கொடுத்த குருவின் நடவடிக்கை, தீண்டாமை ஒழிப்புக் குழு உருவாக்கம் இவையெல்லாம் வைக்கம் போராட்டத்தின் பின்னணியில் வரலாற்றின் பக்கங்களில் நாம் நினைவு கூரத்தக்க பாடங்களாகும். வைக்கம் சத்தியாகிரகத்தையொட்டி பேச்சுவார்த்தைக்கு வந்த காந்திஜியைக்கூட அவர் பிராமணிய சவர்ணர் அல்ல என்பதால் வைக்கத்தின் ஆட்சி அதிகாரம் பெற்றிருந்த இண்டம்துருத்தி மனையில் அனுமதிக்காதது குறித்து இங்கே குறிப்பிட்டார்கள். கோயிலுடன் இணைந்த பொது வழிகளில் அனைவரையும் அனுமதிக்க வேண்டும் என்கிற காந்திஜியின் கோரிக்கையை அந்த ஆதிக்க மனையின் அதிகாரிகள் நிராகரித்தனர். காந்திஜிக்கு அங்கு கிடைத்த அனுபவம், அவமானகரமான

சூழல் குறித்தும் இங்கே குறிப்பிடப்பட்டது. அந்த மனைதான் இப்போது 'செத்து' (மரம் ஏறும்) தொழிலாளிகளின் அலுவலகமாக செயல்படுகிறது. வரலாறு முற்போக்காக முன்னேறிச் செல்லும் என்பதற்கான சான்றாகும் இது.

சத்தியாகிரகிகள் எதிர்கொண்ட கொடூரமான தாக்குதல்கள் மறக்க முடியாதவை. பிராமணரான ராமன் இளையது என்கிற சத்தியாகிரகியின் கண்களில் பிராமணியத்தின் பிரமுகர்கள் வலுக்கட்டாயமாக சுண்ணாம்பு தேய்த்தனர். வாழ்நாள் முழுவதும் பார்வையற்றவராக வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதுபோன்ற ஏராளமான வலி நிறைந்த அனுபவங்களைக் கொண்டது வைக்கம் போராட்டம். அவற்றையெல்லாம் கடந்துதான் ஜனநாயக முறையில் இன்று கேரளம் ஒட்டுமொத்த இந்தியாவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் உயர்ந்துள்ளது.

## பிரபலங்களை முன்னிறுத்தாத போராட்டம்

இதர சீர்திருத்தப் போராட்டங்களில் இருந்து பல காரணங்களால் வைக்கம் போராட்டம் மாறுபட்டதாக உள்ளது. பிரபலமான சிலரை மையப்படுத்தி நமது நாட்டின் சீர்திருத்த முன்னேற்றங்கள் அமைந்திருந்தன. ராஜாராம் மோகன்ராய் முதல் மகாத்மா பூலே வரை உள்ள உன்னதர்கள் தேசிய அளவில் நடத்திய செயல்பாடுகள், ஸ்ரீ நாராயண குரு முதல் அய்யன்காளி வரையுள்ள ஏராளமான மகத்தானவர்கள் கேரளத்தில் நடத்திய செயல்பாடுகள், அவர்கள் தலைமை வகித்த போராட்டங்கள் நம் அனைவர் மனக்கண் முன்பும் வருகின்றன.

ஆனால், வைக்கம் போராட்டத்தின் சிறப்பு தனி மனிதரை மையப்படுத்தியது அல்ல என்பதுதான். அதோடு, அரசியல் அமைப்பின் தலைமையில் ஏற்பட்ட சமூக சீர்திருத்த அமைப்பு என்பதுதான் வைக்கம் சத்தியாகிரகத்தின் மற்றொரு சிறப்பு. சீர்திருத்தம் பற்றிக் கூறும்போதெல்லாம் அரசியல் அமைப்புகளுக்கு சீர்திருத்த இயக்கத்தில் எந்த ஒரு பங்கும் இல்லை என்று சாதிக்கும் ஒரு போக்கை சிலர் இன்றும் மேற்கொள்கிறார்கள். ஆனால், அதில் உண்மை இல்லை என்பதை தெளிவுபடுத்துவது வைக்கம் சத்தியாகிரகம். அதோடு அன்று கடைப்பிடிக்கப்பட்ட ஒடுக்குமுறையை சந்தித்த சாதியினர் மட்டும் நடத்தியதல்ல இந்த போராட்டம்; மாறாக அனைத்து சாதியிலும் உள்ளோர் கூட்டாக நடத்தியதே வைக்கம் சத்தியாகிரகம்.

அதற்கும் அப்பால் கிறித்தவர், முஸ்லீம்கள் மட்டுமல்ல, சீக்கிய மதத்தில் முற்போக்கு சிந்தனை கொண்டோரின் ஆதரவும் இருந்தது. கே.அப்துல் ரஹ்மான் குட்டி, பரீ சாகிப், எம்.கே.அப்துல் ரகீம் போன்றோர் முஸ்லீம் சமூகத்தின் ஒருமைப்பாடு தெவித்து வைக்கம் சத்தியாகிரகத்துக்கு வந்தனர். பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் போன்றோரின் பெயர்கள் இத்தருணத்தில் நினைவு கூரத்தக்கதாகும். அதோடு பத்து சீக்கிய சகோதரர்கள் வைக்கத்துக்கு வந்து உணவகம் திறந்தனர். இப்படிப் பார்த்தால் மிகச்சரியான மதச்சார்பற்ற தன்மை வைக்கம் சத்தியாகிரகத்துக்கு இருந்தது என்பதை நம்மால் காண முடியும்.

## 60 ஆண்டுகள் அமலாகாத சட்டம்

ஒடுக்குமுறைக்கு உள்ளான மக்களுக்கு பொதுப் பாதையை பயன்படுத்தும் சுதந்திரம் 1865இல் திருவிதாங்கூர் அரசு வழங்கியது. ஆனால், அந்த அனுமதி அமலாக சுமார் 60 ஆண்டுகளுக்குப் பிறகும் ஒரு வெகுஜனப் போராட்டம் தேவைப்பட்டது. சிறப்பான சட்டத்தால் மட்டும் சமூக நிலவரங்களை மாற்றி அமைத்துவிட முடியாது, அதற்கு சமூகத்தின் ஒட்டுமொத்த மனநிலையில் மாற்றம் ஏற்படுத்தும் வெகுஜனத் தலையீடு தேவை என்பதை வைக்கம் சத்தியாகிரகம் தெளிவுபடுத்துகிறது.

வைக்கம் சத்தியாகிரகம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோயில் நுழைவுப் போராட்டங்களுக்கு வழிவகுத்தது. அத்தகைய போராட்டங்களின் மூலம் வளர்ந்து வந்த மாற்றங்கள்தான் இன்று தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் ஆட்சி அதிகாரத்துக்கு வழிவகுத்தது. பெரியார், அண்ணாதுரை போன்றோரின் திராவிட முன்னேற்ற இயக்கத்தை காலத்துக்கு ஏற்ப அரசியல்படுத்தி முன்னெடுத்து செல்கிறது மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு. சீர்திருத்த இயக்கத்திடமிருந்து ஊக்கம் பெற்று மனிதாபிமானம் கொண்ட ஒரு புதிய சமூகத்தைப் படைக்க கேரளத்தின் இடது ஜனநாயக முன்னணி அரசு முயற்சிக்கிறது. சீர்திருத்த இயக்கத்தின் உன்னத நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லும் இரண்டு நீரோட்டங்களின் இத்தகைய சங்கமம், வைக்கம் சத்தியாகிரக நூற்றாண்டையொட்டி இங்கு சாத்தியமாகி இருக்கிறது என்பது அதிக முக்கியத்துவம் கொண்டதாகும்.

# 1924



# வைக்கம் போராட்டம் கால நிரல்

(30 மார்ச் 1924 - 23 நவம்பர் 1925)
604 நாள்கள்



பழ.அதியமான்



**6 பிப்ரவரி 1924:** கொல்லம், சுயராஜ்ய ஆசிரமத்தில் தீண்டாமை விலக்குக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. சுதந்திர நடமாட்டத்துக்கும் கோயில் நுழைவுக்கும் ஆதரவாகத் தீவிர பிரசாரம் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

**29 பிப்ரவரி 1924:** தீண்டாமை விலக்குக் குழு சார்பில் காங்கிரஸ் வைக்கத்தில் பொதுக்கூட்டம் நடத்தியது.

**30 மார்ச் 1924:** வைக்கம் போராட்டம் தொடங்கியது. குன்னப்பி (புலையர்), பாஹுலயன் (தீயர்), கோவிந்த பணிக்கர் (நாயர்) கொண்ட குழுவினர், மாலை அணிவிக்கப்பட்டு முன்நோக்கிச் சென்றனர். அம்மூவரும் காவல் துறையால் கைது செய்யப்பட்டனர்.

இன்று ஞாயிறு. தொடங்கிய நாள் தவிர, மற்ற ஞாயிற்றுகிழமைகளில் சத்தியாகிரகம் நடைபெறவில்லை.

**31 மார்ச் 1924:** ஒரு நாயர், இரண்டு ஈழவர் கொண்ட மூவர் குழுவினர் தடைப்பகுதியை அணுகினர். கைது செய்யப்பட்டு திருவனந்தபுரம் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

**1 ஏப்ரல் 1924:** கே.பி.கேசவ மேனன் அனுப்பியிருந்த சத்தியாகிரகத் தொடக்கம் பற்றிய செய்திகள் அடங்கிய தந்தியை காந்தி பெறுகிறார். சத்தியாகிரகிகள் இன்னும் சிறிது காலம் பிரச்சாரம் செய்யவும் சமாதானப் பேச்சுக்குத் தயார் செய்து கொள்ளவும் ஏதுவாகச் சிறிது காலம் போராட்டத்தைத் தள்ளி வைக்கலாம் என காந்தி யோசனை அளித்தார்.

**7 ஏப்ரல்:** இரண்டு நாட்கள் நடந்து பின்னர் ஆறு நாட்கள் நிறுத்தி வைக்கப்பட்ட போராட்டம் இன்று மீண்டும் துவங்கியது. கே.பி.கேசவ மேனன், டி.கே.மாதவன் தடைப்பகுதியை நோக்கி நடந்து சென்று கைதாகினர். ஆறுமாத சிறைத்தண்டனை பெற்றனர்.

**9 ஏப்ரல்:** ஏ.கே.பிள்ளை, கே.வேலாயுத மேனன், கே.கேளப்பன் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை பெற்றனர்.

**10 ஏப்ரல்:** இன்று முதல் சத்தியாகிரகிகளைக் கைது செய்வதில்லை என்று காவல்துறை முடிவு செய்தது. சத்தியாகிரகிகள் உண்ணாவிரதம் தொடங்கினர்.

**11 ஏப்ரல்:** ஜார்ஜ் ஜோசப், கே.ஜி.நாயர், செபாஸ்டியன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை பெற்றனர்.

**13 ஏப்ரல்:** பெரியார் வைக்கம் வந்தார்

**14 ஏப்ரல்:** உண்ணாவிரதத்தை நிறுத்துங்கள் என்ற காந்தியின் செய்தி சத்தியாகிரகிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. கோயிலின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நடந்த போராட்டத்துக்குப் பெரியார் தலைமை வகித்தார். வரதராஜுலு நாயுடு தன் ஆதரவை தந்தி மூலம் தெரிவித்தார்.

| | |
|---|---|
| **15 ஏப்ரல்:** | அய்யாமுத்து வருகை. |
| **17 ஏப்ரல்:** | எஸ்.சீனிவாச ஐயங்கார் வைக்கத்தில் குறிப்பிட்ட வீதிகளை சுற்றிப்பார்த்தார். |
| **21 ஏப்ரல்:** | டி.ஆர்.கிருஷ்ணசாமி ஐயர் கைது. |
| **29 ஏப்ரல்:** | நாராயண குருவிற்குச் சொந்தமான இடத்திற்கு சத்தியாகிரகிகள் குடிபெயர்ந்தனர். காந்தி, வெளியாட்கள் போராட்டத்தில் கலந்துகொள்ள தடைவிதித்தார். |
| **3 மே:** | இலவச உணவு அளிக்க அகாலியர் வைக்கம் வருகை. |
| **8 மே:** | சிரத்தானந்தர் சத்தியாகிரகத் தலைவர்களுடன் சந்திப்பு. |
| **13 மே:** | கோட்டயம் மாவட்டத்தில் நுழைய பெரியாருக்கு தடை. |
| **22 மே:** | பெரியார் முதல்முறை கைது. |
| **26 மே:** | இராஜாஜி வைக்கம் வருகை. |
| **21 ஜூன்:** | சத்தியாகிரகிகளின் ராட்டினங்களைக் காவல்துறை கைப்பற்றியது. பெரியார், அருவிக்குட்டி சிறையிலிருந்து விடுதலை. |
| **ஜூன், ஆகஸ்ட்:** | மழை பெய்து வைக்கம் வெள்ளத்தால் நிரம்பியது. சத்தியாகிரகிகள் கழுத்தளவு நீரில் நின்று போராடினர். காவல்துறையினர் படகுகளில் காவலில் இருந்தனர். சத்தியாகிரகத்திற்கு ஆதரவாய் மக்கள் திரண்டனர். |
| **13 ஜூலை:** | நாகம்மையார் போராட்டத்தில் கலந்துகொள்ளல். |
| **18 ஜூலை:** | பெரியார் இரண்டாம் முறை கைது. |
| **7 ஆகஸ்ட்:** | மகாராஜா காலமானார். துக்கம் அனுசரித்து போராட்டம் மூன்று நாளைக்கு நிறுத்திவைக்கப்பட்டது. |
| **31 ஆகஸ்ட்:** | பெரியார், கே.பி.கேசவமேனன் உள்ளிட்ட சத்தியாகிரகிகள் திருவனந்தபுரம் மத்திய சிறையிலிருந்து விடுதலை. |
| **1 செப்டம்பர்:** | சேதுலட்சுமி பாய் பொறுப்பு அரசியாக (Maharani Regent) பதவி ஏற்றார். இன்று சத்தியாகிரகம் இல்லை. |
| **28 செப்டம்பர்:** | நாராயண குரு சத்தியாகிரக ஆசிரமத்திற்கு வருகை. |
| **2 அக்டோபர்:** | ஈழவர் தலைவரும், திருவாங்கூர் சட்டசபை நியமன உறுப்பினருமான என்.குமாரன், வைக்கம் |


கோவை அய்யாமுத்து


ஜார்ஜ் ஜோசப்


எம்பெருமாள் நாயுடு

கோயில் தெருக்களை எல்லா சாதியினருக்கும் திறந்துவிடவேண்டும் என சட்டசபையில் தீர்மானம் கொண்டுவந்தார்.

**1 நவம்பர்:** கோயில் தெருக்களில் தீண்டாதாரை அனுமதிப்பதற்கு தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவிப்பதோடு அதற்கு அரசு அனுமதியளிக்கக்கோரும் நோக்கத்துடன் உயர்சாதியினர் ஒரு பேரணிக்கு ஏற்பாடு செய்தனர். சத்தியாகிரகிகளுக்கு ஆதரவான சவர்ணர்களின் இந்த ஊர்வலம் வைக்கத்திலிருந்து சமஸ்தான தலைநகரான திருவனந்தபுரத்திற்குப் புறப்பட்டது. மன்னத்து பத்மநாபன் இதன் தலைவர். திருவனந்தபுரத்தின் தெற்குப் பகுதியிலிருந்து இன்னொரு இத்தகைய ஊர்வலம் சுசீந்திரத்திலிருந்து புறப்பட்டு தலைநகரம் நோக்கி வந்தது. இதன் தலைவர் எம்பெருமாள் நாயுடு, இன்று சத்தியாகிரகம் இல்லை.

**11 நவம்பர்:** உயர்சாதியினரின் பேரணிகள் திருவனந்தபுரத்தை அடைந்தன.

**12 நவம்பர்:** மகாராணி ரீஜண்டிடம், 12 பேர் அடங்கிய குழுவினர் பெரிய மகஜரை அளித்தனர். கோயில் தெருக்களை அனைவருக்கும் திறந்துவிட ஆதரவு தெரிவித்து 25,000 இந்துக்கள் அதில் கையொப்பம் இட்டிருந்தனர். மாலை திருவனந்தபுரம் கடற்கரையில் பெரும் பொதுக்கூட்டம். இன்றும் சத்தியாகிரகம் இல்லை.

**7 பிப்ரவரி 1925:** சுதந்திர நடமாட்டத்திற்கென சட்டசபையில் 2 அக்டோபர் 1924இல் கொண்டுவரப்பட்ட தீர்மானம் விவாதத்திற்குப் பிறகு இன்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 22 – 21 என்ற வாக்குகள் வித்தியாசத்தில் அது தோற்றது. அரசாங்கம் இதன் பின்னணியில் இருந்தது என சந்தேகிக்கப்பட்டது.

**9 மார்ச்:** காந்தி வைக்கம் வந்தார்.

**10 மார்ச்:** காந்தி சத்தியாகிரக ஆசிரமத்தில் சத்தியாகிரகிகளைச் சந்தித்துப் பேசினார். மதியம் 2:30 மணிக்கு உயர்சாதியினரை சென்று சந்தித்தார். மூன்று திட்டங்களை முன்னுரைத்தார். உயர்சாதிக்குழு அவற்றை நிராகரித்தது.

**12 மார்ச்:** காந்தி மகாராணி ரீஜண்டை வர்க்கலையில் சந்தித்தார். பிறகு நாராயண குருவையும் காந்தி சந்தித்தார். குருவுடனான சந்திப்பின்போது பெரியார், இராஜாஜி, வ.வே.சு.ஐயர் ஆகியோர் உடன் இருந்தனர்.

**13 மார்ச்:** காந்தி ராஜமாதாவை திருவனந்தபுரத்தில் சந்தித்தார். அப்போது பெரியார் திருவனந்தபுரத்தில் இருந்ததாக உறுதிப்படுத்த இயலாத தகவல் உண்டு.

**17 மார்ச்:** காந்தியை உயர்சாதிக்குழு சந்தித்து, சங்கர ஸ்மிருதியை ஆதாரமாகத் தந்தது. காந்தி வள்ளத்தோல் சந்திப்பு வைக்கத்தில் நிகழ்ந்தது.

**18 மார்ச்:** காந்தி வைக்கத்திலிருந்து புறப்பட்டார். அரசு விருந்தினராக காந்தி திருவாங்கூரில் சுற்றுப்பயணம் செய்தபோது உடனிருந்தவர் காவல்துறை ஆணையாளர் பிட் ஆவார். அவரிடம் நடத்திய பேச்சுவார்த்தை அடிப்படையில் வைக்கம் கோயில் பாதையில் மார்ச் 1924 முதல் ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகளை நீக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.

**ஏப்ரல்:** திருவிதாங்கூர் அரசாங்கம் 1924 மார்ச் 24ஆம் தேதி பிறப்பித்த தடை உத்தரவைத் திரும்பப் பெற்றது.

**24 ஜூன்:** சத்தியாகிரக செயலாளர் கே.கேளப்பன் அறிக்கை.

**17 நவம்பர்:** தீண்டாமை விலக்குக்குழு தீர்மானம்.

**23 நவம்பர்:** பல மாதங்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளையடுத்து அரசாங்கம் கோயிலைச் சுற்றியிருந்த மூன்று பாதைகளை அனைவர்க்குமெனத் திறந்துவிட்டது. ஒரு துணைப் பாதையையும் உருவாக்கிக்கொண்டது. இது தீர்வு எனப்பட்டது.

**29 நவம்பர்:** பெரியார் தலைமையில் கேளப்பன் ஏற்பாட்டில் வைக்கத்தில் வெற்றிவிழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.


கே. கேளப்பன்


மன்னத்து பத்மநாபன்


செபாஸ்டியன்

# பெரியார் விவரிக்கும் வைக்கம் காட்சிகள்

வைக்கத்திலே போராட்டம் ஆரம்பமானதே ஒரு சிறு நிகழ்ச்சியிலே இருந்துதான். தோழர் மாதவன் என்ற பி.ஏ., பி.எல்., படித்த ஒரு வக்கீல், ஒரு வழக்குக்காக ஆஜராகப் போனார். வழக்கு விசாரணைக்கான கோர்ட் இடம் இராஜாவுடைய அரண்மனையில் ஓரிடம். இராஜாவின் பிறந்த நாள் விழாவிற்கு அந்த இராஜாவுடைய அரண்மனையில் எல்லா பாகத்திலும் பந்தல் போடப்பட்டதில் கோர்ட் நடக்குமிடமும் பந்தலுக்குள்ளாகிவிட்டது. இந்த மாதவன் என்கிற வக்கீல் கேசில் ஆஜராக அங்கே போக வேண்டிய அவசியம் வந்தது. இராஜாவின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக ஜெபம் ஆரம்பமாயிற்று. இந்த வக்கீல் நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவராதலால் அங்கே போகக்கூடாது என்று தடுத்தார்கள். அந்த நேரம், நான் தமிழ்நாட்டிலே தீண்டாமை விலக்கு என்பதில் தீவிரமாக இருந்து பிரச்சாரம் செய்துகொண்டிருந்த நேரம்!

கேரள சமுதாயத் தலைவர்கள் சத்தியாகிரகம் ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். வக்கீல் மாதவன், டி.கே.மாதவன், கேரள காங்கிரசுக் கமிட்டித் தலைவர் கே.பி.கேசவமேனன் இவர்களெல்லோரும் இன்னும் சிலரும் சேர்ந்து, சத்தியாக்கிரகம் பற்றி முடிவு செய்தார்கள்; ஜெபத்தன்று ஆரம்பிப்பது என்று முடிவு செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள், நான் அப்போது தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியின் தலைவராக இருக்கிறேன். எந்த ஊரில் சத்தியாகிரகத்தை ஆரம்பிக்கலாமென்பதற்கு, வைக்கத்தையே தேர்ந்தெடுத்தார்கள். ஏனென்றால், அந்த ஊரில்தான் ஊர் நடுவில் கோயிலும், அதன் 4 வாசலுக்கு எதிரிலும் 4 நேர் வீதிகள்– கோயில் மதில்கள் – சுற்றியும் தெருக்கள், பிரகாரம் எல்லாமும் இருக்கும். அந்த வீதிகளின், நான்குபுறத்திலும் கோயில் வாசல்களுக்கு முன்னாலும் நடக்கக்கூடாது!

மூன்று பர்லாங், நான்கு பர்லாங் தூரத்திலே உள்ள சாலையில்கூட நடக்காமல், ஒருமைல் தூரம் வேறு சாலையில் சுற்றிக்கொண்டுதான் எதிர் சாலைக்குச் செல்லவேண்டும். வைக்கத்தில் கோயிலுக்குப் பக்கமாக, வாசலுக்கு எதிராக அமைந்த தெருக்களில்தான் எல்லா முக்கிய அலுவலகங்களும், நீதிமன்றம், காவல் நிலையம் முதலியனவும் இருந்தன. ஏதாவது போலீஸ்காரர்களையோ, இன்ஸ்பெக்டர்களையோ, குமாஸ்தாக்களையோ மாற்றுவதனாலுங்கூட, தீண்டாதாரை அங்கு மாற்றி அனுப்பமாட்டார்கள். ஏனென்றால், அந்த போலீஸ் ஸ்டேஷன், கோர்ட்டுக்குள் இருக்கும் இடத்திற்குப்போக தீண்டாதாருக்கு அனுமதி கிடையாது என்பதால்! முக்கியமான கடைகளும் அந்த வீதிகளிலானதால் ஒடுக்கப்பட்டவர்கள் அங்கு செல்ல முடியாது.

சத்தியாகிரகம் ஆரம்பமானவுடன் வக்கீல் மாதவன், பாரிஸ்டர் கேசவமேனன், டி.கே. மாதவன், ஜார்ஜ் ஜோசப்' முதலியவர்களைப்போல் சுமார் 19 பேரை இராஜா கைது செய்யும்படி உத்தரவிட்டு, அதன்படி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.



தினசரி ஒருவர் வீதம் கைது செய்து, அவர்களை மாத்திரம் தனிப்பட்ட முறையில் சிறப்புக் கைதிகளாக நடத்த உத்தரவிட்டார்கள். அப்போது இராஜாவிடம் திரு. பிட் என்ற வெள்ளைக்காரர் 'காவல்துறைத் தலைவராக இருந்தார். அவர் இந்தச் சத்தியாகிரகத்தை வெகு சாமர்த்தியமாகவும் ரொம்ப ஜாக்கிரதையாகவும் சமாளித்தார். இந்த பத்தொன்பது பேரைப் பிடித்து உள்ளே போட்டவுடன், அடுத்து சத்தியாகிரகத்தில் ஈடுபட யாரும் முன்வரவில்லை; ஆள் கிடைக்கவில்லை. அதோடு அது நின்றுவிடும்போல் தோன்றியது.

உடனே, எனக்குப் பாரிஸ்டர் மேனன், ஜார்ஜ் ஜோசப், கேசவமேனன் ஆகிய மூவரும் சேர்ந்து கையெழுத்துப் போட்டு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்கள். 'நீங்கள் வந்துதான் இதற்கு உயிர் கொடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை; அப்படி மன்னிப்புக் கேட்டுக்கொள்வதானால் எங்களுக்கொன்றும் நஷ்டம் இல்லையென்றாலும் பெரிய காரியம் கெட்டுப்போகுமே என்று கவலைப்படுகிறோம்; உடனே நீங்கள் வந்து பொறுப்பு ஏற்க வேண்டும்' என்று எழுதி அனுப்பினார்கள்.

எனக்கேன் எழுதி அனுப்பினார்களென்றால், தீண்டாமையைப்பற்றிப் பேசுவதில் நான் கெட்டிக்காரன்; கிளர்ச்சியிலும் நான் கெட்டிக்காரன் என்று எனக்குப் பெயர். அப்போது நான் சுற்றுப்பிரயாணத்திலிருந்தேன். ஈரோட்டிற்கு எழுதப்பட்ட அந்தக் கடிதம் 'ரீ டைரெக்ட்' செய்யப்பட்டு, மதுரை ஜில்லாவிலுள்ள பண்ணபுரம் என்ற ஒரு மலைப்பக்க கிராமத்தில், தமிழ்நாடு காங்கிரசு கமிட்டித் தலைவன் என்ற முறையில் நான் பேசிக்கொண்டிருந்தபோது என் கைக்குக் கிடைத்தது. உடனே மீதிச் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளையெல்லாம் ஒத்திப் போட்டுவிட்டு, நேரே ஈரோட்டுக்குப்போனேன். வீட்டிற்கு வந்தவுடன் வைக்கத்திற்குப்போய் சத்தியாகிரகத்தை நடத்துவதென்று மிக்க மகிழ்ச்சியோடு மூட்டை கட்டிவிட்டேன்.

திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்களுக்கும் நான் வரும்வரை தலைமைப்பதவியை ஏற்றுக் கொள்ளும்படி ஒரு கடிதம் எழுதிவிட்டு, 'இந்த சந்தர்ப்பம் ஒரு நல்ல வாய்ப்பு, இதை விட்டால் இந்த மாதிரி அருமையான வேலைசெய்ய வேறு வாய்ப்பு

“ எனக்கேன் எழுதி அனுப்பினார்களென்றால், தீண்டாமையைப்பற்றிப் பேசுவதில் நான் கெட்டிக்காரன்; கிளர்ச்சியிலும் நான் கெட்டிக்காரன் என்று எனக்குப் பெயர். அப்போது நான் சுற்றுப்பிரயாணத்திலிருந்தேன். உடனே மீதிச் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளையெல்லாம் ஒத்திப் போட்டுவிட்டு, நேரே ஈரோட்டுக்குப்போனேன். வீட்டிற்கு வந்தவுடன் வைக்கத்திற்குப் போய் சத்தியாக்கிரகத்தை நடத்துவதென்று மிக்க மகிழ்ச்சியோடு மூட்டை கட்டிவிட்டேன். ”

கிடைக்காது' என்று அவருக்கு எழுதிவிட்டு, 2 பேரைக் கூட்டிக்கொண்டு வைக்கத்திற்கு வந்தேன். வைக்கம் போராட்டத்திற்காக நான் வருகிறேன் என்ற விஷயம் தெரிந்துகொண்டு, போலீஸ் கமிஷனர் திரு. பிட், இன்னொரு அய்யர் (அவர் பெயர் சரியாய் ஞாபகத்திற்கு வரவில்லை; சுப்ரமணிய அய்யர் என்று நினைக்கிறேன்), ஒரு தாசில்தார் எல்லோரும் படகிலிருந்து நான் இறங்கும்போதே என்னை வரவேற்றார்கள்.

'மகாராஜா அவர்கள், எங்களை அவர் சார்பில் வரவேற்று, வேண்டிய எல்லா சவுகரியங்களையும் செய்து தரச் சொன்னார்' என்று சொல்லி எங்களை வரவேற்றார்கள். இது எனக்குப் பெரும் ஆச்சரியத்தைத் தந்தது என்றாலும், ஏன் மகாராஜா அப்படிச் செய்தாரென்றால், அந்த இராஜா டெல்லிக்குப் போவதற்கு ஈரோடு வழியாக வந்து ஒருநாள் ஈரோட்டிலே தங்கிவிட்டு அடுத்த நாள் டெல்லிக்கு இரயில் ஏறிப்போவது வழக்கம். அப்படி ஈரோட்டிலே தங்கும்போது, அதற்கு வேண்டிய வசதிகளை மகாராஜாவின் சிப்பந்திகள் தங்குமிடம் எங்கள் சத்திரத்திலும், இராஜா தங்குமிடம் எங்கள் பங்களாவிலுமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அப்படி 3 மாதத்திற்கு முன் வந்தபோது அவருடன் அந்தக் காவல் அதிகாரியும், இன்னும் இராஜாவுக்கு உதவிக்குத் தேவையான காவல் அதிகாரிகளும் வந்து போனதில், அவர்கள் ஈரோட்டில் என்னை நன்றாகத் தெரிந்துவைத்திருக்கிறவர்களாகவும், நானும் அவர்களை எங்கள் வீட்டிற்கு வந்தபோது சந்தித்துப் பேசியவர்களாகவும் இருந்திருக்கிறோம். இதனால் மகாராஜா சற்று மரியாதை காட்டினார்.

சத்தியாகிரகத்தைத் தொடர்ந்து நடத்த வந்த என்னை மகாராஜா சார்பில் அந்தப் பெரிய



அதிகாரிகள் வரவேற்கிறார்கள் என்று கண்டதும் அப்பக்கத்திய பாமர மக்களுக்கு ஒரே 'குஷாலாக' ஆகிவிட்டது. என்னை விருந்தினராக மகாராஜா கருதினாலுங்கூட, நான் பல இடங்களிலும் சென்று சத்தியாகிரகத்தைப் பற்றிப் பேசினேன்; காரசாரமாகப் பேசினேன்! சுற்றுவட்டார மக்கள் ஆயிரக்கணக்கில் வைக்கம் வந்து கூடிவிட்டார்கள். அது இராஜாவுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது; 5, 6 நாள் வரை சும்மாதான் இருந்தார். பலரும் போய் அவரிடத்தில் நான் பேசுவது குறித்து முறையிட்டார்கள்; பிறகு இராஜாவினால் சும்மாயிருக்க முடியவில்லை. இப்படி சுமார் 10 நாட்களானவுடனேயே ஒரு காவல் அதிகாரி, அவர் அய்யங்கார்; அவர் முயற்சியால் பி.சி. 26 படி தடை உத்தரவு போட்டார். அந்நாட்டில் 26 என்பது இப்போது இங்கே 144 தடை உத்தரவு போன்றது. நானும் சட்டம் மீறுவதைத்தவிர வேறு வழியில்லை என்று கண்டறிந்தேன். உடனே நான் சட்டத்தை மீறிப் பேசினேன். என்னுடன் அய்யாமுத்து அவர்களும், மற்றுமிருவரும் சட்டம் மீறினோம்; எங்களைக் கைது செய்தார்கள்; எல்லோருக்கும் ஒரு மாதம் வெறுங்காவல் போட்டார்கள். என்னை அருவிக்குட்டி என்ற ஊரிலுள்ள ஜெயிலிலே வைத்தார்கள்.

அதற்குப் பிறகு என்னுடைய முதல் மனைவியார் திரு. நாகம்மையாரும் பிறகு நான் வெளியே வந்தவுடன் எனது தங்கை பிரச்சாரம் செய்தார்கள். நான் விடுதலையாகி வந்து அதே மாதிரி மறுபடியும் திட்டம் போட்டேன். நான் வெளியே வருவதற்குள் இந்தக் கிளர்ச்சிக்கு ஏராளமான அளவில் ஆதரவு பெருகிவிட்டது; மளமளவென்று ஆட்களும் வந்து சேர ஆரம்பித்தனர்; ஏராளமானோர் பல பகுதியிலும் சென்று சுற்றுப் பயணம் செய்து தீவிரப் பிரச்சாரம் செய்தார்கள். எதிரிகளும் அடிதடி, காலித்தனம், கலவரங்கள் முதலியவற்றில் ஈடுபட்டு, இதை எப்படியாவது ஒடுக்கிவிட வேண்டுமென்று பலவித முயற்சிகளும் செய்து பார்த்தார்கள். ஆனால், போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு பெருகிக் கொண்டேயிருந்தது. வெளிநாடுகளிலிருந்து மலையாளிகளும் சாதிக்கொடுமை என்பதைக் கண்டு மனந்துடித்து, அதற்கு தங்கள் எதிர்ப்பையும், சாதிக்கொடுமைகளை எதிர்த்து செய்யப்படும் போராட்டத்திற்குத் தங்கள் ஆதரவையும் காட்டும்வண்ணம் தினம் ரூ. 50, 60, 100 என்று மணியார்டர் அனுப்பிக் கொண்டேயிருந்தார்கள். பெரியபந்தல் போட்டு தினசரி போராட்ட வீரர்கள் முகாம் செய்திருந்த வீட்டில் 200, 300 பேர் சாப்பிடுவார்கள்; தேங்காயும், மற்ற காய்கறிகளும்



மலை மலையாகக் குவிந்து கிடக்கும்; பெரிய கல்யாணவீடு மாதிரி வேலைகள் நடைபெறும்.

திரு.இராசகோபாலாச்சாரியார் எனக்குக் கடிதம் எழுதினார்; 'நீ ஏன் நம் நாட்டை விட்டுவிட்டு இன்னொரு நாட்டிலே போய் ரகளை செய்கிறாய்? அது சரியல்ல; அதை விட்டுவிட்டு நீ இங்குவந்து, நீ விட்டுச்சென்ற வேலைகளைக் கவனி' என்றெழுதினார். அப்போதிருந்த எஸ்.சீனிவாசய்யங்காரும் இப்படித்தான் என்னை வைக்கத்திற்கு வந்தே அழைத்தார்; வரச்சொன்னார். அதேமாதிரி பத்திரிகையிலேயும் எழுதினார்கள். ஆனால், இதற்குள் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் 1000 பேருக்கு மேல் சேர்ந்தார்கள். தினமும் ஊர்முழுவதும் சத்தியாக்கிரகப் பஜனையும், தொண்டர்கள் ஊர்வலமும் நடந்து உணர்ச்சி வலுத்துவிட்டது. பஞ்சாபில் சுவாமி சிரத்தானந்தா என்பவர் ஒரு 'அப்பீல்' போட்டார். அதன் பிரகாரம் பஞ்சாபிலேயிருந்து 20, 30 ஆள்களையும் இரண்டாயிரம் ரூபாவையும் கையிலெடுத்துக்கொண்டு நேரே வைக்கத்துக்கு வந்தார்கள் தாங்கள் சாப்பாட்டுச் செலவை ஏற்றுக்கொள்ளும் ஆதரவு தருவதற்காக. உடனே, இங்கிருந்த பிராமணர்கள் எல்லாம், சீக்கியர்கள் வந்து இந்துமதத்திற்கு எதிராகப் போர் தொடுக்கிறார்கள் என்றெல்லாம் காந்திக்கு எழுதினார்கள்.

உடனே, அதன்பேரில் காந்தியார், பிற மதக்காரன் ஆகிய எவனும் இதில் கலந்து கொள்ளக்கூடாது என்று எழுதிவிட்டார். காந்தி எழுதியவுடனே, இதில் கலந்திருந்த சீக்கியர், சாய்பு, கிறித்தவர் எல்லாரும் போய்விட்டார்கள். அதுபோலவே, தீவிரமாக இதில் ஈடுபட்டு முன்னோடியாக உழைத்த, காலஞ்சென்ற ஜார்ஜ் ஜோசப்புக்கும், 'நீங்கள் விலகிவிடுங்கள்' என்று இராசகோபாலாச்சாரியார் கடிதம் எழுதினார்.

தற்போதைய நாகர்கோயில் யோனீர் டிரான்ஸ்போர்ட்டைச் சேர்ந்த சேவு என்பவரும், டாக்டர் எம்.இ.நாயுடு அவர்களும், என்னுடனேயே இருந்து தொடர்ந்து நடத்துவதென்று முடிவு செய்தார்கள். அவர்கள், 'இதை விட்டுவிட்டுப்

> **இராணி காந்தியோடு பேசியபோது, இராணி தெரிவித்தார்கள், 'நாங்கள் ரோடுகளைத் திறந்துவிட்டு விடுகிறோம். ஆனால், அதை விட்டவுடன் நாயக்கர் கோயிலுக்குள் போக உரிமை வேண்டும் என்று கேட்டு ரகளை செய்தால் என்ன செய்வது? அதுதான் தயங்குகிறோம்' என்றார்கள்.**

போகமாட்டோம்' என்று உறுதியாகத் தெரிவித்து விட்டார்களென்றாலும், காந்தி, சத்தியாக்கிரகத்திற்கு விரோதமாக எழுதிப் பணத்தையும் ஆளையும் தடுத்துவிடுவாரோ என்று சிலர் பயப்பட்டார்கள். அந்தச் சமயம் சுவாமி சிரத்தானந்தா அவர்கள் வைக்கம் வந்து, தான் பணத்திற்கு வகை செய்வதாகச் சொன்னார்.

பிறகு, காந்தி கட்டளைக்கு விரோதமாகவே சத்தியாக்கிரகம் நடந்து வந்தது.

இந்தச் சமயத்தில் என்னை மறுபடியும் பிடித்து 6 மாதக் கடுங்காவல் விதித்து ஜெயிலில் போட்டுவிட்டார்கள். பிறகு, சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதற்காகவும், எங்களை அழிப்பதற்காகவும் என்று நான் ஜெயிலில் இருக்கிற சமயத்தில்– சில வைதிகர்கள் சேர்ந்துகொண்டு, 'சத்ரு சங்கார யாகம்' ஒன்றை வெகு தடபுடலாக ஆயிரக்கணக்கான ரூபா செலவு செய்து நடத்தினார்கள். ஒருநாள் நடுச்சாமத்தில் தொடர்ந்து வேட்டுச் சத்தம் கேட்டது. நான் ஜெயிலில் விழித்துக் கொண்டிருந்தேன்; 'ரோந்து' வந்தவரைப் பார்த்துக் கேட்டேன்; "என்ன செய்தி? இப்படி வெடிச்சத்தம் கேட்கிறது? இந்தப் பக்கம் ஏதாவது பெரிய திருவிழா நடக்கிறதா?" என்று கேட்டேன். அதற்கவர் சொன்னார்,, "மகாராஜாவுக்கு உடம்பு சவுக்கியமில்லாமலிருந்தது; மகாராஜா நேற்று இரவு திருநாடு எழுந்துவிட்டார்" என்று. அதாவது, 'இராஜா செத்துப்போனார்' என்று சொன்னான்; அவ்வளவுதான். அவர்கள் செய்த யாகம், அவர்களை நோக்கியே வந்தது.

அதன்பிறகு, அரசாங்கம் எங்களையெல்லாம் இராஜாவின் கருமாதியை முன்னிட்டு விடுதலை செய்தது. எதிரிகள் குரலும் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி வர ஆரம்பித்தது. இராணியும் கூப்பிட்டு எங்களோடு ஒரு உடன்பாட்டிற்கு வர விருப்பம் தெரிவித்தவுடன், அப்போது சமஸ்தானத்தில் திவானாக இருந்தவர் – என்னிடத்தில் இராணி நேரே பேசக்கூடாது என்று கருதி, திரு. இராசகோபாலச்சாரியாருக்குக் கடிதம் எழுதினார். அவரும் அந்த வாய்ப்பை காந்தியாருக்கே அளித்து, அவருக்குக் கடிதம் எழுதினார். எனக்கும் அதைப்பற்றிக் கவலையில்லை; எப்படியாவது காரியம் வெற்றியானால் போதும்; நமக்குப் பேரும் புகழும் வருவது முக்கியமல்ல என்ற கருத்தில் நானும் ஒப்புக் கொண்டேன். காந்தியும் புறப்பட்டு வந்தார். இராணியோடு காந்தி பேசினார்.

இராணி காந்தியோடு பேசியபோது, இராணி தெரிவித்தார்கள், 'நாங்கள் சாலைகளைத் திறந்துவிட்டு விடுகிறோம். ஆனால், நாயக்கர் கோயிலுக்குள் போக உரிமை வேண்டும் என்று கேட்டு ரகளை செய்தால் என்ன செய்வது? அதுதான் தயங்குகிறோம்' என்றார்கள்.

உடனே, காந்தி 'டி.பி'யில் தங்கியிருந்த என்னிடத்தில் வந்து, இராணி சொன்னதைச் சொல்லி 'என்ன சொல்லுகிறாய்? இதை ஒப்புக் கொண்டு விடுவது நல்லது' என்றார். நான் சொன்னேன், "பொது சாலையைத் திறந்து விடுவது சரி! ஆனால், அதை வைத்துக்கொண்டு கோயிலைத் திறந்து விடும்படி கேட்கமாட்டோம் என்று நாம் எப்படி உறுதியளிப்பது? கோயில் பிரவேசம் என்பது காங்கிரசின் இலட்சியமாக இல்லாவிட்டாலும் எனது இலட்சியம் அதுதானே, (கோயில்) அதை விட்டுக்கொடுக்க எப்படி முடியும்? வேண்டுமானால் இராணிக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள்; 'இப்போதைக்கு அதுமாதிரி கிளர்ச்சி எதுவுமிருக்காது. கொஞ்சநாள் அதுபற்றி மக்களுக்கு விளங்கும்படி பிரச்சாரம் செய்து, கலவரத்திற்கு இடமிருக்காது என்று கண்டால்தான் கிளர்ச்சி ஆரம்பிக்கப்படலாம், என்று சொல்லுங்கள்" என்று சொன்னேன்.

அதை, காந்தி இராணியிடம் சொன்னவுடன் இராணியார், 'சாலையில் யார் வேண்டுமானாலும் நடந்து செல்லலாம்' என்று உத்தரவு போட்டுப் பொது சாலையாக ஆக்கினார்கள்.

**(தீண்டாமையை ஒழித்தது யார்?
– நூலின் சில பகுதிகள்)**

# வைக்கம் போராட்டம்:

## புகழ் ஏணியில் பாய்ந்தேறியது!

– அண்ணல் காந்தியடிகள்

**ச**மீபகாலம்வரையில் வைக்கத்தைப்பற்றித் திருவாங்கூருக்கு வெளியே, அதிகமாகப் போனால், சென்னை மாகாணத்துக்கு வெளியே யாருக்கும் எதுவும் தெரியாது. ஆனால், அது திடீர் என்று புகழ் ஏணியில் பாய்ந்தேறிவிட்டது. அது சத்தியாகிரகத்தின் முக்கிய ஸ்தானமாகிவிட்டதே அதற்குக் காரணம்.



திருவிதாங்கூரில் உள்ள தீண்டாதார்களின் சார்பிலேயே சத்தியாகிரகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த இயக்கம், ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நிலையை வருணிப்பதற்குரிய மற்றொரு சொல்லை நமக்கு அளித்திருக்கிறது. அதுதான் நெருங்காமை. நம் தேசத்தைச் சேர்ந்த இந்த ஏழை மக்கள், மற்றெந்த சாதி இந்துக்களையும் தொடக்கூடாது என்பது மாத்திரமல்ல; குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் அவர்களை நெருங்கவும்கூடாது. இந்தத் தீமைக்குப் பரிகாரம் தேடும் நோக்கத்துடன் இயக்கத்தின் தலைவர்கள், அந்தத் தீமையின் ஒரு சிறு அம்சத்தை மாத்திரமே எடுத்துக்கொண்டு எதிர்க்க முற்பட்டிருக்கிறார்கள்.

அந்த அம்சத்தை அவர்கள் வெற்றிகரமாகச் சமாளித்துவிட்டால், நேரடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டால் இந்தியாவின் அப்பகுதியில் மாத்திரமாவது அத்தீமைக்குச் சாவுமணி அடித்ததாகிவிடும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அந்த இயக்கத்தை நிறைவேற்றுவதில், மலையாளத்தைச் சேர்ந்த உறுதி வாய்ந்த சில சீரிய தொண்டர்கள் சிறைப்பட்டிருக்கிறார்கள்.

எனவே, இனி பின்வாங்குவதென்ற பேச்சிற்கே இடமில்லை. இயக்கத்தை வைதிக இந்துக்கள் தீவிரமாக எதிர்ப்பார்களாயின், போராட்டம் நீண்ட காலம் நடைபெறலாம். தப்பெண்ணம் சுவர்போல் இயக்கத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. அந்தச் சுவர் எவ்வளவு பலமாகவும், உறுதியாகவும் இருப்பினும், சத்தியாகிரகிகள் உறுதியுடனும், ஆனால், பணிவுடனும், உண்மையாகவும், சாத்விகமாகவும் போராட்டத்தைத் தொடர்ந்து வருவார்களாயின், அவர்கள் அந்தச் சுவரைத் தகர்த்துவிடுவார்கள் என்பது நிச்சயம். இந்த குணாதிசயங்கள் கருங்கல் போன்ற இதயங்களையும் உருக்கிவிடும் என்பதில் அவர்களுக்குப் போதிய நம்பிக்கை இருக்க வேண்டும்.

('யங் இந்தியா' – 17.04.1924)

# தலைவர்கள் பார்வையில்...

★ பெரியார் மீதான தடையாணை நீக்கப்பட்டதை வரவேற்ற காந்தி

“திருவிதாங்கூர் அரசாங்கத்தார் குரூர் நீலகண்டன் நம்பூதிரியைச் சிறையினின்று விடுவித்து விட்டார்கள் என்பதையும் ஈ.வெ.ராமசாமி நாயக்கருக்கு விரோதமாகப் பிறப்பித்த தடை உத்தரவை திரும்ப வாங்கிக்கொண்டுவிட்டார்கள் என்பதையும் கேட்க வாசகர்கள் சந்தோஷமடைவார்கள்” (யங் இந்தியா, 23 ஏப்ரல் 1925; சுதேசமித்திரன், 27 ஏப்ரல் 1925).

“The reader will be glad to learn that the Travancore Government have released Sjt. Kurur Nambudripad and withdrawn the prohibition order against Sjt. Ramaswamy Naicker... I tender my congratulations to the Travancore Government on the admirable spirit, with which it is acting in the matter of the long delayed reform”

**(Gandhi - Young India, 23 April 1925)**

## வைக்கம் என்பது நேரடி நடவடிக்கை!

**- அண்ணல் அம்பேத்கர்**

“**தீ**ண்டத்தகாத மக்கள் தங்களின் அணுகுமுறையை மாற்றிக்கொண்டு தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். இம்மாற்றம் 1920களில் தொடங்கியது.



இந்தச் சமூக அமைப்புக்கு எதிராக, தீண்டத்தகாத மக்கள் எவ்வாறு கிளர்ந்தெழுந்து நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதற்கு ஒரு சிலவற்றை மட்டுமே குறிப்பிட முடியும். இதில் பொதுச் சாலையைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற எடுக்கப்பட்ட முயற்சி, மிகவும் குறிப்பிடத்தகுந்தது. இந்த ரீதியில் மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஒரு முயற்சி 1924இல் திருவிதாங்கூர் மாநிலத்தில் தீண்டத்தகாத மக்கள் செய்ததாகும். அது, வைக்கம் என்ற ஊரில் உள்ள கோயிலுக்குச் செல்லும் வழியைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமையாகும். கோயிலுக்குச் செல்லும் சாலை பொதுவான சாலையாகும். இதை அனைவரும் பயன்படுத்தக்கூடிய வகையில் அரசுதான் பராமரித்து வருகிறது. ஆனால், சாலை, கோயில் கட்டடத்திற்கு அருகில் இருப்பதால் தீண்டத்தகாத மக்கள் இதன் ஒரு பகுதியைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இறுதியில் அங்கு நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் விளைவாக கோயில் சுற்றுப்புறச் சுவர் விரிவாக்கப்பட்டு அந்தச் சாலை மாற்றியமைக்கப்பட்டது. எனவே, தீண்டத்தகாத மக்கள் பயன்படுத்தினாலும் அது கோயிலை மாசுபடுத்தாத தூரத்தில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்பட்டது.” (டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுதி 5, பக். 247)

“சுயராஜ்யம் என்பது, இந்துக்களுடைய ஆட்சியின்கீழ் தீண்டத்தகாத மக்களுக்கு அமையப் போகும் மற்றொரு வகையான அடிமைத்தனம் என்பதே தீண்டத்தகாத மக்களுடைய தலைவர்கள் சிலரின் அச்சம். ஆனால் தேசத் தலைவர்கள் என்று சொல்லப்படும் சிலர், அது ஆதாரமற்ற அச்சம் என்று வாதிடுகிறார்கள். சுயராஜ்யம் வந்துவிட்டால் தீண்டாமை பழங்கதையாகிவிடும்; மிகக் குறுகிய காலத்தில் இந்திய சமூகப் பரப்பில் இருந்தே அது காணாமல் போய்விடும் என்பதாக அவர்கள் சொல்கிறார்கள். இதுபோன்று வாதிடும் தலைவர்களை, அண்மையில் சென்னையில் கூட்டப்பட்ட சமூக மாநாட்டின் தலைமை உரையின் வழியாக திரு. ராமசாமி நாயக்கர் அவர்கள் கடுமையாகச் சாடுகிறார். திரு. ராமசாமி நாயக்கர் சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர். தன் சிந்தனையிலும் செயலிலும் காந்தியத்தைக் கொண்டிருந்தாலும் சமூக மாற்றமே இந்தியாவிற்கு முதன்மையானது என்பதை உறுதியாக நம்புகிறவர்.

அவருடைய தலைமை உரையில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: “இந்த நாட்டில் ஒரு வகுப்பைச் சேர்ந்த மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பொதுச் சாலைகளில் நடக்க அனுமதி இல்லை; கோயிலுக்குள் நுழைந்து கடவுளை வழிபட அனுமதி இல்லை; பொதுக்கிணறுகளிலும், பொதுக்குளத்திலும் தண்ணீர் குடிக்க அவர்களுக்கு அனுமதி இல்லை. இதுபோன்ற ஒரு நாடு பூகம்பத்தினாலோ, பொங்கும் எரிமலையினாலோ கடலில் மூழ்கடிக்கப்பட்டு அழிந்து போவதே நல்லது. கடவுள் மட்டும் கருணை உள்ளவர் என்பது உண்மையானால், எப்போதோ இந்த நாட்டை இல்லாமல் அழித்திருப்பார். இப்படிப்பட்ட ஒரு நாட்டினால் எந்தவித வெட்கமும் இல்லாமல் எப்படி வெள்ளையரிடமிருந்து விடுதலையும், முழுமையான சுதந்திரத்தையும் கோர முடிகிறது?”

மேற்சொல்லப்பட்ட கருத்து, தீண்டத்தகுந்த மக்களின் சுயராஜ்யம்பற்றி தீண்டத்தகாத மக்கள் கொண்டிருக்கும் அச்சமானது ஒதுக்கிவிடக்கூடிய ஒன்றல்ல என்பதைத் தெளிவாக விளக்குகிறது. இது, தீண்டத்தகுந்த மக்களுடைய சுயராஜ்யத்தில் தீண்டத்தகாத மக்களுடைய நிலை பற்றி ஆகச் சிறந்த தலைவரும், நாட்டுப் பற்றாளருமான ராமசாமி நாயக்கர் அவர்கள் கொண்டிருந்த அய்யப்பாடு. உண்மையைச் சொன்னால் தீண்டத்தகாத மக்களுக்கும் சுயராஜ்யம் என்பது அவசியம்தான். சுயராஜ்யம் அமைய வேண்டும் என்று அவர்கள் விரும்புவதற்கும் அதனை எதிர்நோக்கி இருப்பதற்கும் அனைத்து நியாயங்களும் இருக்கின்றன. ஆனால், மனிதம் கொல்லாத, தங்களின் உரிமைகளை உரிய வண்ணம் பாதுகாக்கக்கூடிய ஒரு சுயராஜ்யத்தையே அவர்கள் கோருகின்றனர்!

**(‘பகிஷ்கரித் பாரத்’ டிசம்பர் 21–28, 1928)**



## வைக்கம் வீரர் பட்டம் சூட்டியவன் நான்!

**– தமிழ்த் தென்றல் திரு.வி.க.**

**ஸ்ரீ**மான் (நாயக்கர்) செல்வத்திற் சிறந்த சீமான்; செழித்த நிலையில் வாழ்க்கை நடத்தியவர். அவர் தேசத்தின்பொருட்டு எல்லாவற்றையும் தியாகம் செய்து மிக எளிய வாழ்க்கை மேற்கொண்டு தேச சேவை செய்து வந்தார். அத்தகைய பெருமை வாய்ந்த அவர் திருவனந்தபுரம் சிறையில் இடுப்பில் சிறை உடையோடும், கரத்தில் விலங்கோடும் மற்ற சத்தியாகிரக சிறைக் கூட்டத்தினின்றும் பிரிக்கப்பட்டுத் தனி அறையில் உறைகின்றாராம். நாயக்கர் சத்தியாகிரகத் தர்மத்தை உணர்ந்தவராதலால், எந்தக் கஷ்டத்தையும்

சகிக்கும் சக்தி வாய்ந்தவர் என்பது நமக்குத் தெரியும். ஆனால் திருவாங்கூர் அரசாங்கம் ஒரு சத்தியாகிரகியை இவ்வாறு துன்புறுத்துவது தருமமா என்று கேட்கிறோம்.

“வைக்கத்திலே 1924 இல் தீண்டாமை போராட்டம் எழுந்தது. நாயக்கர் அங்கு சென்று சத்தியாகிரகம் செய்தார். திருவிதாங்கூர் அரசாங்கம் அவரைச் சிறைப்படுத்தியது. அப்போது யான் ‘வைக்கம் வீரர்’ என்ற தலைப்பீந்து அவருடைய தியாகத்தை வியந்து வியந்து ‘நவசக்தி’யில் எழுதினேன். ‘வைக்கம் வீரர்’ என்பது நாயக்கருக்கு பட்டமாகவே வழங்கலாயிற்று.”

**(நவசக்தி, வாழ்க்கை குறிப்புகள்)**

## “தீரரைப் போற்றுகிறது தமிழ்நாடு”

**- மூதறிஞர் இராஜாஜி**

**இ**ப்பொழுது திருவனந்தபுரம் சிறைச்சாலையிலிருக்கும் சத்தியாகிரகக் கைதியான ஸ்ரீமான் ராமசுவாமிநாயக்கரை உணவு, இட வசதி முதலிய விஷயங்களில் சாமான்யக் கைதிகளைப்போல் நடத்துவதாக நம்பத்தகுந்த இடத்திலிருந்து எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

அவர் சிறை உடைகளை அணிகிறார். காலில் இரும்பு வளையம் போடப்பட்டிருக்கிறது. மற்ற சத்தியாகிரகக் கைதிகளிடமிருந்து பிரித்துத் தொலைவில் ஒரு தனி அறையில் அடைத்திருக்கிறார்கள். ஆயினும் ஸ்ரீமான் நாயக்கர் உற்சாகத்துடனிருந்து வருகிறார் என்பதை நான்சொல்லத் தேவையில்லை. அவருடன் நான் நெருங்கிப் பழகியிருப்பதால் அவரை நன்கறிவேன். அவர் செல்வத்தையும், அந்தஸ்தையும் துறந்து, சங்கடங்களை ஏற்றுக் கொண்ட தீரபுருஷர். அவருடைய தூய்மையைப் பரிசோதிப்பதற்காக இத்தகைய சோதனைகள் செய்வதற்கு அவர் சந்தோஷப்படுகிறார். பிரிட்டிஷ் இந்தியாவில் நடத்தப்படும் தோரணைக்கு இது முற்றிலும் மாறுபட்டிருக்கிறது.



இருந்தாலும் ஸ்ரீமான் நாயக்கர் விஷயத்தில் திருவிதாங்கூர் அரசாங்கத்தார் தவறான வழியில் இறங்கி விட்டதாகத் தோன்றுகிறது. ஸ்ரீமான் நாயக்கருடைய அந்தஸ்து தெரியாமல் அவ்விதம் செய்யலாம். ஆனால் அது ஒரு மனசாட்சிக்காகச் சிறை செல்வோர் எத்தகையினராயினும் சமாதானமாக முடியாது. கண்ணியமாக நடத்த வேண்டும். அந்த மாவட்டத்தை விட்டுப் போய்விடும்படி ஸ்ரீமான் நாயக்கருக்கு உத்தரவிட்டார்கள். அதை மீறி நடந்தார். இருந்த போதிலும் வெளியேற்ற உத்தரவின் நோக்கம் சம்பந்தப்பட்டவரை சாந்தமாக வைத்திருப்பதால் நிறைவேறி விடுகிறது. ஆனால் அவருக்குக் கடுங்காவல் தண்டனை விதிப்பதும், இரும்பு விலங்குகள் போடுவதும், சிறை உடைகளைக் கொடுப்பதும், மற்றவர்களுடன் சல்லாபமில்லாமல் செய்வதும் நியாய விரோதமாகும்.

திருவனந்தபுரம் சிறையிலிருக்கும் தீரரைத் தமிழ்நாடு பாராட்டுகிறது.

**(சுதேசமித்திரன் 28.08.1924)**



## "பெரியாரின் போராட்டத்தால் கிடைத்த வெற்றி!"

**- பெருந்தலைவர் காமராசர்**

"**தி**ருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வைக்கம் என்றொரு இடம். இங்கு தாழ்த்தப்பட்ட மக்களை, சாதி இந்துக்கள் கொடுமைக்கு உள்ளாக்கியிருந்தார்கள். இதை எதிர்த்து திரு. டி.கே.மாதவன், கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப் கிளர்ச்சி செய்தார்கள். இக்கிளர்ச்சி அவ்வளவாக சூடு பிடிக்கவில்லை. அவர்கள் பெரியாருக்குக் கடிதம் எழுதிவரச்சொன்னார்கள். உடனே பெரியார், தொண்டர்களை அழைத்துக்கொண்டு சென்று விட்டார்.

வைக்கத்தில் அக்கிரமம் நடக்கிறது என்று, சூறாவளி சுற்றுப்பயணம் செய்து பல கூட்டங்களில் பேசினார். ஒவ்வொரு கூட்டத்திலும் அவர் பேசிய பேச்சுக்களுக்கு நல்ல பலன் இருந்தது. இதைப்பார்த்த சமஸ்தான அதிகாரிகள் அவரை பேசவிடாதபடி 144 தடை உத்தரவைப் போட்டார்கள். பெரியார் இதை மீறி கோட்டயத்தில் பேசி கைதானார். ஒரு மாத சிறைதண்டனை அவருக்கு வழங்கப்பட்டது. 30 நாட்கள் எப்போது கழியுமென சிறையில் காத்திருந்தார். சிறையிலிருந்து வெளிவந்ததுதான் தாமதம், மீண்டும் கூட்டம் போட்டு பேசினார்.

உடனே சமஸ்தான அதிகாரிகள் இவரை திருவிதாங்கூர் எல்லைக்குள் வரக்கூடாது என்று வெளியேற்றினார்கள். இதையும் மீறி உள்ளே நுழைந்து பொதுக்கூட்டத்திலும் பேசிவிட்டார். திரும்பவும் கைது செய்து ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை கொடுத்தார்கள்.

இதற்குள் பெரியாரது தடை மீறல்களும், கைதான செய்திகளும் அகில இந்திய முக்கியத்துவம் பெற்றுவிட்டன. மகாத்மா, சமஸ்தானத்தின் அடக்குமுறைப் போக்கை வன்மையாகக் கண்டித்து பெரியாரது செயலை வெகுவாகப் பாராட்டி எழுதினார். தாழ்த்தப்பட்டவர்களுக்குள்ள தடையை பெரியார் கோரிக்கைப்படி நீக்காவிட்டால் பெரும் போராட்டம் துவங்கும் என்று மகாத்மா எச்சரிக்கை செய்தார். சமஸ்தான அதிகாரிகள் பயந்து போய், பெரியார் சொன்ன தடைகளை எடுத்தெறிந்து அவர்களையும் விடுதலை செய்தார்கள். இந்தப் போராட்டம், இவருக்கு "வைக்கம் வீரர்" என்ற பட்டத்தைப் பெற்றுத்தந்துள்ளது. இதில் மகாத்மாவுக்கு பெரியார் மீது மதிப்பும் உயர்ந்தது.

**(உண்மை, மாத இதழ்)**

## ஒரு சகாப்தம் - ஒரு காலக்கட்டம் - ஒரு திருப்பம்!

**- பேரறிஞர் அண்ணா**

**எ**னக்கென்று ஒரு வசந்தகாலம் இருந்தது. பெரியாருடன் நான் இருந்த காலம் அது. அந்த நாள்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் காடுமேடு பல சுற்றி வந்த நிலை. அந்தக் காடு, மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றியபோது, வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன்; நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

அப்போது, கலவரம் எழாமல் ஒரு பொதுக்கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடித்திட முடிந்தால் போதும், பெரிய வெற்றி என்றே பெருமிதம் தோன்றும். புறப்படு முன்னர், தலைபோகும், தாடி போகும், தடி போகும், உயிர்போகும் என்ற மிரட்டல் கடிதங்களைப் படித்திட வேண்டிய நிலை.

‘அண்ணாதுரை! இதைப் பார்த்தாயா!’ என்று ஒரு கடிதத்தை வீசுவார். ‘ஆமாமய்யா!’ என்று ஒரு கடிதத்தைத் தருவேன். ‘வருகிறாயா?’ என்று என்னைக் கேட்க மாட்டார். ‘வருவேன்’ என்பது அவருக்கு நன்கு தெரியுமாதலால்.

செல்வோம்; பெரியாரின் பேருரை நிகழ்த்தப்படும். வந்தவர்களில், உருட்டல், மிரட்டல் கடிதம் எழுதியவர் இருந்திருப்பின் அடுத்த கூட்டத்திற்கு அவர் அய்யாவிற்காக மாலை வாங்கிக் கொண்டு தான் வருவார்! அத்தகைய தெளிவும், வாதத்திறமையும் பேச்சில் கிடைக்கும். அத்தகைய தெளிவுரை பெற்று, தமிழரில் பலர், பலப்பலர் திருந்தினர் என்பது மட்டுமல்ல, தமிழகத்திலேயே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது.



ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை.

‘திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்கிறாரே!’ என்று கூறியும்,

‘விட்டு வைக்கக் கூடாது! ஒழித்துக் கட்டியாக வேண்டும்! நானே தீர்த்துக் கட்டுகிறேன்!’ என்று மிரட்டியும் தமிழகத்துள்ளாரில் பலர் பேசினர்; ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர்; மறுப்பு உரைத்தனர். ஆனால், அவர் பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர். மூலையில் நின்றாகிலும், மறைந்திருந்தாகிலும்!

அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது. எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள், ஏனோதானோ என்று இருந்தவர்கள் தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர்; கொதித்தவர்கள் அடங்கினர்; மிரட்டினோர் பணிந்தனர்; அலட்சியம் செய்தோர் அக்கறை காட்டினர்! அவருடைய பேச்சோ அது தங்கு தடையின்றி வேகம் குறையாமல் பாய்ந்தோடி வந்தது மலைகளைத் துளைத்துக்கொண்டு, கற்களை உருட்டிக்கொண்டு, காடு கழனிகளை வளம்பெறச் செய்துகொண்டு ஓசை நயத்துடன் ஒய்யார நடையுடன்! அங்கே பேசுகிறார், இங்கே பேசுகிறார், அதைக் குறித்துப் பேசுகிறார், இது குறித்துப் பேசுகிறார் என்று தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாகக்கூறி வருகிறது.

மனதிற்பட்டதை எடுத்துச் சொல்வேன் எது நேரிடினும் என்ற உரிமைப்போர் அவருடைய வாழ்வு முழுவதும், அதிலே அவர்கண்ட வெற்றி மிகப் பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை; இன்று அனைவரும் பெற்றுள்ளனர் அந்த வெற்றியின் விளைவுகளை.

இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன் மனதிற்கு சரியெனப்பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல்கட்ட வெற்றி இது! இதற்கு முழுக்க முழுக்கப் பொறுப்பாளர் பெரியார்! இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு, மிகப் பெரியது.

தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலை இந்தியாவில் வேறு எங்கும் காணமுடியாதது. பிற பகுதியினர் இதுபற்றிக் கேள்விப்படும்போது, வியர்த்துப் போகின்றனர். 'அப்படியா! முடிகிறதா! நடக்கிறதா! விட்டு வைத்திருக்கிறார்களா!' என்று கேட்கிறார்கள் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு.

அரித்துவாரம், கல்கத்தா, பாட்னா, கான்பூர், காசி, லாகூர், அலகாபாத், அமிர்தசரஸ் போன்ற நகரகங்ளில் என்னையும் உடன் அழைத்துக்கொண்டு பெரியார் சுற்றுப்பயணம் செய்தபோது, ஒவ்வோர் ஊரிலும் இதுபோலத்தான் கேட்டனர். யார்? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவுவாதிகள்!

அந்த இடத்துப் பகுத்தறிவுவாதிகள் படிப்பார்கள் பெரிய பெரிய ஏடுகளை; எழுதுவார்கள் அழகழகான கட்டுரைகளை; கூடிப் பேசுவார்கள் சிறிய மண்டபங்களில், காவல் துறை பாதுகாப்பு பெற்றுக்கொண்டு! இங்கு? பழைமையின் பிடிவாதம் பொடிப்பொடியானது!

இங்கா? இவர் பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத பழைமை உண்டா? எதைக்கண்டு அவர் திகைத்தார்? எதற்கு அவர் பணிந்தார்? எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது?

ஏ அப்பா! ஒரே ஒருவர், அவர் நம்மை அக்குவேறு ஆணிவேறாக எடுத்தெடுத்து வீசுகிறாரே என்று, இந்நாட்டை என்றென்றும் விடப்போவதில்லை என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த பழைமை அலறலாயிற்று! புதுப்புது பொருள் கொடுத்தும், பூச்சுமெருகு கொடுத்தும் இன்று பழைமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. என்றாலும், விழுந்த அடியால் அடித்தளம் நொறுங்கிப் போய்விட்டிருக்கிறது என்பதை அறியாதவர் இல்லை!

அக்கிரமம் தென்படும்போது, மிகப் பலருக்கு அது தன்னைத் தாக்காதபடி தடுத்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணமும், ஒதுங்கிக் கொள்வோம் என்ற பாதுகாப்பு உணர்ச்சியும்தான் தோன்றும்; எதிர்த்து நிற்க வேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழுவதில்லை.

பெரியார் அக்கிரமம் எங்கு இருந்திடக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படினும், எத்தனை பக்கபலத்துடன் வந்திடினும் பெரியார் அதனை எதிர்த்துப் போராடத் தயங்குவதில்லை. அவர் கண்ட களம் பல; பெற்ற வெற்றிகள் பலப்பல! அவர் தொடுத்த போர் நடந்தபடி இருக்கிறது!

எனவேதான் பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல; ஒரு சகாப்தம் ஒரு கால கட்டம், ஒரு திருப்பம் என்று கூறுவது வாடிக்கை.

**(எனது வசந்த காலம் நூலிலிருந்து)**

## இவரல்லவா புதிய எழுச்சியை இந்த மண்ணில் உருவாக்கியவர்!

**- தமிழினத் தலைவர் கலைஞர்:**

**வைக்கத்து வீரர் என யாரைச் சொன்னோம்?**
**'வை கத்தி!' தீண்டாமைக் கழுத்தில் என்று**
**வரிப்புலியாய்க் களம் சென்று வாகை சூடி**
**வைத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம் வீரர்!**

ஈரோட்டில் எந்தப் பக்கம் திரும்பினாலும் செல்வாக்கு; வாணிபத்தில் ஆதாயம்; நிலபுலன்கள்; வீடுவாசல் என செல்வச்செழிப்புடன் வாழ்ந்த தந்தை பெரியார் அவர்கள், நேர்மையான, நாணயம் மிக்க பொதுநலப் பணிகளைப் புரிந்து வந்ததன் பயனாக, ஈரோடு நகராட்சித்தலைவர் உள்ளிட்ட



29 பதவிகளை வகித்து புகழோடும், பெருமையோடும் விளங்கினார். இராஜாஜி அவர்களின் தோழமையாலும், அவரது வலியுறுத்தலாலும் அத்தனை பதவிகளையும் துறந்து, அண்ணல் காந்தியடிகளின் தலைமையை ஏற்று, காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக உயர்ந்து, தொண்டாற்றி வந்தார்.

அப்பொழுது காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களுக்கெல்லாம் – தீண்டாமை ஒழிப்பு, கள்ளுக்கடை மறியல், கதர் ஆடை உடுத்துதல் போன்ற திட்டங்களுக்கெல்லாம் ஆதரவு தந்தார். அவர், கேரள மாநிலம், வைக்கத்தில் தீண்டாமைப் போர் நடத்தி வெற்றி கண்டு, 'வைக்கம் வீரர்' என தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களால் போற்றப்பட்டு புகழ் பெற்றதும் அந்தக் காலத்தில் தான்.

வைக்கத்துக்குச் சென்று அவர் நடத்திய ஜாதி ஒழிப்புப் போராட்டம் சாதாரணமானதல்ல. அங்கே உள்ள வீதிகளில் கீழ் ஜாதிக்காரர்களை நடமாட விடாத நேரத்தில், தந்தை பெரியார் அந்தப் போராட்டத்திலே கலந்து கொண்டார். எதிர்த்தவர்கள் எதை வைத்திருந்தார்கள் தெரியுமா? பானையிலே தண்ணீரைக் கொதிக்க வைத்து அதை அந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் மீது ஊற்றினார்கள். அதற்கும் அஞ்சாமல் சென்று அந்தப் போராட்டத்தை நடத்தியவர் தந்தை பெரியார் அவர்கள்.

1924ஆம் ஆண்டு இந்த வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் குதித்தார்கள். அப்போதுதான் நானும் இந்த பூமியிலே குதித்தேன். நான் பிறந்த ஆண்டும், தந்தை பெரியார் அவர்கள் வைக்கத்தில் போராட்டம் நடத்திய ஆண்டும் ஒன்றுதான். போராட்ட ஆண்டிலே நான் பிறந்த காரணத்தினால் தான் நம்முடைய வாழ்க்கையே கூட ஒரு போராட்டமாக ஆகிவிட்டதோ என எண்ணுகிறேன்.

வைக்கத்தில் போராடியதற்காக தந்தை பெரியார் அவர்கள் கேரளத்திலே சிறை வைக்கப்பட்டார். தூற்றப்பட்டவர்களைக் கைதூக்கி விடுவதற்காக, அவர்களுடைய அடிமைத்தனத்தை அறுத்தெறிவதற்காக, தன்னுடைய கால்களிலும் கைகளிலும் சிறைச்சாலையின் விலங்குச் சங்கிலிகளை மாட்டிக்கொண்டு, கொலை செய்து தண்டிக்கப்பட்ட கைதிகளோடும், கொள்ளையடித்து தண்டிக்கப்பட்ட கைதிகளோடும், தந்தை பெரியார் அவர்கள் தியாக வேள்வி புரிந்தார் என்றால், அந்த வரலாறு இதுவரை மறைக்கப்பட்டுக் கிடந்த வரலாறு அல்லவா?

இவரல்லவா புதிய எழுச்சியை இந்த மண்ணில் உருவாக்கியவர். இவரல்லவா மனிதனை மனிதனாக மாற்றுவதற்கு காலமெல்லாம் பாடுபட்டவர். இவரல்லவா, மறைவதற்கு இரண்டு நாளைக்கு முன்புகூட இந்த சமுதாயத்தின் எழுச்சிக்காகக் குரல் கொடுத்தவர். இவரால் அல்லவா, தாழ்த்தப்பட்ட சமுதாயம் தலைநிமிர்ந்து நடக்கிறது. இவரால் அல்லவா, ஒரு காலத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் இன்றைக்கு பீடு நடைபோடுகிறது.

இவரால் அல்லவா, அடித்தளத்திலே வீழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கு கம்பீரமாகத் தெருவீதிகளிலே நடமாட முடிகிறது. இவரால் அல்லவா, உயர்ந்தோர் – தாழ்ந்தோர் ஆணவம் முறியடிக்கப்பட்டிருக்கிறது.

**(தாய் வீட்டில் கலைஞர்)**



# கட்டுரைகள்





**கி.வீரமணி**
தலைவர், திராவிடர் கழகம்

# கடந்த நூற்றாண்டில் இந்தியாவில் வெற்றியைத் தழுவிய முதல் மனித உரிமைப் போராட்டம் !

சமூகநீதி, மனித உரிமைப் போராட்ட வரலாற்றில் வைக்கம் போராட்டத்திற்கென்று தனித்த இடம் உண்டு. அது ஒரு தனித்த போராட்டம் அல்ல! பல போராட்டங்களுக்கான ஊற்றுக்கண்; தோற்றுவாய்; ஊக்க சக்தி!

கடந்த நூற்றாண்டில் இந்தியாவில் வெற்றியைத் தழுவிய முதல் மனித உரிமைப் போராட்டம்!

தன் இளமைக் காலம் முதலே ஜாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும், தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும், சிந்தனையும், செயல்பாடும் கொண்டிருந்தவர் தந்தை பெரியார். காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொள்வதற்கு முன்பே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு செயல்பட்டவர். காங்கிரஸ் கட்சியில் ஈடுபடும்போதும் சமூக விடுதலை என்பதை முன்னிறுத்திச் செயல்பட்டவர். காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கம் சத்தியாக்கிரகப் போராட்டம் போன்றவற்றில் அவர் காட்டிய முனைப்பு தீவிரமானது.

பிறவி ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கவும், சமூக நீதிக்காகவும், 1920 முதல் காங்கிரஸ் கட்சியின் மாநாடுகளில் தொடர்ந்து வலியுறுத்திப் பேசியதுடன், தீர்மானங்களையும் கொண்டு வந்தார். சம உரிமைக்குக் குரல் எழுப்புவதற்கான வாய்ப்புகளை ஒருபோதும் ஒதுக்கிடாமல், அவற்றை இன்னும் உரத்து முழங்கச் செய்தார். வகுப்புரிமைக்கான தீர்மானங்களும், தீண்டாமைக் கொடுமைக்கு எதிரான செயல்பாடுகளும், சேரன்மாதேவி குருகுலப் போராட்டமும், வைக்கம் போராட்டமும் அவற்றின் விளைவுகளே!







வைக்கம் சத்தியாகிரகம் என்பது, அன்றைய திருவிதாங்கூர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஒடுக்கப்பட்ட மக்கள், பொது இடங்களில் நடக்கக்கூடாது என்பது உள்பட கடுமையான அடக்குமுறைகளைச் சந்தித்துக் கொண்டிருந்த வேளையில், அதற்கு எதிராக கேரளா காங்கிரஸிலும் சமூக நீதிப் பார்வையோடும் செயல்பட்டுக் கொண்டிருந்தவர்கள் தொடங்கிய போராட்டம் தான் என்றாலும், தந்தை பெரியாரை அழைத்து ஈடுபடச் செய்து அவரின் தலைமை ஏற்றுச் செயல்பட அவர்கள் தயங்கவில்லை. காரணம், தந்தை பெரியார் சமூக நீதித் தளத்திலும், பார்ப்பனரல்லாதார் நன்மையிலும், தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும் ஆற்றி வந்த தொடர் பணிகளே ஆகும்.

அது பற்றி தந்தை பெரியார் அவர்களே 1959ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஆற்றிய உரையில் மிக விரிவாகவும், தெளிவாகவும் தன் நினைவில் இருந்து செய்திகளை எடுத்துக் கூறியிருக்கிறார். (08.09.1959)

‘‘வைக்கத்திலே போராட்டம் ஆரம்பமானதே ஒரு சிறு நிகழ்ச்சியிலேயிருந்துதான்.

தோழர் மாதவன் என்ற பி.ஏ,பி.எல்., படித்த ஒரு வக்கீல் ஒரு வழக்குக்காக ஆஜராகப் போனார். வழக்கு விசாரணைக்கான கோர்ட் இடம் இராஜாவுடைய அரண்மனையில் ஓர் இடம். இராஜாவின் பிறந்தநாள் விழாவிற்கு அந்த இராஜாவுடைய அரண்மனையில் எல்லா பாகத்திலும் பந்தல் போடப்பட்டதில் கோர்ட் நடக்கும் இடமும் பந்தலுக்குள் அடங்கிவிட்டது. இந்த மாதவன் வக்கீல் ஒரு வழக்கில் ஆஜராக அங்கே போகவேண்டிய அவசியம் வந்தது. இராஜாவின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக ஜெபம் ஆரம்பமாயிற்று. அங்கே இந்த வக்கீல் ‘நாடார்’ சமுதாயத்தைச் சேர்ந்தவராதலால், ‘கீழ்ஜாதிக்காரர் அங்கே போகக்கூடாது’ என்று தடுத்தார்கள்!

அந்த நேரம் நான் தமிழ்நாட்டிலே ‘தீண்டாமை விலக்கு’ என்பதில் தீவிரமாக இருந்து பிரச்சாரம் செய்து கொண்டிருந்த நேரம்! கலப்பு மணம், சமபந்தி போஜனம், எல்லோரும் பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டும் என்பன போன்ற கருத்துகளில் தீவிர நம்பிக்கைகொண்டு நீதிக் கட்சிக்காரர்களும் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்துத்தான் காந்தியும் அதை நிர்மாணத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டார்."

"... இந்த மாதவன் (வக்கீல்) சங்கதியை வைத்தே திருவனந்தபுரத்து நாடார் சமுதாயத் தலைவர்கள் சத்தியாகிரகம் ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். வக்கீல் மாதவன், டி.கே. மாதவன், கேரள காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.பி. கேசவமேனன் இவர்களோடு இன்னும் சிலரும் சேர்ந்து முடிவு செய்தார்கள். ஜெபத்தன்று ஆரம்பிப்பது என்ற முடிவு செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள். நான் அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருக்கிறேன். எந்த ஊரில் சத்தியாகிரகம் ஆரம்பிக்கலாமென்பதற்கு வைக்கத்தையே தேர்ந்தெடுத்தார்கள். ஏனென்றால் அந்த ஊரில்தான் ஊர் நடுவில் கோயிலும் அதன் 4 வாசலுக்கு எதிரிலும் 4 நேர் வீதிகளும் கோயில் மதில்கள், சுற்றிலும் தெருக்கள் பிரகாரம் எல்லாமும் இருக்கும்."

"... சத்தியாகிரகம் ஆரம்பமானவுடன் வக்கீல் மாதவன், பாரிஸ்டர் கேசவமேனன், டி.கே.மாதவன், ஜார்ஜ் ஜோசப் முதலியவர்களைப்போல் சுமார் பத்தொன்பது பேரை இராஜா கைது



செய்யும்படி உத்தரவிட்டு அதன்படி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தினசரி ஒருவர் வீதம் கைது செய்து அவர்களை மாத்திரம் தனிப்பட்ட முறையில் சிறப்புக் கைதிகளாக நடத்த உத்தரவிட்டார்கள். அப்போது இராஜாவிடம் மிஸ்டர் பிட் என்ற ஒரு வெள்ளைக்காரர் காவல்துறைத் தலைவராக இருந்தார். அவர் இந்த சத்தியாக்கிரகத்தை வெகு சாமர்த்தியமாகவும், ரொம்பவும் ஜாக்கிரதையாகவும் சமாளித்தார். இந்த பத்தொன்பது பேரைப் பிடித்து உள்ளே போட்டுவிட்டவுடன் அடுத்து சத்தியாகிரகத்தில் ஈடுபட யாரும் ஆள் கிடைக்கவில்லை. அதோடு அதுவும் நின்றுவிடும் போலத் தோன்றியது. உடனே எனக்கு பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்பும், கேசவமேனனும் சேர்ந்து கையெழுத்துப்போட்டு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்கள். "நீங்கள் வந்துதான் இதற்கு உயிர் கொடுக்கணும்; இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்பு கேட்டுக்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை. அப்படி மன்னிப்புக் கேட்டுக் கொள்வதனால் எங்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை என்றாலும், பெரிய காரியம் கெட்டுப் போகுமே என்றுதான் கவலைப்படுகிறோம். உடனே நீங்கள் வந்து பொறுப்பு ஏற்கவேண்டும்" என்று எழுதி அனுப்பினார்கள். எனக்கு ஏன் எழுதினார்கள் என்றால் தீண்டாமையைப் பற்றிப் பேசுவதில் நான் கெட்டிக்காரன், கிளர்ச்சியிலும் நான் கெட்டிக்காரன் என்று எனக்குப் பேர். நான் அப்போது சுற்றுப்பிரயாணத்தில் இருந்தேன்.

ஈரோட்டிற்கு எழுதப்பட்ட அந்தக் கடிதம் ரீ டைரக்ட் செய்யப்பட்டு மதுரை மாவட்டத்தில் உள்ள பண்ணபுரம் என்ற ஒரு மலைப்பக்க கிராமத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவன் என்ற முறையில் நான் பேசிக் கொண்டிருந்தபோது என் கைக்குக் கிடைத்தது.

உடனே மீதி சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை எல்லாம் ஒத்திப்போட்டுவிட்டு நேரே ஈரோட்டுக்குப் போனேன். வீட்டுக்கு வந்தவுடன் வைக்கத்திற்குப் போய் சத்தியாகிரகத்தை நடத்துவதென்று மிக்க மகிழ்ச்சியோடு மூட்டை கட்டிவிட்டேன்.



# அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்!

திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கும் நான் வரும் வரை தலைமைப் பதவி ஏற்றுக்கொள்ளும் படி ஒரு லெட்டர் எழுதிவிட்டு, இந்த சந்தர்ப்பம் ஒரு நல்ல வாய்ப்பு இதை விட்டால் இந்த மாதிரி அருமையான வேலை செய்ய வேறு வாய்ப்பு கிடைக்காது என்று எழுதி விட்டு 2 பேரைக் கூட்டிக்கொண்டு வைக்கத்திற்கு வந்தேன்.''

பிறகு நடந்தது ஒரு பெரும் வரலாற்று மாற்றத்தின் தொடக்கம்! தந்தை பெரியாரின் உணர்ச்சி மிக்க உரைகள், தொண்டர்களைத் திரட்டி மாபெரும் போராட்டமாக அதை உருக்கொள்ளச் செய்தது, முதல் முறை அப்போராட்டத்திற்காக அவர் கைது செய்யப்பட்டது, போராட்டத்தில் அன்னை நாகம்மையார், எஸ்.ஆர்.கண்ணம்மாள் உள்ளிட்ட பெண்கள் பங்கெடுக்கத் தொடங்கியதும் மகளிரிடம் ஏற்பட்ட பேரெழுச்சி, விடுதலையாகி மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டதால் பெரியார் மீண்டும் கைது செய்யப்பட்டு கடுங்காவல் தண்டனை பெற்று தனிச் சிறையில், கை – கால்களில் சங்கிலி பிணைக்கப்பட்டு வைக்கப்பட்ட கொடுமை, அது குறித்து இராஜாஜி, கே.பி.கே.கேசவ மேனன், திரு.வி.க. உள்ளிட்டோர் சுதேசமித்திரன், தி இந்து, நாடார் குல மித்திரன், நவசக்தி போன்ற ஏடுகளிலும், புத்தகங்களிலும் எழுதியுள்ள கண்டனங்கள் பதிவுகள், சிறையிலிருந்து வெளிவந்து உடல்நிலை சரியின்றி ஈரோடு திரும்பிய பெரியார் மீண்டும் வைக்கத்திற்கு வந்துவிடாமல் இருப்பதற்காக சென்னையில் முன்பு கூட்டமொன்றில் ஆற்றிய உரைக்காக தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, 124ஏ பிரிவின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை, அதே காலகட்டத்தில் வைக்கத்தில் தொடர்ந்து நடந்து வந்த போராட்டம், அது வெற்றியை நெருங்கும் நேரத்தில் பேச்சுவார்த்தைக்கு இராஜாஜி மூலம் காந்தியாரை அழைத்து வந்தது, பேச்சுவார்த்தையில் கோயிலுக்குள் நுழைய போராடக் கூடாது என்று ராணி விடுத்த கோரிக்கையை வைக்கத்தில் தங்கியிருந்த பெரியாரைச் சந்தித்து காந்தியார் முன்வைக்க, அது குறித்து பெரியார் தெரிவித்த கருத்துகள், வைக்கம் வீதிகள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டமை, அதன் முதலாமாண்டு வெற்றி விழா கூட்டத்திற்குத் தலைமையேற்க தந்தை பெரியாரை அழைத்து சிறப்பித்தது, அன்னை நாகம்மையாரும் அதில் பங்கேற்றது என்று போராட்டத்தின் வரலாறு வைக்கத்துடன் தொடர்புடையது மட்டுமல்ல... தொடர்ந்த ஒரு பெரும் போராட்ட வரலாற்றின் தொடக்கப் புள்ளி!

சம உரிமைக்கான போராட்டத்தில் அதன் தொடர்ச்சியைத்தான் நூறு ஆண்டுகள் கழித்து இன்றும் நாம் தொடர்ந்து கொண்டிருக்கிறோம்.

தந்தை பெரியாரின் அணுகுமுறை என்பது நடைமுறைச்சாத்தியம் கொண்டது. அவர் ஒரு Pragmatic Leader. 2000 ஆண்டுகளுக்கு மேலாக இந்த சமூகத்தில் ஆழ வேரூன்றிவிட்ட பிறவி பேதத்தையும், ஜாதி வர்ணாசிரம அடக்குமுறைகளையும் ஒழிப்பதற்கு படிப்படியாகச் செயலாற்ற வேண்டும் என்ற நடைமுறை உண்மையை தன் பட்டறிவினால் உணர்ந்தவர் என்பதற்கு அவருடைய தொடக்க கால முதன்மையான போராட்டங்களில் ஒன்றான வைக்கம் போராட்டமே சான்று ஆகும்.

அனைவருக்கும் அனைத்தும் கிட்ட வேண்டும் என்ற சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையை இலக்காகக் கொண்டிருந்தாலும் அதை அடைவதற்கு நெடுந்தூரம் பயணிக்க வேண்டும் என்பதை உணர்ந்து, அதற்கு ஏற்ப, திட்டங்களையும், செயல்பாடுகளையும் வகுத்துக் கொண்டவர்.

பூஜ்ஜியத்தில் இருந்து தொடங்கியவர்; ஒன்று கிடைத்தாலும் அது சமூகத்திற்கு லாபமே என்று கருதி உழைத்தவர். கனவு உலகில் சஞ்சரிக்காமல் அதை எட்டுவதற்காகக் கடும் இன்னல்களைக் கடந்து, பாறைகளை உடைத்துப் பாதைகளை உருவாக்கி, அதில் பயணித்தவர்; நம்மையும் பயணிக்கச் செய்தவர்.

வைக்கம் போராட்டத்தின் அடுத்த கட்டம் கோயில் நுழைவாக இருக்கும் என்று கருதி, அது குறித்து ராணியார் வைத்த நிபந்தனைக்குப் பெரியார் கொடுத்த பதிலே அவரின் போராட்ட முறையை எடுத்துக்காட்டும் ஒன்றாகும். இதோ அதனைப் பெரியாரே விவரிக்கிறார்.

> காந்தியோடு பேசியபோது இராணி தெரிவித்தாள்; 'நாங்கள் ரோடுகளைத் திறந்து விட்டுவிடுகிறோம். ஆனால் அதை விட்டவுடன் நாயக்கர் கோயிலுக்குள் போக உரிமை வேண்டும் என்று கேட்டு ரகளை செய்தால்

என்ன செய்வது? அதுதான் தயங்குகிறோம்' என்றார்கள். உடனே காந்தி பயணியர் விடுதியில் தங்கி இருந்த என்னிடத்தில் வந்து இராணி சொன்னதைச் சொல்லி என்ன சொல்லுகிறாய்? இதை ஒப்புக் கொண்டுவிடுவது நல்லது என்றார். நான் சொன்னேன், சாலையை திறந்து விடுவது சரி; ஆனால் அதை வைத்துக்கொண்டு கோயிலைத் திறந்துவிடும்படி கேட்கமாட்டோம் என்று எப்படி நாம் உறுதியளிப்பது? கோயில் பிரவேசம் என்பது காங்கிரசின் இலட்சியமாக இல்லாவிட்டாலும், எனது இலட்சியம் கோயில் நுழைவு அதை எப்படி விட்டுக்கொடுக்க முடியும்? வேண்டுமானால் இராணிக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள் 'இப்போதைக்கு இம்மாதிரி கிளர்ச்சி எதுவுமிருக்காது. கொஞ்சநாள் அதுபற்றி மக்களுக்கு விளங்கும்படி பிரச்சாரம் செய்து கலவரத்திற்கு இடமிருக்காது என்று கண்டால்தான் கிளர்ச்சி ஆரம்பிக்கப்படலாம்' என்று சொல்லுங்கள் என்று சொன்னேன்.

வைக்கம் முடிந்துபோன ஒரே ஒரு களம் அல்ல; பல களங்கள் கருக்கொண்ட சூலகம் அது!

1. பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சவுதார் குளத்தில் நீர் எடுக்கும் போராட்டம் நடத்துவதற்கு வைக்கம் போராட்டம் உந்துசக்தியாக இருந்தது என்பதை அண்ணல் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்று நூலில் வரலாற்றாளர் தனஞ் செய்கீர் எடுத்துக்காட்டுகிறார்.
2. சுசீந்திரம் கோயில் நுழைவுப் போராட்ட விதை.
3. குருவாயூர் கோயில் தீண்டாமை ஒழிப்பு போராட்டக்களத்தின் திறவு வாயில்.
4. அண்ணல் காந்தியாரின் பார்வையில் சத்தியாகிரகத்தின் சோதனைக் களமான வைக்கம் போராட்டம் ஒரு வெற்றி மாடல்! இந்தியாவையே உலுக்கிய தீப்பொறி!

1925ஆம் ஆண்டு சமூக நீதிக்காக அன்றைய காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் இருந்து வெளியேறிய தந்தை பெரியார் சுயமரியாதைக் கொள்கைகளைத் தீவிரமாக முன்னிறுத்தி தான் நடத்தி வந்த 'குடிஅரசு' ஏட்டையே ஓர் இயக்கமாக மாற்றினார். சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம் எப்போது என்பது நேரம், காலம், தேதி வாரியாகச் சொல்லத்தக்கதல்ல என்றாலும் அது காலத்தின் தேவை, இயற்கையாக உருவான போராட்டக் குழந்தை.

வைக்கம், சுசீந்திரம் போன்ற இடங்களில் தெருக்களில் நுழையும் உரிமை பெற்ற பிறகு, 1927 முதல் திருவண்ணாமலை, திருச்சி, ஈரோடு, மயிலாடுதுறை என்று தொடர்ச்சியாக கோயில் நுழைவுப் போராட்டங்களை சுயமரியாதை இயக்கத் தோழர்கள் முன்னெடுத்தார்கள். தந்தை பெரியாரின் நோக்கம் கோயில் நுழைவு என்பது அல்ல; பிறவி இழிவு ஒழிப்பு. 'இந்த ஜாதியில் பிறந்ததால் உனக்கு இந்த உரிமை கிடையாது' என்று மனித சமூகத்தின் ஒரு பகுதியினருக்கு நிகழ்த்தப்படும் உரிமை மறுப்பைக் கண்டிப்பதும் அந்த உரிமையைப் பெற்றுத் தருவதும்தான் அவருடைய போராட்டம்.

தந்தை பெரியார் ஒழிக்க விரும்பிய ஜாதிப் பாம்பு பொதுச் சாலைகளிலும், பொதுக் குளங்களிலும் கல்வி நிலையங்களிலும், பொதுப் போக்குவரத்திலும் ஊர்ந்து கொண்டிருந்தபோது, அவற்றை சுயமரியாதை இயக்கத்தைக் கொண்டு பெரியாரின் தடி ஒழித்துக் கட்டியது. பொது இடங்களில் நடப்பதற்கான உரிமையை நீதிக்கட்சி அரசு ஆணை போட்டு உருவாக்கியது; பேருந்துகளில் ஒடுக்கப்பட்டோரை ஏற்ற மறுத்தால் பேருந்து உரிமம் ரத்து செய்யப்படும் என்று சுயமரியாதை இயக்கத் தலைவரும் ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவருமான சவுந்தரபாண்டியனார் அவர்கள் ஆணையிட்டார்; பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் ஒடுக்கப்பட்டவரை அனுமதிக்க மறுத்தால் கல்லூரிக்கான உரிமம் ரத்து செய்யப்படும் என்று நீதிக்கட்சி அரசாணை மூலம் சமூக நீதியை நிலைநாட்டியது. ஆனால், அந்த வர்ணாசிரம ஜாதிப் பாம்பு கோயில்களுக்குள் சுதந்திரமாக உலவிக்கொண்டு இருந்தது. அதனைத் துரத்த நடத்தப்பட்ட போராட்டம் அடுத்த 10 ஆண்டுகளிலேயே வெற்றி பெற்றது. இப்போது அந்த ஜாதிப் பாம்பு மிகப் பாதுகாப்பாகக் கோயில் கருவறைக்குள் புகுந்து கொண்டது.

கோயில் இருக்கும் தெருக்களில் அனுமதிக்க மறுத்து, அதில் தோற்றபின், கோயிலுக்குள்

அனுமதிக்க மறுத்து, அதிலும் தோற்றபின், மத நம்பிக்கை என்ற பெயரில் கோயிலின் கருவறையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது வர்ணாசிரமம். அந்தக் கருவறை தீண்டாமை எனும் கொடுமையையும் ஒழிப்பதற்கான போராட்டம் தான் தந்தை பெரியார் 1970ஆம் ஆண்டு அறிவித்த கருவறை நுழைவுப் போராட்டம் என்னும் அனைத்து ஜாதியினர் அர்ச்சகர் ஆவதற்கான கிளர்ச்சி!

அப்போது முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், உங்களால் வழிநடத்தப்பட்ட நாங்கள் ஆட்சியில் இருக்கும்போது தாங்கள் போராட வேண்டிய அவசியமில்லை. சட்டம் மூலம் அதனை நாங்களே நிறைவேற்றுகிறோம் என்று தெரிவித்து, அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் ஆவதற்கான உரிமையை வழங்கும் சட்டத்தை நிறைவேற்றினார். ஆனால் அந்தச் சட்டம் உச்ச நீதிமன்றத்தில் முடக்கப்பட்ட காரணத்தால் தந்தை பெரியார் தனது இறுதி நாட்களில் (1973 டிசம்பர் 8, 9) தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாட்டைக்கூட்டி அதனையே போர்ப் பிரகடனமாக அறிவித்தார்.

தனது இறுதிப் பேருரையிலும் (19.12.1973) தாங்கொணா வலியோடு போராடிக்கொண்டு தந்தை பெரியார் விடுத்த அறைகூவலும் இழிவு ஒழிப்புப் போராட்டத்திற்காகத் தான்! வாழ்நாளெல்லாம் தான் மேற்கொண்ட போராட்டங்களில் வெற்றி பெற்ற நாயகராம் தந்தை பெரியாரின் இறுதி விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டதே என்ற ஆற்றாமையைத் தான் “பெரியாரை நெஞ்சில் தைத்த முள்ளோடு புதைத்துவிட்டோம்!” என்று முத்தமிழறிஞர் கலைஞர் வேதனையோடு வெளிப்படுத்தினார்.

ஆற்றாமையோடு போய்விடுவதல்ல ஆளுமை! அதனை நிறைவேற்றிக் காட்டும் தொடர் போராட்டத்தை 33 ஆண்டுகள் நாம் தொடர்ந்ததன் விளைவாக, 2006ஆம் ஆண்டு மீண்டும் ஒரு புதிய சட்டத்தை முதலமைச்சர் கலைஞர் தன் ஆட்சியில் நிறைவேற்றியதுடன், ஆகமப் பயிற்சிப் பள்ளிகளையும் உருவாக்கி அனைத்து ஜாதியிலிருந்தும் அர்ச்சகர்களை உருவாக்கினார். அதற்கும் நீதிமன்றத்தின் வாயிலாக ஆதிக்க சக்திகள் தடை கொண்டுவந்தபோது, அந்தப் போராட்டத்திலும் வென்றோம். ஆனால், அந்த வெற்றியை விளைச்சலாக்குவதற்கு 2021ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி வரவேண்டியிருந்தது. தந்தை பெரியாரின் கனவை நனவாக்க உழைத்த தம் தந்தை, கலைஞரின் முயற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டினார் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள். அதற்கான தடைக் கற்களைத் தகர்க்கும் தடந்தோள்கள் அவருக்கு உண்டு என்பதை நீதிமன்றத்தின் வெற்றிகள் இன்றும் காட்டுகின்றன!

எனவே தான் சொல்லுகிறோம் வைக்கம் என்பது தனித்த போராட்டமல்ல; அது ஒரு சமூகப் புரட்சியின் தொடக்கம் இதில் தந்தை பெரியாரை அவதூறு செய்யவும், வைக்கம் போராட்டத்தில் அவருடைய பங்களிப்பைக் குறைத்துக் காட்டவும் பல்வேறு முயற்சிகளை வைக்கம் போராட்டக் காலத்தில் தொடங்கி, அவரது மறைவுக்குப்பிறகு அண்மைக்காலம் வரைக்கும் சிலர் செய்யக் காண்கிறோம்.

ஆனால், அவற்றையெல்லாம் முறியடித்து, எத்தனை பேர் மறைக்கப் பார்த்தாலும் உண்மை என்றும் ஒளிவீசும் என்பதை வரலாறு தொடர்ந்து மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது. வைக்கம் போராட்டத்தின் முதலாம் ஆண்டு வெற்றி விழா கூட்டத்தில் தந்தை பெரியாரும், அன்னை நாகம்மையாரும் பங்கேற்றனர். அதன் பொன் விழாவில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களும், அன்னை மணியம்மையார் அவர்களும் பங்கேற்று உரையாற்றினர். எங்களைப் போன்றோர் அந்த நிகழ்வில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றோம்.

பிறகு தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, நூற்றாண்டு விழாக்குழுவின் பரிந்துரைக்கேற்ப, வைக்கத்தில் பெரியார் நினைவு மண்டபத்தைக் கட்ட முடிவெடுத்து, 1985 நவம்பர் 3 அன்று கேரள அமைச்சர் பி.என்.ஜோசப் உள்ளிட்டோர் பங்கேற்க, அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

அவ்விழாவில் பங்கேற்று அடிக்கல் நாட்டிய நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களே 1994ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்று நினைவு இல்லத்தையும், பெரியார் சிலையையும், திராவிடர் கழகப் பொதுச் செயலாளராக அன்று பொறுப்பிலிருந்த என்னுடைய தலைமையில் திறந்துவைத்தார். அந்நிகழ்வில் அன்றைய செய்திமக்கள் தொடர்புத்துறை அமைச்சர் திரு. மு.தென்னவன் அவர்களும், தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவராக இருந்த சுலோச்சனா சம்பத் அவர்களும், திராவிடர் கழகத் தோழர்களும் பங்கேற்றனர்,

அதன்பின் 2010ஆம் ஆண்டு வைக்கம் போராட்டத்தின் 85ஆம் ஆண்டு விழாவையும், தந்தை பெரியாரின் 132ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவையும், ஜாதி ஒழிப்பு மாநாட்டையும் நடத்தினோம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த பரிதி இளம்வழுதி அவர்களும், மாநிலங்களவை உறுப்பினராக இருந்த கவிஞர் மு.க.கனிமொழி அவர்களும், கேரள அமைச்சர் திரு. இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.அஜீத் உள்ளிட்டோரும் அந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த வரலாற்றுத் தொடர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான், வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவைப் பெரும் நிகழ்வாக ஆண்டு முழுவதும் தொடர்ந்து கொண்டாடுவதற்குத் திட்டமிட்டு நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கேரள அரசு நடத்திய நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களோடு இணைந்து (01.04.2023) பங்கேற்றது மட்டுமல்லாமல், அதற்கு இரு நாட்களுக்கு முன்பு மார்ச் 30, 2023 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் 110ஆம் விதியின்கீழ்,

(அ) தமிழ்நாடு அரசு சார்பில் வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்.

(ஆ) ஆய்வாளர் பழ.அதியமான் அவர்களின் வைக்கம் சத்தியாகிரகம் நூல் மலையாளத்தில் மொழியாக்கம் செய்து வெளியிடப்படும்.

(இ) நவம்பர் 29ஆம் தேதி இரு மாநில முதலமைச்சர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி தமிழ்நாட்டில் நடத்தப்படும்.

(ஈ) தந்தை பெரியார் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அருவிக்குட்டி சிறைச்சாலையில் நினைவுச் சின்னம் அமைக்கப்படும்.

(உ) வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவிடம் நவீன முறையில் சீரமைக்கப்படும்.

(ஊ) தமிழ்நாடு முழுவதும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கருத்தரங்குகள், போட்டிகள் நடத்தப்படும்.

(எ) பிற மாநிலங்களின் ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களுக்காகப் போராடியவர்களுக்கு (ஆளுமைகள் அல்லது நிறுவனங்கள்) "வைக்கம் விருது" என்ற பெயரில் ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு அரசின் சார்பில் விருது வழங்கப்படும்.

(ஏ) வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில் அஞ்சல் தலை வெளியிட ஆவன செய்யப்படும்.

என்பன உள்ளிட்ட பல அறிவிப்புகளைச் செய்ததுடன், அவற்றை வெகுவேகமாகச் செயலாக்கத்திற்குக் கொண்டுவருகிறார்.

அதனை வரவேற்கும்போது, தாய்க்கழகம் என்கிற உணர்வுடன் அவரைப் பாராட்டியது மட்டுமல்லாமல், செய்யப்படவேண்டியவை வெறும் விழாக்கோலம் தாண்டி, புதிய எழுச்சியை உருவாக்கவும், ஜாதி தீண்டாமை ஒழிப்புக்குத் தூண்டுதலாகவும், பல புதிய சமூகப் புரட்சி சட்டங்களையும், வைக்கம் நூற்றாண்டு காலத்தில் ‘திராவிட மாடல்’ ஆட்சியும், கொள்கைமிகு முதலமைச்சரும் செய்யவேண்டும் என்பதை எதிர்பார்ப்பதுடன் இதை ஒரு திருப்புமுனையாக அமைப்பது முக்கியம் என்பதையும் நினைவூட்டி, நமது முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகருக்கு உளங்கனிந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் மனமார, வாயார, கையார வாழ்த்தி, கைதட்டி வரவேற்கிறோம்! என்று எழுதியிருந்தோம். தாம் அந்தப் பாராட்டிற்கு முழுத் தகுதி படைத்தவர் என்பதை நாளும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறுவிக் கொண்டே இருக்கிறார் என்பதைக் காணுந்தோறும் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த மலரும் அந்தப் போராட்ட வரலாற்றினைப் பதிவு செய்யும் மிக முக்கியமான முயற்சியாகும். வரலாற்றை நாம் நினைவு கூர்வது – அதிலிருந்து பாடம் கற்கவும், அதன் பயணத்தைத் தொடரவும் தான்!

வைக்கம் போராட்ட வரலாறு ஜாதி ஒழிப்புப் பணியில் தீரமுடன் நம்மை மேலும் உழைக்கத் தூண்டும்!

போராடுவோம்! ‘அனைவருக்கும் அனைத்தும்’ என்ற திராவிடத் தத்துவத்தை வென்றெடுப்போம்!

**திராவிடம் வெல்லும்!**
**அதை வரலாறு சொல்லும்!**



# கேரளத்தில் ஏழு நாட்கள்



வே.ஆனைமுத்து

இந்தியப் பிற்படுத்தப்பட்ட மக்களிடையே ஓர் புதிய எழுச்சியை உண்டாக்கி, அவர்கட்கு எல்லாத்துறை உத்தியோகங்களிலும் விகிதாசாரப் பங்கு பெற்றுத்தர தன்னாலானதைச் செய்ய வேண்டும் என்பது பெரியார் சம உரிமை கழகத்தின் ஓர் முக்கிய பணி.

இதற்கு உறுதுணையாக நிற்க, எதிர்பாராதவிதமாக, பீகார் மாநிலத் தோழர் இராம் அவதேஷ் சிங் முன் வந்தார்.

இந்தப் பணியைச் சரியான நேரத்தில் சரியான தன்மையில் செய்ய விரும்பிய பீகார் பிற்படுத்தப்பட்டோர் சம்மேளனத் தலைவர் தோழர் இராம் அவதேஷ் சிங், M.P. பெரியார் நூற்றாண்டு விழாவினை பீகார் மாநிலம் முழுவதிலும் 30 நாட்கள் கொண்டாட ஏற்பாடு செய்தார்.

நாங்கள் அங்கு சென்றிருந்ததை அறிந்த கேரளத்து நண்பர்கள் எங்கட்கு ஊக்கம் தந்து 21.09.1978இல் பாட்னாவுக்கு எழுதிய மடல் 13.10.1978இல் அங்கு எனக்கு கிடைத்தது.

"பிற்படுத்தப்பட்டோருக்கு ஜனத்தொகை விகிதாசாரப் பங்கு மத்திய அரசு உத்தியோகங்களிலும் வேண்டும்" என்பதற்கு ஆவன செய்யும்படி அக்கடிதத்தில், கேரள எஸ்.என்.டி.பி.யோகத்தின் செயலாளர் பேராசிரியர் வேலாயுதம் எழுதியிருந்தார்.

எஸ்.என்.டி.பி.யோகம் என்பது கேரள சீர்திருத்தச் செம்மல் ஸ்ரீ நாராயணகுரு என்பவரால் நிறுவப்பட்ட ஒன்றாகும்.

ஈழவர்கள் மற்றும் தீண்டப்படாத மக்களின் சமுதாய - கல்வி - உத்தியோகத் துறை முன்னேற்றத்தை இலட்சியங்களாகக் கொண்ட இந்த நிறுவனமே "ஸ்ரீ நாராயணகுரு தர்ம பரிபாலன யோகம்" (S.N.D.P.) எனப்படும். 1903இல் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. 1978இல் அதன் 75ஆம் ஆண்டு நிறைவு விழா 1978 டிசம்பர் 1 முதல் 31 முடிய கொண்டாடப்பட்டது.

இதனை ஒட்டி, "அனைத்திந்திய பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மாநாட்டு கருத்தரங்கு" நிகழ்ச்சிகள் 17.12.1978இல் கொல்லத்தில் நடைபெற இருப்பதை முன்னரே எனக்கு அறிவித்திருந்தனர். இதில் கலந்துகொள்ள கொல்லம் சென்று, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றேன்.

கொல்லத்தில் எஸ்.என்.டி.பி.யோகத்தினர் அமைத்துள்ள மிகப்பெரிய கண்காட்சியையும், அக்கண்காட்சியில் உள்ள அறிவியல் காட்சிப் பகுதியையும், தமிழக அரசு அங்கு வைத்துள்ள பெரியார் நூற்றாண்டு விழா காட்சிப் பகுதியையும் 16.12.1978 மாலையில் கண்டுகளித்தேன்.

அதில் ஒரு நிகழ்ச்சியின்போது பேராசிரியர் டி.கே.ரவீந்திரன் அவர்களைக்கண்டு அவர் எழுதியுள்ள "வைக்கம் சத்தியாகிரகமும், காந்தியும்" (Vaikom Sathyagraha and Gandhi) என்கிற நூல் பற்றியும்; தந்தை பெரியார் அவர்கள் அந்த சத்தியாகிரகத்தில் வகித்த பங்கு பற்றியும் உரையாடினேன்.

அவர் அளித்த விவரங்கள் "வைக்கம் சென்று வர வேண்டும்" என்ற பேராவலை மேலும் அதிகப்படுத்தின.

19.12.1978 காலை 8.15 மணிக்குப் புறப்பட்டு, 10.10க்கு திருவனந்தபுரம் அடைந்தேன். தோழர் எம்.பிரபா அவர்களைத் தேடித் தலைமைச்செயலகம் சென்றேன். அவர் அலுவலகம் வேறு இடத்தில் இருந்தது. சுமார் 12 மணி அளவில் அவர் இருக்குமிடம் சேர்ந்தேன்.

நான் அங்கிருந்த சமயம் தோழர் உறையூர் ஜி.முத்துகிருஷ்ணன் அவர்கள் எனக்கு விடுத்த பண விடையும், மடலும் கிடைத்தன. நான் வைக்கம் சென்றுவர வேண்டும் என்பது அவருடைய பேரவா.

தோழர் எம்.பிரபா அவர்களுடன் தமிழகம், கேரளம், ஆந்திரம் இங்கெல்லாம் உள்ள நாத்திக இயக்கங்களைப் பற்றி மாலை 5.30 வரையில் கலந்து உரையாடினேன். வைக்கம் சத்தியாக்கிரகம் பற்றி நான் யாரை யெல்லாம் கண்டு பேசலாம் என்பதைத் தெளிவுபட அவர் எனக்கு எடுத்துரைத்தார்.

01.12.1978 காலை 7.05க்கு வைக்கம் சாலை நோக்கி நாங்கள் மூவரும் இரயிலில் பயணமானோம். இது 25 கிலோ மீட்டர் பயணம். 7.45க்கு வைக்கம் ரோடு அடைந்து, அங்கிருந்து பஸ் மூலம், 11 கிலோ மீட்டர் சென்று வைக்கம் சேர்ந்தோம்.

கோயிலைச் சுற்றிப்பார்த்த பின்னர், வைக்கம் நகராட்சி மேனேஜர் பால் காநாடன், நகராட்சித் துணைத்தலைவர் என்.ராஜப்பன் நாயர் மற்றும்



கே.எஸ்.சுரேந்திரநாதன் நாயர், ஜான் தாமஸ், ஆசிரியர் கே.வாசுதேவன் ஆகியோருடன் கலந்துரையாடி பல விவரங்களைத் தெரிந்து கொண்டோம்.

கேரளத்துத் தலைவர்கள் டி.கே.மாதவன், கே.பி.கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப், ஏ.கே. பிள்ளை, கே.வேலாயுத மேனன், கே.கேளப்பன் நாயர், டி.ஆர்.கிருஷ்ணசாமி அய்யர் ஆகியோர் 30.03.1924இல் தொடங்கிய சத்தியாகிரகம் தோல்வி காணும் நிலையில் இருந்தபோது, தந்தை பெரியார் அவர்கட்கு வேண்டுகோள் விடுத்தனர்.

அந்த வேண்டுகோளைப் பெற்ற பெரியார், அடுத்த கணமே புறப்பட்டு, 12.04.1924இல் வைக்கம் வந்து சேர்ந்தார். தந்தை பெரியார் உலவிய கர்ஜித்த சங்கநாதம் புரிந்த வைக்கத்துக்கு 21.12.1978 காலை 8.30க்குப் போய்ச் சேர்ந்தோம்.



ஸ்ரீ நாராயண குரு

## வைக்கம் சத்தியாகிரகம் என்பது என்ன?

வைக்கத்தில் உள்ள “வைக்கத்தப்பன் மகாதேவர் கோயில்” என்கிற ஸ்தலம் கேரளத்தில், கோட்டயம் மாவட்டத்திலுள்ள பெயர் பெற்ற கோயில்களில் ஒன்று.

1. அந்தக் கோயிலின் நான்கு வாயில்களை நோக்கி வருகிற நான்கு பக்கங்களிலுமுள்ள பெரும்பாட்டைகளில் (On Main Roads) ஒடுக்கப்பட்டோர்கள் நடக்கக்கூடாது.
2. அந்த மெயின் ரோடுகளில் இந்து மேல் சாதியினர், கிறித்துவர், இஸ்லாமியர் ஆகியோர் மட்டுமே நடக்கலாம்.
3. கிறித்துவர், இஸ்லாமியர் முதலானோர் கோயில் வெளிப்பிரகார வாயில்களைத் தாண்டி உள்ளே போகக்கூடாது.

அந்த நான்கு பக்கப் பெரும்பாட்டைகளில் நுழைவதற்குத் தடைபோட்டு, நான்கு பக்கங்களிலும் சுமார் 400 அடி, 450 அடி, 600 அடி, 1100 அடி தூரங்களில் – “தீண்டப்படாதவர்கள் இங்கே பிரவேசிக்கக் கூடாது” என்று தனித்தனி அறிவிப்புப் பலகைகளை அப்போது வைத்திருந்தனர்.

அன்று அந்த இடத்தை ஒட்டி உண்டியல் உண்டு. தீண்டப்படாதோர் அந்த உண்டியலில் காணிக்கை போடலாம்; அந்த எல்லைக்கு வெளியே நின்று வைக்கத்தப்பனைச் சேவிக்கலாம்; மேல்சாதி இந்துக்களை வணங்க வேண்டும்; வணங்கலாம்.

இந்தத் தடைகளை உடைக்க வேண்டும் என்கிற எண்ணத்தால் உந்தப்பட்ட திரு. டி.கே.மாதவன் காந்தியாருடைய அனுமதியையும், காங்கிரசின் ஆதரவையும் பெற்று, சத்தியாகிரகத்தைத் துவக்கி விட்டார், திரு. கே.பி.கேசவமேனன் (“மாத்ரு பூமி” ஏட்டின் நிறுவனர்) அவருக்கு உற்ற துணையாக நின்றார்.

இந்த சத்தியாகிரகத்துக்குக் காந்தியார், ஸ்ரீ நாராயண குரு ஆகியோரின் ஆதரவு தொடர்ந்து இருந்தது. சத்தியாகிரகம் ஆரம்பித்தவுடன் முதல் நாள் மூவர் கைதாயினர். இரண்டாம் நாள் மூவர் கைதாயினர். தொண்டர்கள் உயர் வகுப்புக் குண்டர்களால் தாக்கப்பட்டனர். எனவே, அதிக எண்ணிக்கையில் தொண்டர்கள் வர இயலவில்லை. கிளர்ச்சித் தலைவர்களும் சிறைப்பட்டனர். ஆகவே, சில நாட்களுக்கு சத்தியாகிரகம் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில்தான் தந்தை பெரியாருக்கு கேரளச் சிறையிலிருந்த தலைவர்கள் ஆள் மூலம் ஓர் மடல் அனுப்பி வேண்டுகோள் விடுத்தனர். தந்தை பெரியார் 12.04.1924இல் வைக்கம் சத்தியாகிரகத்துக்குத் தலைமை ஏற்றார்.

வைக்கம் சத்தியாக்கிரகம் நடந்த இடத்திலிருந்து சுமார் 4 பர்லாங் தூரத்தில் வைக்கம் படகுத்துறை உள்ளது. அந்தத் துறையை அடுத்து உள்ள சிறிய மைதானத்தில் நடந்த பல கூட்டங்களில் பெரியார் ஆற்றிய உரைகளைக் கேட்ட இரண்டு பெரியவர்களை நாங்கள் பேட்டி கண்டோம்.

கேரள மாநில முன்னாள் அமைச்சர் திரு. வி.மாதவன், 21.12.1978 காலை 10.30 மணிக்கு எங்களிடம் ஒப்புக்கொண்டபடி, பிற்பகல் 5.45க்குப் பேட்டியளித்தார்.

“பெரியாரின் கர்ஜனைகளை நான் பல தடவைகள் கேட்டேன். அவருடைய கம்பீரமான தோற்றமும் பயங்கரமான மீசையும் அவர் அங்கவஸ்திரத்தை மாற்றி மாற்றிப் போட்டுக்கொண்டு அப்படியும், இப்படியும் நடந்துகொண்டு செய்த வீர கர்ஜனையும் கேரளத்து மக்களுக்கு உணர்ச்சியையும், உத்வேகத்தையும் ஊட்டியது.”

“உங்களுக்கு ரோஷமில்லையா? மானமில்லையா? நீங்கள் மரமண்டைகளா?” என்று கோபாவேசமாகக் கேட்டுவிட்டு, இடையிடையே அவர் சொன்ன குட்டிக் கதைகள் இன்னமும் என் நினைவில் உள்ளன.

இவ்வாறு கூறிக்கொண்டே, பெரியார் அன்று சொன்ன ஓர் கதையை எங்களிடம் விவரித்துக்கூறி, பெரியார் பேசிய மேலே சொன்ன பாணியை அப்படியே உட்கார்ந்த வண்ணம் நடித்துக் காட்டினார், அவருக்கோ இன்று வயது 82. இந்தத் தள்ளாத வயதிலும் அந்தக் குட்டிக் கதையைக் கூறும்போது நான்கு தடவைகள் குலுங்கக் குலுங்கச் சிரித்தார். “அன்று பெரியாரின் பிரசங்கங்களைக் கேட்ட எவரும் அவற்றை எப்போதுமே மறக்க முடியாது” என்பதைத் திரும்பத் திரும்ப அவர் கூறிய போது அவருடைய உடம்பே மயிர்க்கூச்செரிந்துவிட்டது.

சத்தியாகிரகத்திற்கு முன், 1923இல் அவர் வழக்கறிஞராகப் பணியாற்ற பதிவு செய்து கொண்டார். எனவே, சரளமாக அவர் ஆங்கிலத்திலும், மலையாளத்திலும் விவரங்களைக் கூறினார். தேநீரும், சிற்றுண்டியும் எங்கட்கு அளித்து, என் கையைப் பற்றிக்கொண்டே நான்கு படிகள் இறங்கி, வெளி வாயிற்படிக்கு நடந்து வந்து, மகிழ்ச்சி பொங்க எங்களை வழியனுப்பி வைத்தார் அந்தப் பெருமகனார். அவரை மீண்டும் சந்திக்க உறுதி பூண்டேன். அங்கேயே மாலை 5 மணி ஆகிவிட்டது.

அருமைத் தோழர் ஆர். மாதவன் (71 வயது) 1924இல் சத்தியாகிரகத்தை நேரில் பார்த்தவர்; அப்போது அவர் ஓர் மாணவர்.



டி.கே.மாதவன்



கே.பி.கேசவமேனன்



இராம் அவதேஷ் சிங்




**பெரியார் வைக்கம் வந்து இறங்கிய படகுத் துறை**

அன்னாருடைய பெருந்துணைகொண்டு, கோயிலின் நான்கு பக்கமும் தடைப்படுத்தப்பட்ட இடம், சத்தியாகிரகம் நடத்தப்பட்ட இடங்கள், சத்தியாகிரகிகள் தங்கியிருந்த இடம், பெரியாரும், காந்தியாரும், இராஜாஜியும் மற்ற தலைவர்களும் பேசிய படகுத் துறை (காயல் கரை) மைதானம் இவற்றை நேரில் பார்த்தோம். காந்தியாரும், நம்பூத்ரிகளின் தலைவரும் உரையாடிய இல்லத்தையும் பார்த்தோம். இந்த சத்தியாகிரகத்தில் காமராசர் ஓர் தொண்டராக இருந்தார் என்பதும் முக்கியமானது.

மாலை 6.30 மணிக்குக் கோட்டயம் நோக்கி நானும், எம். நரசிம்மன், பி.சுப்பிரமணியன் மூவரும் பயணமானோம். மறுநாள் 22.12.1978 காலை நானும், தோழர் எம். நரசிம்மனும் செங்கணாச்சேரி சென்று, ஓர் நண்பரைப் பார்த்துவிட்டு, காலை 10.30 மணிக்குக் கோட்டயம் சேர்ந்தோம்.

சரியாக 11 மணிக்கு கோட்டயத்தில் பெரியவர் கோபாலன் தந்திரி அவர்களைப் பார்த்தோம். அந்தப் பெரியவரின் வயதும் 82.

வைக்கம் சத்தியாகிரகிகளை குண்டர்கள் தாக்குவதைக் கண்ட அவர், “நான் சத்தியாகிரகம் செய்யும் போது என்னைக் குண்டர்கள் தாக்கினால், குண்டர்களின் ஊட்டியைப் பிடித்துக் கடிப்பேன்; குத்திக் கொல்லுவேன் என்று சொன்னதால், என்னை சத்தியாகிரகம் செய்ய அனுமதிக்காமல், சத்தியாகிரக நிதி வசூலுக்கு அனுப்பி விட்டனர்.” என்றவர், சத்தியாகிரகிகள் தாக்கப்பட்ட கொடுமையை உணர்ச்சியுடன் விவரித்துக் கூறினார்.

“மதுரை சிவசைலம் என்கிற தமிழர் ஓர் சத்தியாகிரகி. அவரைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, செங்கற்களால் அடித்து நாசப்படுத்தினர்.”

“கூத்தாட்டுக்குளம் இராமன் இளையது என்கிற நம்பூத்ரி ஓர் சத்தியாகிரகி. குண்டர்கள் அவரைப் பிடித்துக் கைகளைக் கட்டிவிட்டு, இரண்டு கண்களையும் விரித்து உள்ளே சுண்ணாம்பை அப்பிவிட்டனர். அவரை சத்யாகிரக முகாமுக்கு எடுத்துச்சென்று கழுவி உபசாந்தி செய்தோம். அவர் சாகும் வரையில் கண்ணாடி போட்டால்தான் படிக்க முடியும் என்று ஆகிவிட்டது.”

“சத்தியாகிரகம் நடந்தபோது சுமார் பதினாறு நாட்கள் வைக்கத்தில் பெரிய வெள்ளம். அப்போதும் கழுத்தளவு வெள்ளத்தில் நின்றுகொண்டு, இரண்டு மணிக்கு ஒரு குழு வீதம், இரண்டு, மூன்று நாட்கள் மறியல் நடந்தது” என்று உணர்ச்சி வசப்பட்டுக்




**வைக்கத்தில் பெரியார் போராடிய இடம்**

கூறினார் கோபாலன் தந்திரி.

"சத்தியாகிரகத்தில் பெரியார் வகித்த பங்கு என்ன?" என்று நான் கேட்டதுதான் தாமதம்;

"நாய்க்கரோ அவருடைய கம்பீரமும், வாச்சாரமும் கொண்ட பிரசங்கங்கள் மலையாளக் கரையிலே பிரதான கேந்திரங்கள் யாவற்றிலும் நடந்தது" என்று கூறிப் பெரியாரின் கம்பீரமான தோற்றத்தை எங்கட்கு நடித்தே காட்டினார்.

நானும் நரசிம்மனும் உணர்ச்சிவசப்பட்டோம். "வாச்சாரம் என்றால் என்ன?" என்று கேட்டேன். "நாய்க்கர் பிரசங்கத்தில் தாரை தாரையாக வார்த்தைகள் கொட்டும்" என்று விளக்கிச் சொன்னார்.

"வைக்கத்தில் நான் இரண்டு, மூன்று பிரசங்கங்களைக் கேட்டேன். ஒரே வீராவேசம்; ஒரே உணர்ச்சி" என்று மீண்டும் மீண்டும் கூறினார்.

திரு. கோபாலன் தந்திரி அவர்கட்கு ஸ்ரீ நாராயண குரு அவர்களிடம் நெருங்கிய ஈடுபாடு உண்டு.

ஆரம்பத்தில் தனிக்கோயில், தனிச் சிலைகள் பிரதிஷ்டை என்று உபதேசித்த ஸ்ரீ நாராயண குரு அவர்கள். சக்ரீஸ்வர க்ஷேத்திரம் என்கிற ஊரில் புதிதாக ஓர் கோயிலைப் பிரதட்சிக்க அங்குள்ளவர்கள் அழைத்தபோது: "நமக்கு இஷ்டமில்லா; நாம் வருமில்லா; க்ஷேத்திரங்கள் இனி வேண்டா; ஜனங்களுக்கு இனி தொழிலும், வித்யாப்பியாசமும், விவசாய சாலைகளும் உண்டாக்கிக் கொடுக்கா" எனக் கூறி அவர் மறுத்து விட்டதாக, நூல் ஆதாரப்பூர்வமாக எங்கட்குக் கூறினார். இது 16.06.1927இல் ஸ்ரீ நாராயண குரு அவர்கள் தந்த முடிவான உபதேசம். அன்னார் 1928இல் (1855–1928) மறைவுற்றார்.

வைக்கம் வீரர் தந்தை பெரியாரின் கம்பீர உரைகளை வைக்கம் வாழுநர் கூறக் கேட்ட நான், அவர் தம் வைக்கம் சத்தியாகிரக உரைகளை, அவருடன் சத்தியாகிரகத்தில் ஈடுபட்ட பலரையும் நேரில் கண்டு கேட்க வேண்டுமென்ற பேராவலுடன் கோபாலன் தந்திரி அவர்களிடமிருந்து விடை பெற்றேன். எங்கள் இருவரையும் கட்டித் தழுவி அப்பெரியவர் விடை தந்தார்.



# அன்று இருந்த சூழ்நிலைகள்...



வாலாசா வல்லவன்

பிரித்தானிய ஆட்சி இந்தியா முழுவதும் வலுவாக நிறுவப்பட்டபின், இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்து வந்த நிலவுடைமை உற்பத்திமுறை படிப்படியாக முதலாளிய உற்பத்தி முறைக்கு மாறத் தொடங்கியது. முதலாளிய உற்பத்தியின் வேலைக்கு அனைத்து சாதியினரும் கல்வி கற்பதற்கான வாய்ப்பைதரும் பொதுக் கல்வி முறை ஏற்படுத்தப்பட்டது. இதன் விளைவாக சுதந்திரம், சமத்துவம், சனநாயகம் முதலான கருத்துக்கள் சமூகத்தில் பரவத் தொடங்கின. இவற்றின் அடிப்படையில் சாதி ஆதிக்கத்திற்கும், தீண்டாமைக்கும் எதிரான கருத்துகள் எழுச்சிபெற்றன. இந்த எழுச்சியே வைக்கத்தில் தீண்டாமை எதிர்ப்புப் போராட்டமாகக் கிளர்ந்து எழுந்தது.

அன்றைய (1924) திருவிதாங்கூர் அரசுக்கு உட்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மொத்த மக்கள் தொகை 40 இலட்சம். இதில் 26 இலட்சம் பேர் இந்துக்கள். இந்த 26 இலட்சம் பேரில் ஏறக்குறைய 8 இலட்சம் பேர் மட்டுமே சவர்ணரும், மேல்சாதி இந்துக்களும் ஆவர். இவர்கள் ஒரு குடிமகனுக்குரிய எல்லா உரிமைகளையும் பெற்றிருந்தனர். ஆனால் மீதமுள்ள 18 இலட்சம் மக்கள் தீண்டப்படாதவர்களாகக் கருதப்பட்டு இழிவாக நடத்தப்பட்டனர்.

**இத்தகைய தன்மைகளின் விளைவாக கேரளத்தில் பின்பற்றப்பட்டவற்றில் குறிப்பிடத்தக்கவை பின்வரும் கொடிய வழக்கங்களாகும்:**

1. ஒடுக்கப்பட்டவர்களைச் சார்ந்த பெண்கள் இரவிக்கையோ, மாராப்போ அணியக்கூடாது.

2. ஒடுக்கப்பட்டவர்கள் மார்பு வரியும், தலைவரியும் செலுத்த வேண்டுமென்பது கட்டாயச் சட்டமாக்கப்பட்டது.

3. நாயர்கள் உள்ளிட்ட சூத்திரச் சாதியினர் மேல்வருணத்தாருக்குரிய குறிப்பிட்ட சில சமூக உரிமைகளை அனுபவிக்க உரிமை கிடையாது.

4. ஒடுக்கப்பட்டவர்கள் பொதுவழிகளில் நடந்து செல்லும்போது, அவர்கள் வருவதை மேல்சாதியினருக்கு அறிவிக்கவேண்டி வாயால் உரக்கக் கூவி ஏதேனும் ஒருவகையான ஒலியை எழுப்பவேண்டும். மேலும் எச்சில் துப்புவதற்காகக் கழுத்தில் மண்கலையங்களைக் கட்டிக்கொண்டு செல்லவேண்டும்.

5. பொதுவழியில் நடக்கும்போது மேல்சாதிக்காரர்களின் பேரில் தங்கள் நிழல் விழுவதால் தீட்டுப்படாமல் இருக்கவேண்டி, குறிப்பிட்ட தொலைவுக்கு ஒதுங்கி நடக்கவேண்டும் (unapproachable);

குறிப்பிட்ட சில மேல்சாதிக்காரர்களின் கண்களில் படக்கூடாது (unseeable); மற்றெந்தச் சாதியாரையும் தொடக்கூடாது (untouchable); அதாவது ஈழவர்கள் நாயர்களைக் (சூத்திரர்) கண்டால் 12 அடி தள்ளி நிற்கவேண்டும்.

ஒடுக்கப்பட்டவர்கள் நாயர்களிடமிருந்து 64 அடி தள்ளி நிற்க வேண்டும். ஈழவர்களும், தீயர்களும் பிராமணர்களிடமிருந்து 48 அடிதள்ளி நிற்கவேண்டும். ஒடுக்கப்பட்டவர்கள் பிராமணர்களைப் பார்க்கவே கூடாது என்பது இவ்வழக்கங்களின் செயல்வடிவமாகும்.

இவ்வளவு சமூக இழிவுகளும் நிலவிய கேரளத்தில் இவற்றை எதிர்த்து இயக்கம் கண்டவர்களும் போராடியவர்களும் ஸ்ரீ நாராயண குரு, அய்யங்காளி, டாக்டர் பி.பல்ப்பு (Dr. P.Palpu), கவிஞர் குமாரன் ஆசான் ஆகியோரும் மற்றும் கிறித்துவப் பாதிரிமார்களும் ஆவர்.

இத்தகைய இழிவுகளில் மிகக்கொடுமையான இழிவாகக் கேரளத்தில் 1925 வரை நடப்பில் இருந்தது, கோவில்களைச் சுற்றிலுமுள்ள பொதுச்சாலைகளில் ஒடுக்கப்பட்டவர்கள் நடக்கக்கூடாது என்பதுதான்.

அன்றைய திருவிதாங்கூர் அரசின் எல்லைக்குள்ளிருந்த பொதுச்சாலைகளின் மொத்தநீளம் 4000 மைல். இச்சாலைகளில் கோவில்களையும், அரண்மனைகளையும் சுற்றியிருந்த சிலமைல் நீளமுள்ள சாலைகளில் தீண்டப்படாதார் நடக்கக்கூடாது; ஆனால் மற்ற சாதியினர் நடக்கலாம். அப்படி வைக்கம் மகாதேவர் கோவிலைச் சுற்றிலுமுள்ள சாலையில் 8 பர்லாங் (1 மைல்) தொலைவுக்குத் தீண்டப்படாதார் நடக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டிருந்தனர். அந்த எட்டு பர்லாங் நீளப் பொதுச்சாலையிலும் மற்ற



சாதியினரைப் போல் தீண்டப்படாதாரும் நடக்க உரிமைவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நடந்ததே வைக்கம் கிளர்ச்சி ஆகும்.

இந்தத் தடைகளை உடைக்க ஏற்பட்டதே வைக்கம் கிளர்ச்சி ஆகும்.

வைக்கம் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் தீண்டாதார் எனக் கருதப்பட்ட சில குறிப்பிட்ட சாதியினர் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்ததை எதிர்த்து கேரள காங்கிரசுக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் ஜார்ஜ் ஜோசப், மாதவன், கே.பி.கேசவ மேனன், கோவிந்தன் உள்ளிட்டோர் சத்தியாகிரகம் செய்வது எனத் தீர்மானம் செய்தனர்.

ஒவ்வொரு நாளும் மூன்று பேர் வீதம் தொடர் சத்தியாகிரகத்தை 30.03.1924 அன்று தொடங்கினர். முதலில் தொண்டர்கள் மறியல் செய்து கைதாயினர். பிறகு போராட்டத் தலைவர்களும் மறியல் செய்து கைது செய்யப்பட்டனர். திருவாங்கூர் அரசு இந்தப் போராட்டத்தை ஒடுக்கத் தீவிர முயற்சி எடுத்தது.

சிறையில் இருந்த தலைவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஆதரவு கோரி, காந்தி, இராஜாஜி, பெரியார் ஆகியோருக்குக் கடிதங்களை எழுதினர். காந்தி அவர்கள் சென்னை மாகாணத் தோழர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று கூறிவிட்டார். இராஜாஜி தமிழ் நாட்டிலேயே நிறைய வேலைகள் உள்ளன, எனவே அங்கே ஆட்களை அனுப்ப முடியாது என்று கூறிவிட்டார்.

பெரியார் அவர்கள் சிறையில் இருந்த தலைவர்களின் அழைப்பை ஏற்று 14.04.1924 அன்று வைக்கம் சென்றடைந்தார். அங்கு போராட்டத்தலைவர்களுடன் கலந்து பேசிவிட்டு இப்போராட்டத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காக பல இடங்களில் உணர்ச்சிமிக்க சொற்பொழிவுகளை ஆற்றி அந்த மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி பெரும் எண்ணிக்கையிலான மக்களைத் திரட்டினார்.

இதனால் ஆத்திரமடைந்த திருவாங்கூர் அரசு பெரியாரின் சொற்பொழிவுகளில் இருந்த கடுமையான சொற்கள் சட்டத்திற்கு எதிரானவை என்று கூறி அவர் மீது கிரிமினல் வழக்குத் தொடுத்தது. 22.05.1924 அன்று அவருக்கு ஒரு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பெரியார் சிறைக்குச் சென்ற அடுத்த நாளே 23.05.1924 அன்று பெரியாரின் மனைவி நாகம்மாள் தலைமையில் பெண்கள் சத்தியாகிரகம் செய்தனர். கனமழை பெய்த போதிலும் பெண்கள் மழையில் நனைந்தபடியே சத்தியாகிரகத்தை நடத்தினர்.

ஒரு மாதம் சிறைத் தண்டனை முடிந்து 21.06.1924இல்



மகாத்மா காந்தி



நாராயண குரு



இராஜாஜி



நாகம்மையார்



அய்யங்காளி



டி.கே.மாதவன்

பெரியார் விடுதலையானார். சத்தியாகிரக ஆசிரமத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அன்று மாலை அங்கு நடந்த கூட்டத்தில் தமிழில் பேசினார். அதைச் சத்திய விரதன் என்பவர் மலையாளத்தில் மொழிபெயர்த்தார். பெரியாரின் பேச்சு வன்முறையைத் தூண்டுவதாக இருந்தது என்று புலனாய்வுத் துறையினர் தலைமைச் செயலருக்கு எழுதினர். இதனால் தலைவர்கள் பேசுவதற்குத் தடை ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

சிறையிலிருந்து விடுதலை பெற்ற ஈ.வெ.ரா., கோவை அய்யாமுத்து, முத்து, சத்தியவிரதன், குரூர் நீலகண்டன் நம்பூத்ரி ஆகியோருக்கு கூட்டங்களில் பேசத் தடைவிதிக்கப்பட்டது. ஆனால், இவற்றையும் துச்சமாக எண்ணி எல்லாத் தலைவர்களும் கூட்டங்களில் வைக்கம் கிளர்ச்சி பற்றி பேசி ஆதரவு திரட்டினர்.

25.06.1924 அன்று பெரியார் அவர்களை அப்பகுதியை விட்டு வெளியேற திருவாங்கூர் அரசினர் ஆணை பிறப்பித்தனர். பெரியார் அதை ஏற்க மறுத்து விட்டார். எனவே, 27.07.1927 அன்று அவருக்கு நான்கு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

பெரியார் அவர்களை திருவனந்தபுரம் சிறையில் அடைத்து மிகவும் கொடுமைப்படுத்தினர். பெரியார் சிறையில் எவ்வாறு கொடுமைப்படுத்தப்பட்டார் என்பதை வைக்கம் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு சிறைச் சென்ற கே.பி.கேசவமேனன் எழுதியுள்ளதாவது.

“கால்களில் விலங்குச் சங்கிலி. தலையிலே கைதிகள் அணியும் ஒரு குல்லாய். முழங்காலுக்குக் கீழே தொங்குகிற ஒருவேட்டி கழுத்தில் கைதி எண் குறிக்கப்பட்ட மரப்பட்டை இவற்றுடன் ஈ.வெ.ராமசாமி கொலைக்காரர்களோடும் கொள்ளைக்காரர்களோடும் வேலை செய்து, சாதாரண கைதி ஒரு நாளைக்கு எவ்வளவு வேலை செய்வானோ அதைவிட இருமடங்கு வேலை செய்கின்றார்.” **(பழ அதியமான் வைக்கம் போராட்டம் பக்கம் 428–429)**

சத்தியாகிரகிகள் சாகவேண்டும் என்பதற்காக திருவாங்கூர் அரசர் சத்துரு சங்கார யாகம் நடத்தினார். சத்தியாகிரகிகள் யாரும் சாகவில்லை. ஆனால் அரசர் தான் மரணமடைந்தார். இதனால் சிறையில் இருந்த சத்தியாகிரகிகள் அனைவரும் 01.09.2024 அன்று விடுதலை செய்யப்பட்டனர். நான்கு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பெரியாரும் 37 நாள்களில் விடுதலையானார்.

பெரியார் சிறையில் இருந்தபோதும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து பெண்களைத் திரட்டிப் போராடி வந்த நாகம்மையாரை திருவாங்கூர் அரசினர் அச்சுறுத்தினர். இதுகுறித்து சுதேச மித்திரன் 05.08.1924 ஏட்டில் வெளிவந்தச் செய்தியை வே.ஆனைமுத்து அவர்கள் பதிவு செய்துள்ளார்:

ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் மனைவி மற்ற ஸ்ரீகளோடு பிரச்சார


டாக்டர் பல்ப்பு


கே.பி.கேசவமேனன்


ஜார்ஜ் ஜோசப்

வேலையும் பண வசூலும் செய்து வருகிறார். சாது எம்.பி.நாயரின் மனைவியும் அவருடன் வேலை செய்கிறார். பாடிக்கொண்டும், ராட்டினம் சுற்றிக் கொண்டும் இந்த இரண்டு தொண்டர்களும் போக்குவரத்துக்குத் தடையாயிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஐந்து ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார். அபராதம் கொடுக்க மறுத்து கோர்ட் களையும் வரை காவலில் இருந்தார். விசாரணைக்கு முந்தி எட்டு தினங்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார். (சுதேசமித்திரன் 05-05-1924) **(வே.ஆனைமுத்து: பெரியாரும் நூற்றாண்டு காணும் வைக்கம் கிளர்ச்சியும் நூல் பக்கம்-77)**

தீண்டாமையை ஒழிக்கும் மனித உரிமைச் சமத்துவப்போரில், கேரளாவைச் சேர்ந்த 18 பேர் கைது செய்யப்பட்டு போராட்டம் தேங்கிப்போன நிலையில் பெரியாரின் அழைப்பின் காரணமாக தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். இந்தப்போராட்டம் நின்று போகாமல் தொடர்ந்து நடைபெறக் காரணமாக இருந்தவர்கள் பெரியாரும், பெரியாரின் துணைவி நாகம்மையாரும் என்பதை வரலாற்றில் யாரும் மறைக்க முடியாது.

இறுதியில் காந்தியடிகள் வந்து திருவாங்கூர் மகாராணியுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.அதன் விளைவாக மகாதேவர் கோயிலைச் சுற்றியுள்ள மூன்று தெருக்களில் தீண்டப்படாத சாதியினர் செல்வதற்கு ஒப்புக்கொண்டார். அப்போது கூட மகாராணி காந்தியாரிடம் “ஈ.வெ.ரா. கோயிலை திறந்து விட போராடுவாரோ என்றும் அப்படி போராடமாட்டேன் என அவரிடம் ஒப்புதல் வாங்கி வரும்படியும் கூறினார்”.

நாராயணகுரு ஆசிரமத்தில் தங்கியிருந்த பெரியாரிடம் காந்தி “மகாராணி உங்களிடம் கோவிலை திறந்துவிட போராடமாட்டேன் என ஒப்புதல் வாங்கி வரும்படி கூறியுள்ளார்”, என்றார். காந்திக்கு விடையளித்த பெரியார் “இப்போது முதலில் தெருக்களைத் திறந்து விடட்டும் - கோவில் நுழைவைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அதை பிறகு பார்த்துக் கொள்கிறேன்” என்று கூறி அனுப்பினார்.

வைக்கம் வெற்றி விழா 29.11.1925 அன்று பெரியாரின் தலைமையில் நடைபெற்றது. திரு.வி.க. அவர்கள் நவசக்தி ஏட்டில் பெரியார் அவர்களை ‘வைக்கம் வீரர்’ என்று அடைமொழி கொடுத்து எழுதினார்.

தீண்டாமைக்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற முதல் மக்கள் திரள் போராட்டம் வைக்கம் கிளர்ச்சியேயாகும்.





# பெரியாரும் சுசீந்திரம் கோவில் நுழைவுப் போராட்டமும்





அ.கா.பெருமாள்

## ஒன்று

இந்திய மக்களின் கணக்கெடுப்பு அறிக்கை நாட்டார் தெய்வங்களை வழிபடுகின்றவர்களை மட்டும் இந்து சமயத்தினராக சேர்த்துக்கொண்டது. இது ஆரம்பகால நிகழ்வு. ஆனால் நாட்டார் தெய்வங்களை வழிபட்டவர்களுக்குப் பெருநெறிக் கோவில்களில் வழிபடும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. கோவில்களில் மட்டுமல்ல கோவிலைச் சார்ந்த வீதிகளிலும் உயர் வர்க்கத்தின் குளங்களிலும் சத்திரங்களிலும் செல்வதற்கும் தடை இருந்தது.

அம்பேத்கரைப் போன்ற பெரும் தலைவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் நிகழ்த்தியும் நீதிமன்றத்தில் முறையீடு செய்தும் இதற்கு மாற்றத்தைக் கொண்டு வந்த காலகட்டத்தில் இந்தியாவின் வேறு மாநிலங்களிலும் இது போன்ற நிகழ்வுகள் நடந்திருக்கின்றன.

இந்திய விடுதலைப் போரைத் தன் இலட்சியமாகக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியும் கோயில் நுழைவு பற்றி தன் கருத்தைத் தெளிவாக வைத்திருந்தது.

திருவிதாங்கூரில் கோவில்கள் இருந்த சாலைகளில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் நுழையக்கூடாது என்று கூறிய வழக்கம் எந்த நூற்றாண்டில் புகுத்தப்பட்டது என்பதைத் துல்லியமாக கூற முடியவில்லை. தென் திருவிதாங்கூரில் பிற்காலச் சோழர்களின் மறைமுக ஆட்சி நடந்தபோது உயர் வகுப்பினரின் செல்வாக்கு கோவில்களில் மிக வேகமாக ஊன்றியது. இக்காலத்தில் குறிப்பிட்ட சாதிகளைச் சமூகத்திலிருந்து ஒதுக்கும் வழக்கம் உருவானது என்பதற்கு நாட்டார் வழக்காற்றில் சான்றுண்டு. இதை வரலாற்றுப் பேராசிரியர் கே.கே.பிள்ளையும் ஒத்துக்கொள்ளுகிறார்.

கேரள நம்பூதிரிகள் கோவிலையும் வேணாட்டு அரசு நிருவாகத்திலும் முழுமையாகத் தன்னை இணைத்துக் கொண்டபோது இந்த வழக்கம் நடைமுறைக்கு வந்திருக்கலாம். நாகர்கோவிலில் உள்ள வடசேரி பகுதியில் ஒரு பொதுக்கிணற்றில் சாலிய சாதியினர் தண்ணீர் எடுக்கத் தடுத்த உயர் ஜாதியினரை வேணாட்டு அரசன் ஒருவன் எச்சரித்ததை ஒரு கல்வெட்டு கூறுகிறது. கடற்கரை பரதவர்கள் தங்கள் தலைமை போர்ச்சுகீசிய நாட்டில் உள்ளது என்று குறிப்பிடும் அளவுக்கு உயர் வகுப்பினர் ஒதுக்கியதை வெளிநாட்டு வரலாறு விரிவாகக் கூறுகிறது.




கோவில் இருந்த பகுதியில் உள்ள சாலைகளில் ஒடுக்கப்பட்ட சாதியினர் செல்லக்கூடாது என்றும் வேறு குறுக்கு வழியிலேயே செல்ல வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர். நாஞ்சில் நாட்டு பறக்கை அக்கரை மகாதேவர் கோவிலின் வெளியே கிடந்த ஒரு கல்லில் இந்தத் தெருவின் உள்ளே கீழ் சாதியினர் வரக்கூடாது என வெட்டப்பட்டிருந்தது.

இதன் எழுத்து அமைதியை வைத்து 17ஆம் நூற்றாண்டில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டு இருக்கலாம் என்று தொல்லியலாளர்கள் கணித்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (1918) உயர்சாதி மக்கள் ஒடுக்கப்பட்ட சாதியினரைத் துன்புறுத்தி விரட்டிய நிகழ்ச்சியை அழகிய பாண்டியபுரம் முதலியார் ஆவணம் ஒன்று குறிப்பிடுகிறது. இந்த செயலை விசாரித்த குழு உயர் சாதியினருக்காகவே பரிந்து பேசியது.

## இரண்டு

வைக்கம் கோயிலின் எல்லையில் இருந்த அறிவிப்பு பலகையில் ஒடுக்கப்பட்டவர்கள் அந்த தெருவழியே செல்லுதல் கூடாது என்று குறிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அவ்வழியே கிறித்தவரோ இஸ்லாமியரோ செல்வதற்குத் தடை இல்லை.

1924இல் இந்த அறிவிப்பு பலகையை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை ஒடுக்கப்பட்ட மக்களிடம் எழுந்தது. இந்தக் கோரிக்கை சத்யாகிரகமாக மாறியது. இந்தப் போராட்டத்தில் டி.கே.மாதவன், கே.கேளப்பன், ஜார்ஜ் ஜோசப், கே.பி.கேசவமேனன் போன்றவர்கள் பங்கு கொண்டனர்.

பெரியார் இந்தப் போராட்டத்தில் தலைமை தாங்கினார் என்பது முக்கியமான விஷயம். இது குறித்து ஸ்ரீமூலம் சட்டசபையில் விவாதிக்கப்பட்டது. வைக்கத்தில் மட்டும் அல்ல, குருவாயூர் போன்ற வேறு கோவில்களிலும் இந்த நிலைதான் இருந்தது.

ஈழவ சாதியினர் குருவாயூர் கோவிலில் இருந்து 325 அடி தூரத்தே செல்ல வேண்டும். ஒடுக்கப்பட்ட சாதியினர் கோவிலில் மட்டுமல்ல கோவிலைச் சுற்றிய பகுதிகளில் செல்லக்கூடாது என்ற நடைமுறை இருந்தது.

கோவில் திருவிழா காலங்களில் குறிப்பிட்ட சில வீதிகளிலும், சந்துகளிலும் குறிப்பிட்ட ஜாதியினர் வரக்கூடாது என்னும் அறிவிப்பு மலையாளத்திலும் தமிழிலும் எழுதப்பட்டதை நினைவு கூர்ந்தவர்களை எழுபதுகளில் கூட நான் சந்தித்து இருக்கிறேன்.

கோவிலைச் சார்ந்தவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் கால்கள் கோவிலில் சுற்றிய பகுதிகளில் பட்டுவிடுமோ என்று அஞ்சி கோவிலை சுற்றி வேலிகள் கூட போட்டனர். அப்போது, இதை அவமானமாக கருதிய விடுதலைப் போராட்ட வீரர்கள் கோவில் நுழைவு உரிமையால் மட்டுமே இதை நிவர்த்தி செய்ய முடியும் என்று முடிவு கட்டினர்.

## மூன்று

திருவிதாங்கூர் மன்னர்களிடம் சாதாரண உரிமையைப் பெறுவதற்குக் கூட போராட்டம் நடத்த வேண்டி இருந்தது, செருப்பு போட்டுக் கொள்வது, தலைப்பாகை அணிந்து கொள்வது இரயில் வண்டியில் செல்வது, உயர்ஜாதியினர் வாழும் வீதிகளில் செல்லுவது ஆகிய உரிமைகளுக்குக் கூட போராட வேண்டி இருந்தது.

மற்றவர்களுக்கு கோவில் பூசகர்கள் கோவில் பிரசாதமான சந்தனத்தைத் தூரத்தே நின்று வீசி எறிந்தார்கள். அவர்கள் கையில் கொடுக்க மறுத்தார்கள். சந்தனத்தை தங்கள் கையிலே கொடுக்க வேண்டும் என்பதற்கு உயர் ஜாதியினர் போராடியது வரலாற்றில் பதிவு செய்யப்படாத செய்தி. தென்திருவிதாங்கூர் கோவில்களில் இந்த சிறு போராட்டம் 40க்குகளில் நடந்திருக்கிறது.

சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் கோவிலின் எல்லையில் இருந்த தடுப்புப் பலகையை அகற்ற வேண்டும். இந்தக் கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றவர் மலையாள மகாகவியான குமாரன் ஆசான் ஆவார். இவர் இது குறித்து ஸ்ரீ மூலம் சட்ட சபையில் (1916) விரிவாகப் பேசி யிருக்கிறார்.

சுசீந்திரம் கோவில் விழாவிற்கு எல்லா சாதி மக்களும் செல்ல முடியவில்லை. அக்கோவிலின் தெருக்களில் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. விழாக் காலங்களில் ஒடுக்கப்பட்ட ஜாதிக்காரர்கள் எல்லோருமே தெருக்களில் நடமாட முடியவில்லை. விழா காலங்களில் கோயில்களைச் சுற்றிய பகுதிகளிலும் குப்பைகள் அப்படியே கிடக்கின்றன. அவற்றை அகற்றுவதற்கு கூட ஒடுக்கப்பட்ட சாதியினர் செல்ல முடியாது என்று குமாரன் ஆசான் சட்டசபையில் பேசினார். ஆசான் அசெம்பிளியில் பேசும் படியான உரிமையைக் கொடுத்த சமஸ்தான அரசு அவரது பேச்சைக் காற்றில் கலக்கவிட்டது.

சமூகக் கொடுமைகளிலிருந்து சுதந்திரம் பெறுவதுதான் பரிபூரண சுதந்திரம் என்னும் மகாத்மாவின் கொள்கையின் அடிப்படையில்தான் கோவில் நுழைவு போராட்டம் ஆரம்பித்தது.



நாராயணகுரு உடன் குமாரன் ஆசான்



மகாகவி குமாரன் ஆசான்



எம்பெருமாள் நாயுடு

இது வெள்ளையர்களுக்கு எதிரானது அல்ல என்று மகாத்மா கூறினாலும் திருவிதாங்கூர் நிருவாகம் அதை முழுதாக ஏற்றுக்கொள்ளவில்லை.

கேரளத்தைப் பொறுத்தவரையில் கோவில் நுழைவு என்னும் போராட்டம் வைக்கம் ஊரிலிருந்துதான் ஆரம்பிக்கின்றது. இது குறித்த செய்திகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் போராட்டத்தில் பெரும்பங்கு வகித்த பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் பங்கு முக்கியமானது என்பதை மலையாள வரலாற்று ஆசிரியர்களும் கூறுகின்றனர்.

வைக்கத்தில் வைத்த நெருப்பு தான் குருவாயூர், சுசீந்தரம் போன்ற ஊர்களிலும் பரவியது என்பது உண்மை. பொதுவாக கேரளத்து வைக்கம் போராட்டத்தில் பெரியாரின் பங்கு பற்றி பேசுகின்றவர்கள் சுசீந்திரம் கோவில் நுழைவுப் போராட்டத்திலும் பெரியாருக்கும் பங்கு உண்டு என்பதை விரிவாகக் கூறவில்லை. உண்மையில் சுசீந்திரம் கோவில் போராட்டத்திலும் பெரியார் கலந்து கொண்டிருக்கிறார்.

## நான்கு

பிரபலமான தமிழ் இதழ் ஒன்றின் தீபாவளி மலருக்கு நாஞ்சில் நாட்டின் தொன்மையான பழையாறு பற்றி எழுத தகவல்கள் தேடியபோது சுசீந்திரம் கோவில் நுழைவுப் போராட்டம் பற்றிய செய்தி ஒன்று கண்ணில் பட்டது. நாகர்கோவில் குறுந்தெருவில் வாழ்ந்த சிவ முத்து கருப்பு பிள்ளை (1890–1972) எழுதிய ஒரு கட்டுரை கிடைத்தது.

சிப்பாய் கழக நூற்றாண்டு விழா மலரில் (1957) அது வந்தது. இந்தக் கட்டுரை நாஞ்சில் நாட்டில் விடுதலைப் போராட்ட உணர்வு உருவாகக் காரணமான நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடுகிறது.

விடுதலைப் போராட்ட உணர்வு இங்கு உருவாவதற்கு கிராமங்களில் இருந்த பஜனை மடங்களும் ஒரு காரணம் நாகர்கோவில் குறுந் தெருவில் இருந்த பஜனை மடத்திற்கு சுதேச மித்திரன் பத்திரிகை வந்திருக்கிறது. அதை ஒருவர் படிக்க மற்றவர்கள் கேட்பார்கள். இது 1911இல் நடந்த நிகழ்வு. அப்போது அரை குறையாகத்தான் பிரிட்டிஷ் ஆளுகையிலான தமிழ்நாட்டு விஷயங்களை நாஞ்சில் நாட்டு மக்கள் அறிந்திருக்கிறார்கள். நாஞ்சில் நாடு அப்போது திருவிதாங்கூரின் ஒரு பகுதியாக இருந்தது. மகாத்மாவைப் பற்றி பெரிய புரிதல் எதுவும் அப்போது இல்லை.

> **பெரியார் ஈழவர் சமூகத்து பிரமுகர்களைச் சந்தித்த பிறகு நடந்த நிகழ்ச்சிகள் முக்கியமானவை. இதைப் பற்றி தியாகி சண்முகம் பிள்ளை தொகுத்த ஒரு செய்தித் தொகுப்பில் (கை விளக்கு சுதந்திர மலர் 1974) ஈழவ சமூக மக்கள் ஒட்டுமொத்தமாக பெரியாரின் தாசர்களாக மாறியதற்கு வைக்கம் ஒரு இடமாக களமாக இருந்தது என்று குறிப்பிடுகிறது.**

ஆனால் எல்லா மக்களும் இந்தியாவின் குடிமக்கள் என்ற செய்தி சுதேசமித்திரன் வழி கிடைத்திருக்கிறது. அதனால் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒன்று இரண்டு பேர் பஜனை மடத்திற்கு சுதேசமித்திரன் பத்திரிகை செய்தியைக் கேட்க வந்திருக்கிறார்கள். அதற்குத் தடை செய்யாத அளவு நாங்கள் பக்குவப்பட்டிருந்தோம் என்று சிவமுத்துக் கருப்ப பிள்ளை கூறுகிறார்.

பழைய தென் திருவிதாங்கூரான இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பகால விடுதலைப் போராட்டத் தியாகிகளில் மிக முக்கியமானவர், பெரியாருடன் தொடர்புடையவர், வைக்கம் கோவில் நுழைவுப் போராட்டத்தில் மூன்று முறை கலந்து கொண்டு அப்போது சிறைக்குச் சென்றவர், சிவமுத்துக்கருப்ப பிள்ளை.

இவர், ஆரம்ப கால கோவில் நுழைவு போராட்ட உணர்வை ஆரோக்கிய உணவு என்ற தன் நூலின் முகவுரையில் சொல்லுகிறார். இதை சிவமுத்துக் கருப்ப பிள்ளையின் மகன் லஜபதி தொகுத்திருக்கிறார் (1983) இந்தக் கட்டுரையில் சிவ முத்துக்கருப்ப பிள்ளை அப்போது எனக்கு வயது 34 (1924) அலோபதி டாக்டர் கோட்டாறு மீனாட்சி எம்பெருமாள் நாயுடு என்பவருடன் நான் வைக்கம் போனேன். எங்கள் பயணச் செலவிற்காக நாஞ்சில் நாட்டில் சில பிரமுகர்களிடம் பணம் சேகரித்தேன். நாயுடு வீட்டிலிருந்தும் பெண்கள் போராட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

வைக்கம் போராட்டத்தை ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் முன்னே நின்று நடத்தினார். இதன் பிறகு (1924 ஏப்ரல்) ஒருமுறை நான் வைக்கம்

சென்றேன். அப்போது எங்களுடன் டாக்டர் எம்.இ.நாயுடு, காந்தி தாஸ் முத்துசாமி டி.சி.தாணு மாலயப் பெருமாள், ஆலமூட்டு சால்னார் ஆகியோர் வந்தனர். நாயுடுவின் வீட்டில் இருந்தும் சில பெண்கள் வந்தனர். கோட்டாற்றிலிருந்து வணிகர்கள் சிலர் பண உதவி செய்தனர்.

நாங்கள் வைக்கத்திற்குச் செல்லும் முன்பே ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் வந்துவிட்டார். அவரை நான் சந்தித்துப் பேசினேன் எங்களுடன் வந்தவர்களுக்குத் தலைமை தாங்கி ஊர்வலமாக செல்லுமாறு ராமசாமி நாயக்கர் என்னிடம் சொன்னார். நான் அச்சமில்லை அச்சமில்லை என்ற பாரதியின் பாடலைப் பாடிக்கொண்டே சென்றேன். மலையாள பட்டாளத்து ஆட்கள் (திருவிதாங்கூர் போலீசார்), குவிந்து கிடந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் எனக்கு நாக்கு வறண்டது. கொஞ்சம் உளற ஆரம்பித்தேன் என்று எழுதுகிறார் சிவமுத்துக் கருப்ப பிள்ளை.

பெரும்பாலும் நாஞ்சில் நாட்டு தியாகிகளுக்கும் பெரியாருக்கும் உள்ள தொடர்பு வைக்கம் சத்தியாகிரகம் மூலம் ஏற்பட்டது என்பது சிவமுத்துக்கருப்ப பிள்ளையின் கருத்து. பிற்காலத்தில் நாகர்கோவில் கோட்டாற்று பகுதியில் வாழும் ஈழவ சமூகத்தினர் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொள்வதற்கு முக்கிய காரணமாக வைக்கம் போராட்டம் இருந்திருக்கிறது.

வைக்கம் சத்யாகிரகக் கூட்டங்களில் பெரியார் தமிழில் பேசும்போது நாஞ்சில் நாட்டில் கோட்டற்றிலிருந்து ஒருவர் அதை மொழி பெயர்த்திருக்கிறார். அவரது பெயர் நினைவில்லை என்று போராட்டத்தில் கலந்து கொண்ட


சுசீந்திரம் கோயில்
பழைய தோற்றம்...

தாணுமாலயப் பெருமாள் எழுதுகிறார். பெரியார் ஈழவர் சமூகத்து பிரமுகர்களைச் சந்தித்த பிறகு நடந்த நிகழ்ச்சிகள் முக்கியமானவை. இதைப் பற்றி தியாகி சண்முகம் பிள்ளை தொகுத்த ஒரு செய்தித் தொகுப்பில் (கை விளக்கு சுதந்திர மலர் 1974) ஈழவ சமூக மக்கள் ஒட்டுமொத்தமாக பெரியாரின் தாசர்களாக மாறியதற்கு வைக்கம் ஒரு இடமாக களமாக இருந்தது என்று குறிப்பிடுகிறது.

வைக்கம் கோவில் நுழைவுப் போராட்டம் 1924 மார்ச் 30ஆம் தேதி ஆரம்பமானது. சரியாக 22 மாதங்கள் முடிந்ததும் (1926 ஜனவரி 29) தென் திருவிதாங்கூர் சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் ஆலயத்தில் கோயில் நுழைவுப் போராட்டம் ஆரம்பமானது.

வைக்கம் போராட்டத்தில் பங்குபெற்றவர்களில் பலரும் சுசீந்திரம் கோவில் போராட்டத்திலும் ஈடுபட்டனர். வைக்கம் போராட்டத்திற்கு வழிகாட்டிய பெரியார் சுசீந்திரம் கோவில் போராட்டத்திற்கும் ஆலோசனை கூறியிருக்கிறார். சில கூட்டங்களில் பேசியிருக்கிறார். இதற்காகவே நாகர்கோவில் வந்திருக்கிறார்.

ஒருமுறை சுசீந்திரம் கோவில் நுழைவுப் போராட்டம் ஆரம்பித்த காலகட்டத்தில் சிவ முத்துக் கருப்ப பிள்ளை பெரியாரை பேச அழைத்திருக்கிறார். பெரியார் சுசீந்திரம் ஊர் திருவாவடுதுறை மடத்தின் அருகே இருந்த ஒரு காலி இடத்தில் பேசுவதாக ஏற்பாடு செய்திருக்கின்றனர். ஆனால், ஊர்க்காரர்களில் போராட்ட எதிர்ப்பு குழுவிற்குத் தலைமை தாங்கிய வேலாயுதம் பிள்ளை அடியாட்கள். சிலருடன் வந்து தகராறு செய்திருக்கிறார் அதனால் அந்த இடத்தில் பெரியார் பேச வேண்டாம் என்று முடிவு செய்து இருக்கிறார்கள்.

இதன் பிறகு பெரியார் சுசீந்திரம் ஊரைத் தொட்டு ஒடிய பழையாற்றின் மணல் வெளியில் நடந்த கூட்டத்தில் பேசியிருக்கிறார் இது பற்றி தியாகி நாகலிங்கம் எழுதிய கட்டுரை ஒன்றில் (கைவிளக்கு சிறப்பு மலர்) விரிவாகக் கூறுகிறார்

அப்போது பங்குனி மாதம்; ஆற்றில் தண்ணீர் பெரிதாக ஓடவில்லை. ஆற்றின் வடக்கே சிறு ஓடை போல தெளிந்த பளிங்கு போன்ற நீர் ஓடிக் கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் ஆற்றில் சாக்கடைகளோ குப்பைகளோ கலக்காத காலம். பச்சரிசி குருணை போல் மணல் பரந்து கிடந்தது.

> **பெரியார் இல்லை, மலம் தின்னும் பன்றியைப் போல் அவர்கள் நடத்தப்படுகிறார்கள். இல்லை என்பவர்கள் மேடையில் வந்து பேசட்டும் பதில் சொல்லுகிறேன். இல்லை என்றால் பேச்சை நிறுத்திக் கொள்கிறேன் என்றாராம். ஆனால் யாரும் அவரை எதிர்த்துப் பேச வரவில்லை.**

அன்றைய கூட்டத்திற்கு மிகக் குறைவான பேர்களே வந்திருந்தார்கள். மோகன் காந்திராமன், முத்துசாமி, களக்காடு அண்ணாமலை, கணபதி அடவியார் என்பவர்கள் இருந்தார்கள். பெரியார் வருவதற்கு எல்லோரும் காத்திருந்தோம் சிலர் ஆற்றின் வடக்கே ஒடிய தண்ணீரை குனிந்து கவிழ்ந்து மாடு தண்ணீர் குடிப்பது போல் குடித்தார்கள்.

அன்று பெரியார் பொதுவாகத்தான் பேசினார். யாரையும் குற்றம் சாட்டி பேசவில்லை. நம்முடைய உரிமையைப் பெறுவதற்காகப் போராட வேண்டிய சூழ்நிலையை உணர்த்தினார்.

இதே நாளில் நாகர்கோவில் கோட்டாறு சமரச வீதியிலும் பெரியார் பேசினார். ஒருவகையில் சுசீந்திரம் கோவில் நுழைவு போராட்டத்திற்கு ஆதரவான கூட்டம் அது இதற்கு வழக்குரைஞரும் வரலாற்று அறிஞருமான பி.சிதம்பரம் பிள்ளை தலைமை தாங்கினார்.

இவர் பெரியாரின் கொள்கையில் மிகவும் ஈடுபாடு உடையவர் (இவரது Right to Temple Entry Nagercoil 1933) என்ற ஆங்கில நூலுக்குப் பெரியார் அணிந்துரை எழுதி இருக்கிறார்.

இந்த கூட்டத்திற்கு எண்ணூருக்கு மேல் பார்வையாளர்கள் வந்திருந்தார்கள். முக்கியமாகப் பெண்களும் சிலர் இருந்தார்கள். இது அன்று அதிசயமாக பேசப்பட்டது. காந்திதாஸ் முத்துசாமி, மோகன் காந்திராமன், பெருமாள் பணிக்கர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். வைக்கம் போராட்டத்தில் கிடைத்த அனுபவத்தைப் பலரும் பகிர்ந்து கொண்டார்கள்.

அன்று பேசியவர்கள் ஜார்ஜ் ஜோசப் என்ற வழக்குரைஞர் பெரியாரை வைக்கம் போராட்டத்தில் தலைமை தாங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதை நினைவு படுத்தினார்கள்.

(இந்தச் செய்தி நவசக்தியிலும் வந்திருக்கிறது) அதில் வைக்கம் வீரர் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் என்றே குறிப்பிடப்படுவதாக பழ அதியமான் அவரது நூலில் (வைக்கம் போராட்டம் 2020) கூறுகிறார்.

வைக்கம் போராட்டம் 1924 மார்ச் 30ஆம் நாளில் ஆரம்பமானது. இதைத் தொடங்கிய கே.பி.மேனனுக்கு ஆரம்பத்திலேயே எதிர்ப்பு வந்தது. போராட்டத்தின் போது சத்தியாகிரகர்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் கைகலப்பு கூட நடந்தது.

இது நடந்து 70 நாட்கள் கழித்து (1924 ஏப்ரல் 13) பெரியார் வைக்கம் வந்தார். அப்போது அவரை வைக்கத்துக்கு அழைத்தவர் குர் நீலகண்ட நம்பூதிரி என்பவர் ஆவார். அப்போது பெரியார் தமிழ் மக்கள் வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று பேசி இருக்கிறார்.

வைக்கம் போராட்டத்திற்கு தமிழ்நாட்டில் இருந்து வரதராஜுலு நாயுடு பண உதவி செய்திருக்கிறார். மாதம்தோறும் உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் பெரியார் நாகர்கோவிலுக்கும் வந்திருக்கிறார்.


டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு

அப்போது சுசீந்திரம் கோவில் நுழைவுப் போராட்டம் ஆரம்பிக்கவில்லை. டாக்டர் நாயுடு மட்டும் அது பற்றி யோசிக்க வேண்டும் என்று காங்கிரஸ் அனுதாபிகளிடம் சொல்லி இருக்கிறார். அப்போது நடந்த கூட்டத்திற்கு சிதம்பரம் பிள்ளை தலைமை தாங்கி இருக்கிறார். அவர் பொதுவாக மனித உரிமை, பெண்கள் உரிமை பற்றிப் பேசினார். ஒடுக்கப்பட்டவர்கள் கோவிலைச் சார்ந்தவர்களால் நடத்தப்படும் விதம் பற்றி விரிவாகவே பேசினார்.

சுசீந்திரம் கோவிலின் நான்கு வீதிகளிலும் சன்னதி தெருவிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் வரக்கூடாது என்ற கட்டுப்பாடு இப்போது தீவிரமாகவே இருக்கிறது வேளாளர், நாயர் செட்டியார் ஆகிய சமூகத்தினர் கோவிலின் அர்த்தமண்டபம் வரையிலும் அதாவது கருவறைக்கு முன் உள்ள மண்டபம் வரையிலும் செல்லலாம். வைராவி, சாலியர், எண்ணெய் வணிகர் ஆகியோர் கொடிமரம் இருக்கும் பகுதி வரை செல்லலாம். பிற ஜாதியினர்கள் கோவிலுக்கு வெளியே ஒரு பர்லாங் தூரத்தில் நின்று கொண்டு தான் ஆண்டவனை வணங்க வேண்டும் என்னும் செய்திகளைச் சிதம்பரம்பிள்ளை சொன்னார்.

சிதம்பரம் பிள்ளையை அடுத்து பேசிய பெரியார், உயர் வகுப்பினர்கள் கோவிலில் நுழைய விடாமல் தடுப்பது மட்டுமல்ல ஒடுக்கப்பட்டவர்களை நாயை விட கேவலமாக நடத்துகின்றார்கள் என்றார். வழக்கறிஞரும் காங்கிரஸ் தலைவருமாக இருந்த சிவதாணு பிள்ளை கோவிலில் நுழையாதவர்களை நாய்க்கு ஒப்பிடலாமா என்று கேட்டார்.

பெரியார், “இல்லை, மலம் தின்னும் பன்றியைப் போல் அவர்கள் நடத்தப்படுகிறார்கள். இல்லை என்பவர்கள் மேடையில் வந்து பேசட்டும் பதில் சொல்லுகிறேன். இல்லை என்றால் பேச்சை நிறுத்திக் கொள்கிறேன்” என்றாராம். ஆனால் யாரும் அவரை எதிர்த்துப் பேச வரவில்லை.

சிவதாணு பிள்ளை பெரியாரை அடுத்து பேசும்போது சாந்தமாகவே பேசியிருக்கிறார் அதோடு இவ்வளவு ஆக்ரோஷம் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கருக்கு வேண்டுமா என்று கேட்டாராம் (வழக்குரைஞர் முத்தையா பிள்ளையின் நினைவுக் குறிப்பு கைவிளக்கு மாத இதழ் 1974).

தென் திருவிதாங்கூர் சுசீந்திரம் கோவில் நுழைவுப் போராட்டத்தில் பெரியாருக்கு மிக்க இடம் உண்டு என்பது விரிவாகப் பதிவு செய்யப்படவில்லை யாராவது செய்திகளைத் தேடி தொகுக்கலாம்.



# வைக்கம் போராட்டம்: வரலாற்றுச் சாதனை

**ஆ**ய்வு, பதிப்பு, கட்டுரை ஆகிய துறைகளில் தொடர்ந்து செயல்படுபவர் பழ.அதியமான். பெரியார் வரலாற்று ஆய்வில் 'பெரியாரின் நண்பர்: டாக்டர் வரதராஜுலு நாயுடு வரலாறு' (2012), 'சேரன்மாதேவி குருகுலப் போராட்டமும் திராவிட இயக்கத்தின் எழுச்சியும்' (2013) ஆகிய இரண்டு சிறந்த நூல்களை வழங்கியுள்ளார். வைக்கம் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்தவர்களுள் ஒருவராகிய ஜார்ஜ் ஜோசப் குறித்து 'அறியப்படாத ஆளுமை: ஜார்ஜ் ஜோசப்' (2007) என்னும் சிறுநூல் ஒன்றையும் அவர் ஏற்கெனவே வெளியிட்டுள்ளார். இந்தப் பின்னணி கொண்ட அவர் தற்போது 'வைக்கம் போராட்டம்' (2019) என்னும் மிக முக்கியமான வரலாற்று நூலை எழுதியுள்ளார்.

பெரியார் வாழ்க்கை வரலாற்றில் முக்கியப் பங்கு வகிப்பது வைக்கம் போராட்டமாகும். 'வைக்கம் வீரர்' என்று பெரியார் அழைக்கப்படுவதை அனைவரும் அறிவோம். இப்போராட்டம் குறித்துத் தெளிவற்ற நிலையே இத்தனை காலமும் நிலவி வந்தது. பெரியாரை ஆதரிப்போரும் எதிர்ப்போரும் எதிரெதிர் நிலைகளில் நின்று விவாதித்து வந்தனர். குறைந்த ஆதாரங்களைக் கொண்டு அவரவர் விருப்பப்படி அவற்றுக்கு விளக்கம் கொடுத்தனர்; முடிவுகளை முன்வைத்தனர்.





பெருமாள்முருகன்

ஆனால், அப்போராட்டத்தின் முழுமையை விவரிக்கும் ஆதாரப்பூர்வமான வரலாற்று நூல் இதுவரை இல்லை. போராட்டம் நடைபெற்ற கேரளத்திலும் இவ்வரலாறு குறிப்பிடத்தக்க அளவில் எழுதப்படவில்லை. இந்நிலையில் பத்தாண்டுகளுக்கும் மேலாகக் கள ஆய்வை மேற்கொண்டு எழுத்துச் சான்றுகளை எல்லாம் திரட்டிப் போராட்டத்தின் ஒவ்வொரு நாள் நிகழ்வையும் மிகத் துல்லியமாக விவரித்து எழுதப்பட்டுள்ள இந்நூல் அக்குறையைப் போக்கியுள்ளது.

போராட்டத்தில் காந்தி, பெரியார் ஆகியோரின் பங்கை விவரிக்கும் தனி இயல்கள் இந்நூலில் உள்ளன. அப்போராட்டத்தைத் தொடங்கிய டி.கே.மாதவன், ஜார்ஜ் ஜோசப், கே.பி.கேசவமேனன் உள்ளிட்ட அனைவரின் பங்கையும் உரிய முக்கியத்துவத்தோடு இது காட்டுகிறது. வைக்கம் போராட்டம் குறித்து இதுவரை பேசப்பட்ட, எழுதப்பட்ட எல்லாவற்றையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தவும் புதிய புதிய கோணங்களில் அப்போராட்டத்தைக் காணவும் தூண்டுகிறது.

பெரியார் தொடர்புடைய போராட்டம் என்பதாலேயே இதன் வரலாற்றை எழுதுவது ஆசிரியருக்கு நோக்கமாக இருந்திருக்கிறது. ஆனால், பல்வேறு வினாக்களுக்கு விடை தரும் பெரும்வரலாறாக இது உருப்பெற்றுள்ளது. கேரளத்தில் உள்ள ஓர் ஊர் வைக்கம். அங்கு நடந்த போராட்டத்தில் தமிழகத் தலைவர்களும் தொண்டர்களும் பங்கேற்ற காரணம் பற்றிய தெளிவான சித்திரம் கிடைக்கிறது.

பொதுவாக இப்போராட்டத்தைக் ‘கோயில் நுழைவுப் போராட்டம்’ என்றே பலரும் கருதுகின்றனர். அல்லது ‘தீண்டாமைக்கு எதிரான போராட்டம்’ என்று இது அடையாளப்படுத்தப்படுகிறது. துல்லியமாகக் கூற வேண்டுமானால் இதை ‘அணுகாமைக்கு எதிரான போராட்டம்’ என்று சொல்லலாம். தீண்டாமை என்பது தீண்டுதல் அதாவது தொடுதல் மறுப்பை அடிப்படையாகக் கொண்டது. ஒருவரைத் தொட்டால் தீட்டு ஏற்பட்டுவிடும் என்னும் கருத்திலிருந்து தீண்டாமை உருவாகியுள்ளது. இத்தீண்டாமையைக் காப்பாற்றி வைப்பதற்காக உருவாக்கப்பட்டது ‘அணுகாமை (unapproachable).’

அருகருகே இருக்கும் இருவருக்கு இடையேதான் தொடுதல் நிகழச் சாத்தியமுண்டு. வீடு, சாலை, கோயில், நிலம் உள்ளிட்ட குறிப்பான வெளிகளை ஒருவருக்கு, ஒரு பிரிவினருக்கு மறுத்து இடைவெளியை உருவாக்கி அதை நிரந்தரமாக்குவதே அணுகாமை ஆகும். தள்ளி நிற்கச் செய்வதும் விலகி வசிக்க நிர்ப்பந்திப்பதும் அணுகாமையின் கூறுகள். தொடுதலைத் தவிர்ப்பதே அணுகாமையின் நோக்கம்.

சாலையில் எல்லோருடனும் நடந்தால் ஒருவர் மீது ஒருவர் தொட்டுக்கொள்ள நேரும். கோயிலுக்குள் எல்லோரும் சென்றால் உடல்கள் பட்டுக்கொள்ள வாய்ப்புண்டு. தொடுதல் நிகழ வாய்ப்புள்ள வெளிகளைத் தடுத்து அவற்றுக்குப் புறத்தே நிறுத்திவிடுதல் என்னும் அணுகாமையே தீண்டாமையைக் காப்பாற்றி வைக்கிறது.



அணுகாமையின் இறுகிய இன்னொரு வடிவம் பார்க்காமை (Unseeable).

கேரளத்தில் 'நாயாடிகள்' என்னும் சாதியினருக்கும் தமிழகத்தில் 'புரத வண்ணார்' என்போருக்கும் இந்தப் 'பார்க்காமை' இருந்திருக்கிறது. இன்றும் எல்லா வெளிகளும் பொதுவாகிவிடவில்லை. அணுகாமை பலவிடங்களில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. குறிப்பிட்ட மதத்தினருக்கும் சாதியினருக்கும் வாடகைக்கு வீடு கொடுக்காத நிலை அணுகாமையின் நவீன வடிவம். இன்றும் சாதிக்குரிய கோயில்கள், குலத்திற்குரிய கோயில்கள் அணுகாமையைக் கொண்டிருக்கின்றன.

திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் குறிப்பிட்ட சாதி மக்கள் வசிக்கும் கிராமங்கள் சிலவற்றில் அச்சாதியினரைத் தவிரப் பிறர் யாரும் நுழையக் கூடாது என்னும் கட்டுப்பாடு இன்றைக்கும் இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. பார்க்காமையும் இன்று இல்லை என்று கூறிவிட முடியாது. பெரும்பதவியில் உள்ளோரைப் பார்க்க நாம் படும் பாட்டை ஒப்புநோக்கலாம்.

1924, ஏப்ரல் 16 அன்று வைக்கத்திற்கு அருகில் உள்ள சேர்த்தலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் நிறுவப்படுவதற்கு முதலில் தீண்டாமைக்கும் அணுகாமைக்கும் முடிவு கட்ட வேண்டும்' (ப.59) என்று பெரியார் பேசியுள்ளார். இந்நூலில் வெவ்வேறு இடங்களில் அணுகாமை, நெருங்காமை ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆங்கிலத்தில் unapproachable என்று அரசு ஆவணங்களில் காணப்படுவதை 'அணுகாமை' என்று இந்நூலாசிரியர் மொழிபெயர்த்துள்ளார். அக்காலத்தில் பெரியார் பயன்படுத்திய தமிழ்ச் சொல் எதுவென அறிய முடியவில்லை. பெரியார் அல்லாமல் வேறு சிலரின் பேச்சிலும் அறிக்கையிலும் 'அணுகாமை' இடம் பெற்றிருக்கிறது.

திருவாங்கூர் சட்டசபையில் குஞ்சு கிருஷ்ணப் பிள்ளை என்பவர் 'தீண்டாமை, அணுகாமை இவற்றை அரசு அங்கீகரிக்கிறதா' என்று (ப.138) கேள்வி எழுப்பியுள்ளார். இதுவும் நூலாசிரியரின் மொழிபெயர்ப்புத்தான். போராட்டத்தின் இறுதிக்கட்டத்தில் சத்தியாகிரக ஆசிரமச் செயலாளர் கேளப்பன் ஓர் அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கையை அக்காலத் தமிழ் இதழ்கள் சுதேசமித்திரன், நவசக்தி ஆகியவை வெளியிட்டுள்ளன.

அதில் 'நெருங்காமை ஒழிந்ததாகக் கருதக் கூடாது' என்றும் 'எனக்குத் தெரிந்தவற்றைக் கொண்டு நெருங்காமையைப் போக்கும் விஷயங்கள் கவர்ன்மெண்டின் ஆலோசனையில் இல்லை என்று நான் ஊகிக்கிறேன்' (ப.288) என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அறிக்கை தமிழில் வழங்கப்பட்டதா, ஆங்கிலத்திலிருந்து அவ்விதழ்கள் தமிழில் மொழிபெயர்த்தனவா என்பது தெளிவாகவில்லை. எனினும் unapproachable என்பதை அக்காலத்தில் 'நெருங்காமை' என்னும் சொல்லால் குறிப்பிட்டுள்ளன எனத் தெரிகிறது.

தீண்டாமை, அணுகாமை ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடு பற்றிய கவனம் வைக்கம் போராட்டத்தின் போது உருவாகியுள்ளது. அதற்கு இப்பிரச்சினையில் கோயிலும் சம்பந்தப்பட்டிருந்ததே


மகாராணி சேது லட்சுமிபாய்


மகாத்மா காந்தி


பெரியார்

காரணமாக இருக்கலாம். கோயிலைச் சுற்றியிருக்கும் சாலைகளில் நடக்க அனுமதித்தால் அடுத்த கோரிக்கை கோயில் நுழைவாகத்தான் இருக்கும் என்பது எதிர்ப்பாளர்களின் அச்சம்.

போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மகாராணியுடன் காந்தி நடத்திய பேச்சுவார்த்தையிலும் கோயிலே பிரதானமாக அமைகிறது. சாலையில் நடக்க அனுமதித்தால் அடுத்துக் கோயில் நுழைவுப் போராட்டம் நடத்தக் கூடாது என்று மகாராணி சொல்கிறார். அதற்கு ஒப்புக்கொள்ளலாம் என்பது காந்தியின் பார்வை. எனினும் பெரியாரின் கருத்தையும் காந்தி கேட்டார். கோயில் நுழைவுப் போராட்டத்திற்கு மக்களைத் தயார் செய்ய வேண்டும் என்பதால் இப்போதைக்கு அதை நடத்த முடியாது எனக் கருதிப் பெரியாரும் ஒப்புக்கொண்டார்.

கோயிலுக்குள் தலித் மக்கள் நுழைந்தால் அது தீட்டுப்பட்டுவிடும்; தீட்டுக் கழிப்புச் சடங்குகளும் நடத்தியாக வேண்டும். ஆனால் சாலையில் நடந்தால் என்ன செய்ய முடியும்? அதற்குத் தீட்டுக் கழிப்பு நடத்த முடியுமா? ஆகவே தீண்டாமை நிலவும் இடமாகக் கோயிலையும் அணுகாமை நிலவும் இடமாகச் சாலைகளையும் பெரியார் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் கருதியுள்ளனர்.

முதலில் சாலை நுழைவு, அடுத்துக் கோயில் நுழைவு என்பதே போராட்டக்காரர்களின் திட்டம். அதேசமயம் அணுகாமையைப் போக்கினால் அடுத்துத் தீண்டாமையை நீக்க வேண்டி வரும் என்பதுதான் எதிர்ப்பாளர்கள் தரப்பாக இருந்திருக்கிறது. ஆகவே, கோயிலைப் பாதுகாப்பதே அவர்களின் முக்கியமான நோக்கம்.

'தி மெட்ராஸ் மெயில்' என்னும் பத்திரிகை போராட்டத்திற்கு எதிராக எழுதியபோது 'அச்சாலைகள் எந்தப் பொதுஇடத்திற்கோ அலுவலகத்திற்கோ சந்தைக்கோ செல்லவில்லை. கோயில் சாலைகளை நோக்கியே செல்கின்றன' (ப.58) என்று குறிப்பிட்டது. இந்நூலின் அட்டையும் வைக்கத்தின் அடையாளமாகக் கோயிலின் சித்திரத்தையே காட்டுகிறது.

வைக்கம் போராட்டம் தீண்டாமையை ஒழித்துவிடாது என்பதில் பெரியாரும் சரி, அப்போராட்டத்தில் ஈடுபட்ட மற்றவர்களும் சரி, தெளிவாக உணர்ந்திருந்தனர். தீண்டாமை ஒழிப்பிற்கு அது உதவும் எனக் கருதியுள்ளனர். வைக்கத்தில் கோயிலைச் சுற்றியிருந்த நான்கு தெருக்களில் பல்வேறு அரசு அலுவலகங்கள், கடைகள் முதலியன இருந்தன. அவற்றைப் பயன்கொள்ள முடியாத நிலை தலித் மக்களுக்கு இருந்தது.

கோயிலுக்குள் நுழைவது முதலில் போராட்டக்காரர்களின் நோக்கமாக இருக்கவில்லை. சாலைகளில் நடக்கும் உரிமை கேட்டுத்தான் போராட்டம். எனினும் அணுகாமை, தீண்டாமை என்று பிரித்துப் பேசிய பேச்சுக்கள் பின்னர் தொடரவில்லை. பொதுவில் தீண்டாமைக்கு எதிரான போராட்டமாகவே வைக்கம் போராட்டமும் கருதப்பட்டது; பின்னர் நடந்த போராட்டங்களும் அடையாளப்படுத்தப்பட்டன. அணுகாமை, தீண்டாமை

எனப் பிரித்துப் பேச வேண்டிய தேவை இல்லாமல் போயிற்று எனக் கருதலாம்.

இந்தப் போராட்டத்தில் சத்தியாகிரகிகளாக எந்தெந்தத் தலைவர்கள் பங்கு கொண்டனர், போராட்டத்தை எவ்விதம் வடிவமைத்தனர், மேலெடுத்துச் சென்றனர் என்பவற்றை எல்லாம் இந்நூல் விரிவாகப் பேசியிருக்கிறது. பெரியாரின் பங்களிப்பைத் துல்லியப்படுத்திக் காட்டியிருக்கிறது. மக்களை ஈர்க்கும் வகையில் தம் வாதங்களை எடுத்து வைக்கும் அவரது தர்க்கரீதியான பேச்சாற்றலை அனைவரும் உணர்ந்திருந்தனர் என்பதையும் நூல் தெளிவுபடுத்துகிறது.

1 மே 1924 அன்று திருவனந்தபுரத்தில் பெரியார் பேசிய பேச்சு அவரது தர்க்கத்திற்கும் பேச்சாற்றலுக்கும் சான்றாகும். பேச்சின் தொடக்கத்தில் இந்து மதத்தை அங்கீகரித்தே பெரியார் பேசியுள்ளார். ‘இந்துக்களில் ஒரு பகுதியினரை நடத்தும் மோசமான முறை அவர்களை மற்ற மதங்களில் சேரத் தூண்டுகிறது. இந்த நிலைமை நீடிக்குமானால் இந்துக்கள் இல்லாது போய்விடுவர்’ (ப.593) என்பது அவர் வாதம்.

கிறித்தவர்களும் முஸ்லீம்களும் அந்தச் சாலைகளில் நடக்க அனுமதி இருக்கும்போது இந்துக்களில் ஒருபிரிவினர் தடுக்கப்படுவது சரியா என்னும் வாதத்திற்குப் பதிலாக ‘முகமதியர்களையும் கிறித்தவர்களையும் அச்சாலைகளில் நுழைய விடாமல் தடுத்துவிட்டால் உங்களுக்குத் திருப்தியா’ என அரசாங்கம் கேட்டது.

அதற்குப் பெரியார் தம் பேச்சில் ஒரு கதை மூலமாகச் சரியான பதிலடி கொடுத்தார். அளக்கும்போது படியைத் தலைகீழாக வைத்து அளக்கும்படி ஓர் அரசர் ஆணையிட்டார். அப்படி அளந்தால் அளவு குறைகிறது என மக்கள் புகார் சொன்னார்கள். உடனே அரசர் படியைப் பக்கவாட்டில் அளக்கும்படி ஆணையிட்டார். ஏற்கெனவே கிடைத்ததும் இப்போது இல்லாது போயிற்று. அதுபோல ஏற்கெனவே நடக்கும் உரிமை பெற்றுள்ள கிறித்தவர்களையும் முகமதியர்களையும் தடுப்பதாகச் சொல்லும் அரசாங்கத்தின் சமாதான முயற்சியைப் பெரியார் கேலி செய்துள்ளார்.

வருணாசிரம தருமத்துக்கு எதிரான பார்வை அப்போது பெரியாருக்கு உருவாகிக் கொண்டிருந்தது என்பதற்கும் இப்பேச்சு உதாரணம். ‘சில இந்துக்கள் சில குறிப்பிட்ட வேலையைச் செய்வதால் தீண்டத்தகாதவர் ஆகிவிடுவர் என்பது உண்மையா?’ என்று கேட்டுவிட்டு அதற்கு அவர் ஓர் உவமையைச் சொல்கிறார். ‘வலது கை சாப்பிடுவது போன்ற நோக்கங்களுக்காகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. உடம்பின் கழிவுகளைச் சுத்தப்படுத்துவது போன்ற குறிப்பிட்ட பணிகளுக்காக இடதுகை இருக்கிறது. ஒவ்வொரு கைக்கும் தனித் தந்தைதாய் உண்டா?’ என்று கேட்கிறார்.

இன்னும் பெரியார் வைத்த தர்க்கக் கேள்விகள் அப்போராட்டத்தைப் பரந்த வீச்சுடையதாக மாற்றியுள்ளதை இந்நூல் விரிவாகப் பேசியுள்ளது. சத்தியாகிரகிகளை, சத்தியாகிரக எதிரிகள் எவ்வாறு நடத்தினர் என்பதை அறியப் பல பதிவுகள் கிடைக்கின்றன.

நாகர்கோயிலைச் சேர்ந்த முத்துசாமி என்னும் தொண்டர் தண்டோராப் போட்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பு செய்து கொண்டிருந்தார். தண்டோராவைக் கிழித்து எறிந்து அவர் மேல் சாணத்தையும் கற்களையும் எறிந்து முரட்டுத்தனமாகத் தாக்கினர் (ப.43, 67).

போராட்டத்தில் பங்கேற்ற சிவசைலம் என்னும் தொண்டரை கல்லாலும் தடியாலும் அடித்தனர். போராட்டக்காரர்கள் மீது கல் வீசப்பட்டது. சாணமும் சுண்ணாம்பும் பூசப்பட்டன. தாடியைப் பிடித்திழுப்பது, மூக்கைப் பிடித்திழுப்பது போன்றவையும் நடந்தன.

ராமன் இளையாத்து என்னும் தொண்டரின் கண்ணைப் பலவந்தமாகத் திறந்து ஒருவர் சுண்ணாம்பை அப்பிவிட்டார். அதனால் அவரது கண் பார்வை பறி போயிற்று. போராட்டத்தை எதிர்த்துக் கத்தி வீசிக்கொண்டு ஊர்வலம் நடத்தப்பட்டது. இப்படிப் பல.

போராட்டத்தில் பங்கேற்ற தலைவர்களது பங்களிப்பு எத்தகையது என்பது பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் பொதுவெளியில் அப்போராட்டத்தில் பங்கேற்ற தொண்டர்கள் மீது நம் பார்வையைக் குவிக்கச் செய்கிறது இந்நூல். பெரும்பாலான தொண்டர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது. போராட்டத்தில் பங்கேற்க விரும்பி வரும் தொண்டர்களுக்கு எத்தகைய முக்கியத்துவம் இருந்தது, எவ்விதமான வரவேற்பு அளிக்கப்பட்டது என்பவற்றையும் அறிய முடிகிறது. அதேபோலப் போராட்டச் செலவுகளுக்குப் பணம் திரட்டப்பட்ட வழிமுறைகளைப் பற்றியும் விரிவான தகவல்கள் நூலில் உள்ளன.

பெரியாரின் பிற்கால நிலைப்பாடுகளுக்கு வைக்கம் போராட்ட அனுபவம் பெரிதும் பயன்பட்டிருக்கும் என்றே தோன்றுகிறது. இப்போராட்டத்தில் காந்தியின் நிலைப்பாடுகளோடு பெரியாருக்கு ஏற்பட்ட முரண்களும் முக்கியமானவை. கிறித்தவர்களும் முகமதியர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்கக் கூடாது என்னும் காந்தியின் கருத்தோடு பெரியார் உடன்படவில்லை.

போராட்டக்காரர்களுக்கு உணவளித்த சீக்கியர்களை வெளியேற்றும் காந்தியின் கருத்தோடும் பெரியார் ஒத்துப் போகவில்லை. ஆனால், காந்தியின் சத்தியாகிரக வழிமுறைகள் பற்றிய அனுபவ அறிவை இப்போராட்டத்தில் பெரியார் பெற்றார் என்றும் சொல்லலாம். பிற்காலத்தில் பெரியார் நடத்திய போராட்டங்கள் அனைத்தும் சத்தியாகிரக வழிமுறைகளைப் பின்பற்றியவையே. மேலும் அரசின் சட்டதிட்டங்களுக்கு எப்போதும் உட்பட்டே அவர் நடந்திருக்கிறார்.

இவ்வாறு பல நிலைகளில் வைக்கம் போராட்டத்தின் தாக்கம் பெரியாரின் பிற்காலச் செயல்பாடுகளில் இருந்திருக்கிறது. பெரியார் எழுத்துக்களையும் வரலாற்றையும் வைக்கம் போராட்ட நிகழ்வுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இது குறித்து இன்னும் விரிவாக ஆராய வாய்ப்பிருக்கிறது.

இந்நூல் வழியாகப் பெரியார் தொடர்பாகவும் அக்கால வரலாறுகள் தொடர்பாகவும் பல்வேறு செய்திகளைப் பெறலாம். சான்றுக்குச் சில:

அ) பெரியாருக்கு 'வைக்கம் வீரர்' எனப் பட்டப்பெயரிட்டு எழுதியவர் திரு.வி.க. என்பது உறுதிப்படுகிறது. இப்போராட்டத்தில் பெரியாரின் பங்களிப்பு குறித்துத் திரு.வி.க. நடத்திய 'நவசக்தி' இதழ் தொடர்ந்து செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டிருக்கிறது. பெரியாரின் ஆளுமையைத் திரு.வி.க. பலபடப் பாராட்டி எழுதியுள்ளார். 'நாயக்கர் கர்மவீரர்; வீண் பேச்சுக்காரர் அல்லர். ஆடம்பரத்தை வெறுப்பவர், எதையும் செய்கையில் காட்டும் ஆற்றல் பெற்ற பெரியார்' (ப.64) என்று 18 ஏப்ரல் 1924இல் 'நவசக்தி' இதழ்த் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது ஒரு சான்று.

ஆ) திருநெல்வேலி பிராமணர்கள் தங்கள் தெருவில் வேலை செய்வதற்குத் தீண்டாதாரை நியமிக்க எதிர்ப்பு தெரிவித்து நகராட்சித் தலைவருக்கு மனு அளித்த செய்தியை ஜஸ்டிஸ் பத்திரிகையை மேற்கோள் காட்டி இந்நூல் தெரிவித்துள்ளது.

இ) தீண்டத்தகாதவர்களைப் பள்ளியில் சேர்க்கக் கூடாது என்று கிளர்ச்சி நடந்ததாக ஒரு செய்தி பதிவாகியுள்ளது.

ஈ) கிறித்தவர்களும் முகமதியர்களும் வைக்கம் சாலைகளில் நடப்பதற்கு உரிமை இருந்தது. ஆனால் தலித்துகள் மதம் மாறினால் அவர்களுக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டது.



டி.கே.மாதவன்



கேளப்பன்



ஜார்ஜ் ஜோசப்

உ) சுவாமி சிரத்தானந்தர் அவரது வழியில் ஒரு முயற்சியில் மேற்கொண்டார். ஆரிய சமாஜத்தில் 21 தீயர் சாதி மக்களைச் சேர்த்து அவர்களுக்குப் பூணூல் அணிவித்தார். அவ்வாறு மாறிய ஒருவர் வீதியில் நடக்க அனுமதிக்கப்பட்டார். ஆனால் பிறகு அவர்களில் எவரும் வைக்கம் வீதியில் நடக்க அனுமதிக்கப்படவில்லை.

ஊ) வைக்கம் வீதிகளில் தலித் மக்களை அனுமதிக்கலாமா என்று கேட்டுக் கோயிலில் சுவாமி முன் பூக் கட்டி வைத்து உத்தரவு கேட்டார்கள். அனுமதிக்கலாம் என்று சொல்லிச் சுவாமி வரம் கொடுத்துவிட்டது. ஆனால் சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. சுவாமிக்குச் சக்தி குறைந்துவிட்டது என்று சொல்லி ஹோமம் செய்து சுவாமிக்குச் சக்தியை ஏற்றி மறுநாள் உத்தரவு கேட்டனர். மூன்று நாள் கேட்டபோதும் சுவாமி ‘அனுமதிக்கலாம்’ என்றே உத்தரவு கொடுத்தது. ஆனால் சுவாமியின் உத்தரவை சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. ‘சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டான்’ என்பது இதுதான் போலும்.

எ) வைக்கத்தில் திருவாங்கூர் அரசருக்கு எதிராகப் போராடச் சென்றார் பெரியார். ஆனால் அரசர் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. காரணம் அரசர் ஏற்கெனவே பெரியாருக்கு அறிமுகம் ஆனவர். ஈரோட்டுக்கு வரும்போது பெரியார் வீட்டில்தான் அரசர் தங்குவார். அரசரின் வரவேற்பைப் பெரியார் ஏற்கவில்லை.

இப்படி வெவ்வேறு சுவாரசியமான தகவல்கள் இந்நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன. இப்போராட்டத்தில் பெரியாரின் பங்களிப்பு இந்நூலால் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் வேறுவகை ஆய்வுகளுக்கும் இது திறப்பாக இருக்கிறது. குறிப்பாக காந்தியின் ஆளுமையும் செயல்பாடுகளும் இதன் வழி ஆராயப்பட வேண்டியது அவசியம்.

வைக்கம் பிராமணர்களோடு காந்தி நிகழ்த்திய உரையாடல் மிகவும் அற்புதமானது. தன் கொள்கையில் உறுதியுடன் நிற்பது, எதிரியின் கருத்துக்கள் வெளிப்பட எல்லாவித வாய்ப்பையும் வழங்குவது, எதிரியின் கருத்துக்களை அங்கீகரித்துக்கொண்டே அதன் தர்க்கக் குறைபாடுகளை எடுத்துக்காட்டுவது,



கே.பி.கேசவமேனன்

எதிரி எவ்வகையிலும் உரையாடலிலிருந்து துண்டித்துக்கொண்டு செல்ல இடம் கொடாமை, எல்லாவகையிலும் இறங்கி வந்து காரியம் சாதித்தல் எனப் பல கூறுகளை உடைய உரையாடல் அது.

அஹிம்சையிலும் சத்தியாகிரகத்திலும் காந்தி எத்தனை நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதோடு அவற்றை நடைமுறையிலும் பரிசீலித்தார் என்பதற்கும் இப்போராட்டத்தில் அவர் எடுத்த முடிவுகள் சான்றாகின்றன. காந்தியின் ஆளுமை, செயல்பாடு, சத்தியாகிரகத்திலும் அகிம்சையிலும் அவருக்கிருந்த ஈடுபாடு, அவற்றைப் பரிசோதித்துப் பார்ப்பதில் அவரது பொறுமை உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை புதிய கோணத்தில் பார்ப்பதற்கு இந்நூல் உதவும்.

வைக்கம் போராட்டம் பன்முகத்தன்மை கொண்டதாகும். காந்தி, பெரியார் தொடர்புடையது என்பதால் மட்டுமல்ல. அது கேரள மாநிலத்தில் நடைபெற்றதால் அம்மாநில உரிமைப் போராட்ட வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது. அப்போராட்டத்தில் பங்கேற்றோர் தமிழகத் தலைவர்கள், தொண்டர்கள் என்பதாலும் சென்னை மாகாணத்தில் நடைபெற்றது என்பதாலும் தென்னிந்திய வரலாற்றில் இடம்பெறும் போராட்டமாக விளங்குகிறது.

சத்தியாகிரகத்தைப் பரிசோதித்துப் பார்த்த வகையிலும் தீண்டாமைப் பிரச்சினை தொடர்பானது என்பதாலும் இந்தியா முழுமைக்குமான போராட்டம் என்றும் இதை அடையாளப்படுத்தலாம். ஆகவே காந்தி, பெரியார் எனச் சுருக்கிப் பார்க்காமல்


திரு.வி.க.

இப்போராட்டத்தின் பன்முகத்தன்மையை உணர்வதற்கு இந்நூல் காரணமாக அமைகிறது.

இந்நூல் எழுதப்பட்டுள்ள முறையும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வரலாற்று நூல் என்றாலே சோர்வு தரும் தகவல்களும் சலிப்பூட்டும் மொழியும் கொண்டிருக்கும் என்னும் எண்ணத்தை இது மாற்றுகிறது. போராட்டம் தொடங்கிய 30 மார்ச் 1924 முதல் முழுமையடைந்த 1 ஜனவரி 1926 வரைக்கும் நாட்குறிப்பு போலத் தொகுத்து எழுதப்பட்டுள்ளது.

அரசு ஆவணங்கள், அக்காலத் தமிழ், மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளின் பத்திரிகைச் செய்திகள், கட்டுரைகள், வைக்கம் போராட்டம் குறித்து மும்மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள நூல்கள், நூல் குறிப்புகள் ஆகியவற்றை ஒருசேரத் தொகுத்து இது எழுதப்பட்டுள்ளது.

நூலாசிரியரின் சில மதிப்பீடுகள் மறுபரிசீலனையைக் கோருகின்றன. திருவாங்கூர் மகாராஜா இறந்த பின் சேதுலட்சுமி பாய் மகாராணியாகப் பதவியேற்றார். பதவியேற்றதும் வைக்கம் சத்தியாகிரகக் கைதிகள் 19 பேர் உட்பட 56 கைதிகளை விடுவித்தார். சத்தியாகிரகத் தலைவர்களைச் சந்திக்க ஒப்புக்கொண்டார். காந்தியைச் சந்தித்தார். காந்தியிடம் 'இங்கே ஒரு மகாத்மா வசிக்கிறார்' என்று நாராயண குருவைப் பற்றிச் சொல்லி அவரைச் சந்திக்குமாறு கேட்டுக்கொண்டார்.

உயர்சாதியினருக்கு ஆதரவாகச் செயல்பட்ட திவானைப் பிரிட்டிஷ் அரசுப் பணிக்குத் திரும்ப அனுப்பிவிட்டார். மேலும் வைக்கம் போராட்டத்தை ஒருவகையில் முடிவுக்குக் கொண்டு வந்ததும் அவர்தான். ஆனால் 'முந்தைய மன்னருடன் ஒப்பிடுகையில் இம்மகாராணியின் வைக்கம் குறித்த பார்வை பரவாயில்லை என்பதற்கு மேல் ஒன்றுமில்லை' (ப.478) என்று நூலாசிரியர் மதிப்பிடுகிறார்.

'அரசை நடத்தும் முறையில் மேற்கத்திய முற்போக்கான கொள்கைகளுக்கு அனுசரணையாக நடந்து தன் அரசைக் காப்பாற்றிக்கொண்ட சாமர்த்தியமாகவே இச்செயல்களைப் பார்க்க முடிகிறது' (ப.478) என்றும் கூறுகிறார். பல்வேறு முன்னெடுப்புகளைச் செய்த மகாராணியாரை இவ்விதம் மதிப்பிடுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளைக் கொண்டே விரிவான கட்டுரைகளை எழுதலாம். போராளிகளைப் பற்றிய குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை விரிக்கப்பட்டு நூலாக எழுதும் தன்மை கொண்டவை. காந்தி வைதிகர் உரையாடல் பகுதி ஏற்கெனவே குறிப்பிட்டது போலக் காந்தியின் ஆளுமையை விளக்க அற்புதமான சான்றாதாரமாகும்.

பெரியார் தொடர்பான ஆவணங்கள் முக்கியமானவை. போராட்டக் காலத்தில் அவர் பேசியவையும் பின்னர் நினைவுகளாக அவர் பேசியவையும் ஒப்பிட்டுக் காணத்தக்கவை. தனக்குக் காந்தியோடும் இராஜாஜியோடும் நேர்ந்த முரண்களைப் பிற்காலத்துப் பேச்சுக்களில் அவர் குறிப்பிடும் முறைகளும் அதற்குரிய காரணங்களும் கவனத்திற்கு உரியவை.

பத்தாண்டுகளுக்கும் மேலான உழைப்பில் விளைந்திருக்கும் நூல். 'அசுர உழைப்பு' என்பதற்கு நிகழ்காலச் சான்றாகக் குறிப்பிட ஏற்ற நூல். 646 பக்கம் கொண்ட இந்நூலைக் காலச்சுவடு பதிப்பகம் விலையடக்கப் பதிப்பாக ரூ.325க்கு வெளியிட்டிருக்கிறது. பிழையற்றும் நேர்த்தியோடும் அச்சிடப்பட்டிருக்கிறது. ஏராளமான தரவுகளைத் தொகுத்து அவற்றை எவ்விதம் கொடுக்க வேண்டும் என்பதைத் தேர்ந்து உரிய பின்னிணைப்புகளுடன் எழுதப்பட்டுள்ள இந்நூல் வரலாற்றுச் சாதனையாகும்.



# சமத்துவத்துக்கான விவாதங்கள்



கோ. ரகுபதி

ஆர்ய சனாதன ஜாதி கட்டமைப்பிலான காலத்தில் அட்டவணை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகைமைகளில் இடம்பெற்றிருக்கும் ஜாதிகள் சிலவற்றுக்கு சைவ, வைணவக் கோயில்களில் அணுகுரிமை மறுக்கப்பட்டன. பொதுவாக, கோயில் நுழைவுப் போராட்டம் என்பது சமயவெளியில் சமத்துவம் சார்ந்தது என்று அறியப்பட்டாலும் அடிப்படையில் கோயில் நுழைவுப் போராட்டத்துக்குப் பொருளியல் கூறுகளும் உண்டு.

பிரிட்டிஷ் காலத்தில் உருவாக்கப்பட்ட பள்ளிக்கூடம், நீதிமன்றம், தபால் அலுவலகம் போன்ற நவீன பொதுவெளிகளும் போக்குவரத்துப் பாதைகளும் கடைநிறுவனங்களும் அக்ரஹாரம் அல்லது அதன் அருகாமை வழியே அமைக்கப்பட்டன. நகராட்சிகளின் உருவாக்கமும் 1865, 1871 ஆண்டுச் சட்டங்களும் தெரு அல்லது நெடுஞ்சாலையை நகராட்சி கையகப்படுத்தினால் அதைப் “பொது”த் தெரு என அறிவிக்கமுடியும் எனக் கூறின.

1884ஆம் ஆண்டுச் சட்டம், “நகராட்சிக்குட்பட்ட எந்தத் தெருவும் அல்லது நகராட்சியால் உருவாக்கப்படும் பிரிவு 163இன் கீழ் அறிவிக்கப்படும் தெருவும் பொதுத் தெரு” என வரையறுக்கிறது. இதன்படி, ஜாதி, மத, பாலின வேறுபாடின்றி அனைவருக்கும் இப்பொதுத் தெருவின் வழியாக நடந்துசெல்ல உரிமை உண்டு. அக்ரஹார தெருக்கள் நகராட்சிகளால் பராமரிக்கப்பட்டதால் அவைகளும் பொதுப் பாதைகளாயின.

ஆனால் “தீண்டத்தகாதோர்” எனக் கருதப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பிரிட்டிஷ் அரசின் காவலர், துணை நீதிபதி போன்ற உயர் பதவிகளில் பணியாற்றியோரும் ஏழை எளியோரும் அவ்வழியாக நடந்துசெல்லும் உரிமையை மறுத்தனர். இதற்கெதிரான போராட்டங்களும் அவ்வப்போது நடைபெற்றன.

இதைச் சட்ட உரிமையாக்க பித்தாபுரம் ராஜா, எம்.சி.ராஜா, சவுந்திரபாண்டியன் ஆகியோர் போராடியபோதிலும் இரட்டைமலை சீனிவாசன் 1924ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சென்னை மாகாண அவையில் அறிமுகம்செய்த மசோதா **(எம்.எல்.சி.டி, (22 ஆகஸ்ட் 1924, ப. 822)** அரசாணையாக அறிவிக்கப்பட்ட பின் அனைத்து பொதுவெளிகளை அணுகுவதற்கும் சமத்துவ உரிமையை நிலைநாட்டுவதற்குமான போராட்டங்கள் ஆங்காங்கே வெடித்தன. இப்போக்கில் உரிமைபெறுகின்ற போராட்டம் முகிழ்த்தது. கேரளத்தில் கல்பாத்தி, வைக்கம், தமிழகத்தில் கோயம்புத்தூர் சிங்காநல்லூர், திருநெல்வேலி சந்நியாசி போன்ற அக்ஹாரங்கள் தொடங்கி கோயில் நுழைவுப் போராட்டங்கள் வலுப்பெற்றன.

அனைத்துக் கோயில்களில் ஆதிதிராவிடருக்கும் ஜாதி திராவிடருக்கும் உரிமை மறுக்கப்பட்ட சிக்கலானது, ‘தீண்டாமையை ஒழித்தல்’ ‘அதைத் தக்கவைத்தல்’ ஆகிய முரண்பட்ட விவாவதத்தையும் மோதலையும்

விளைவித்தது. கோயில் நுழைவை ஆதரித்தும் எதிர்த்தும் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுதல், பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் நடத்துதல், தீர்மானங்கள் நிறைவேற்றுதல், துண்டறிக்கை வெளியிடுதல், சட்டம் உருவாக்குதல் அதைத் திரும்பப் பெறக் கோருதல், கோயிலுக்குள் நுழைதல், தீட்டைக் கழிக்க கோயிலைக் கழுவுதல் போன்ற வடிவங்களில் நிகழ்ந்தன. சமய சமத்துவ உரிமையை ஆதரித்தவர், எதிர்த்தவர் ஆகிய இரு தரப்புகளிலும் ஆரியரும் திராவிடரும் அடங்குவர்.

கோயில் நுழைவு உரிமையை ஆதரித்தவர்களிடமும் வேறுபாடுகள் இருந்ததை பாலசுப்பிரமணியம், "காந்தியும் அவர்களைச் சார்ந்தவர்களும் ஆதிதிராவிடர்களைக் கோவிலுக்குள் விடவேண்டும் என்ற மாத்திரத்தில் ஏனைய இந்துக்கள் எவ்வளவு தூரம் கோவிலுக்குள் செல்லலாமோ அவ்வளவு தூரம் இவர்களும் செல்லலாம் என்னும் கருத்தையே கொண்டவர் ஆவார்கள்.

ஆனால் இப்பிரச்சினை அவ்வளவு சுலபமானதாகக் காணப்படவில்லை. சாதி இந்துக்கள் என்று சொல்லப்பட்டு வருபவர்களும் கோவிலுக்குள் ஒருவாறு அனுமதிக்கப்பட்டு வருபவர்களுமே கோவிலுக்குள் எல்லா இடங்களிலும் செல்லுதற்கு இயலாது. ஒரு கூட்டத்தார் மட்டுமேதான் எல்லாவிடங்களிலும் அனுமதிக்கப்படுகின்றார்கள். ஆகையால் இப்போது ஆதிதிராவிடர்களைக் கோவிலுக்குள் விடுவதென்றால் எந்த வகுப்பாரோடு சேர்த்துவிடுவது? எவ்வளவு தூரம் விடுவது? என்னும் பிரச்சினை எழாமல் இருக்க முடியாது." கோவில் நுழைவு ஆதித்திராவிடருக்குக் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் கவலையில்லை என்றும் சுயமரியாதைக்கூட்டத்தார் ஒருபக்கமும், பொதுவாக ஆதிதிராவிடர்களை ஏனைய இந்துக்களைப்போல் எல்லா இடங்களிலும் கோவிலுக்குள் அனுமதிக்கவேண்டும் என்னும் சிலர் ஒருபுறமும், அவ்வாறு அனுமதித்தாலும் கோவில் வழக்கப்படி சிற்சில இடங்களுக்குமேல் சிற்சில வகுப்பாரை விடுதல்கூடாது என்றும் ஒருசாரார் மற்றொருபுறமும் இருக்க" என எழுதிய அவர், "கடைசியாக ஆதிதிராவிடர்களை கோவிலுக்குள் விடுதல் அறவே கூடாது என்று அரற்றும் ஒரு சார்பினரும் நம் நாட்டில் இருக்கின்றனர்" என்பதையும் குறிப்பிட்டார். **(கே.எம்.பாலசுப்பிரமணியம், கோயில் நுழைவால் தீண்டாமை ஒழியுமா? குடி அரசு, 23 அக்டோபர்1932, ப. 9).**

கோயில் நுழைவானது, தொடக்கத்தில் குறிப்பிட்டதுபோல், இது பக்திக்காக மட்டும் அல்லாமல் பொருளியல் தேவைக்காகவும் சமய சமத்துவ உரிமைக்காகவும் தீண்டாமை ஒழிப்பையும் இலக்காகக் கொண்டிருந்தன. கோயில் நுழைவு உரிமையை ஆதரித்த இரட்டைமலை சீனிவாசன் பள்ளிக்கொண்டையில் 1932 மே 17 அன்று நடைபெற்ற மாநாட்டில், "நமது சமூகத்திற்குக் கோயில் உரிமை வேண்டுவது அவசியமே. அந்தப் பொது ஸ்தானங்களிலும் உரிமை வேண்டுமென்பதற்காகவேயாகும். நம் மக்கள் உண்ணும் உணவும், உடையும், இடவசதியும் இல்லாமல் தவிக்கும்போது கோயில்களில் காசுகளைச் செலவழிப்பது பொருத்தமல்ல" எனப் பேசினார். **(குடிஅரசு, 29, மே 1932, ப. 12)**

1931 ஜூலை 04 அன்று நடைபெற்ற தஞ்சாவூர் மாவட்ட ஆதிதிராவிடர் மாநாட்டில், "இந்துக் கோவில்களில் ஆதிதிராவிடர்களைப் பிரவேசிக்க விடாதிருப்பது ஆதிதிராவிடர்களின் சுயமரியாதைக்கு விரோதமாகயிருப்பதால் கவர்ன்மெண்டார் அக்கோவில்களுக்குக் கொடுக்கும் மோகினித் தொகையை நிறுத்தி அத்தொகையை ஆதிதிராவிடர் மாணவர்களின் கல்வி, கைத்தொழிற்சாலை ஆகியவைகளின் அபிவிருத்திக்காகக் கொடுத்துதவ வேண்டுமென"த் தீர்மானம் நிறைவேற்றினர். **(குடிஅரசு, 1931 ஜூலை 19, ப. 19).** இவை, கோயில் நுழைவு என்பது "சமய சமத்துவ உரிமை" நிலைநாட்டும் நிலைப்பாடு ஆதிதிராவிடர்களிடம் இருந்ததைக் காட்டுகிறது.

நாத்திகர்களான சுயமரியாதை இயக்கத்தினர், "இக்கோவில் நுழைவு என்னும் பிரச்சினை சுயமரியாதைக்காரர்களைப் பொருத்தமட்டில் மிகவும் ஆசைப்படக் கூடியதாகவோ, ஆர்வத்துடன் வரவேற்கக் கூடியதாகவோ இருப்பதாகத் தெரியவில்லை" என்று நிலைப்பாட்டை எடுத்தபோதிலும், **(கே.எம்.பாலசுப்பிரமணியம், கோயில் நுழைவால் தீண்டாமை ஒழியுமா? ப.9.)** "பொதுமக்களின் பணத்திரளால் ஆக்கப்பட்ட கட்டடங்களாகிய இக்கோவில்களில் பொதுமக்கள் அனைவரும் எத்தகைய மறுப்பும் இடைஞ்சலும் இன்றிச் செல்வதற்கு வசதி இருத்தல் வேண்டும் என்னும் அளவில் நாம் இக்கேள்வியில் ஈடுபடவேண்டியிருக்கின்றது" என்ற நிலைப்பாட்டை எடுத்தனர். **(கே.எம்.பாலசுப்பிரமணியம், கோயில் நுழைவால் தீண்டாமை ஒழியுமா? ப. 9)**

மேலும், "கோவில் நுழைவினால் மட்டும் தீண்டாமை ஒழிந்துவிடுமா? ஒருக்காலும் ஒழியாது. ஆனால், இது ஒரு பெரிய ஆரம்பமாகும். அதோடு ஆதிதிராவிடர்கள் கோவிலுள் அனுமதிக்கப்பட்டால் அதனால் சாதிவித்தியாசத்தின் அஸ்திவாரம் பிடுங்கி எறியப்பட்டுவிடும். மதத்தின் பேரால் வழங்கும் சாதியாகிய மரத்தின் தீண்டாமையாகிய வேர் இந்து கோவிலுக்குள்தான் பதிந்து பல நூற்றாண்டுகளாய் கிடக்கின்றது. ஆகவே, இவ்வேரைக் களைந்து சாதிமரத்தை வெட்டவேண்டின் கோவிலுக்குள்தான் நுழைய வேண்டியிருக்கிறது. அவ்வாறு நுழைந்தவுடன், சாதி வித்தியாசத்தின் பக்கவேர்களாகிய சமூக வித்தியாசங்கள் வெகு சுலபமாய் எடுபட்டுவிடும்." என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் கோயில் நுழைவுப் போராட்டத்தை நிகழ்த்தினர். **(பாலசுப்பிரமணியம், கோயில் நுழைவால் தீண்டாமை ஒழியுமா?, ப. 9.)"**

ஆரிய ஸநாதநிகள், ஆலய நுழைவுக்கு எதிரான இயக்கங்களை தொடர்ந்து நடத்தினர். ஆலய நுழைவு சட்ட மசோதாவை விமர்சித்தல், அதைத் திரும்பப் பெறக் கோருதல், ஆலய நுழைவுகளைக் கண்டித்தல் போன்ற வடிவங்களில் அவற்றை நிகழ்த்தினர். ஆலய நுழைவை வலியுறுத்தியவர் என்ற முறையில் காந்தியின் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு தொடர்ந்து கட்டுரைகள் வெளியிட்டனர்.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் 22-04-1933 அன்று வானமாமலை திவ்ய க்ஷேத்திரத்தில் நடைபெற்ற மாநாட்டில், வரவேற்புக் கமிட்டி தலைவரும் ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தான வித்வானுமான என்.டி.சடகோபையங்கார், "ஆலயப் பிரவேசம் முதலிய சட்டங்கள் அமலுக்கு வந்தால், அர்ச்சகர்கள் கோவிலில் பூஜைசெய்யமாட்டார்கள். சேவார்த்திகளும் கோவிலுக்குவர மார்க்கமில்லாமல் போய்விடும்" என்று கூறினார்.

"தர்மசாஸ்திரத்தின்படி ராஜீய விஷயத்தைக்காட்டிலும் நமது ஸநாதன தர்மமே மேலானது. ராஜீய விஷயத்திலும் இத் தீண்டாமை விலக்குவதாலும், ஆலயப் பிரவேசத்தாலும் யாதொரு நன்மையும் கிடைக்காது" என்றார். **(திருநெல்வேலி ஜில்லா ஸநாதன தர்ம மஹாநாடு, சிவநேசன், 1933, ஜூன், ப. 409).**

"காந்திஜீ முதலியவர்கள் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் செய்யாவிடில், தாங்கள் உபவாசமிருந்து உயிரையும் மாய்த்துக்கொள்வோமென்பார்கள். ஆனால், தீண்டாதாரை ஆலயத்திற்குள் விட்டுவிட்டால் எத்தனை காலம் ஜீவித்திருப்பார்கள் என்று காந்திஜீயாலோ அல்லது அவரது சிஷ்யர்களாலோ உறுதி சொல்லமுடியுமா?" எனக் கூறி ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குள் சென்றால் அனைவரும் செத்துவிடுவர் எனக் கூறி அச்சுறுத்தினார். **(திருநெல்வேலி ஜில்லா ஸநாதன தர்ம மஹாநாடு, ப. 409).**

"கொலை புலையாதிய குலமுறையெனக் கொண்டு திரியும் இழி ஜனங்களுக்குத் திருக்கோவிற் பிரவேசம் கூடாதென்பதே செவ்விய முறையாகும்" என ஆதிதிராவிடர்களை அவமதித்தனர். **(சிவசூரியன், ஆலயப் பிரவேசம் அவசியமா? சிவநேசன், ஜனவரி,**



**இரட்டைமலை சீனிவாசன்**



**எம்.சி.ராஜா**



**சவுந்திரபாண்டியன்**




**1933, பக். 226 – 227.)** “இழிஜனங்களுக்குக் கோவிலைத் திறந்துவிட வேண்டுமாம். இன்றேல், பட்டினிகிடந்து உயிர்விடுவாராம். என்னே! விபரீதம்” எனக் காந்தியைச் சாடினார். **(சிவசூரியன், ஆலயப் பிரவேசம் அவசியமா? ப. 227).**

இங்கிலாந்தில் நடைபெற்ற துணை பாராளுமன்றக் குழுவில் கோயில் நுழைவுச் சட்டத்தின் மீதான தன் கருத்தைத் தெரிவிக்க ஸநாதநிகளின் தலைமைப் பிரதிநிதியாய்ச் சென்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆச்சார்யா அது குறித்த தன் நிலைப்பாட்டை வெளியிட்டார். “ஆங்கிலேயரல்லாத ஆச்சாரமான ஹிந்துக்களுக்கு காந்தியின் இடுப்புத் துணியைக் கண்டு அவர்மீது பயபக்தி இருந்தபோதிலும் இப்போது கோபம் ஏற்பட்டிருக்கிறது; அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்க மறுத்துள்ளனர். இதனால் பழிவாங்கும் நோக்கில் ஹிந்துக்களுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட வகுப்பார்களைத் தூண்டியுள்ளார்” எனக் கூறிய ஆச்சார்யா, “ஹிந்து மதத்தின்படி, “தற்காலத்து வாழ்க்கை முற்கால செயல்களினால் தீர்மானிக்கப்படுகிறது. கசாப்புக் கடைக்காரர், மாட்டுக்கறி தின்போர், செருப்பு தைப்போர், கள் குடிப்போர், சாராய வியாபாரிகள், மீனவர்கள் இவர்களைப் போன்றோர் பிறப்பிலும் வளர்ப்பிலும் அசுத்தமானோர் ஆவர். இவர்களுடைய அருகாமை தீட்டையும் ஒழுக்கமின்மையையும் ஏற்படுத்தும். இதனால் கோயில்களில் ஒடுக்கப்பட்ட வகுப்பார்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. மிகவும் நம்பிக்கைக்குரிய காந்தி இந்த உண்மைகளைக் கவனப்படுத்துவதில்லை. அவர், ஹிந்துக்களைப் பொல்லாதவர்கள்; கொடுங்கோலர்கள் எனக் கூறி அவர்கள் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்ட வகுப்பார்களை நசுக்குகின்றனர் என்று கூறியுள்ளார்.

இவ்வாறாக, ஹிந்துக்களுக்கு மத்தியில் அவர் வெறுப்பை விதைக்கிறார். இவ்வகையில் இவ்வகுப்பினர் ஹிந்து கோயிலுக்குள் செல்ல உரிமை கோருகிறார். ஸநாதந தர்ம அல்லது ஆச்சர ஹிந்து மதத்தின் மீது நம்பிக்கையை இழந்துவிட்ட பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் உள்ளிட்ட அமைப்புகள் காந்திக்கு ஆதரவு அளிக்கின்றன. இச்சட்ட மசோதாவின் நோக்கம் ஒடுக்கப்பட்ட வகுப்பார்களை முன்னேற்றுவது அல்ல. இது அவர்களை ஹிந்துக்களுக்கு எதிராகக் கலகம் செய்யத் தூண்டவும் இதனால் ஆச்சார ஹிந்துக்கள் அரசாங்கத்து எதிராகப் போராடத் தூண்டுவது ஆகும் எனக் குற்றம்சாட்டினார். (M.K. Acharya, Notes on Temple Entry Bill (Kumbakonam: The Central Press Syndicate Ltd, 1934).



கோயில் என்பது வெறும் வழிபாட்டுக்குரிய இடம் மட்டும் அல்ல; அது அதிகாரமும் சொத்தும் உடைய ஒரு அமைப்பு. “பூர்வீகர்கள் நமது மதத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மடாதிபதிகளுக்கு சொத்துக்களை ஏற்படுத்தி அவர்களைக் குருவெனவும் கொண்டாடினார்கள்” என ஆரியன் இதழ் குறிப்பிடுகிறது. **(இந்தியாவின் தற்கால நிலைமை, ஆரியன், டிசம்பர், 1906, ப. 155).** கோயில் நுழைவுச் சட்டம் இச்சொத்துக்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் என ஸநாதநிகள் விவாதித்தனர்.

என்.டி.சடகோபையங்கார், கோயில் என்பது பக்தியைக் கடந்து பொருள் தொடர்புடையது என்பதையும் பேசினார். கோயில் நுழைவு நிகழ்ந்தால், “கோவில்களின் நோக்கமும் பாதிக்கப்பட்டு அந்த நோக்கங்களை அனுசரித்த கட்டளைகள், மானியங்கள், பண்டுகள் முதலியன அந்தந்த தார்மிகர்களின் கொள்கைக்கு மாறாகப் புதுமனிதர்களின் கையில் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொடுக்கப்பட்டதாகிவிடும்.

பெரியோர்களின் மனதில் தீராப் புண்களையும் உண்டாக்கும். சத்தியாக்கிரகம் போன்ற கலகங்கள் ஆங்காங்கு ஆரம்பிக்கப்பட்டுவிடும். பணக்காரர்களின் சொத்துகளைப் பணமில்லாதவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுப்பது போலவே இச்சட்டங்கள் இருக்கின்றன” என்ற கருத்தை முன்வைத்தார். **(திருநெல்வேலி ஜில்லா ஸநாதன தர்ம மஹாநாடு, பக். 366 – 367).**

கோயில் நுழைவு உரிமை இயக்கம் தோன்றிய பின்புலமும் ஆதிதிராவிடர்கள் அப்போராட்டத்துக்கான முன்வைத்த காரணங்களையும் ஆரியர்கள் அதை எதிர்த்த காரணத்தையும் மேலே முன்வைத்திருக்கிறோம். பொது நிறுவனங்களை அணுகவும் சமய வெளியிலும் சமத்துவ உரிமையை நிலைநாட்டவும் ஆதிதிராவிடர்கள் கோயில் நுழைவை வலியுறுத்தினர். ஆரிய ஸநாதநிகள் இவற்றுக்கு எதிராக கடுமையான வன்மத்தை வெளிப்படுத்தினர்.

தீண்டாமையை ஒழித்தல் அதைப் பாதுகாத்தல், சமத்துவத்தை உருவாக்குதல், அச்சமத்துவத்தைத் தக்கவைத்தல் ஆகிய இரு எதிர்மறைகளும் கோயில் நுழைவுப் போராட்டத்தின் அடிப்படையான சிக்கல்களாகும். இதில், கோயில் சொத்துடைமை நிறுவனமாக இருப்பதாலும் அதனால் பயன்பெறும் ஸநாதநிகள் அதை இழக்கும் அபாயத்தையும் உணர்ந்தனர். ஆனால், இப்பொருளாதார பின்புலத்தை ஆதிதிராவிடர்கள் காணத்தவறினர். கோயில் நுழைவு போராட்டம் இன்றும் முற்றுப்பெறாத ஒன்றாகும்.


ആമചാടിതേവൻ
AMACHADI THEVAN

# டி.கே.மாதவனுடன் ஒரு தலித் போராட்ட நாயகன்



நிர்மால்யா

கேரளத்தில் நூறாண்டுக்கு முன்பு நாயும் பூனையும் நடமாடும் கோயில் வழிகளில் கீழ்ச்சாதிக்காரனுக்கு நடமாடும் சுதந்திரம் தடைசெய்யப்பட்டிருந்தது. அத்தகைய அநீதிக்கு எதிரான தியாகம் செறிந்த போராட்டமே வைக்கம் சத்தியாகிரகம். வைக்கம் போராட்டம் கேரளத்தின் தீண்டாமை எதிர்ப்புக் போராட்டங்களைத் தேசியத் தளத்திற்கு நகர்த்தியது. அடுத்தது, குருவாயூர் சத்தியாகிரகம். இவ்விரு போராட்டங்களின் தொடர்ச்சியாக கேரளத்தின் கோயில் நுழைவு அனுமதி ஆணை வெளியானது. இத்தகைய போராட்டங்கள் உருவெடுப்பதற்கான காரணங்களும் அவற்றிற்கான சமூகச் சூழல்களும் கவனிக்கத்தக்கவை.

இந்தியாவிலேயே தீண்டாமை சார்ந்த மூடநம்பிக்கைகள் கேரளத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தன. குறிப்பாக, சிற்றரசர்களின் ஆட்சி நடந்து வந்த திருவிதாங்கூர், கொச்சி ஆகிய இடங்களில் தீண்டாமைக் கொடுமைகள் மூர்க்கமாகப் பின்பற்றப்பட்டு வந்தன. பிரிட்டிஷாரின் நேரடி ஆட்சியில் இருந்த மலபாரில் ஒப்பீட்டளவில் இந்த அளவுக்குத் தீண்டாமை பின்பற்றப்படவில்லை.

கேரளத்தில் மட்டுமே தீண்டாமை என்பது தீண்டல்(மேல்சாதிக்காரனுக்கும் கீழ்ச்சாதிக்காரனுக்கும் இடையே நிர்ணயிக்கப்பட்ட தூரத்திற்குள் கீழ்ச்சாதிக்காரன் பிரவேசித்துவிட்டால் மேல்சாதிக்காரன் அசுத்தமாகி விடுவான் என்பது நம்பிக்கை. இதை தீண்டல் என்றார்கள்), தொடல் (கீழ்ச்சாதிக்காரன் தொடுவதன் மூலம் மேல்சாதிக்காரன் அசுத்தமாகி விடுவான் என்பது நம்பிக்கை. இதை தொடல் என்றார்கள்) என்கிற இருநிலைகளில் ஆதிக்கம் செலுத்தின. சாதிப் படிநிலைக்கேற்ப விலகி நிற்க வேண்டிய தூரத்தைத் 'தீண்டாப்பாடு' எனக் குறிப்பிட்டார்கள். இதில் திருவிதாங்கூரும் கொச்சியும் முன்னிலை வகித்தன.

தீண்டாமைக் கொடுமைகள் தலைவிரித்தாடிய திருவிதாங்கூரையும் கொச்சியையும் தர்ம இராஜ்ஜியம் என்றழைத்தார்கள். இப்பகுதிகளில் தீண்டாமைக் கொடுமைகள் உச்சத்திலிருந்த காலத்தில் தெற்கு திருவிதாங்கூரில் மறுமலர்ச்சியின் கிரணங்கள் தென்பட தொடங்கின. ரிங்கில் தொளபே என்கிற மதபோதகர் நாகர்கோயிலில் ஒரு மிஷனெரி பள்ளியைத் தொடங்கினார். தொடர்ந்து, சுவாதி திருநாள் மகாராஜா திருவனந்தபுரத்தில் ஆங்கிலக் கல்விக்கூடங்களை நிறுவினார். பிரிட்டிஷ் மத போதகர்கள் முக்கியமானதொரு செய்தியை மக்களிடம் பரப்பினார்கள். 'எல்லா மனிதர்களும் பிறப்பது கைமாற்றம் செய்ய இயலாத சில உரிமைகளுடன்தான். அதைப் பிறரது பாதங்களுக்கடியில் வைக்க வேண்டிய அவசியமில்லை' என்றனர். இவ்வாறு நவீனக் கல்வி திருவிதாங்கூரின் வடக்குப் பகுதிக்கும் பரவுகிறது.

இக்காலத்தில் ஆன்மீகத் தலைவர்களும் சமூகச் சீர்திருத்தவாதிகளும் களமிறங்குகிறார்கள். இவர்கள், இந்து மதத்தில் நின்றபடி தீண்டாமையை

எதிர்க்கவேண்டும். மதம் மாற வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தை முன்வைத்தார்கள். நாராயணகுரு அருவிப்புரத்தில் சிவன் பிரதிஷ்டையை நிறுவிய அதே காலகட்டத்தில் நவீன கல்வியைக் கற்ற ஆளுமைகள் சாதிக்கு எதிராகவும் தீண்டாமைக்கு எதிராகவும் போராட்டங்களை நடத்தினார்கள். அரசாங்கப் பணிகளில் நுழைவதற்கான போராட்டங்களைத் தொடங்கினார்கள். அதற்கான முதல் உதாரணமாக மலையாளி மெமோரியல் என்கிற 10,037 பேர் கையெழுத்திட்ட மிகப்பெரிய மனுவைக் குறிப்பிடலாம். இதனை திருவிதாங்கூரின் முதல் அரசியல் செயல்பாடு எனலாம். இந்நடவடிக்கை பாரிஸ்டர் ஜி.பி. பிள்ளையின் தலைமையில் நடந்தது. அதைத் தொடர்ந்து, டாக்டர் பல்ப்புவின் தலைமையில் ஈழவ மெமோரியல் நடந்தேறியது.

டாக்டர் பல்ப்புவின் பக்கபலத்தில் எஸ்.என்.டி.பி என்கிற அமைப்பு நிறுவப்படுகிறது. தொடர்ந்து எஸ்.என்.டி.பி அமைப்பிலிருந்து ஈழவ சமுதாயத்தின் பிரதிநிதிகளாக இருவர் திருவிதாங்கூர் ஸ்ரீமூலம் பிரஜா சபை(மக்கள்சபை)க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதன்மூலம் எஸ்.என்.டி.பி அரசியல் சார்ந்த, பேரம் பேசும் வலிமையைப் பெறுகிறது. ஆனால், அதுவொரு வெகுஜன அமைப்பாகத் திரளவில்லை. கவிஞர் குமாரன் ஆசான் பொதுச்செயலாளராக இருந்தார்.

கிட்டத்தட்ட அதே சமயத்தில்தான் நாயர் சர்வீஸ் சொசைட்டி உருவாகிறது. இவ்வேளையில் ஈழவச் சமுதாயத்தினரிடையே கருத்து மோதல்கள் எழுந்தன. சிலர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவத் தயாராகிறார்கள். ஆனால், இக்கருத்துக்களை நாராயணகுரு ஏற்றுக்கொள்ளவில்லை 'மதம் எதுவானாலும் மனிதன் நன்றாக இருந்தால் போதும்.' என்றார்.

இச்சமயத்தில் நாராயணகுருவின் சீடரான டி.கே.மாதவன் உயர்ந்து வருகிறார். ஆழப்புழா மாவட்டத்தின் கண்ணியர் குளங்கரை பகுதியில் அவரது குடும்ப வீடு அமைந்திருந்தது. இவர், ஈழவச் சமுதாயத்தில் பிரசித்தி பெற்ற ஆலும்மூட்டில் குடும்பத்தின் கேசவன் சாந்தார் என்பவரின் மகன் ஆவார். திருவிதாங்கூர் இராஜ்ஜியத்திலேயே முதல்முறையாக கார் வாங்கியவர் திருவிதாங்கூர் அரசர். இரண்டாவது காரை வாங்கியவர் ஆலுமூட்டில் சாந்தார். இத்தகைய பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர் டி.கே.மாதவன். அவரது மனைவியின் சகோதரர் கே.பி.கையாலக்கல் இன்னொரு சமூகச் சீர்திருத்தவாதி. இவர்கள் இருவரும் இணைந்து வலிமைவாய்ந்த அணியாக உருவானார்கள். இவ்வாறு டி.கே.மாதவன் எஸ்.என்.டி.பி அமைப்புக்குள் வருகிறார். மிகச் சிறந்த ஒருங்கிணைப்பாளர், சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர். இவர் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக தேசாபிமானி என்கிற பத்திரிகையையும் நடத்தி வந்தார். இவ்வாறு ஒரு பெரும்சலனம் அங்கு நிகழ்கிறது.

அன்று திருவிதாங்கூர் சமஸ்தானத்தைப் பொருத்தவரை காங்கிரஸின் நடவடிக்கைகள் குறிப்பிடும்படியாக இருக்கவில்லை. டி.கே.மாதவன் காங்கிரஸ் சார்பாளர். திருவிதாங்கூர் சிற்றரசர்களின் ஆளுகையில் இருந்து வந்தது. மலபார் பகுதியில் காங்கிரஸின் செல்வாக்கு மிகுந்திருந்தது. டி.கே.மாதவன் காங்கிரஸ் அமைப்பின் சக்தியையும் மகாத்மா காந்தியின் மகத்துவத்தையும் நன்கு புரிந்து வைத்திருந்தார். ஆகவே, மகாத்மா காந்தி மற்றும் காங்கிரஸின் துணையுடன் தீண்டாமை போராட்டத்தை நடத்த வேண்டுமென்று தீர்மானித்தார். 1923இல் காக்கிநாடாவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பங்கேற்றார்.

திருவிதாங்கூரின் சாதியம் சார்ந்த தீண்டாமைக் கொடுமைகளைக் குறித்து உரையாற்றினார். கே.பி.கேசவ மேனன் காங்கிரஸ் தலைவராக இருந்தார். அவர் மாத்ருபூமி பத்திரிகையின் நிறுவனர். கேசவமேனனும் கே.கேளப்பனும் அடங்கிய மலபாரைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் போராட்டத்திற்குத் தலைமையேற்க இசைந்தார்கள். அவர்களின் முன்னிலையில் 1923 மார்ச் 30ஆம் தேதி போராட்டம் தொடங்கியது. காங்கிரஸ், எஸ்.என்.டி.பி ஆகிய இயக்கங்களுக்கு இணையாக நாயர் சர்வீஸ் சொசைட்டியும் தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலில் நுழைய அனுமதிக்க வேண்டும் என்கிற வாதத்தை எழுப்பியது. மன்னத்து பத்மநாபன், சங்னாச்சேரி பரமேஸ்வரன் பிள்ளை, எம்.என்.நாயர் போன்றவர்கள் போராட்டத்திற்கு முன்னிலை வகித்தார்கள்.

வைக்கம் மகாதேவ கோயிலை ஒட்டிய சாலைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இச்சட்டத்தை முதன்முறையாக மீற மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். புலையச் சமுதாயத்தைச் சேர்ந்த குஞ்ஞப்பி. பாகுலேயன் என்கிற ஈழவர், கோவிந்தப் பணிக்கர் என்னும் நாயர். இந்த

மூவரும் தீண்டாமை அறிவிப்பு பலகையை கடந்து முன்னேறினார்கள். அப்போது அரசாங்கத்தின் காவலர்கள் அவர்களைத் தடுத்து கைது செய்தார்கள். தொடர்ந்து, கொந்தளிப்பான நிலைமை. டி.கே.மாதவனும் கே.பி.கேசவ மேனனும் சட்டத்தை மீறி கைதாகிறார்கள். ஆறு மாத சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. டி.கே.மாதவன் சிறை சென்றால் சத்தியாகிரகம் நீர்த்து விடுமென அரசாங்கம் கருதியது. ஆனால், அவர் சிறையிலிருக்கும் போதே போராட்டம் வலுத்தது. இதற்கு தேசியத் தளத்தில் பெரும் வரவேற்பு கிடைத்தது. மகாத்மா காந்தி போராட்டத்திற்கு ஆதரவு தந்தார். காங்கிரஸ் தொண்டர்கள் நாட்டின் நாற்புறங்களிலிருந்தும் வந்து சேர்ந்தார்கள். எஸ்.என்.டி.பியின் தொண்டர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டார்கள்.

ஒவ்வொரு வீட்டிலிருந்து பிடியரிசி வாங்கி இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்தினார்கள். பன்னிரண்டு அணா மூலதனத்தில் இப்போராட்டம் தொடங்கப்பட்டது என்று சி.கேசவன் தனது சுயசரிதையில் விரிவாகக் கூறுகிறார். குடும்பப் பெண்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார்கள். போலீஸ்காரர்களையும் மேல்சாதிக்காரர்களின் அடியாட்களையும் போராட்டக்காரர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இச்சூழலில் நாராயணகுரு கதராடையணிந்து சத்தியாகிரகப் பந்தலுக்கு வந்தார். குரு இந்நிகழ்ச்சியை முன்னிட்டுத் தனது வாழ்நாளில் ஒரேயொரு முறை மட்டுமே கதராடை அணிந்தார். போராட்டத்திற்கு உதவுவதற்காக பஞ்சாப்பிலிருந்து சீக்கியர்கள் வருகிறார்கள். உணவுக்கூடங்களை அமைக்கிறார்கள். ஈ.வெ.ரா. பெரியாரின் வருகை வலு சேர்க்கிறது. போராட்டம் தேசியத்தளத்தை எட்டுகிறது.

கேரளத் தாழ்த்தப்பட்டவர்களின் உரிமை மீட்புப் போராட்டங்களில் தலித்துக்களின் பங்கு அளப்பரியது. ஆனால், அவர்களின் அரும்பணிகள் வரலாற்றின் இருண்ட பக்கங்களாகவே புரட்டப்படாமல் கிடக்கின்றன. அவற்றை மீட்டெடுக்க எவ்வித முயற்சிகளும் முன்னெடுக்கப்படுவதில்லை. அதற்குப் பல உதாரணங்கள் உண்டு. மகாத்மா காந்தி நேரில் வந்து சந்தித்த கேரள தலித் போராளி அய்யன்காளியின் வாழ்வையும் போராட்டங்களையும் வாழ்க்கையும் அவரது பேரன் வெங்ஙானூர் சுரேந்திரன் தொகுத்தளித்தார். அவர் மூலம் வரலாற்றுடன் பயணித்த அந்த மாமனிதனின் அருந்தொண்டுகள் வெளிச்சத்தை எட்டின.

வைக்கம் கோயிலை ஒட்டிய தடைசெய்யப்பட்ட சாலையில் முதல்முதலாக பிரவேசித்து, வரலாற்றை மாற்றியமைத்த குஞ்ஞப்பி என்ற தலித் சமூகத் தொண்டரைப் பற்றிய எந்தப் பதிவும் கேரளச் சமூக வரலாற்றில் இடம் பெறவில்லை. வைக்கம் போராட்டத்தின்போது அடித்துத் தொங்கவிடப்பட்ட சோதியைப் பற்றியை எந்த வரலாற்றுப் பதிவும் இல்லை. இன்னொரு தலித் ஆளுமை ஆமசாடி தேவன். இவரது ஒரேயொரு புகைப்படம் மட்டும் தற்போது வைக்கம் அருங்காட்சியகத்தில் உள்ளது. கேரளத்தில் சுதந்திரப் போராட்டத்தையொட்டி நடைபெற்ற



காந்தி



நாராயண குரு



பெரியார்

வைக்கம் போராட்டத்திற்கு முன்னரே மேல்சாதி ஆதிக்கத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தவர் கண்ணன் தேவன் என்றழைக்கப்பட்ட ஆமசாடி தேவன்.

ஆலப்புழா தாலுகாவின் காயலில் அமைந்திருக்கும் பெரும்பளம் தீவில் ஆமசாடி தேவன் பிறந்தார். 1967 வரை வாழ்ந்த அவரின் பிறந்த தேதியைப் பற்றி தெளிவான சான்றுகள் இல்லை. (சமீபத்தில் புதுப்பிக்கபட்ட அவரது கல்லறையில் 1882 என்று பொறிக்கப்பட்டுள்ளது). பெரும்பளம் தீவிலிருந்து வேம்பநாட்டு காயல் வழியாக பதினைந்து நிமிடம் பயணம் செய்தால் எர்ணாகுளம் ஜில்லாவின் தென்மேற்கு மூலையிலுள்ள பூத்தோட்டா என்னுமிடத்தை அடையலாம். இன்னொரு சிறப்பம்சமும் பூத்தோட்டாவுக்கு உள்ளது. அது எர்ணாகுளம், கோட்டயம், ஆலப்புழா ஆகிய பகுதிகள் சந்திக்குமிடம் ஆகும். பெரும்பளம் ஊர்க்காரர்கள் வைக்கத்திற்கும் எர்ணாகுளத்திற்கும் பயணிப்பதற்கான முக்கிய மார்க்கமும் இதுதான். தேவனின் காலத்தில் சர்வீஸ் படகுகள் இல்லை. தோணிகளில்தான் சென்றுவர வேண்டும்.

கண்ணன், காளி ஆகியோர் தேவனின் பெற்றோர்கள். அவர்கள் பெரும்பளம் தீவிலுள்ள கண்ணேத்து என்ற நாயர் குடும்பத்தின் பணியாளர்களாக இருந்தார்கள். தேவனுக்கு நான்கு வயதான போது அவரது தாய் தந்தையர் வைசூரி நோய் பாதித்து மரணமடைந்தார்கள்.

கண்ணேத்து குடும்பவீட்டைச் சேர்ந்த அச்சுக்குட்டி தம்புராட்டி, தேவனை வளர்த்தார். அவ்வீட்டின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும்போது பனையோலையைத் தந்து அவர்களின் பின்னால் அமர வைத்து தேவனுக்கும் பாடம் கற்றுத் தந்தார். தீண்டாமையைப் பொருட்படுத்தாமல் தனது குழந்தைகளுடன் இவரையும் வளர்த்த அச்சுக்குட்டித் தம்புராட்டி தான் தேவனின் கண்கண்ட முதல் சமூகச் சீர்திருத்தவாதி. அவர் ஏற்றி வைத்த அறிவொளி பின்னாட்களில் தீண்டாமைக்கு எதிரான போராட்டப் பாதைக்கு தேவனுக்கு வழிகாட்டியாக விளங்கியது. எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்ட தேவன் சாதியச் சிந்தனைகளால் முடைநாற்றம் வீசும் சமூகத்திற்குள் இறங்கி நடந்தார். இக்காலத்தில், வாசிப்பு ஆர்வத்தால் ஏராளமான புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினார். அப்புத்தகங்கள் அநீதிகளுக்கெதிராகப் போராடுவதற்கான அறிவையும் உத்வேகத்தையும் தேவனுக்குள் நிறைத்தன.

பின்னர் ஆமசாடி தீவை அடைந்தார். அங்கு ஒரு குடிசையைக் கட்டி வசிக்கலானார். இக்காலத்தில் தேவனுக்குத் திருமணம் நடந்தது. மனைவியின் பெயர் காளி. ஒரு ஆண்குழந்தையும் மூன்று பெண்குழந்தைகளும் பிறந்தார்கள். அந்த இல்லற வாழ்க்கைத் தொடரவில்லை.

பூத்தோட்டா, பெரும்பளம் ஆகிய ஊர்களுக்கிடையே அமைந்துள்ள துருத்து என்று அழைக்கப்படும் ஆறேழு தீவுகளில் முக்கியமானது ஆமசாடி தீவு. ஒருகாலத்தில் இங்கு அனாதைப் பிணங்களை அடக்கம் செய்து வந்தார்கள். ஆமைகள் கரையேறி வருவதும் கரையிலிருந்து நீரில் குதிப்பதும் வழக்கமாக தென்படும் காட்சி. இக்காட்சித்தான் ஆமசாடி துருத்து என பெயர் நிலைத்ததற்கான காரணம்.

பூத்தோட்டா ஸ்ரீ நாராயண வல்லப கோயில் பிரதிஷ்டைக்குப் பிறகு நாராயணகுரு மீண்டுமொரு முறை இங்கு வருகை தந்தார். தூரத்தில் நின்றிருந்த தேவனை அருகில் அழைத்து 'நீ தேவன் அல்ல... தேவன்...' என்று ஆசி வழங்கினார். குருவின் அறிவுரைகள் மாற்றுச்சிந்தனைக்கான உறுதியை அவருக்கு வழங்கியது. வைக்கம் சத்தியாகிரகப் போராட்டத்துடன் இணைந்து புறப்பட்ட பேரணியில் டி.கே. மாதவனுடன் கைகோர்த்து, முன்வரிசையில் நின்று வழிநடத்திச் சென்றவர் ஆமசாடி தேவன்.

வெண்ணிற உடையணிந்த தேவனையும் தேவனின் நடவடிக்கைகளையும் கண்டு ஆத்திரமடைந்த மேல்சாதிக்காரர்களின் ஒரு பிரிவினர் அவரைப் பின்தொடர்ந்தார்கள். தேவன் அதைப் பொருட்படுத்தவில்லை. ஒருநாள் பூத்தோட்டா தோணித்துறையில் தோணி ஏறும் போது மறைத்து வைத்திருந்த சகதியை அவர் மீது வீசியெறிந்தார்கள். அதைக் கண்டு தேவன் அஞ்சவில்லை. பூச்சாண்டி காட்டி தேவனை அச்சுறுத்த இயலாதெனத் தெரிந்து கொண்ட மேல்சாதிக்காரர்கள் தேவனை அடக்க வேறு தந்திர நடவடிக்கைகளில் இறங்கினார்கள். ஏதோ சாதிவெறியனின் பெயரில் தேவன் மீது பொய்ப் புகார் கொடுக்கப்பட்டது.

போலீஸ்காரர்கள் தேவனைத் தேடி ஆமசாடி துருத்துக்கு வந்தார்கள். அவ்வருட பருவமழைச் சீற்றத்தின் காரணமாக குடிசையில் ஒழுகிய

மழைநீரில் அவர் பாதுகாத்து வைத்திருந்த அரிய புத்தகச் சேமிப்புகள் நனைந்தன. ஒரு கிழிந்த பாயில் ஊறிய புத்தகங்களைப் பரப்பி வைத்து வெயிலில் உலர்த்திக் கொண்டிருந்தார் தேவன். ஈரம் படிந்த சாணம் மெழுகிய திண்ணையில் ஒரு பாயை விரித்து போலீஸ்காரர்களை அமரச் சொன்னார். வாசிப்பு ஆர்வம் கொண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் முற்றத்தில் காயப் போட்டிருந்த நனைந்த புத்தகங்களைக் கவனித்தார்.

அக்காலத்தில் யாரும் கேட்டறியாத மதிப்பு வாய்ந்த புத்தகங்கள் ஒரு கீழ்ச்சாதிக்காரனின் வீட்டு முற்றத்தில் வெயிலில் உலர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு இன்ஸ்பெக்டர் மலைத்துப் போனார் என்பதே உண்மை.

“உங்கள் பேரில் ஒரு வழக்கு உள்ளது. அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கிறோம். புகாரில் தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றத்தை நிகழ்த்த உங்களால் இயலாதென மனதார நம்புகிறேன். நாங்கள் கிளம்புகிறோம். நான் விசாரணை செய்கிறேன்”, என்றார் இன்ஸ்பெக்டர். தேவன் அமைதியாக நின்றிருந்தார். புறப்பட்ட போலீஸ்காரர்களுடன் தோணித்துறை வரை பின்தொடர்ந்தார். தோணி கரையை விட்டு நகர்ந்தபோது இன்ஸ்பெக்டர் அவரைப் பார்த்துப் புன்னகைத்தார். தேவன் நிம்மதியடைந்தார். மேல்சாதிக்காரர்களின் சூழ்ச்சியையும் வஞ்சகச் செயல்களையும் காயலில் வீசியெறிந்து முன்னோக்கி நடந்தார் தேவன்.

ஸ்ரீ நாராயணகுரு, அய்யன்காளி, சகோதரன் அய்யப்பன் போன்ற மறுமலர்ச்சி நாயகர்களின் இடையறாத முயற்சிகளின் பயனாக மேல்சாதிக்காரர்களின் அகந்தை சரிந்து கொண்டிருந்த காலகட்டம். காங்கிரஸின் தீண்டாமைக்கெதிரான போராட்ட அறிக்கைகளின் அலையடிப்புகள் திருவிதாங்கூரை நோக்கித் தவழத் தொடங்கின. வைக்கம் சத்தியாகிரகத்திற்கான முன்னெடுப்புகள் ஆரம்பமாகிக் கொண்டிருந்தன. இவ்வேளையில் ஆமசாடி தேவனுக்கு டி.கே.மாதவனின் அறிமுகம் கிடைக்கிறது. அது வேறொரு போராட்ட ஆயத்ததிற்குத் திரி கொளுத்தியது.

ஒருநாள் பூத்தோட்டா கோயில் தீபாராதனைக்காகக் கைகூப்பி வணங்கிக் கொண்டிருந்து அம்பலவாசிகள் என்னும் மேல்சாதி வகுப்பினருக்கு நடுவிலூடே தேவனின் கையைப் பிடித்து கர்ப்பகிரகத்தின் எதிரில் நடந்து உள்ளே புகுந்தார் டி.கே. மாதவன். மெல்லிய இருட்டின் மறைப்பில் மற்றவர்களின் பார்வையில் சட்டென அடையாளம் காண இயலவில்லை.

கணநேரத்திற்குள்ளாக அனைத்தும் கலங்கிப் புரண்டன. “அசுத்தம் அசுத்தம்” என்று கதறியபடி அங்கிருந்தவர்கள் நாற்புறமும் சிதறி ஓடினார்கள். யாருக்கும் அஞ்சாமல் கோயிலுக்குள் நுழைந்த இவர்களை எதிர்க்க அங்கிருந்தவர்களுக்குத் தைரியம் வரவில்லை. கீழ்ச்சாதிக்காரர்களிடமிருந்து கிருஷ்ணனைப் பாதுகாக்க கிருஷ்ணனின் சிலையைப் பிடுங்கியெடுத்து ஓடினார்கள். ஒருவேளை, அன்றுவரை குறிக்கோளை எட்டாமல் இருந்த வைக்கம் சத்தியாகிரகத்தின் முன்னோட்டமாக இந்நிகழ்வைக் குறிப்பிடலாம்.



குமாரன் ஆசான்



கேசவ மேனன்



டாக்டர் பல்ப்பு


அய்யங்காளி


மன்னத்து பத்மநாபன்


சகோதரன் அய்யப்பன்

தாழ்த்தப்பட்டவர்களுக்கு பிரவேசம் தடைசெய்யப்பட்டிருந்த பூத்தோட்டா கோயிலுக்குள் அத்துமீறி நுழைந்து இறைவனை வணங்கிய இவரது தீண்டாமைக்கெதிரான போராட்டம் 'பூத்தோட்டா வழக்கு' அல்லது 'பூத்தோட்டா நிகழ்வு' என்று அழைக்கப்பட்டது. இப்போராட்டமே, வைக்கம் போராட்டத்தின் ஊற்று முகம். இந்த வழக்கின் கீழ் கைது செய்யப்பட்ட ஆமசாடி தேவன் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையை விட்டு வெளியே வந்த தேவன் நேராக வைக்கம் சத்தியாகிரகப் பந்தலை அடைகிறார்.

மேல்சாதிக்காரர்கள் அமைதியாக இருக்கவில்லை. டி.கே.மாதவனும் தேவனும் கைது செய்யப்பட்டுச் சிறைதண்டனை அனுபவித்தார்கள். மூடநம்பிக்கைகளின் சாலையில் பயணம் தடைப்பட்ட மேல்சாதிக்காரர்களின் தலையுச்சியில் தீயாய் படர்ந்தெறிவதற்கான ஆவேசத்துடன் அவர்கள் சிறையிலிருந்து விடுதலையானார்கள். வைக்கம் போராட்டத்தில் தேவன் இணைந்து கொண்டார். 1924 மார்ச் 30ஆம் தேதி தொடங்கிய வைக்கம் சத்தியாகிரகப் போராட்டத்தின் ஆரம்பம் தொட்டே தேவன் உயிர்ப்புடன் பங்கேற்றார்.

கே.பி. கேசவ மேனனுக்கு தேவன் மீது தனிப்பட்ட அக்கறை இருந்தது. எனவேதான் மகாத்மா காந்தியிடம் தேவனை அறிமுகப்படுத்தி வைத்தார்.

"மதுவருந்தக் கூடாது. அரிஜனங்களை மதுவிலிருந்து விடுவிக்க வேண்டும். தூய ஆடைகளை அணிய அவர்களுக்கு விழிப்பூட்ட வேண்டும். ஓலைகளாலான ஆபரணங்களைத் தவிர்க்க அறிவுறுத்த வேண்டும்." என்று தேவனை அருகில் அழைத்து அறிவுரை கூறினார் காந்தி. இது எளிய சம்பவம் அல்ல. ஆனால் தேவன் ஒரு தாழ்த்தப்பட்டவர் என்பதால் வரலாற்றாளர்கள் இச்சம்பவத்தை மறந்து போனார்கள்.

வைக்கத்தில் வைக்கப்பட்டிருந்த தீண்டாமை அறிவிப்புப்பலகையின் எல்லையைக் கடந்து பிரவேசித்த முதல் சத்தியாகிரகிகளான குஞ்ஞப்பியையும் பாகுலேயனையும் கோவிந்தப் பணிக்கரையும் கைது செய்த வேளையில் 'மகாத்மா காந்திக்கு ஜெய்' என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்த போராட்டக்காரர்களில் ஒருவராக தேவன் இருந்தார். வைக்கம் சத்தியாகிரக வேளையில் காசநோய் சிகிச்சைக்காக திருவனந்தபுரம் சென்ற டி.கே.மாதவனுக்கு கடிதங்கள் மூலமாகத் தகவல்களைப் பரிமாறிக் கொண்டிருந்தார் தேவன். இச்செய்தியை கோட்டுகோயிக்கல் வேலாயுதனுக்கு டி.கே.மாதவன் கொல்லத்திலிருந்து அனுப்பிய கடிதம் மூலம் அறிகிறோம். (மகாத்மா காந்தி பல்கலைக்கழகம் பதிப்பகப் பிரிவின் 'வைக்கம் சத்தியாகிரகச் சான்றுகள்' என்ற புத்தகம் பக்கம் 243.)

சத்யாகிரக வரலாற்றுடன் முக்கியத்துவம் வாய்ந்தது இண்டம் துருத்தி மனை. இம்மனையைச் சேர்ந்தவர் இண்டம் துருத்தி நீலகண்டன் நம்பூதிரிப்பாடு. வைக்கம் கோயிலின் முக்கிய நிருவாகி. போராட்டம் தொடர்பாகப் பேச்சு வார்த்தைக்கு வந்த மகாத்மா காந்தியைக் கூட வீட்டிற்குள் அனுமதிக்காமல் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பந்தலில் அமர வைத்தவர். மேல்சாதி ஆதிக்கத்தின்





குறியீடாக விளங்கிய அந்த நம்பூதிரி மனை தற்போது வைக்கம் தாலூகா கள் இறக்கும் தொழிலாளிகளின் ஒன்றிய அலுவலமாக உள்ளது என்பது வரலாற்று முரண்நகை. ஒருநாள் ஆமசாடி தேவன், ராமன் இளையது ஆகிய இருவரும் சத்தியாகிரகப் பந்தலிலிருந்து தாமதமாகத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். இண்டம் துருத்தி நம்பூதிரிப்பாடுவின் அடியாட்கள் சுண்ணாம்பும் காட்டாமணக்குப் பாலும் கலந்த கலவையைக் காய்ந்த தேங்காய்க்குலை நாரில் முக்கி கண்களில் தெளித்தார்கள். சுண்ணாம்புடன் காட்டாமணக்கின் பாலும் இருந்ததாக கேஸரி. பாலகிருஷ்ண பிள்ளை தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

வைக்கம் சத்தியாகிரகப் போராட்டத் தலைவர்களுடன் கைது செய்யப்பட்ட தேவனை கோட்டயம் கிளைச் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றார்கள். சிறையில் கடும் சித்திரவதைகளும் பார்வைக்குறைபாடும் தேவனின் உடல்நிலையைப் பாதித்தது.

மகாத்மா காந்தி தில்லியிருந்து தேவனின் கண்களைக் குணப்படுத்துவதற்காக ஹோமியோபதி மருந்தை அனுப்பித் தந்தார். பார்வையில் சிறிய மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும், மகாத்மா காந்தி இந்த ஏழையை மறந்து விடவில்லை என்கிற ஆறுதல் அதைக் காட்டிலும் தெளிவுடன் ஆமசாடி தேவனின் மனதில் ஒளிர்ந்தது.

இக்காலகட்டத்தில் தேவனின் மனைவியும் குழந்தைகளும் வைக்கம் ஆசிரமத்தில் வசித்து வந்தார்கள். சிறையிலிருந்து தேவன் ஆமசாடி தீவுக்குத் திரும்பினார். அங்கு அவரது சிறு குடிசையில் அஸ்திவாரம் மட்டுமே எஞ்சியிருந்தது. ஓலைகளும் தூண்களும் கம்புகளும் காயலில் தூக்கியெறியப்பட்டிருந்தன. தகவலறிந்த டி.கே.மாதவன் அவ்விடத்திற்கு வந்தார். அவரது முயற்சியின் விளைவாக ஒரு ஏக்கர் நிலம் தேவனுக்குப் பதிவு செய்து தரப்பட்டது.

தற்போது வரை இருபது சென்ட் நிலத்தில் அவரது கல்லறையும் பாழடைந்த வீடும் மட்டுமே எஞ்சியிருந்தன. கடந்த மாதம் ஆக்கிரமிப்பாளர்கள் அவரது கல்லறை மீது மண்ணைக் குவித்து மூடினார்கள். கடும் எதிர்ப்புக்கு மத்தியில் வைக்கம் சத்தியாகிரக நூற்றாண்டு விழா குழுவினர் அவ்விடத்தை மீட்டெடுத்தனர். ஆமசாடி தேவன் வசித்த வீட்டையும் அவரது கல்லறையையும் புதுப்பித்து 30.05.2023இல் நினைவிடமாக மாற்றியுள்ளார்கள். தற்போது ஆமசாடி தேவன் என்கிற வைக்கம் போராட்ட நாயகனின் வாழ்க்கை வரலாறு பாடநூல்களில் இடம் பெற வேண்டும் என்கிற குரல்கள் நூறாண்டுகளுக்குப் பின்பு ஒலிக்கத் தொடங்கியிருப்பது ஆரோக்கியமான நகர்வு. சமூக விடுதலைப் போராட்டங்களில் தம்மைத் தியாகம் செய்த ஆமசாடி தேவனைப் போன்ற தலித் நாயகர்கள் மீது வரலாற்று வெளிச்சம் படரும்போது, இந்திய சமூக வரலாறு புதிய திசைகளை நோக்கி விரியும் என்பது திண்ணம்.

**நிர்மால்யா: முப்பது மலையாளப் படைப்புக்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் எழுதிய மகாத்மா அய்யன்காளி' என்னும் வாழ்க்கை வரலாற்று நூல் பெரும் கவனத்தைப் பெற்றது. 2010இல் மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றவர்.**



# வைக்கம் வீரர் மட்டுமல்ல... கேரள வீரர்!



ப.திருமாவேலன்

**கே**ரளச் சாதி வேறுபாட்டை நேரடியாகத் தானே உணர்ந்தவர் தந்தை பெரியார். அது, அவர் சாதாரண 'இராமசாமியாக' இருக்கும் போதே!

அரசியலுக்கு எல்லாம் வருவதற்கு முன்னால், வியாபாரியாக மொத்தக் குத்தகை மண்டி நடத்தி வந்த பெரியார் அவர்கள் மலபாருக்கு வருகிறார். அப்போது அங்குள்ள குளத்தில் இறங்கி குளிப்பதற்கோ – குடிப்பதற்கோ தண்ணீரைத் தொடுகிறார். குளத்தில் இறங்கி தண்ணீரைத் தொட்ட காரணத்துக்காக குளம் தீட்டாகிவிட்டது என்றும், அதற்குப் புண்ணியாகவசனம் செய்ய வேண்டும் என்றும், அவ்வூர்க்காரர்களால் கூறப்பட்டு அதற்காக பத்து அணா தண்டனை கொடுத்து வெளியேறினார். **(விடுதலை, 04.01.1955, இவர் தான் பெரியார் 11, போராட்டங்கள், பக்கம் 10, புலவர் மா.நன்னன்)**

எனவே, கேரளா தீண்டாமையை அனுபவப் பூர்வமாக அறிந்தவர் பெரியார். அவரது அண்ணன் ஈ.வெ.கி.சம்பத் அவர்கள் ஒரு அலுவல் காரணமாக வர்க்கலைக்கு வந்தபோது அவர் தனது ஜாதி அடையாளத்தைச் சொல்லி விட்டுத் தான் செல்ல வேண்டியதாக இருந்தது என்றும் மா.நன்னன் அவர்கள் எழுதுகிறார்கள்.

1924ஆம் ஆண்டு வைக்கம் போராட்டத்துக்கு வந்த பெரியார், ‘உங்கள் ஊரோடு இருபது ஆண்டுகளாகப் பழக்கம்’ என்று சொல்வது இதனால் தான். சொந்த ஊரைப் போலவே தங்கியதற்கும் இதுதான் காரணமாக இருந்திருக்க முடியும்.

வைக்கம் போராட்ட (1924–1925) காலத்தில் 114 நாட்கள் பெரியார் அங்கு இருந்திருக்கிறார் என்று சொல்கிறார் பழ.அதியமான். காந்தி வரும் போதும் மார்ச் 12,1925 இருந்துள்ளார் பெரியார். அனைத்து சாலைகளும் திறந்து விடப்பட்டதால், போராட்டங்களை நிறுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டு பின்னர் வெற்றிவிழா பொதுக்கூட்டத்தில் பங்கெடுத்தார்.

1933ஆம் ஆண்டு கொச்சியில் நடந்த தொழிலாளர் மாநாட்டில் பெரியார் பங்கெடுத்தார். அப்போது பெரியாருக்கு முன் பேசிய சிலர், வைக்கம் போராட்டத்தின் வெற்றிக்கு பெரியார் தான் காரணம் என்று பேசினார்கள். இறுதியாகப் பேசிய பெரியார் சொன்னார்:

“என்னைப் பற்றிப் பேசிய சிலர் வைக்கம் சத்தியாகிரகத்தைப் பற்றி பிரஸ்தாபித்து அதை நடக்கவித்ததும், அது வெற்றியாய் முடிவு பெறக் காரணமாய் இருந்ததும் நானேயாவேன் என்று பேசினார்கள். அதையும் ஒப்புக் கொள்ள முடியாமைக்கு நான் வருந்துகிறேன். வைக்கம் சத்தியாகிரகத்தில் பெயரளவுக்கு என் பெயர் அடிபட்டாலும், அதன் உற்சாகமான நடப்புக்கும், வெற்றிக்கும் வாலிப தோழர்களுடைய வீரம் பொருந்திய தியாகமும், சகிப்புத்


நாராயண குரு


மகாத்மா காந்தி


வணிகராக பெரியார்

தன்மையும் கட்டுப்பாடுமே காரணமாகுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்'' **(குடிஅரசு 01.10.1933)** என்று பேசினார் பெரியார். அத்தகைய கேரளத் தோழர்கள் பலரையும் நேரடியாக அறிந்தவர் பெரியார்.

வர்த்தகராக இருந்த காலத்தில் இருந்து கேரளவுடன் நெருக்கமான தொடர்பில் இருந்தவர் பெரியார். வைக்கம் போராட்டத்தின் மூலமாக அரசியல், சமூகவியல் நிகழ்வுகளிலும் பங்கெடுத்தார். இதனை அவரே பாலக்காட்டில் நடந்த கூட்டத்தில் விவரித்திருக்கிறார்.

"இங்கு கூடியிருக்கும் உங்களில் பெரும்பாலோர் எனக்கு பழைய நண்பர்களாகவே காணப்படுகிறீர்கள். வியாபார முறையில் இந்த ஊர் சுமார் 30 வருஷத்திய பழக்கமும் அதிகமான பரஸ்பர விஸ்வாசமும் உள்ள ஊராகும். நான் வியாபாரம் நிறுத்திய இந்த 10 வருஷ காலத்திற்குள்ளும் இந்த ஊருக்குப் பல தடவை வந்து பல விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கின்றேன். ஒத்துழையாமை பற்றியும், தீண்டாமை விலக்கு விஷயத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களை தெருவில் நடக்க விட வேண்டும் என்பது பற்றியும் இதே இடத்தில் பல தடவை பேசியிருப்பது உங்களுக்கு ஞாபகமிருக்கும்.

சுமார் இரண்டு வருஷத்திற்குள்ளாக இந்த ஊரில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. கல்பாத்தியில் பிராமணர்கள் குடி இருக்கும் வீதிகளில் ஈழவர்கள், தீயர்கள் என்று சொல்லப்பட்ட சகோதரர்கள் நடக்க பாத்தியம் ஏற்பட்டிருப்பதும், கடைவீதியில் செர்மாக்கள் என்னும் மக்கள் நடக்க விடப்பட்டிருப்பதும் ஒரு பெரிய மாறுதல் என்று சொல்லக்கூடுமானாலும் இன்னமும் அநேகக் காரியங்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன...'' **(குடிஅரசு 19.05.1929)** என்று 09.05.1929 அன்று பாலக்காட்டில் நடந்த சுயமரியாதைப் பொதுக்கூட்டத்தில் பேசி இருக்கிறார் பெரியார்.

### கேரளாவில் பெரியார்:

வைக்கம் போராட்ட காலத்தில் 114 நாட்கள் கேரளாவில் இருந்த பெரியார், திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்கு உட்பட்ட சுசீந்திரம் சத்தியாகிரகத்தில் (20.1.1926) பங்கெடுத்தார்.

★ 1926ஆம் ஆண்டு பிப்ரவரி 15 பாலக்காடு பெரிய கடை வீதி கண்ணகை அம்மன் கோவிலுக்கு எதிரே விஸ்வ பாரதி வாசக சாலையில் 'தற்கால நிலைமை' என்ற தலைப்பில் பேசினார். அதே ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் நாள் ஆலப்புழாவில் நடந்த திருவனந்தபுரம் தொழிலாளர் 3ஆவது மாநாட்டில் கலந்து கொண்டார். எர்ணாகுளம் கடைவீதியில் கதர் குறித்து பேசினார். பிராட்வேயில் கதர்சாலையைத் திறந்து வைத்தார்.

★ 1929ஆம் ஆண்டு மே மாதம் 6,7,8, ஆகிய நாட்களில் நடந்த எஸ்.என்.டி.பி.யோகத்தின் 26ஆவது ஆண்டு விழாவில் பங்கெடுத்து பேசினார். 8ஆம் தேதி ஈழவர் சமாஜம்

கூட்டத்தில் பேசினார். பாலக்காட்டில் 9ஆம் தேதி பேசினார். செப்டம்பர் 15 அன்று அகில திருவிதாங்கூர் இளைஞர் ரிவோல்ட் முதல் மாநாடு வட திருவிதாங்கூரில் நடந்தது. அதில் உரையாற்றினார். அதே ஆண்டு நவம்பரில் அகில திருவிதாங்கூர் பிராமணரல்லாதார் முதன் மாநாடு நாகர்கோவிலில் நடந்தது. அதில் பங்கெடுத்து பேசினார்.

★ 1930 மார்ச் 16 அன்று தலைச்சேரியில் நடந்த தீயர், நாடார், பில்லவர் மாநாட்டுக்கு தலைமை வகித்தார். அப்போது கே.கிருஷ்ணன் வீட்டில் விருந்து தரப்பட்டது. அதே ஆண்டு மே 31 அன்று கள்ளிக்கோட்டையில் ஷாஜஹான் அரங்கில் எஸ்.என்.டி.பி.யோகம் அமைப்பின் சார்பில் நடந்த தீயர் மாநாட்டில் பங்கெடுத்து உரையாற்றினார். ஜூன் 1 அன்று கண்ணூத் செவ்வாய்ப்பாக்கத்தில் தரும சமாஜத்தின் எட்டாவது ஆண்டு விழா – புத்ஹர் விழாவுக்கு தலைமை வகித்து தொடக்கவுரையாற்றினார். செப்டம்பர் 7ஆம் நாள் சேர்த்தலையில் நடந்த கேரள சீர்திருத்த மாநாட்டுக்கு தலைமை வகித்து உரையாற்றினார்.

★ 1933 பிப்ரவரி 11 அன்று மூத்த குன்னத்தில் பரூர் காஸ்மாபாலிட்டன் புரோகிரசிவ் சங்கத்தார் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். மாநாட்டுத் தலைமை வகித்தவர் கே.கேளப்பன். எம்.கே.இராமனும் கலந்து கொண்டார். 12ஆம் தேதி மாநாட்டுக்கு பெரியார் தலைமை வகித்தார்.

அக்டோபர் 5 அன்று கொச்சியை அடுத்த செராய் கொச்சி வைப்பின்னில் ஆதிதிராவிடத் தொழிலாளர் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார் பெரியார். 6ஆம் தேதி கொச்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசினார். 9ஆம் தேதி சேர்த்தலை பொதுக்கூட்டத்தில் பேசினார். 10 அன்று காலையில் சேர்த்தலையில் கே.சீ.குட்டன் – கோமதி ஆகியோரின் திருமணத்தை நடத்தி வைத்தார். அன்றைய தினம் ஆலப்புழாவில் நடந்த திருவிதாங்கூர் சமஸ்தான தொழிலாளர் 9ஆவது மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

★ 1936 ஏப்ரல் மாதம் 19ஆம் நாள் எர்ணாகுளத்தில் தீயர் வாலிபர் சமாஜங்கள் சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்தார். கொச்சி ராஜ்ய தீயர் வாலிபர் சமாஜங்கள் சார்பாக ஒச்சன் துருத்தியில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு 20ஆம் தேதி பேசினார். 21ஆம் தேதி சேந்தமங்கலம் கூட்டத்தில் பேசினார். மறுநாள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த திருச்சூர் கூட்டம் நடைபெறவில்லை.

மே மாதம் 23ஆம் நாள் கொச்சி மட்டாஞ்சேரி கேவன் அரங்கில் நடந்த அனைத்து மத மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார். மறுநாள் கொச்சியில் நடந்த தீயர் மகாஜன மாநாடு, பெண்கள் மாநாட்டில் பங்கெடுத்து உரையாற்றினார். இப்படி தொடர்ச்சியாக கேரளாவுக்கு வந்து சென்றிருக்கிறார் பெரியார். கேட்டுத் தெரிந்து கொண்டவர் மட்டுமல்ல, நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டவர் அவர்.

மலையாளச் சம்பிரதாயம், மலையாளக் குடிவார மசோதா, திருவிதாங்கூர் பிரகடனம், பத்மநாப சுவாமி ராஜ்யம், கேரளத்தில் சுயமரியாதை இயக்கம், சுதேச சமஸ்தானங்களும் வகுப்புவாதமும், ஈழவ சமுதாயமும் இந்து மதமும் என்ற தலைப்புகளில் தனது ஏடுகளில் தலையங்கம், கட்டுரைகள் தீட்டி வந்துள்ளார் பெரியார்.

“இந்த தீண்டப்படக்கூடாத மக்கள் என்பவர்களில் இப்போது சுயமரியாதை உணர்ச்சி பெற்று சகலவித கட்டுப்பாடுகளையும் உடைத்தெறியத் துணிந்து முன்னணியில் நிற்பவர்கள், ஈழவ சமூகத்தார் என்று சொல்லப்படும் வகுப்பார்களேயாவார்கள். இவர்களின் எண்ணிக்கை அந்த இரண்டு சமஸ்தானங்களிலும் மொத்தம் சுமார் 15 இலட்சம் ஆகும். பிரிட்டிஷின் தீயர் சமுகம் என்னும் ஈழவர்களையும் சேர்த்தால் 25 இலட்சம் ஆகும்” என்று 1936ஆம் ஆண்டே பாராட்டி எழுதியவர் தந்தை பெரியார் அவர்கள்.

“நாம் பத்து பதினைந்து ஆண்டு காலமாக எதைச் சொல்லி வந்தோமோ அது ஈழவர்கள் மத்தியிலும் சொல்லப்படுகிறது என்றும், இதைப் பார்க்கும்போது ஆனந்தக் கூத்தாடாமல் இருக்க முடியவில்லை என்றும் எழுதியவர் பெரியார். இதன் தொடர்ச்சியாக திருவிதாங்கூர் தமிழர்கள் தங்கள் பகுதியை தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று போராட்டம் தொடங்கியபோது முழு ஆதரவைத் தெரிவித்தார் **(16.04.1949 குடிஅரசு)** தந்தை பெரியார். இக்காலக்கட்டத்தில் கேரள ஆளுமைகள் பலருடனும் அவருக்கு நேரடியான தொடர்பும், அறிமுகமும், நட்பும் இருந்தது.



டி.கே.மாதவன்



கே.பி.கேசவமேனன்



கேளப்பன்

## திரு. நாராயணகுரு (1856-1928):

‘மனிதனுக்கு ஒரு சாதியும், ஒரு மதமும், ஒரு தெய்வமும், ஒரு கர்ப்பப்பையும் ஓர் உருவமும் மட்டுமே உள்ளன. இவற்றில் எந்த வேறுபாடும் இல்லை’ என்ற கேரளச் சீர்திருத்த இயக்கத்தின் மகத்தான குருவே, நாராயணகுரு. வைக்கம் போராட்டத்தின் பேச்சுவார்த்தைக்காக வந்த அண்ணல் காந்தி, நாராயணகுருவைச் சந்தித்தார். அப்போது பெரியாரும் உடனிருந்தார். 1925 மார்ச் 12 இந்த சந்திப்பு நிகழ்ந்தது.

வைக்கம் தொடர்பான தனது உரைகள், கட்டுரைகளில் நாராயணகுரு குறித்து பதிவு செய்துள்ளார் பெரியார். ‘கேரள நாட்டு ஈழவ சமூகங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவானதான சமுதாய ஸ்தாபனம் ஒன்று உண்டு. அதன் பெயர் ஸ்ரீ நாராயணகுரு தர்ம பரிபாலன யோகம் என்று சொல்லப்படும். இது அவர்களது சீர்திருத்தத் தலைவரான ஸ்ரீ நாராயணகுரு சுவாமி பெயரால் ஏற்பட்டதாகும்’ என்றும் அவர் குறித்து பெரியார் பேசியிருக்கிறார். ‘சுவாமி’ என்ற அடைமொழியோடும் அவரை அழைத்துள்ளார். ஸ்ரீ நாராயணகுரு தர்ம பரிபாலன யோகம் நடத்திய விழாக்களில் பெரியார் கலந்து கொண்டுள்ளார்.

## டி.கே.மாதவன் (1886-1930):

வைக்கம் போராட்டம் குறித்து எப்போது பேசினாலும், எழுதினாலும் டி.கே.மாதவன் பெயரை மறக்காமல் குறிப்பிடுவார் தந்தை பெரியார். “வைக்கம் சத்தியாகிரகம் ஆரம்பிக்கப்பட்டதானது தோழர்கள் டி.கே.மாதவன், கே.அய்யப்பன் முதலிய ஈழவ சமூக சீர்திருத்தத் தலைவர்களால் தொடங்கப்பட்டதாகும்” என்று தான் குறிப்பிடுவார் பெரியார்.

1924 வைக்கம் போராட்டக் காலத்தில் மிக அதிக நட்புடன் இருந்தவர் டி.கே.மாதவன் அவர்கள். இவர் சிறை வைக்கப்பட்ட பிறகே, வைக்கத்துக்கு போராட்டம் நடத்த பெரியார் வருகிறார். 29.11.1925 வைக்கம் வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் டி.கே.மாதவனுடன் பெரியாரும் பங்கெடுத்தார். கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டுக்குச் சென்ற டி.கே.மாதவன், அந்த மாநாட்டில் சுசீந்திரம் சத்தியாகிரகம் பற்றி பேசியதாக **(குடி அரசு 14.02.1926)** செய்தி வெளியிட்டார் பெரியார்.

20.06.1926 அன்று ஆலப்புழையில் நடந்த திருவிதாங்கூர் தொழிலாளர் மாநாட்டுக்கு பெரியார் தலைமை வகித்தார். அப்போது அவரும், டி.கே.மாதவன், எஸ்.கே.நாயர், கொச்சி சட்டமன்ற உறுப்பினர் எ.பி.சேலம் ஆகியோரும் மோட்டார் வாகனத்தில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டுள்ளனர். தந்தை பெரியார், சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிச் செயல்பட்டதை டி.கே.மாதவன் பாராட்டி எழுதி இருக்கிறார்.

“தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் ஸ்ரீமான் ஈ.வி.ராமசாமி நாயக்கர் தலைமையிலான சுயமரியாதை இயக்கத்தின் செயல்பாட்டாளர்களும்

கோவிலுக்குள் அனைவரையும் அழைத்துச் செல்ல முயற்சிக்கின்றனர்...'' என்று வைக்கம் போராட்ட விளைவுகளை டி.கே.மாதவன் எழுதி இருக்கிறார். **(வைக்கம் மலர் 1927, மலையாளம், தொகுப்பாசிரியர் கே.பி.கேசவமேனன்).**

டி.கே.மாதவன் அவர்கள் 1930ஆம் ஆண்டு மறைந்தார். அவருக்கு அப்போதே இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியவர் தந்தை பெரியார் அவர்கள்.10.05.1930 அன்று ஈரோட்டில் சுயமரியாதை இயக்கத்தின் இரண்டாவது மாநாடு நடந்தது. அதில் இளைஞர் மாநாடு தனியாக நடத்தப்பட்டது.

அதில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம், "கேரள தேசத்தில் தீண்டப்படாத ஜாதியாரின் உரிமைகளை நிலை நிறுத்துவதற்கும், மதுவிலக்கிற்கும், ஈடுபட்டிருந்த டி.கே.மாதவன் அவர்கள் காலம் சென்றமைக்காக இம்மாநாடு மிகவும் வருந்துவதுடன் அவர்களுடைய குடும்பத்தாருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது **(நமது குறிக்கோள், பக்கம் 19)** என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

டி.கே.மாதவன் அவர்கள் பெயரால் ஒரு கல்லூரி கேரளாவில் தொடங்கப்பட்ட போது அதனைத் திறந்து வைக்க அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தந்தை பெரியாரையே பிற்காலத்தில் அழைத்தார்கள். அப்போது உடன் சென்றவர் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

### கே.பி.கேசவமேனன் (1886-1978):

கே.பி.கேசவமேனன், கேரளாவில் இருந்தபோது மட்டுமல்ல, பின்னர் மலேசியாவில் இருந்தபோதும் அவரோடு பெரியாருக்கு நட்பு இருந்தது.

கேசவமேனன் 'பந்தனத்தில் நின்னு' என்ற நூலை வைக்கம் போராட்ட காலத்திலேயே மலையாளத்தில் எழுதினார். அதாவது 'தளைகளைவிட்டு' என்ற நூலில், ".... தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும், ஈரோடு முனிசிபல் கவுன்சிலின் சேர்மனுமாக இருந்தவரும், ஒரு பெரும் பணக்காரரும், உத்தம தேசாபிமானியுமான நாயக்கரின் காலில் சங்கிலிகளும் கைதிகளது தொப்பியும், முழங்கால் வரையிலான வேட்டியும் கழுத்தில் மரக்கட்டையும் மாட்டி கொள்ளைக்காரர்கள் மற்றும் கொலைகாரர்களுடன் ஒன்றாக வேலைக்குச் செல்வதைக் கண்டு கேரளாவின் தீண்டாமைச் சாதிக்காரர்களது சுதந்திரத்துக்காக தமிழ்நாட்டின் ஒரு பெரிய மேற்குல இந்துவை, இப்படிப்பட்ட தியாகத்துக்கு உந்திய சிரேஷ்டமான இயக்கத்தின் மகிமை எங்களுக்கு புத்துயிர் தராதிருக்கவில்லை....'' என்ற வரிகள், பெரியார் மீது அவர் வைத்திருந்த மதிப்பையும் மரியாதையும் வெளிப்படுத்துகின்றன.

வைக்கம் போராட்டம் குறித்து தனது 'கடந்த காலம்' என்ற நூலில் பெரியாரைக் குறிப்பிடுகிறார் கே.பி.கேசவமேனன். தான் சிறைக்குச் சென்ற பிறகு பெரியார் வைக்கம் வந்து போராட்டத்தில் பங்கெடுத்தார் என்பதை மறக்காமல் பதிவு செய்துள்ளார். பின்னர் மலேசியா போய்விட்டார் கேசவமேனன். அங்கும் பெரியாருக்கும் இவருக்கும் நட்பு தொடர்ந்துள்ளது.

"திராவிடர் கழகத் தலைவர் ஈ.வி.ராமசாமி நாயக்கர் நான் மலேயாவில் இருந்தபோது அங்கு வந்திருந்தார். சுயமரியாதை இயக்கப் பிரச்சாரம் செய்து கொண்டு நாயக்கர் மலேயாவில் பல இடங்களில் சுற்றுப் பயணம் செய்தார். இரண்டு நாட்கள் அவரும் அவருடைய மனைவியும் எங்கள் இல்லத்தில் தங்கினார்கள். ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள் என்ற முறையில் நாங்கள் அடிக்கடி பார்த்துப் பழக சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. பின்னர் நாயக்கர் காங்கிரசிலிருந்து பிரிந்தது மட்டுமின்றி, காங்கிரசுக்கு எதிரியாகவும் மாறினார்.

என்றாலும் எங்கள் தனிப்பட்ட நட்புறவுக்கு அது தடையாக இல்லை. மலேயாவில் திராவிடர் கழகத்தார் நாயக்கரின் அறுபதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியபோது அக்கூட்டத்துக்கு என்னைத் தலைமை தாங்க அழைத்தார்கள். தேசியக் கருத்துக்களில் எங்களிருவருக்கும் இடையே ஒற்றுமை நிலவவில்லை எனினும், அவர் சமுதாய முன்னேற்றத்துக்கு ஆற்றிவரும் தொண்டைப் பாராட்டுவதற்குரிய வாய்ப்பாக அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டேன். நாயக்கர் பேச்சாற்றல் மிகுந்தவர். பொதுத் தொண்டாற்றும் திறனுடன், தலைமைப் பொறுப்புக்குரிய பண்பும் அவரிடம் இசைந்திருந்தன.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பொதுத் தொண்டாற்றி வரும் நாயக்கரை அவருடைய கருத்துக்களில் உடன்பாடு கொள்ளாதவர்கள் கூட அவர் ஒரு ஆற்றல் மிகுந்த தனிமனிதர் என்பதை ஒத்துக் கொள்வார்கள் **(பக்கம் 196)** என்று எழுதி இருக்கிறார் கே.பி.கேசவமேனன்.



மன்னத்து பத்பநாபன்



ஜார்ஜ் ஜோசப்



டாக்டர் பல்ப்பு

மலேசியா நாட்டில் கேசவமேனனுக்கு தொல்லை தரப்பட்டபோது அதனைக் கண்டித்து எழுதினார் பெரியார். 'கே.பி.கே.மேனனுக்கு ஜே!' என்பது அதன் தலைப்பாகும்.

"உயர்திரு. பாரிஸ்டர் கே.பி.கேசவமேனன் அவர்கள் இந்தியாவில் சிறப்பாகத் தென்னிந்தியாவில் ஒரு பிரபல வக்கீலாகவும், ஒரு பெரிய தேச பக்தராகவும், தியாகியாகவும் இருந்து வந்ததும்; அவரது தேசபக்தி காரணமாக மாதம் 1,000 கணக்கான ரூபாய்கள் வரும்படி உள்ள தமது வக்கீல் தொழிலை நிறுத்தித் தனது செல்வமெல்லாவற்றையும் இழந்து, மனைவியையும் இழந்து மிக்க கஷ்டமான பரிசோதனைக்கெல்லாம் ஆளான ஓர் உண்மை தேசபக்தர் என்பதும்; திரு. காந்தியவர்களுக்கும் மிகவும் நம்பிக்கை உள்ள சகாவாகவும், கேரள காங்கிரஸ் ஸ்தாபனத்தின் டிக்டேட்டராகவும் இருந்த ஒரு யோக்கியமும், கீர்த்தியும் வாய்ந்தவர்; அகிம்சையில் மிக்க நம்பிக்கையுமுடையவர்.

சமுதாயச் சீர்திருத்த விஷயத்தில், திருவனந்தபுரம் சமஸ்தானத்தில், தமது சமூகமான நாயர் சமூகத்திற்கே விரோதமாக வைக்கம் கோவில் தெருவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிமை வாங்கிக் கொடுக்கத் தீர்மானித்து மற்றும் சில பாரிஸ்டருடனும், பி.ஏ., பி.எல்., வக்கீல்களுடனும் சத்தியாக்கிரகம் துவக்கி அவ்வரசாங்கத்தாரால் 6 மாதம் காவலில் வைக்கப்பட்டாலும், சிறையில் மிக்க கவுரவமாய் நடத்தப்பட்டுத் தண்டனைக் காலம் தீருவதற்கு முன்பாகவே விடுதலை செய்யப்பட்டு, அவர் கோரியபடியே திருவாங்கூர் அரசாங்கம் இணங்கி வந்து வைக்கம் தெருக்களைப் பொதுஜன நடமாட்டத்திற்கு எல்லோருக்கும் பொதுவாய் விட்டுவிட்டதுடன், மற்றும் பல ரோடுகளையும் எல்லாச் சாதியாருக்கும் பொதுவாக்கவேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

ஆகவே, இவைகளிலிருந்து திரு. கே.பி.கேசவமேனன் அவர்களின் யோக்கியமும், முயற்சியும் எப்படிப்பட்டதென்பது யாரும் நன்றாய் உணரலாம்,'' என்று **(குடிஅரசு 14.12.1930, துணைத் தலையங்கம்)** பாராட்டி எழுதி இருக்கிறார் பெரியார்.

### கே.கேளப்பன் (1889-1971):

கேரள காந்தி என அழைக்கப்பட்டவர். குருவாயூர் கோவில் நுழைவு போராட்டத்தை முன்னெடுத்தவர். 29.11.1925 வைக்கம் வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் கேளப்பனுடன் பெரியார் பங்கெடுத்தார். அந்த விழாவுக்கு வரவேற்புரை ஆற்றியவர் இவர். 1933 பிப்ரவரி 11 அன்று மூத்த குன்னத்தில் பரூர் காஸ்மாபாலிட்டன் புரோகிரசிவ் சங்கத்தார் மாநாட்டில் கலந்து கொண்டு பெரியார் உரையாற்றினார். மாநாட்டுத் தலைமை வகித்தவர் கே.கேளப்பன். இரண்டாம் நாள் மாநாட்டுக்கு பெரியார் தலைமை வகித்தார். நுழைவுச் சீட்டு போட்டு இந்த மாநாடு நடந்துள்ளது.

11.02.1933 அன்று பெரியாரும் கேளப்பனும் திருச்சூரில் இருந்து கார் பயணமாக 20 மைல் தூரமும், பிறகு ஸ்டீம் போட் வழியாக 7 மைலும் அழைத்து வரப்பட்டார்கள். மூத்தகுன்னம் படகுத்துறையில்

இவர்களுக்கு வரவேற்பு தரப்பட்டது. அங்கிருந்து அவர்கள் பி.கே.குமரன் பி.ஏ.பி.எல். அவர்களது மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கிருந்து பெரும் கூட்டத்துடன் பேண்டு வாத்தியங்களுடன் மாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

இந்த மாநாட்டில் கேளப்பன் பேசியபோது சர்ச்சை ஏற்பட்டது. கூட்டத்தில் சிலர் எதிர் கருத்துகளைச் சொன்னார்கள். மாநாட்டுப் பந்தலுக்கு அருகே இருந்த கோவிலில் விழா நடந்து கொண்டு இருந்தது. அந்த திருவிழாவுக்கு வந்தவர்களும் இந்த மாநாட்டில் பங்கெடுத்தார்கள். அவர்களுக்கு கேளப்பன் பேச்சு புரியவில்லை. அதனால் எதிர்த்தார்கள்.

அப்போது பெரியார், "மாநாட்டுத் தலைவரான கேளப்பன் பேச்சுக்கே இவ்வளவு எதிர்ப்பு இருக்குமானால் நாளை நான் பேசும் போது எப்படி இருக்குமோ என்று பயமாக இருக்கிறது. உங்கள் இஷ்டப்படி பேச நாங்கள் அழைக்கப்பட்டிருக்கிறோமா? அல்லது எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க இங்கு அழைக்கப்பட்டிருக்கிறோமா என்பதை முதலில் தெரிவித்துவிட்டால் பிறகு நமக்குள் அபிப்பிராய பேதம் இருக்க இடமிருக்காது" என்று கேலியாகச் சொன்னார். அதன்பிறகு கூட்டம் அமைதியானது. கடைசி வரை பொறுமையாகக் கேட்டார்கள்.

இரண்டாம் நாள் மாநாட்டுக்கு பெரியாரைத் தலைமை வகிக்கும்படி கே.அய்யப்பன் முன்மொழிந்தார்.

### வக்கீல் எம்.கே.இராமன்:

1933 மாநாட்டில் பெரியாருக்கு வரவேற்புப் பாராட்டுச் சான்றிதழ் வாசித்துக் கொடுத்தவர் வக்கீல் எம்.கே.இராமன். இவர் எம்.எல்.சி.யாகவும் இருந்தவர். நீண்ட மர உருண்டையில் போட்டு இதனை பெரியாருக்கு வழங்கினார் எம்.கே.இராமன்.

### மன்னத்து பத்மநாபன் (1878-1970):

வைக்கம் போராட்டத்தின்போது உயர் வகுப்பினரை மனமாற்றம் செய்யும் பரப்புரையை அதிகம் மேற்கொண்டவர் இவர். 29.11.1925 வைக்கம் வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் மன்னத்து பத்மநாபனுடன் பெரியாரும் பங்கெடுத்தார். திருவிதாங்கூர் கொட்டாரக்கரையில் ஸ்தா நந்த ஸ்வாமிகள் ஆசிரமத்தில் வருணாசிரமப் பாகுபாடு காட்டப்படுவது குறித்த செய்தியில், இதனைப் போக்க சுவாமி ஆத்மாநந்த பாரதியை மன்னத்து பத்மநாபன் சந்தித்து எடுத்த முயற்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. **(குடிஅரசு 30.01.1927)**

### ஜார்ஜ் ஜோசப் (1887-1938):

"... ஜார்ஜ் ஜோசப் என்று ஒருவர் இருந்தார். அவர் தமிழ்நாட்டில் செல்வாக்காக இருந்தார். ஈழவ சமுதாயத்தைச் சேர்ந்த வக்கீலும், ஜோசப்பும் என்ன செய்வது என்று ஆலோசனை பண்ணினார்கள். மீறிவிடுவது என்று முடிவெடுத்தார்கள்.

பதினெட்டாவதாக போராட்டத்தில் ஈடுபட ஆள் இல்லை. அப்பொழுது ஜோசப் அவர்கள் எனக்கு கூட்டு உதவியாக இருந்தவர். அவர் ஜெயிலில் இருந்து எனக்கு ஒரு கடுதாசி எழுதினார். இங்கு வந்தோம்" **(18.10.1973 அன்று திருச்சி வானொலிக்கு அளித்த பேட்டி)** என்று பெரியார் குறிப்பிட்டுள்ளார்.

'நண்பர் ஜார்ஜ் ஜோசப் அவர்களின் அழைப்பின் பேரில் மலையாளம் சென்று சத்தியாகிரகத்தைத் தீவிரமாக நடத்தினேன்' **(விடுதலை 07.04.1961)** என்கிற அளவுக்கு தொடக்கம் முதல் இருவரும் நெருக்கமாக இருந்தார்கள். மதுரையில் வாழ்ந்த காலத்தில் சுயமரியாதை இயக்க கூட்டங்களில் பங்கெடுத்தார்.

'காந்தியின் இராமராஜ்யம்' குறித்து இவர் ஆற்றிய சொற்பொழிவு 'குடிஅரசு' இதழில் வெளியானது. இவருக்கு எதிராக காந்தியவாதிகள் மிரட்டல் கடிதம் எழுதியபோது, மதுரை காவல் நிலையத்தில் அவரது மனைவி புகார் செய்தார். இது தொடர்பாகவும் குடிஅரசு தலையங்கம் தீட்டி உள்ளது.

### டாக்டர் பல்ப்பு (1863-1950):

நவீன கேரளத்தை உருவாக்கிய சிற்பிகளில் ஒருவர் என்று டாக்டர் பல்ப்புவை குறிப்பிடுகிறார் எழுத்தாளர் நிர்மால்யா. 1892ஆம் ஆண்டு கேரளா வந்த விவேகானந்தர், இவரது வீட்டில் தங்கி இருக்கிறார். 1903ஆம் ஆண்டு 'ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன யோகம்' என்ற அமைப்பைத் தொடங்கியவர் இவர்.

“நீதிக்கட்சித் தலைவராக விளங்கிய ஈ.வெ.ரா.பெரியாரிடமும் நல்லுறவைப் பேணி வந்த டாக்டர் பல்ப்பு, தன்னை விட பதினாறு வயது குறைந்த ஈ.வெ.ராவைப் பிற்காலத்தில் சந்தித்தார். ஈ.வெ.ரா. பெரியாரை ‘தமிழ்நாட்டின் சகோதரன் அய்யப்பன்’ என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார் டாக்டர் பல்ப்பு” **(பக்கம் 254, மகாத்மா அய்யன்காளி, கேரளத்தின் முதல் தலித் போராளி)** என்று எழுத்தாளர் நிர்மால்யா எழுதுகிறார்.

எஸ்.டி.என்.பி.யோகத்தின் (S.N.D.P) 26ஆவது ஆண்டு விழா 1929 மே 6, 7, 8 ஆகிய நாட்கள் கோட்டயத்தில் நடந்தது. இதற்கு டாக்டர் பல்ப்பு தலைமை வகித்தார். அப்போது நடக்கும் சுயமரியாதை மாநாட்டுக்கு பெரியாரும், ஆலய நுழைவு மாநாட்டுக்கு மாளவியாவும், பெண்கள் மாநாட்டுக்கு கௌரி அம்மாவும் தலைமை வகிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது. **(குடிஅரசு 12.05.1929)** இம்மாநாட்டில் செங்கல்பட்டு சுயமரியாதை இயக்க மாநாட்டு தீர்மானத்தை தமிழிலும் ஆங்கிலத்திலும் படித்துக் காண்பித்தார்.

## சகோதரன் கே.அய்யப்பன் (1889-1968):

அனைத்து சமூகத்தவரும் ‘சகோதரர்’ ஆக வேண்டும் என்பதற்காக ‘சகோதர அமைப்பும்’, அதன் சார்பில் சகோதரன் என்ற இதழும் நடத்தியவர். அதனால் சகோதரன் அய்யப்பன் என அழைக்கப்பட்டவர். ஒடுக்கப்பட்டவர்களுடன் இவர் இணைந்து சமபந்தி விருந்து நடத்துவது குறித்து எழுதி இருக்கிறது குடிஅரசு. (24.01.1926)

எஸ்.டி.என்.பி.யோகத்தின் (S.N.D.P) 26ஆவது ஆண்டு விழா 1929 மே 6,7,8 ஆகிய நாட்கள் கோட்டயத்தில் நடந்தது. அங்கு நடந்த சுயமரியாதை மாநாட்டில் பெரியார் பங்கெடுத்து பேசினார். செங்கல்பட்டு சுயமரியாதை இயக்க மாநாட்டு தீர்மானங்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் படித்துக் காண்பித்தார் பெரியார்.

இதனை அடுத்துப் பேசிய சகோதரன் அய்யப்பன், 'இந்த தீர்மானங்களை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். இதைத் தவிர விடுதலைக்கு மார்க்கமில்லை. ஈழவ சமுதாயத்தில் அதிகம் பேர், அதாவது படித்தவர்களும் வாலிபர்களும் இதே கருத்தை வெகுகாலமாகக் கொண்டவர்கள். ஆனாலும் இன்று தான் இக்கொள்கைகளை வெளிப்படையாகப் பேசி ஒப்புக்கொள்ள நேர்ந்தது. ‘பிரிட்டிஷ் ஆட்சியில் உள்ளவர்களுக்கு தீண்டாமை ஒழிவதற்கு முன் திருவிதாங்கூர் இராஜ்யத்தில் ஒழிந்துவிடும்' என்று குறிப்பிட்டார். பெரியாருக்கு நன்றி சொல்லி மாலை அணிவித்தார் சகோதரன் அய்யப்பன்.



**சகோதரன் அய்யப்பன்**

1933 பிப்ரவரி 11 அன்று மூத்த குன்னத்தில் பரூர் காஸ்மாபாலிட்டன் புரோகிரசிவ் சங்கத்தார் மாநாட்டில் கலந்து கொண்டு பெரியார் உரையாற்றினார். மாநாட்டுத் தலைமை வகித்தவர் கே.கேளப்பன். இரண்டாம் நாள் மாநாட்டுக்கு பெரியார் தலைமை வகித்தார். அவர் பெயரை முன்மொழிந்தவர் கே.அய்யப்பன்.

“... தைரியமாகவே மதமே வேண்டியதில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். இவற்றிற்கெல்லாம் முக்கியக் காரணம் கேரள ஈழவ சமுதாயத் திலகம் போல் விளங்கும் தோழர் கே.அய்யப்பன் பி.ஏ.எம்.எல்.சி. அவர்களுடைய சுயமரியாதைப் பிரச்சார முயற்சியும், அவரது பத்திரிக்கையான சகோதரன் பத்திரிக்கையின் பிரச்சாரமும், கள்ளிக்கோட்டை தோழர் சி.கிருஷ்ணன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.சி. அவர்கள் பிரச்சாரமும் அவரது மிதவாதி பத்திரிக்கையும் ஆகும்.

தோழர் கே.அய்யப்பன் அவர்களால் மற்றும் ஒரு பத்திரிகை நடத்தப்படுகின்றது. அதாவது, நமது ‘ரிவோல்ட்’ பத்திரிகையைப்போல் ஒரு மாதப் பத்திரிகையானது மத மறுப்பையும், கடவுள் மறுப்பையும், பிரதானமாய்க் கொண்டு 'யுக்திவாதி' என்னும் பேரால் நடத்தப்படுகின்றது. இந்த யுக்தி வாதிப் பத்திரிகைக்கு தோழர் ராமவர்மதம்பான் முதலிய சில படித்த மேதாவியான இந்துக்கள் என்பவர்களும், தோழர்கள் ஜோசப் பி.ஏ. பி.எல்., டாக்டர் அந்தோணி எம்.பி.பி.எஸ். முதலிய கிறிஸ்தவர்களும், தோழர் எம்.கே.இப்ராஹிம் பி.ஏ., எம்.எல்.சி. முதலிய

முகமதியர்களும் உப பத்திராதிபர்களாகவும், விஷயதானம் செய்பவர்களாகவும் இருந்து வருகிறார்கள். தோழர் அய்யப்பன் அவர்களுக்கு மத உணர்ச்சியைப் பற்றியும், கடவுள் உணர்ச்சியைப் பற்றியும் உள்ள வெறுப்பானது சுமார் 10, 15 வருஷ காலமாகவே இருந்து வருவதைக் கேரள மக்கள் நன்றாய் உணர்வார்கள்.

ஈழவ சமுதாயத்தில் இன்று உள்ள கடவுள், மத வெறுப்புணர்ச்சிக்கு வித்து ஊன்றியவர் நமது தோழர் அய்யப்பன் அவர்களே ஆகும் என்பதாகத் தாராளமாய்ச் சொல்லலாம். ... எல்லா சமய சமூகப் பெண் மக்களையும் நமது கொள்கையில் தீவிரமாக ஈடுபடச் செய்தது தோழர் அய்யப்பன் அவர்களின் துணைவி தோழர் பார்வதி பி.ஏ.எல்.டி. அவர்களாவர். அவர்களால் பெண்கள் விடுதலைக்கென்று மலையாளத்தில் ஸ்ரீ என்ற ஒரு பத்திரிக்கையும் வெளியிடப்பட்டு வருகிறது.'' **(குடிஅரசு 24.09.1933)** என்று எழுதி இருக்கிறார் பெரியார்.

### பி.சி.கந்தசாமி பிள்ளை:

09.05.1929 பாலக்காட்டில் பி.சி.கந்தசாமி பிள்ளை தலைமையில் நடந்த சுயமரியாதைப் பொதுக்கூட்டத்தில் பெரியார் பேசினார்.

### ஏ.கே.பிள்ளை:

14.11.1931 அன்று திருவனந்தபுரத்தில் திருவிதாங்கூர் திவான் சர்.சி.பி.ராமசாமி அய்யர் பற்றிய கண்டனக் கூட்டத்துக்கு தலைமை வகித்தவர் பாரிஸ்டர் ஏ.கே.பிள்ளை.

### பி.எஸ்.பாரதி:

பாலக்காடு விஸ்வபாரதி வாசக சாலை என்ற அமைப்பின் சார்பில் 1926 பிப்ரவரியில் நடந்த நிகழ்ச்சிக்கு பெரியாரை அதன் தலைவர் பி.எஸ்.பாரதி அழைத்திருந்தார்.

### பி.கே.மாணிக்கம் பிள்ளை:

பாலக்காடு கூட்டுறவு கல்விக் கழகத்தின் சார்பில் 1926 பிப்ரவரியில் நடந்த நிகழ்ச்சிக்கு பெரியாரை அந்த அமைப்பின் தலைவர் பி.கே.மாணிக்கம் பிள்ளை அழைத்திருந்தார்.

### கிருஷ்ணப்பிள்ளை:

22.06.1926 அன்று எர்ணாகுளம் பிராட்வேயில் கதர் சாலை ஒன்றை கிருஷ்ணப்பிள்ளை தலைமையில் பெரியார் திறந்து வைத்தார்.

### நாராயண மேனன்:

21.06.1926 அன்று எர்ணாகுளம் கடற்கரையில் பெரிய மாநாடு நடந்தது. நாராயண மேனன் பி.ஏ.பி.எல். தலைமையில் தற்கால காங்கிரஸ், கதர் ஆகிய இரு தலைப்புகளில் பெரியார் இரண்டு இடங்களில் உரையாற்றி இருக்கிறார். பெரியாரை அறிமுகம் செய்து வைத்து நாராயணமேனன் பேசி இருக்கிறார்.

### ராமவர்மாத் தம்பான்:

கேரள சீர்திருத்த மாநாட்டுக்கு (1930 செப்டம்பர்) பெரியார் தலைமை வகித்தபோது ராமவர்மாத் தம்பான், அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்து பேசி இருக்கிறார். 'எனது நண்பர்' என்று இவரைக் குறிப்பிடுகிறார் பெரியார். 'நான் பேசவேண்டியதை விட அதிகமாக நண்பர் தம்பான் பேசிவிட்டார்' என்று பெரியார் சொல்லி இருக்கிறார். 'சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றார் தம்பான். இல்லை, புரட்சியே செய்யப்பட வேண்டும்' என்று பேசினார் பெரியார்.

இப்படி பல்வேறு கேரளத் தலைவர்களுடன் நெருங்கிய நட்புடன் இருந்தவர் பெரியார். 'வைக்கம் வீரர்' என்பதை விட, 'கேரள வீரர்' என்று சொல்லத்தக்க அளவுக்கு அந்த ஆளுமைகளுடன் நட்புக் கொண்டவராகவும், கேரள மக்கள் உரிமைகள் குறித்து தொடர்ச்சியாக குரல் கொடுப்பவராகவும், இயலும் போதெல்லாம் அவர்களது மாநாடுகள், பொதுக்கூட்டங்களில் பங்கேற்பவராகவும் தந்தை பெரியார் இருந்ததை இதன் மூலம் அறிய முடிகிறது.

வைக்கம் வீரரும் கேரள வீரருமான பெரியார் வாழ்க!

**கே**ரள மாநிலம் அன்றைய திருவாங்கூர் சமஸ்தானத்திற்குட்பட்ட வைக்கத்தில் வைக்கத்தப்பன் கோயிலைச் சுற்றியுள்ள சாலைகளில் ஈழவர் உட்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் நடக்கவே கூடாது என்ற கொடுமையை எதிர்த்து 1924ஆம் ஆண்டு ஒரு மாபெரும் சமூக நீதிப் போராட்டம் நடைபெற்றது. பெரியார் இப்போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திகொண்டு கடைசிவரை இருந்து போராடி வெற்றி பெற்றார். வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டார்.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு தொடக்க நாளை ஒட்டி சட்டமன்றத்தில் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின்

# விடை கொடுக்க மறுக்கும்



அவர்கள். வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா ஓராண்டு காலம் தமிழ்நாட்டில் நடைபெறும் என்றும் போராட்ட வரலாற்றையும், நோக்கத்தையும், எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அறிவித்த முதலமைச்சர் ஏப்ரல் 1ஆம் தேதி வைக்கத்தில் கேரள அரசு சார்பில் நடைபெற இருக்கும் வைக்கம் போராட்ட நூற்றாண்டு தொடக்க விழாவில் பங்கேற்க இருப்பதாக கூறினார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டி, மார்ச் 31ஆம் நாள் மயிலாடுதுறையிலிருந்து தொடர்



கி.தளபதிராஜ்

# வைக்கம் நினைவுகள்











வண்டியில் புறப்பட்டு மறுநாள் காலை 7 மணிக்கு எர்ணாகுளம் சென்றடைந்தோம். வைக்கம் விழாவில் ‘வைக்கம் போராட்டம்’ புத்தகம் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுவதையொட்டி அந்நூலின் ஆசிரியர் பழ.அதியமானும் டாக்டர் சங்கர சரவணனும் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டிருந்தார்கள். காலை 8 மணியளவில் தொலைபேசியில் தொடர்பு கொண்ட தோழர் அதியமான் 10 மணிக்கு வைக்கம் வந்துவிடுங்கள் அங்கு சந்திப்போம் என்றார். எர்ணாகுளம் இரயில்வே சந்திப்பு அருகிலேயே அறை எடுத்து தங்கியிருந்த நாங்கள் சிற்றுண்டி முடித்து பேருந்தில் வைக்கம் புறப்பட்டோம்.

வைக்கம் நகர் முழுவதும் போராட்ட வரலாற்றை விளக்கும் வண்ணப் பதாகைகள் கண்கொள்ளாக் காட்சியாய் வரவேற்க ஊருக்குள் நுழைந்து வைக்கம் சத்தியாகிரக காந்தி அருங்காட்சியகத்தில் தோழர்களைச் சந்தித்தோம். அரங்கின் நுழைவாயிலில் வைக்கம் சத்தியாகிரக போராட்ட தொடக்க நாளான 1924 மார்ச் 30ஆம் தேதி ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த குஞ்சப்பா, ஈழவச் சமூகத்தைச் சார்ந்த பாகூலயன், நாயர் சமூகத்தைச் சார்ந்த கோவிந்த பணிக்கர் ஆகிய மூவரும் போராட்டத்தில் கலந்து கொண்டு அங்கிருந்த தடைப் பலகையை தாண்டிய காட்சி சிலை வடிவில் தத்ரூபமாக அமைக்கப்பட்டு அனைவரையும் வரவேற்றது. வைக்கம் போராட்டத்தை விளக்கும் ஒலி ஒளி காட்சி ஒரு தனி அறையில் ஒளிபரப்பப்பட்டது.

அங்கு வைக்கப்பட்டிருந்த படங்களையும், வரலாற்றுச் செய்திகளையும் தோழர் பழ.அதியமான் ஒவ்வொன்றாக விளக்க, அதை முழுமையாக ஒளிப்பதிவு செய்து கொண்டோம். போராட்டத்தில் பெரியார் பங்கு பெற்ற சில படங்கள் ஓவியமாக தீட்டப்பட்டு செய்திக் குறிப்புடன் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அன்னை நாகம்மையார், கண்ணம்மாள் பற்றிய குறிப்புகளும், பெரியாருக்கு ஆறு மாத காலம் சிறை தண்டனை அளித்து மாவட்ட நீதிபதி அளித்த ஆணையையும் வைத்திருந்தார்கள்.

மியூசியத்தைச் சுற்றி வந்த பின் வைக்கம் ஜெட்டி என்று சொல்லப்படுகிற படகுத் துறைக்கு நடந்து சென்றோம். படகுத்துறைக்கு அருகில் இருந்த பெரிய மைதானத்தில்தான் மாலை விழாவிற்கான மிகப் பிரம்மாண்டமான மேடையும் பந்தலும்



அமைக்கப்பட்டிருந்தது. 50,000 பேர் ஒரே நேரத்தில் அமரக்கூடிய வகையில் நிறுவப்பட்டிருந்தது, அந்த விழா பந்தல். காந்தி மியூசியத்திலிருந்து மேடைக்குச் செல்லும் சாலைகளின் இருபுறமும் போராட்டத்தில் பங்குபெற்றவர்களின் படங்களை இடைவெளியின்றி வரிசையாக வைத்திருந்தார்கள். அவற்றைப் பார்த்து பிரமித்தபடியே படகுத் துறையில் நுழைந்தோம்.

வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ள, ஈரோட்டிலிருந்து கேரளம் சென்ற பெரியார் படகு மூலம் இந்தப் படகுத்துறையில்தான் வந்திறங்கினார். மகாராணியோடு பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற காந்தியும் இந்த வழியாகத்தான் வந்தார். காந்தியார் வருகையை நினைவுபடுத்தும் வகையில் வைக்கம் ஜெட்டி நுழைவாயிலில் காந்தி, ராஜாஜி, மகாதேவ தேசாய், ராமதாஸ் காந்தி ஆகிய தலைவர்கள் படகிலிருந்து இறங்கி நடந்து வருவதுபோல் தற்காலிக சிலைகள் விழா ஏற்பாட்டாளர்களால் அமைக்கப்பட்டிருந்தது. விழாவிற்கு வந்தவர்கள் அந்த சிலைகள் அருகே நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

காந்தியார் வைக்கம் சென்றபோது, சத்தியாகிரகத்திற்கு எதிராக செயல்பட்ட வைதீகர்களை சந்திக்க, இந்தன்துருத்தில் நம்பூதிரி இல்லத்திற்கு சென்றார். காந்தி அந்த வீட்டிற்குள் அழைக்கப்படாமல் வீட்டுத் திண்ணையிலேயே அமர வைத்துப் பேசப்பட்டார். காந்தியார் உள்ளே அனுமதிக்கப்படாத அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்தோம். வீட்டின் மையப்பகுதிக்குச் சென்று அங்கிருந்த தாழ்வாரத்தில் கால்மேல் கால்போட்டு அமர்ந்த அந்த வேளையில் எம் பெரியார் நெஞ்சில் சிம்மாசனமிட்டு குடிகொண்டார். நம்பூதிரியின் அந்த வீடு 1960களில் கம்யூனிஸ்டு கட்சியால் விலைக்கு வாங்கப்பட்டு அவர்களின் அலுவலகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

பெரியார் இரண்டாம் முறையாக கைது செய்யப்பட்டு ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு. வைக்கத்திலிருந்து திருவனந்தபுரம் மத்திய சிறைக்கு படகில் அழைத்துச்செல்ல முற்பட்டபோது கடுமையான மழையும் காற்றும் வீசியதால் ஒருவாற காலம் வைக்கம் காவல் நிலையத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தார். அதையும் பார்த்துவிட வேண்டி நம்பூதிரி இல்லத்திலிருந்து வைக்கம் சிறைக்குச் சென்றோம். பின் அங்கிருந்தபடியே சத்தியாகிரக ஆசிரமம் செயல்பட்ட இடத்திற்குச் சென்றோம். அது நாராயண குருவிற்கு சொந்தமான இடம். இப்போது பள்ளிக்கூடமாக விளங்குகிறது. இந்த ஆசிரமத்தில் தங்கிதான் சத்தியாகிரகிகள் போராட்டத்தில் பங்கெடுத்தார்கள். பெரியாரோடு வைக்கம் சென்ற மயிலாடுதுறை காங்கிரஸ் தலைவரும், பெரியாரின் நெருங்கிய நண்பருமான எஸ்.ராமநாதன் இந்த ஆசிரமத்தின்

தலைவராக இருந்து செயல்பட்டபோது ஸ்தாபனம் பல வகைகளில் வளர்ச்சி அடைந்ததாக சுதேசமித்திரன் எழுதியது. பஞ்சாபிலிருந்து வந்த அகாலியர் (சீக்கியர் சங்கம்) இலவசமாக சத்யாகிரகிகளுக்கு உணவு அளித்ததை, “தினமும் இருநூறு முந்நூறு பேருக்கு தடபுடலான சமையல், காய்கறி, தேங்காய், அரிசி, பருப்பு என மூட்டை மூட்டையாய் குவிந்து கிடந்த காட்சி திருமண வீடுபோல் காட்சி தந்தது” என பெரியார் வர்ணித்த இடமும் இதுதான். சமத்துவத்தை நிலை நிறுத்துவதற்காக பாரம்பரியமாக இப்படிப்பட்ட இலவச உணவுச் சாலைகளை அவர்கள் நடத்திக் கொண்டிருந்தனர். சீக்கியர்கள் உதவி செய்வதை அறிந்த காந்தி, மாற்று மதத்தவர்களுக்கு அங்கு வேலை இல்லை எனச் சொல்லி அவர்களை வெளியேறச் சொன்னதும் அப்போது நினைவில் வந்தது. சத்தியாகிரக ஆசிரமத்தைச் சுற்றிப்பார்த்து முடித்தபோது மதியம் மணி இரண்டாகியிருந்தது.

மதிய உணவருந்தி விழா நிகழும் இடத்திற்குப் புறப்பட்டோம். வழியெங்கும் சாரை சாரையாய் மனிதத்தலைகள். கூட்டத்தில் ஊடுருவி நிகழ்விடத்திற்குச் செல்வதே பெரும்பாடாய் இருந்தது. கலை நிகழ்ச்சியைத் தொடர்ந்து பெரும் வரவேற்பு இசையோடு பலத்த கரவொலியும் கலந்து வரவேற்க குறித்த நேரத்தில் கேரள முதல்வரும், தமிழ்நாடு முதலமைச்சரும் பார்வையாளர்களைப் பார்த்து வணக்கம் செலுத்தியபடி அரங்கில் நுழைந்து மேடை ஏறினர். சிறப்புரையாற்ற தமிழ்நாடு முதலமைச்சர் பெயர் சொல்லி அழைக்கப்பட்டதும் மீண்டும் பலத்த கரவோசை விண்ணைப் பிளந்தது!

“வைக்கம் சத்தியாகிரஹத்திண்டே நூறாம் வார்ஷிகம் கம்பீரமாயி நடத்தான் ஏற்பாடு செய்திட்டுள்ள பஹுமானப்பெட்ட கேரள முக்கிய மந்திரியும் என்டே பிரியப்பெட்ட சகாவுமாய திரு. பினராயி விஜயன் அவர்களே!” என்று





மலையாளத்தில் முதல்வர் தன் உரையைத் தொடங்க பார்வையாளர்கள் உற்சாகப் பெருக்கில் எழுந்து நின்று ஆரவாரம் செய்தனர்.

வைக்கம் போராட்டம்தான் மகர் போராட்டத்தை நடத்துவதற்கு தனக்குத் தூண்டுதலாக அமைந்ததாக அண்ணல் அம்பேத்கர் குறிப்பிட்டதை நினைவு கூர்ந்த முதல்வர், போராட்டத்தில் பெரியாரின் மகத்தான பங்களிப்பை மிகச் சிறப்பாக எடுத்துரைத்து வைக்கத்தில் பெரியார் நினைவகத்தை தமிழ்நாடு அரசு சார்பில் 8 கோடியே 14 இலட்சம் ரூபாயில் சீரமைக்க இருப்பதாகவும், பெரியார் சிறைவைக்கப்பட்ட அருவிக்குட்டி சிறை இருந்த இடத்தில் புதிய நினைவகம் ஒன்று அமைக்க விரும்புவதாகவும் அதற்குரிய முறையான அனுமதிக் கடிதத்தைக் கேரள அரசுக்கு அனுப்பி வைப்போம் என்றும் குறிப்பிட்டார்.

வைக்கத்தில் சென்ற இடமெல்லாம் பெரியாரைத் தேடித்தேடிப் பார்த்து மகிழ்ந்த எங்களுக்கு முதல்வரின் உரை முழுதும் அமுதகானமாய் ஒலித்தது. சமூக நீதிக்கான சரித்திர நாயகர் அல்லவா? “பெரியார் தமிழ்நாட்டில் பிறந்திருந்தாலும் அவர் உலகளாவிய கருத்துகளைத் தந்தவர். உலகத் தலைவர்!” என்று சொல்லி அவரது கொள்கைகளை எடுத்துரைத்தார். மிகச் சிறப்பான உரை. அதனைத் தொடர்ந்து கேரள முதல்வர் உரையாற்ற பின், ‘வைக்கம் போராட்டம்’ நூலின் மலையாள மொழியாக்கம் வெளியிடப்பட்ட போது தோழர்கள் பழ.அதியமானும் டாக்டர் சங்கரசரவணனும் மேடைக்கு அழைக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சி நிறைவுற்றபோது இருள் கவ்வத் தொடங்கி விட்டது. அவசர அவசரமாக அங்கிருந்து பெரியார் நினைவிடத்திற்குப் புறப்பட்டோம். பெரியார் நினைவிடம் முழுவதும் வண்ண விளக்குகளால் மின்னொளியில் மின்னியது. பெரியார் சிலை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பெரியார் படம் வைக்கப்பட்டிருந்தது. கேரள முதல்வரும், தமிழ்நாடு முதலமைச்சரும் மற்ற முக்கிய பிரமுகர்களும் இங்கு வந்து பெரியாருக்கு மலர் தூவி மரியாதை செய்துவிட்டுத்தான் மாலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நினைவிடத்தின் முன்னால் சாலையின் எதிர்புறம் பெரிய ரவுண்டானாவில் டி.கே.மாதவன் சிலை. மாதவன் சிலைக்கு இடது புறம் மன்னத்து பத்மநாபன் சிலை. இரண்டும் மிகப் பெரிய சிலைகள். பெரியார் நினைவிடத்திற்கும் மன்னத்து பத்மநாபன் சிலைக்கும் நடுவே உள்ள சாலையின் மையப்பகுதியில் காந்தியின் மார்பளவு தற்காலிக சிலை வைக்கப்பட்டிருந்தது. டி.கே.மாதவன் சிலையைப் பார்த்தபடி சத்தியாகிரகிகளின் சிலைகளை தற்காலிகமாக வைத்திருந்தார்கள். பெரியார் சிலைக்கு முன்னால் நின்று எல்லோரும் படம் எடுத்துக்கொண்டோம். நினைவிடம் சென்று அங்கு காட்சிப் படுத்தப்பட்டிருந்த வரலாற்றுப் பதிவுகளைக் கண்டு, வருகைப் பதிவேட்டில் பதிவு செய்தோம்.

இரவு சிற்றுண்டி முடித்து விடுதிக்குச் சென்றதும்



721
(192)

Order under Section 1?? Crl.P.C.

To

S. K. Ramaswami Naicker Esq,

Whereas it has been brought to my notice that you intend making public speeches in this District in connection with the Satyagraha movement etc., and that, if you make any speech at any public meeting, disturbance of the public peace will be occasioned, and whereas it is necessary that you should be prohibited from making any public speech in any place in this District, in view to prevent probable riot, I do hereby prohibit you under section 127 Crl.P.C., from making any public speech in any place in this District, and strictly warn and enjoin you not to take any part in any public meeting in any place in this District.

Given under my hand and the seal of the Court this 13th day of [illegible] 192?.

District Magistrate's Court, [illegible], 13th March 192?. 

S/ [illegible], District Magistrate.

Seal. /True Copy/

By order,
[illegible]

Ramaswamy's arrest and imprisonment
tering Kottayam district by District Magistrate. He
t defied the third order and hence he was arreste
ain at Vaikom and sentenced to six months impr
Thiruvananthapuram.




**வைக்கம் படகுத்துறை**

காலையிலிருந்து கண்ட காட்சிகளைப் பற்றியும், மறுநாள் பயணத்தை ஒழுங்குபடுத்தவும் வெகுநேரம் கலந்துரையாடினோம். பெரியார் நினைவிடம் சென்றபோது இரவாகிவிட்டதல்லவா? எனவே மீண்டும் பகலில் காண வேண்டும் என்ற ஆசை எல்லோரிடமும் இருந்தது. அதேபோல் பெரியார் அந்த போராட்டத்தில் முதல் முறை சிறை வைக்கப்பட்ட ஆறுக்குட்டி சிறை இருந்த இடத்தில் புதிதாக பெரியாருக்கு நினைவிடம் அமைக்க இருப்பதாக முதல்வர் அறிவித்திருந்ததால் அந்த இடத்தையும் பார்த்துவிட வேண்டும் என்றும் முடிவெடுத்தோம்.

அடுத்த நாள் ஏப்ரல் 2ஆம் தேதி காலை மீண்டும் பெரியார் நினைவிடம் சென்று பார்த்தபின் அங்கிருந்து வைக்கம் கோயிலுக்குச் சென்று கோயிலைச் சுற்றி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நடப்பதற்கே உரிமை மறுக்கப்பட்ட அந்த நான்கு வீதிகளிலும் கை வீசி நடைபோட்டோம். மகாராணியின் பேச்சுவார்த்தைக்குப் பின் மூன்று வீதிகள் தடை விலக்கப் பட்டு, கோயில் குளம் தீட்டுப் பட்டுவிடும் என்பதாகச் சொல்லி, தடை விலக்க மறுக்கப்பட்ட, அந்தக்குளம் இருந்த கிழக்கு வீதி சென்றபோது குளத்தில் இறங்கி கால் நனைத்தோம். காலில் நீர் பட்டு மெய் சிலிர்த்தது.

அங்கிருந்து வைக்கம் படகுத் துறையை அடைந்த போது நண்பகல் 12 மணி. பெரியார் வைக்கத்தில் கைது செய்யப்பட்டு ஆறுக்குட்டி சிறைக்கு படகில் அழைத்துச் செல்லப்பட்டார் அல்லவா? அதே தடத்தில் படகில் நாங்களும் பயணமானோம். தற்போது படகுப் போக்குவரத்து ஆறுக்குட்டிக்கு இல்லை. வைக்கத்திலிருந்து சில மணித்துளிகள் படகில் பயணம் செய்து தவணக்கடவு படகுத்துறையை அடைந்தோம். அங்கு நாங்கள் இறங்கிய இடத்தில் வைக்கம் விழாவை ஒட்டி பெரியார் படம் ஒன்று வைத்திருந்தார்கள். அங்கிருந்து பேருந்தில் ஆறுக்குட்டிக்கு ஒரு மணி நேர பயணம். சிறை இருந்த பகுதி நோக்கி நடை போட்டோம். பேருந்து நிறுத்தத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் ஆறுக்குட்டி படகுத்துறை கரையிலேயே இருந்தது அந்த இடம். பாழடைந்த காவலர் குடியிருப்புகளும் அதனை ஒட்டி செடிக்கொடிகள் மண்டிய புதர்களுமாய் காட்சியளிக்க அந்த புதர்களுக்கு இடையில் சிதிலமடைந்து




**பெரியார் சில நாட்கள் சிறையில் இருந்த வைக்கம் காவல் நிலையம்**



பெரியார் முதல் முறை அடைக்கப்பட்ட சிறையின் இன்றைய தோற்றம்

பாழடைந்த நிலையில் இன்றோ நாளைக்கோ என சரிய நேரம் பார்த்துக் கொண்டிருந்த அந்த குட்டிச் சுவரைக் காட்டி, "இதுதான் ஆறுக்குட்டி சிறைச்சாலை. பெரிதாக இருந்த இந்த கட்டடம் காலப்போக்கில் சேதமடைந்து தற்போது மிஞ்சியுள்ளது இதுதான்!" என தன் தந்தையார் சொன்னதை நினைவுகூர்ந்தார் ஓர் இஸ்லாமிய இளைஞர். பெரியார் இதை காவல் நிலையம் என்று சொல்கிறார். முதல்முறை கைது செய்யப்பட்டு இங்கு அடைக்கப்பட்டபோது வெளியிலிருந்து உணவு வரவழைக்கப்பட்டதாகச் சொல்கிறார். திருவிதாங்கூர் அரசாங்கம் பெரியாரை பிரச்சாரம் செய்ய விடாமல் தடுத்தாலே போதும் என்று அப்போது நினைத்திருக்கக் கூடும்.



சத்தியாகிரக ஆசிரமம்

அங்கிருந்து அரை கிலோமீட்டர் தொலைவில் மஹாராஜாவிற்கு சொந்தமான மாளிகை ஒன்றும் அதை ஒட்டி அவர் வழிபட ஒரு கோவிலும் இருந்ததாகச் சொல்லி ஒரு பெரியவர் எங்களை அழைத்துச்சென்றார். அதுவும் அந்த ஆற்றுக்கரை தான். கோயில் மட்டும் இருந்தது. கோவிலின் பின்புறம் ஆற்றை ஒட்டி ஒரு சிறிய குளம் வெட்டப்பட்டிருந்தது. மஹாராஜாவின் மாளிகை இல்லை. குளத்தில் இறங்கிய அந்தப் பெரியவர் "ஆற்று நீர் உப்பு நீர் என்ற போதிலும் இந்தக் குளத்து நீரில் சிறிதளவும் உப்பு இருக்காது. இது ராஜா குளிப்பதற்காக வெட்டப்பட்ட குளம்!" என்று சொல்லி ஒரு கையில் குளத்து நீரை அள்ளிப் பருகிக்கொண்டே பெருமிதத்தோடு எங்களைப் பார்த்தார். ஆனாலும் அந்தப் பரிசோதனையில் நாங்கள் இறங்கவில்லை.

ஆறுக்குட்டியிலிருந்து எர்ணாகுளம் சென்ற போது மீண்டும் இருட்டத் தொடங்கியிருந்தது. மாலை 6 மணி. விடுதிக்குச் சென்று ஓய்வெடுத்து இரவு தொடர்வண்டியில் மயிலாடுதுறை திரும்பினோம். வைக்கத்திலிருந்து விடை பெற்றோம். வைக்கம் போராட்ட நினைவுகள் விடை கொடுக்க மறுக்கிறது.





கண்ணம்மா



நாகம்மையார்

# வைக்கத்தில் ஈரோட்டுப் பெண்கள்!



ஐஸ்வர்யா

பெண்களின் இருத்தல் இன்றி எந்தப் போராட்டமும் அதன் நோக்கத்தை எட்டியதாக வரலாறு இல்லை. இந்தியாவில் பெண்கள் முதன்முதலாக வழிநடத்திய போராட்டங்கள் 19ஆம் நூற்றாண்டில் தெற்கே கேரளாவிலும் தமிழ்நாட்டிலும்தான் தொடங்கின. இதற்கு முன்னோடிகளாக குறிப்பாக ஈரோட்டுக் கிழவன் தந்தை பெரியார் வீட்டுப் பெண்கள் இருந்தார்கள்.

கள்ளுக்கடை மறியல், வைக்கம் போராட்டம் போன்ற இந்தியச் சுதந்திரத்துக்கான முக்கியப் போராட்டக் களங்களை வழிநின்று நடத்தியவர்கள் அவர்களே. சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அந்தப் பெண்களே வழிகாட்டி.

பெரியார் காங்கிரஸில் இணைந்தபோதே அவருடன் அவரது இணையர் நாகம்மையாரும் கட்சியில் இணைந்திருந்தார். ஒத்துழையாமை இயக்கத்தைத் தமிழ்நாட்டில் தீவிரமாக செயல்படுத்துவது இருவரது நோக்கம். பிரிவு 144க்குச் சமமமான அப்போதைய தடைச்சட்டமான பிரிவு 26ஐ மீறியதற்காக பெரியார் கைது செய்யப்பட்டபோது அவரைத் தொடர்ந்து சட்டத்தை மீறி பெண்களை ஒன்று திரட்டி போராட்டம் செய்ய அழைத்துப் போனவர் தோழர் நாகம்மையார். 1922 ஜனவரி 19 அன்று அனைத்துக்கட்சி மாநாடு சர் சங்கரன் நாயர் தலைமையில் நடந்தது. காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்துவது தொடர்பான உரையாடலில் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார், “ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட வேண்டுமானால், ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்மணிகளைக் கலந்தாலோசிக்க வேண்டும்” என்கிறார் அவர். அவர் குறிப்பிட்டது தோழர்கள் நாகம்மையாரையும் பெரியாரின் சகோதரி கண்ணம்மையாரையும்தான்.

காந்தியாரின் சமூக சீர்த்திருத்தக் கொள்கைகளை வலுப்படுத்த ஈரோட்டுக் குடும்பத்தின் தலையீடு அப்போது காங்கிரசுக்குத் தேவையாக இருந்தது. அதை வலியுறுத்தியவர் இராஜாஜி. அவரின் இந்த அனுமானம் பின்னாட்களில் காந்தியாரின் முடிவுகளில் பிரதிபலித்தது. அதற்கு ஒத்துழையாமை இயக்கமே சாட்சி.

1921இல் காந்தியார் கள்ளுக்கடை மறியல் செய்ய முடிவெடுத்ததற்குப் பின்னணியில் ஈரோட்டு வீட்டுக்கு அவர் வருகை தருவதற்கும் அது முக்கியக் காரணமாக இருந்தது. அதே ஆண்டு கள்ளுக்கடைகளுக்கு எதிராக மறியல் செய்ததற்காக பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். சிறைபட்டால் போராட்டம் தடைபடுமா? அவரது தங்கை கண்ணம்மையும் இணையர் நாகம்மையும் போராட்டக்களத்தில் இறங்கினர். பெண்கள் முன்னின்று நடத்தும் போராட்டம் அந்தக் காலத்தில் மிகுந்த எழுச்சியை ஏற்படுத்தியது. அதிகாரம் வேறு வழியின்றி பேச்சுவார்த்தைக்கு முன்வந்தது.

சுயமரியாதை இயக்கத்தைப் பெரியார் தோற்றுவிப்பதற்கு முன்பு பெரியாரும் காந்தியாரும் இணைந்து மேற்கொண்ட போராட்டங்களில் முக்கியமானது வைக்கம் போராட்டம். தீட்டென ஒதுக்கப்பட்ட மக்கள் கோயிலில் நுழைவதென்ன, அது இருக்கும் சாலை வழியே கூடச் செல்லக் கூடாது என கட்டளை பிறப்பித்திருந்தது திருவாங்கூர் சமஸ்தானம். 1923 காக்கிநாடா காங்கிரசு கூட்டத்தில் இது குறித்த அறிக்கையை சமர்ப்பித்தார் டி.கே.மாதவன்.

1924ஆம் ஆண்டு கேளப்பன், வேலாயுத மேனன், கே.என்.நம்பூதிரிபாட், டி.கே.மாதவன் ஆகியோர் ஒரு கமிட்டியை அமைத்து சமஸ்தான போர்டுக்கு எதிராகப் போராடினர். போராட்டம் கைதில் முடிந்தது. தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டிருக்க போராட்டத்துக்கு யார் தலைமை ஏற்பது? காந்தியாரையும் பெரியாரையும் அழைத்தனர் ஈழவர்கள். ஈரோட்டுப் பகலவன் தமிழ்நாட்டிலிருந்து பயணித்தது. அவருடன் நாகம்மையும் உடன் பயணித்தார்.

13 ஏப்ரல் 1924 படகு மூலம் வைக்கத்துக்கு விரைந்தனர் இருவரும். பெரியார், நாகம்மை, கண்ணம்மை, பெரியாரின் உறவினர்களான லட்சுமியம்மாள், மாரக்காயம்மாள் என சென்னை மாகாணத்தவர்கள் பங்கெடுத்தது வைக்கம் போராட்டத்துக்கே ஒரு புதுவடிவத்தைக் கொடுத்ததாகப் பதிவு செய்கிறார் வரலாற்றுப் பேராசிரியர் டி.கே.ரவீந்திரன். அந்தக் காலக்கட்டத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் தலைவராக நாடு முழுவதும் பெரியார் அறிமுகமாகியிருந்ததாகச் சொல்கிறார் மற்றொரு வரலாற்றுப் பேராசிரியர் குசுமான்.

1933ஆம் ஆண்டு கேரளாவின் பிரபல பதிப்பகமான 'பெர்ல் பிரஸ்' தனது 'Who's who in Madras' புத்தகத்தில் நாகம்மையாரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அந்த புத்தகத்தில் பெரியாருடன் அவரும் ஒத்துழையாமை இயக்கத்திலும் வைக்கம் போராட்டத்திலும் தீவிரமாக ஈடுபட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பெரியார் வீட்டுப் பெண்கள், கேரள மக்கள் அனைவரையும் அணிதிரட்டத் தொடங்கினார்கள். கேரளப் போராட்டக்காரர்களுடன் லட்சுமியம்மாள், மாரக்காயம்மாள் ஆகியோர் மேற்கொண்ட சத்தியாகிரகம் கல் மனதையும் கரைக்கவல்லதாக அமைந்ததாக 'சுதேசமித்திரனில்' எழுதுகிறார் சங்கரலிங்கனார். அதுமட்டுமல்ல இதற்கு நிதிதிரட்ட பெண்கள் சாலையில் ராட்டை நூற்றுக்கொண்டு சென்றதாகவும் அவர்கள் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததாகக் கைது செய்யப்பட்டு ரூபாய் 5 அபராதம் விதிக்கப்பட்டதாகவும் அதைக் கட்ட மறுத்ததற்காக அன்றைய தினம் நீதிமன்றம் கலையும் வரை காவலில் வைக்கப்பட்டதாகவும் நாகம்மையார் கைது குறித்துப் பதிவு செய்கிறது 05.08.1924 தேதியிட்ட 'சுதேசமித்திரன்'.

வைக்கம் போராட்டத்தில் தேசத்துரோகத்தில் ஈடுபட்டதாகப் பெரியார் சிறைபட்டிருந்த சமயம் நாகம்மை தலைமையிலான ஆறு பெண்கள் போராட்டத்தைக் கையில் எடுத்தனர். அதுமட்டுமல்ல பெரியாருக்கு உறுதுணையாக நாகம்மையார் வைக்கத்திலிருந்தவாறு தொடர் போராட்டங்களைச் செய்து வந்துள்ளார்.

1924இல் செப்டம்பர் மாதத்தில் அவரது வைக்கம் போராட்டத்துக்கான பயணத்திட்டம் நமக்குக் கிடைக்கிறது. அதில் சிங்கோலி, முட்டம், கொல்லம், மய்யநாடு, நெடுங்கனா, திருவனந்தபுரம், கோட்டாறு ஆகிய இடங்களுக்கு அவர் பயணிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்துடன் பெரியார் சிறையில் இருக்கும் காலகட்டத்தில் வைக்கம் போராட்டத்தை மற்ற தலைவர்கள் வழிநின்று நடத்தி வெற்றிபெற்றுத் தரவேண்டுமென அறிக்கையும் விடுத்துள்ளார் நாகம்மையார். இது வைக்கம் போராட்டத்தில் தனியொரு மனிதியாக அவரது அரசியல் பங்களிப்பை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

வே.ஆனைமுத்து அய்யா தனது பதிவுகளில் நாகம்மையாரின் போராட்டம் குறித்து 'சுதேசமித்திரன்' நாளிதழில் வெளியான செய்திகளை விரிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்.

- ★ சீக்கிரத்தில் ஸ்திரிகள் பிரிவொன்று வகுக்கப்பட்டு, ஸ்ரீமான்கள் நாயக்கர், கோவிந்தன், மாதவன் ஆகியவர்களின் மனைவிகள் வசம் அதை ஒப்படைக்க உத்தேசம் (சுதேசமித்திரன் 22.04.1924)
- ★ பெண் தொண்டர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டது 20.05.1924 முதல் எனத் தெரிகிறது.
- ★ நேற்றுக் காலை (20.05.1924) ஸ்ரீமான்கள் ராமஸ்வாமி நாயக்கர், எம்பெருமாள் நாயுடு, தாணுமாலைப் பிள்ளை, கோவிந்தன் சாணார்








ஆகியவர்களின் மனைவிகள் மேலண்டை கோபுர வாசலையடுத்த ரஸ்தாவில் சென்று ஸத்யாக்ரஹம் செய்தனர். ஸ்ரீமான் சர்மா என்ற இன்ஸ்பெக்டர் சாணாரின் மனைவியை மட்டும் போகவிடாமல், மற்றவர்களைப் போகவிட்டார். ஏனெனில், அம்மாது தீயர் வகுப்பு ஸ்திரீயென்றார். ஸ்ரீமான் நாயகர் மனைவியும் மற்ற ஸ்திரீகளும் இன்ஸ்பெக்டருடன் வாதித்தார்கள்... 1 மணி நேரம் போல், ஸ்திரீத் தொண்டர்கள் ஸத்யாக்ரஹம் செய்ய, ஆண் தொண்டர்கள் பிறகு வந்து அவர்களை அனுப்பிவிட்டனர்.'' ("சுதேசமித்திரன்'' 22.05.1924)

★ "கனத்த மழை பெய்து கொண்டிருந்தும் தொண்டர்கள் தங்களிடத்தை விட்டு அசையாமல் ஸத்தியாக்ரஹம் செய்கின்றனர். ஸ்திரீத் தொண்டர்கள் மற்றவர்களுடன் சமபந்தி போஜனம் செய்து வருகின்றனர். இன்னும் அதிகமாகத் தொண்டர்கள் வேண்டுமென்று கமிட்டியார் கேட்கின்றனர். ("சுதேசமித்திரன்'' 22.05.1924)

★ "ஸ்ரீமான் நாயக்கரின் மனைவி நேற்றும் பிடிவாதமாக ஸ்ரீமான் சாணாரின் மனைவியைத் தடுக்கப்பட்ட ரஸ்தாவில் அழைத்துச் செல்ல எத்தனித்தபோது, ஒரு பிராமணர் கோபத்துடன் அம்மாதிரி உத்தரவை மீறக்கூடாது என்று கண்டித்தார். கனத்த மழை பெய்தும் ஸ்திரீகள் தங்களிடத்தை விட்டு அசையாமல் சத்தியாக்கிரகம் செய்தனர்.'' ("சுதேசமித்திரன்'' 23.05.1924)

★ வைக்கத்தில் கிளர்ச்சி தொடர்ந்து நடைபெறுகிறது. வைக்கம் கோவிலுக்கு உள்ளே சாதி இந்துப் பெண்களான திருமதி நாயக்கரும் மற்றும் உள்ள பெண்களும் நுழையக்கூடாது என தேவஸ்வம்போர்டு தடை செய்திருந்தது. அதையும் மீறி இவர்கள் நுழைந்துவிட்டார்கள். இது பற்றி தேவஸ்வம் போர்டு ஊழியர் ஒருவர் நேரில் சத்தியாக்கிரக ஆசிரமத்துக்கு வந்து அங்கிருந்த பொறுப்பாளர்களிடம், திருமதி நாயக்கர் கோவிலுக்குள் நுழைந்தது கடுமையான குற்றம் (Grievous error) என்றும், சாதி இந்துக்கள் கோவிலுக்குள் நுழைய இன்னும் அனுமதிக்கப்படாத நிலையில், சாதி இந்துவான அவர்




விருதுநகர் சங்கரலிங்கனார்

அப்படிச் செய்தது அடாதது என்றும் கூறிக் கண்டித்துவிட்டுச் சென்றார். ("THE HINDU", 21.06.1924)

★ இதைத் தொடர்ந்து, கோயில் மேலவாசலில் 3 பெண் தொண்டர்கள் கிளர்ச்சி செய்தனர் என மாவட்ட நீதிபதியின் அறிக்கை (20.06.1924) தெரிவிக்கிறது.

★ பிரஸ்தாப ரஸ்தாவில் தடுக்கப்பட்ட ஹிந்து சமூகத்தினர்களே பெரும்பாலும் தொண்டர்களாக இருக்கிறார்கள். தடுக்கப்பட்ட மேலண்டை வாசலில் ஸ்ரீமதிகளான கல்யாணியம்மாள், பார்வதியம்மாள், கருப்பியம்மாள், கருத்தக் குஞ்சம்மாள், ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரின் பந்துக்களான லட்சுமியம்மாள், மாரக்காயம்மாள் இவர்கள் நின்று சத்தியாகிரகம் செய்தது கல் மனதையும் கரையச் செய்ய வல்லது... மதுரை ஸ்ரீமான் நாராயண அய்யர் இங்கு அரிய வேலை செய்து கொண்டிருக்கிறார். ஸ்ரீமான்களான கோவிந்தன் சான்றோரும், இராமசாமி நாயக்கரும் குடும்பசகிதம் தாமதித்து (தங்கி) வருகிறார்கள்....'' என்று, விருதுநகர் ஸ்ரீமான் க.பெ.சங்கரலிங்க நாடார் எழுதுகிறார். (சுதேசமித்திரன், 25.07.1924, பக்8)

★ "ஸ்ரீமான் ராமஸ்வாமி நாயக்கர் மனைவி மற்ற ஸ்திரீகளோடு பிரசார வேலையும் பண வசூலும் செய்து வருகிறார். சாது எம்.பி.நாயரின் மனைவியும் அவருடன் வேலை செய்கிறார். பாடிக்கொண்டும், ராட்டினம் சுற்றிக்கொண்டும் இந்த இரண்டு தொண்டர்களும் போக்குவரத்துக்குத் தடையாயிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 5 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார். அபராதம் கொடுக்க மறுத்து கோர்ட்டு கலையும் வரை காவலில் இருந்தார். விசாரணைக்கு முந்தி 8 தினங்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்..." (சுதேசமித்திரன், 05.08.1924)

இப்படி தொடர்ச்சியாக வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டார் நாகம்மையார். 1925 நவம்பர் மாதம் நடைபெற்ற வைக்கம் போராட்ட வெற்றி விழா நிகழ்ச்சியிலும் பெரியாருடன் நாகம்மையாரும் கலந்து கொண்டார்.

பெரியாரே பிற்காலத்தில் பல இடங்களில் நாகம்மையாரின் வைக்கம் போராட்டப் பங்களிப்புகளை பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். 1933இல் நாகம்மையார் மறைந்தபோது எழுதிய அவரது இரங்கலில் நாகம்மாள் தான் காங்கிரசிலிருக்கும்போது மறியல் விஷயங்களிலும் வைக்கம் சத்தியாகிரக விஷயத்திலும் சுயமரியாதை இயக்கத்திலும் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்தது எனக் குறிப்பிடுகிறார்.

சாதியொழிப்புக்கும் சுயமரியாதைக்குமான போராட்டத்தின் ஆதி பெரியார் என்றால் அதன் அந்தம் அவர் வீட்டுப் பெண்மணிகள் என்பதை மறுப்பதற்கில்லை. தமிழ்நாடு பெரியார் மண் என்றால், இங்கே சுயமரியாதைக்கும் சுதந்திரத்துக்காகவும் போராடும் அத்தனைப் பெண்களும் பெரியார் வீட்டுப் பெண்மணிகளே.



## மலையாளத்திலிருந்து




# மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரைகள்


Dalavakkulam Vaikam, early 19thc
ajay sekher 2015



# வைக்கம் சத்தியாகிரகத்தின் நூறு வருடங்கள்



முனைவர் டி.டி.ஸ்ரீகுமார்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளின் பத்தாண்டுகள் கேரள சமூகம் பெரும்மாற்றங்களுக்குச் சாட்சியம் வகித்த ஆண்டுகளாக இருந்தன. வெகுஜன சமத்துவ எழுச்சியில் தொடங்கி, மலபார் கலகமும் வைக்கம் சத்தியாகிரகமும் ஒத்துழையாமை இயக்கமும் புறக்கணிப்புப் போராட்டமும் மருமக்கத்தாய மசோதா உள்ளிட்ட பல கொந்தளிப்புமிக்க நிகழ்ச்சிகள் பிறவியெடுத்த பத்தாண்டுகள் அவை. அந்த அர்த்தத்தில் இன்றைய கேரளம் அந்தப் பத்தாண்டுகளின் சிறப்புமிக்க சில மரபுகளைச் சுமந்து கொண்டிருக்கிறது.

1920களில் சாத்தியமான அரசியல் சமூகப் பரிமாணம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே நடந்துவிட்டது. திருவிதாங்கூரிலும் கொச்சியிலும் மலபாரிலும் அக்காலத்தில் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு போன்ற வெகுஜன எழுச்சிகள் கேரளத்தின் பிற்கால ஜனநாயகக் கண்ணோட்டங்களை உருவாக்க உதவும் வண்ணம் எழத் தொடங்கின. அவற்றில் எதுவும் ஒரு தனிப்பட்ட இயக்கத்தின் பகுதியாக உருவானவையாகவோ, ஒரு தனிப்பட்ட அரசியல் கொள்கையிலிருந்து முளைத்து வந்தவையாகவோ இருக்கவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் வைகுண்ட சுவாமி, ஆறாட்டுப்புழ வேலாயுதப் பணிக்கர் போன்றவர்களின் அசாதாரண தலையீடுகள் மூலம் உத்வேகமடைந்தது. அவர்களுக்கு முன்னரே தென் கேரளத்தில் பலமாக அலையடித்த சாதிய ஆதிக்க எதிர்ப்பு கருத்துகளிலிருந்தும் திருநிழல் மாலா, பாச்சல்லூர் பதிகம் போன்ற

நூல்களிலிருந்தும் உந்துதலை பெற்றது. அதே நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் ஸ்ரீநாராயண குரு, அய்யன்காளி, சட்டம்பி சுவாமிகள், கண்டன் குமாரன், டாக்டர் பல்ப்பு, பொய்கையில் அப்பச்சன், சதானந்த சுவாமிகள் போன்ற பல கர்ம வீரர்களின் தொடர் கருத்துப் பரிமாற்றங்களின் ஊடாக உருவெடுத்த ஒரு பொதுப் பிராந்தியத்தில் தான் யதார்த்தத்தில் கேரளத்தின் இருபதாம் நூற்றாண்டு பிறவியெடுக்கிறது.

'ஒன்றிணையுங்கள்' என்கிற சமூக நோக்கும் 'அமைப்பாகத் திரளுங்கள்' என்கிற அரசியல் வடிவத்தின் பிறவியும் வைகுண்ட சுவாமியின் மூலமாக முதலில் வெளிப்பட்டபோதிலும் இது மேலும் கொள்கை ரீதியாகவும் அமைப்பாகவும் மாறுவது இருபதாம் நூற்றாண்டு காலகட்டத்தில் தான். 1903இல் எஸ்.என்.டி.பி.யோகமும் 1907இல் அய்யன்காளியின் சாதுஜன பரிபாலன சங்கமும் உருவாக்கப்பட்டன.

ஒழுங்குப்படுத்தப்பட்ட செயல்நிரலும் அவற்றை வென்றெடுப்பதற்கான அமைப்பு முறையிலான போராட்ட வழிகளும் என்கிற நவீன பொதுப் பிராந்திய குடிமைச் சமூகக் கண்ணோட்டத்தைக் கொண்ட ஒன்றிணைக்கப்பட்ட யுகம் கேரளத்தில் உதயமாகிறது. அதன் அங்கமாக, மேலும் வலிமையுடன் ஜனநாயகப் போராட்டங்கள் உருவாகி தெளிந்த சித்தாந்த ரீதியாக போராட்ட முறைகள் மனித உரிமை பிரச்சினைகளுக்காக ஏற்கப்பட்டது.

பொய்கையில் அப்பச்சன் 1909இல் பிரத்யக்ஷா தெய்வசபையை நிறுவினார். பின்னர், விளக்கித்தல நாயர் சமாஜம் 1899லேயே உருவாகியிருந்தது. 1903இல் கிருஷ்ணபிள்ளையின் தலைமையில் திருவிதாங்கூர் நாயர் சமாஜமும் பின்னர் 1905இல் கேரளிய நாயர் சமாஜமும் உருவானது. காவாரிகுளம் கண்டன் குமாரன் என்ற கல்வியியலாளர் 1913இல் பிரம்ம பிரத்யக்ஷா சாதுஜன பறையர் மகாசபையை உருவாக்கினார்.

நிலத்தில் நிகழ்ச்சிகள் நடத்த தடைவிதிக்கப்பட்ட போது கொச்சிக் காயலில் படகுகளைச் சேர்த்துக் கட்டி அவற்றின் மீது பொதுக்கூட்டத்தை நடத்தி, கொச்சி புலைய ஜன மகாசபை உருவானது. 1914இல் நாயர் சர்வீஸ் சொசைட்டி உருவானது. 1917இல் சகோதரன் அய்யப்பன் சகோதர சங்கம் என்கிற அமைப்பை உருவாக்கினார். திருவிதாங்கூர் சேரமர் மகாசபையை பாம்பாடி ஜான் ஜோசப் உருவாக்கினார்.

1907இல் பண்டிட் கருப்பன் அரய சமாஜத்தையும் பின்னர் 1922இல் அகில கேரள அரய மகாசபையையும் நிறுவினார். காயல் சம்மேளனத்திற்கும் புலைய மகாசபை உருவாக்கத்திற்கும் தலைமையேற்ற பண்டிட் கருப்பன் 1910இல் வால சமுதாயப் பரிஷ்கரிணி சபையை நிறுவினார். மேலும் கல்யாணதாயினி சபை, ஞானோதய சபை போன்ற பல சங்கங்களை அக்காலத்தில் உருவாக்கினார்.

1880இல் மேல்சாதிக்காரர்களின் தலைமையில் மலையாளி சபை உருவான போதிலும் போராட்ட வீரியம் கொண்ட அரசியல் முறையிலான அமைப்பு இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் உருவாகிறது. இவற்றில் பெரும்பாலானவை தலித், தாழ்த்தப்பட்டவர்களின் அமைப்புகள் ஆகும்.

1920களின் இறுதியில் தனது அறிவுசார்ந்த கொடைகளின் பலனாக விளைந்த இந்தப் பெரும் தொடக்கங்களை நினைவுகூர்ந்து "கல்வியின் மூலம் விழித்தெழுங்கள். அமைப்பின் மூலம் வலிமை பெறுங்கள்." என்கிற செய்தியை நாராயணகுரு வழங்குகிறார்.

குடியுரிமை எழுச்சி, வைக்கம் சத்தியாகிரகம், புறக்கணிப்புப் போராட்டம், பத்திரிகை சுதந்திரப் போரட்டம் போன்ற எண்ணற்ற போராட்டங்கள் அந்தப் பத்தாண்டுகளில் அரசியல் மிச்சங்களாக நிலைகொள்கின்றன. இப்போராட்டங்களில் வெகுவாக நினைவுகூரத் தக்கதும் விவாதிக்கப்படுவதும் வைக்கம் சத்தியாகிரகம் என்பது தற்செயலானது அல்ல. அதற்குப் பின்னால் பிற்கால கேரள அரசியல் சமூக உருவாக்கத்தின் சில வரலாற்று மாதிரிகள் செயல்பட்டுள்ளன.

வைக்கம் சத்தியாகிரகத்தின் நூறாவது ஆண்டைக் கொண்டாடும் வேளையில் அந்த வரலாற்று ஊற்றுகளைத் தேட முனைவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

### வைக்கம் சத்தியாகிரகம் என்கிற அரசியல் புதிர்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளில் கேரளத்தில் நிகழ்ந்த பிற போராட்டங்களிலிருந்து மாறுபட்டது வைக்கம் சத்தியாகிரகம். வைக்கம் சத்தியாகிரகத்திற்கு மலபார் கலகம் போல தெளிவு கொண்ட சில கேரள வரலாற்றுப் பின்புலங்கள் இருந்தாலும் கூட ஒரு நாடு தழுவிய சந்தர்ப்பச் சூழல் இருந்தது.

கேரளத்தின் தலித், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் செயல்பாடுகளும், குறிப்பாக குமாரன் ஆசான், அய்யன்காளி, கண்டன்

குமாரன் போன்றவர்களின் தலையீடுகளின் முக்கிய இலக்கும் கல்வி உரிமைகளைப் பெறுவதாக இருந்தது. நாராயணகுரு கோவில்களை நிறுவி, பிரதிஷ்டை செய்து, தாழ்த்தப்பட்டவர்களின் தெய்வங்களைப் புறந்தள்ளி இந்து தெய்வங்களை வழிபட ஊக்குவித்தார். எனினும் கண்டன் குமாரன், அய்யன்காளி, குமாரன் ஆசான் போன்றவர்கள் ஆட்சியமைப்பை முழுவதுமாக எதிர்த்தும் சமரசம் செய்தும் கேரளத்தில் ஜனநாயக உணர்வைக் கொண்ட பொதுப் பிராந்தியத்தையும் குடிமைச் சமுதாயத்தையும் உருவாக்க முனைந்தார்கள். இதற்கு உதவும் நோக்கில் பொதுவழிகளில் நடமாடும் சுதந்திரத்தையும் கல்விக்கூடங்களில் நுழைவதற்கான சுதந்திரத்தையும் பெற தாங்கள் சார்ந்த சமுதாயத்தின் அங்கீகாரத்தையும் மக்கள் சபையில் பிரதிநிதித்துவத்தையும் பெருமளவில் பயன்படுத்தினார்கள்.

இந்தப் பின்னணியில் தான், வைக்கம் கோவிலைச் சுற்றியுள்ள வழிகளில் நடக்க தடை விதித்து வைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகைகளை அகற்ற வேண்டுமென குமாரன் ஆசான் மக்கள் சபையில் கோரிக்கை வைத்தார். ஆனால், இச்செயல்பாடுகள் அகில இந்தியத் தளத்தில் கவனம் பெற வேண்டுமெனில் தேசிய அமைப்புடன் இவற்றைப் பிணைக்க வேண்டும் என்கிற நம்பிக்கையை டி.கே.மாதவன் கொண்டிருந்தார். காந்தியடிகள் காங்கிரஸின் தேசியத் தலைமையை ஏற்றுக் கொண்ட 1920களின் இரண்டாம் பாதியில் அத்தகையதொரு செயல்நிரலை உருவாக்கி அதற்காகப் பாடுபட்டவர் டி.கே.மாதவன்.

அதையொட்டி, தளவாகுளம் படுகொலை என்கிற சம்பவத்தை பற்றிய நினைவுகள் 1920களில் தீர்க்கமாக எழுந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், வைக்கம் கோவிலின் அருகிலுள்ள வழிகளில் நடக்க அனுமதி மறுக்கப்பட்டதை மீற, ஈழவ இளைஞர்கள் முடிவு செய்தார்கள்.

அந்தத் திட்டத்தை வேலுதம்பி தளவா என்பவரால் ஏவப்பட்ட பத்மநாபபிள்ளை தலைமையிலான கூலிப்படை தடுத்தது. பேரணியில் பங்கேற்ற இருபதுக்கு மேற்பட்ட இளைஞர்களை இரக்கமின்றி வெட்டிக் கொன்று கோவிலின் அருகிலுள்ள குளத்தில் அமிழ்த்திய நிகழ்ச்சி ‘தளவாகுளம் படுகொலை’ என்று அறியப்படுகிறது. ஆனால், தளவாகுளம் படுகொலை உண்மைச் சம்பவமா அல்லது கட்டுக்கதையா என்கிற விவாதம் தொடர்ந்தது.

என்.என்.டி.பி இன் பொதுச் செயலாளரும் வைக்கத்தைச் சேர்ந்தவருமான கே.ஆர்.நாராயணன் விவேகோதயம் இதழ் 1968இன் சிறப்புப் பதிப்பில் தீண்டாமையை ஒழிக்க வைக்கத்தில் நடந்தேறிய முயற்சிகளின் வாய்மொழி வரலாற்றுப் படைப்புப் பின்னணியில் கட்டுரை எழுதினார்.

தலித்பந்து என்.கே.ஜோஸ் அவர்களின் (தளவாகுளமும் வைக்கம் கிறிஸ்தவர்களும் ஹோபி புக்ஸ் 2006) என்ற புத்தகம், 1924இன் எஸ்.என்.டி.பி யின் 21வது ஆண்டறிக்கையிலும் கேரள கௌமுதி அறிக்கை (மே 24, 1924) போன்றவை இச்சம்பவத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவான தாழ்த்தப்பட்டவர்களின் எழுச்சிப் பின்னணியில் இச்சம்பவத்தைப் பற்றிய விவாதங்கள் முதலில் உயிர்ப்படைகின்றன. இது பொய்வரலாறு என்று கூறுவதாகப் பலரும் குறிப்பிடுகிறார்கள். குமாரன் ஆசான் உட்பட்ட பலருக்குத் தூண்டுதலாக இருந்த ஒரு போராட்ட நினைவைப் பொய்வரலாறாக ஒதுக்கிவிட இயலாது.

வைக்கம் சத்தியாகிரகத்திற்குத் தூண்டுதலாக இருந்த ஒரு முக்கிய விஷயம், கேரளத் தாழ்த்தப்பட்டவர்களின் தலைமை உணர்வுப்பூர்வமாக இந்தப் பிரச்சினையை விவாதமாக்குகிறது என்பதுதான். காரணம் இருபதுகளின் தொடக்கத்தில் சட்டென இந்தப் பிரச்சினை மீண்டும் கேரளத்தின் பொதுப் பிராந்தியத்தில் விவாதப் பொருளாக்க வேறு யாருக்கும் அக்கறை இருக்கவில்லை.

1923இல் வடயாற்றில் குமாரன் ஆசானின் தலைமையில் கூடிய ஒரு கூட்டத்தில் தறயில் கிருஷ்ண பிள்ளை வக்கீல் என்பவர் ‘தளவாகுளம்’ சம்பவத்தைப்பற்றி குறிப்பிடுகிறார். அதற்கு எதிர்வினையாற்றிய குமாரன் ஆசான் ‘மயிர்கூச்செறிய செய்யும் வீர வரலாறு’ என்று சிறப்பிக்கிறார். ‘அரிய சிந்தனையைக் கொண்ட அந்த அபிமானத்திற்குரியர்களின் எலும்புகளை அந்தக் குளத்திலிருந்து தோண்டியெடுத்துப் பூஜிக்கலாம். அந்த அளவுக்குத் தகுதியைப் படைத்தவர்கள் அவர்கள்’ என்று அவர் கூறியதாக கே.ஆர்.நாராயணன் எழுதியிருக்கிறார்.

இந்த சம்பவத்தைப் பற்றி வைக்கத்தில் நடப்பிலிருந்த ஒரு பாடலை டி.கே.மாதவன் தேசாபிமானி பத்திரிகையில் 1924இல் பிரசுரித்துள்ளார். நேர்மறையாளர்களான வரலாற்றாசிரியர்கள் இத்தகைய பாடல்களையோ



வாய்மொழி வரலாற்றையோ சான்றுகளாகக் கணக்கிடுவதில்லை. அரசாங்கம், காலனியவாதிகள் ஆகியோரின் ஆவணங்களுக்கு வெளியே இருப்பவை எதையும் அவர்கள் ஏற்கமாட்டார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களின் வரலாற்றுப் படைப்பின் அறிவார்ந்த அகப்பார்வைகள் அவர்களுக்கு அணுக முடியாததாகவும் தொடக்கூடாததாகவும் உள்ளன. ஆனால், வைக்கம் சத்தியாகிரகத்தின் பின்னணி ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் தொள்ளாயிரத்து இருபதுகளின் தொடக்கத்தில் இதைப் பற்றிய விவாதங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன என்பதற்கான யதார்த்தம் நம்மெதிரில் உள்ளது. வைக்கம் கோவிலின் அருகிலுள்ள வழிகளில் நடப்பதற்கான உரிமையுடன் தொடர்புடைய வாய்மொழி புழக்கத்தைக் கொண்ட நினைவுகளில் தொடங்கிய தாழ்த்தப்பட்டவர்களின் ஒரு முக்கிய விவாதமே தளவாகுளம் படுகொலைச் சம்பவம்.

அதாவது தளவாகுளம் நிகழ்ச்சியைப் பற்றிய இந்நினைவுகளுடன் தொடர்புப்படுத்தாமல் வைக்கம் சத்தியாகிரகத்தைப் பற்றிச் சிந்திக்கவே இயலாது எனலாம். முழுவதுமாக காந்திய அர்த்தத்தைக் கொண்ட மேல்சாதி – தலித் ஆகியோர்களிடையே செறிவூட்டப்பட்ட போராட்டமாக வைக்கம் கோவில் நுழைவுப் போராட்டம் தொடங்கப்படவில்லை. அது ஒடுக்கப்பட்ட கீழ்ச்சாதி வகுப்பினரின் சுதந்திர மோகத்தை விழிப்படைய வைப்பதற்கான தொடக்கமாகும்.

## காந்தியடிகளும் நாராயணகுருவும்

காந்தியடிகளின் தலைமையீட்டுக்குப் பிறகு போராட்டம் தேசிய கவனத்தைப் பெற்றது. டி.கே.மாதவன் விரும்பியதைப்போலவே கேரளத்தின் தீண்டாமைப் பிரச்சினையை நாடு தழுவிய அரசியல் மைய நீரோட்டம் விவாதிக்கத் தொடங்கியது. ஆனால், போராட்டத்தின் கட்டுப்பாடு, கிட்டத்தட்ட முழுமையாகக் காந்தியடிகளின் கையில் இருந்தது. போராட்டத்தின் பங்களிப்பு யார்யாருக்கு எவ்விதங்களில் இருக்க வேண்டுமென்பதை அவர் தீர்மானித்தார்.

ஜார்ஜ் ஜோசப்பையும் அகாலிகளையும் போராட்டக் களத்திலிருந்து விலகி நிற்க வைக்க அவரால் இயன்றது. சர்தார் கே.எம்.பணிக்கர் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் கிறிஸ்தவராக விளங்கும் ஜார்ஜ் ஜோசப் பங்கேற்பது சரியல்ல என்பதைக் காந்தியடிகளுக்கு உணர்த்தியவர் என்று ஜார்ஜ் கீவர்கீஸ் ஜோசப் கூறுகிறார். (George Gheverghese George Joseph: The Life and Times of a Kerala Christian Nationalist. Hyderabad: Orient Longman 2003).

ஆனால், அவரது ஆதிக்கம் போராட்டத்தையே ஆபத்துக்குள்ளாக்கக் கூடியதாக இருந்தது. இது புறக்கணிக்கக் கூடிய காரியம் அல்ல. சத்தியாகிரகம் தொடங்கி சிலநாட்கள் கடந்தபோது போராட்டத்தை உடனடியாக நிறுத்தி வைக்குமாறு கே.பி.கேசவ மேனனுக்கு காந்தியடிகள் தந்தி அனுப்பினார். அவரை அனுசரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அவர்களின் அனுமதியின்றி தலித்துகளுக்காக இதைத் திறந்து தரக்கூடாதென சிவராம அய்யர், வஞ்சிஸ்வர அய்யர் ஆகிய இரண்டு நபர்கள் தெரிவித்திருந்தார்கள். இவைதான் போராட்டத்தை நிறுத்தி வைக்க காந்தியடிகள் கூறிய காரணம்.

பிராமணர் அல்லாதவர்கள் தற்போது அந்த வழியில் நடக்கிறார்கள் என்றும் ஆனால் தலித்துகளுக்குத் தற்போதைக்கு வழியைத் திறந்து தரக் கூடாதென்று அவர்கள் தெரிவித்ததாக காந்தியடிகள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அவர்களின் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் தந்து, போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தவேண்டும். இரண்டு மாதத்திற்குப் பிறகு மதன் மோகன் மாளவியா வருகிறார். அவரை மத்தியஸ்தராகக் கொண்டு பிரச்சினையை விவாதிக்கலாம் என்பது காந்தியின் செய்திச் சுருக்கம். 1924 ஏப்ரல் 8ஆம் தேதி இந்தக் கடிதத்தை மாத்ருபூமி பதிப்பித்தது.

ஒரு பிரதேசத்தின் மக்கள் ஒன்றுதிரண்டு, பல வருடங்கள் ஆயத்தம் செய்து தொடங்கிய ஒரு சமூகப் போராட்டம், அறியாமையைக் கொண்ட இருவரின் தகவலை அடிப்படையாகக் கொண்டு வெகு தொலைவில் இருந்தபடி போராட்டத்தை நிறுத்தி வைக்கச் சொன்னதில் அவருக்கு எந்தத் தயக்கமும் இருக்கவில்லை. இத்தகைய சில விசித்திரமான சத்தியவேட்கைகள் அவரது அடையாளமாக இருந்தன. அவற்றின் ஒருதலைப்பட்சம் நம்மை பலமுறை கவலையடைய வைக்கிறது. பலருக்கு இவை உவப்பாக இருப்பதை நான் மறந்து விடவில்லை. ஆனால் இது முனிசிபல் வழி என்றும், காந்தியடிகளுக்கு கிடைத்தது தவறான தகவல் என்றும் கே.பி.கேசவ மேனோன் சான்றுடன் உணர்த்தினார்.

1924 ஏப்ரல் 7ஆம் தேதி போராட்டத்தை மீண்டும் தொடங்க காந்தியடிகள் அனுமதி வழங்கினார். பிற சாதியினர் அனுமதியின்றிப் பிரவேசிக்கக் கூடாது



என்கிற நிலைப்பாடு காந்தியடிகளின் அறிவுரையில் கச்சிதமாகத் தெளிந்து வருகிறது. அம்பேத்கரின் காந்தி விமர்சனங்களின் சாராம்சத்தைப் புரிந்து கொள்ள இந்தத் தலையீடு உதவக்கூடிய ஒன்று. இச்சம்பவம் போராட்டத்தின் மீது ஏற்படுத்திய கடும் காயத்தை ஆற்ற அன்றைய தினம் டி.கே.மாதவனும் கே.பி.கேசவ மேனோனும் தொண்டர்களாகப் பங்கேற்றுக் கைதனார்கள். போராட்ட செயல்பாட்டாளர்களின் மனவுறுதியை திடப்படுத்த அதைத் தவிர வேறு வழிகள் இருக்கவில்லை.

ஸ்ரீநாராயண குரு போராட்டத்திற்கு வழங்கிய பக்கபலம் வரம்பைக் கடந்ததாக இருந்தது. போராட்டம் வெற்றியடைய வேண்டும் என்கிற உணர்வு மட்டுமே அவரை வழிநடத்தியது என்பது தெளிவு. அவர் போராட்டத்தை வேறெந்த செயல்நிரலின் பகுதியாகவும் கண்ணுறவில்லை. எனவே, முன் நிபந்தனைகளோ குறுக்கீடுகளோ இல்லாமல் முதலிலிருந்து கடைசி வரை தனது தார்மீகமும் பௌதீகமும் நிறைந்த ஊக்கத்தை வழங்கிக் கொண்டே இருந்தார்.

பெரியதொரு தொகையைத் தனிப்பட்ட முறையில் நன்கொடையாக வழங்கினார். வெள்ளூர் மடத்தைச் சத்தியாகிரகத்திற்காக விட்டுக் கொடுத்தார். சிவகிரியில் போராட்ட உதவி நிதி உண்டியலை வைத்தார். போராட்டம் மோதல் போக்கை எட்டியபோது வன்முறை தவறில்லை என்கிற அரசியல் வலிமையை வழங்கினார். நேரடியாகப் போராட்டக் களத்திற்கு வந்து அதன் வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்தார். அவர் அருவிப்புரத்தில் தொடங்கிய அரசியல் அறிவுசார் போராட்டம் அதனுடைய பகுத்தறிவு சார்ந்த முழுமையை எட்டும் முகூர்த்தமாக வைக்கம் சத்தியாகிரகத்தை அவர் குறிப்பிடவில்லை.

எனினும், அது வரலாற்று மாணவர்களால் புறக்கணிக்கக் கூடிய காரணி அல்ல. அதைப் போலவே போராட்டத்துடனான அரசியல் நிலைப்பாட்டின் காரணமாக ஏராளமானவர்கள் பங்கெடுக்க முன்வந்தார்கள்.

ஜார்ஜ் ஜோசப்பையும், அகாலிகளையும் தவிர தமிழ்நாட்டிலிருந்து ஈ.வெ.ரா.வும் அய்யா முத்து கவுண்டரும் எம்பெருமாள் நாயுடுவும் என பலர் பங்கேற்றார்கள். மன்னத்து பத்மநாபன் வடக்கு மேல்சாதி பேரணியை நடத்தியபோது சுசீந்திரத்திலிருந்து தெற்கு பேரணியை எம்பெருமாள் நாயுடு வழிநடத்தினார். சீக்கியர்களுடன் நிறைய இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் மதநம்பிக்கையாளர்களும் சத்தியாகிரகத்திற்கு ஆதரவு தெரிவித்து இணைந்தார்கள். ஆனால், இவர்கள் போராட்டத்தில் கலந்து கொள்வது சரியல்ல என்கிற காந்தியடிகளின் கடுமையான நிலைப்பாடு வருத்தம் தருவதாக இருந்தது. ஆனால், அவர்கள் வருகை தந்து போராட்டத்திற்கு ஆதரவளித்ததைத் திரும்பிப் பார்க்கும்போது இப்போராட்டம் மிகுந்த அரசியல் முக்கியத்துவம் கொண்டதாக மாற்றியது.

அன்று உருவான இந்த விரிந்த முன்னணியின் முக்கியத்துவம் ஒதுக்க இயலாத ஒன்று. இந்துக்களின்

உதவியை மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற கடும் அறிவுறுத்தலை காந்தி வழங்கினார். அகாலிகள் வேற்றுமதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் தரும் இலவச உணவை ஏற்றுக் கொள்ளக் கூடாதென காந்தியடிகள் கூறியிருந்தார். (அகாலிகளுடன் சமபந்தி போஜனத்திற்கு காந்தி எதிராக இருக்கவில்லை. அவர்களின் இலவசத்தை இந்துக்கள் ஏற்பதையே எதிர்த்தார்.) காந்தியடிகளின் வேண்டுகோளின்படி அகாலிகள் சத்தியாகிரகிகளுக்காகத் திறந்த உணவுக்கூடத்தை இழுத்து மூடினார்கள். ஆனால், காந்தியடிகளால் அந்த உணவுகூடத்தை மூட இயலவில்லை. அவர்கள் எடுத்து வந்த சப்பாத்தி கேரளம் முழுவதும் பரவியது என்று நம்பப்பட்டது. அந்த நட்பின் அரசியல் இன்றும் பிரபலத்துடன் தொடர்கிறது. அகாலிகளின் அந்தச் சமையலறையை ஈழவப் பெண்களின் தலைமையிலான எஸ்.என்.டி.பி அமைப்பு எடுத்துக் கொண்டது. அதற்கு (ஸ்ரீநாராயணகுரு உணவுக்கூடம், என்று பெயரிடப்பட்டது) போராட்ட வரலாற்றில் நினைவுகூர வேண்டிய ஒன்று.

### தந்தை பெரியாரும் பெண்களின் பங்களிப்பும்

வைக்கம் சத்தியாகிரகத்தைப் பொருத்தவரை மிக முக்கிய பங்களிப்பை வழங்கியவர் தந்தை பெரியார். போராட்டத்தின் உளவியலை முற்றிலும் மாற்றியமைத்து பெரியார் களத்தில் நுழைகிறார். அது ஏற்படுத்திய ஆவேசத்தை வேறு யாராலும் உருவாக்க இயலவில்லை. ஈ.வெ.ரா.வை போலீஸ் கைது செய்து கூட்டிப் போன நடவடிக்கை மிகுந்த எதிர்ப்புக்கு உள்ளானது. 1924 ஆகஸ்ட் 1ஆம் தேதி ‘பௌர பிரபா’ இதழ் அதைப் பற்றி விமர்சன நோக்கில் எழுதியிருந்தது. போராட்டத்தை வன்முறையால் ஒடுக்க மாட்டோம் என்றும் கைது நடவடிக்கை இருக்காது என்றும் கூறிய அரசாங்கம் ஈ.வெ.ரா.விடம் கடுமையாக நடந்து கொண்டதாகப் பத்திரிகை எழுதியது. அவரை வைக்கத்திலிருந்து நீண்டூர் என்னுமிடத்திற்குப் படகில் அழைத்துச் சென்றார்கள்.





அங்கிருந்து நடக்க வைத்து கோட்டயத்திற்கு கொண்டு போனார்கள். வைக்கத்திலிருந்து நேரடியாக படகில் அழைத்துச் செல்லாமல் போலீஸ் வேண்டுமென்றே கொடுமைப்படுத்தியதாக விமர்சனம் எழுந்தது. முதலில் சாதாரண கைதும் பின்னர் கடுங்காவல் தண்டனையும் பெரியாருக்கு விதிக்கப்பட்டது.

பெரியாரின் வருகை, போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கக் காரணமானது. அவர் போராட்டத்திற்குத் தனியாக வரவில்லை. மனைவி நாகம்மையையும் சகோதரி கண்ணம்மாவையும் அழைத்து வந்திருந்தார். அத்துடன் சத்தியாகிரகிகளின் உறவுக்காரப் பெண்கள் போராட்டத்தில் பெருமளவில் பங்கேற்கத் தொடங்கினார்கள். ஒரே நாளில் சேர்த்தலாவிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட பெண்களைத் தொண்டர்களாகத் திரட்டியதாக மீரா வேலாயுதன் கூறுகிறார். (Meea Velayudhan, ‘The Growth of Political Consciousness amoung Women in Modern Kerala,’ in Kerala State Gazetteer, Vol.2 part.1, 1999).

அகாலிகள் கிளம்பிச் சென்றதும் உணவுக்கூடத்தின் பொறுப்பை பெண்கள் ஏற்றுக் கொண்டார்கள். பிடியரிசியைத் திரட்டித் தாங்கள் இந்தப் போராட்டத்தை நிலைநிறுத்தியதாக வடக்கேசெரிவில் பி.கே.கல்யாணி அன்று மனோரமா பத்திரிகையில் எழுதிய கட்டுரையை (கேரள இந்துப் பெண்களிடம் ஒரு வேண்டுகோள் மலையாள மனோரமா 24 ஜூலை 1924) ஜே.தேவிகா மொழியாக்கம் செய்து தனது இணையத்தளமான சுதந்திர வாதினியில் பதிவேற்றியுள்ளார். (https://swatantryavaadini.in/2020/08/25/an-appeal-to-the-hindu-women-of-kerala-vatakkecharuvil-p-k-kalyani/).

ஈ.வெ.ரா.வின் மனைவி நாகம்மை மழையையும் குளிரையும் பொருட்படுத்தாமல் போராட்டக்களத்தில் நின்றதாக பி.கே.கல்யாணி குறிப்பிடுகிறார். ஒரேயொரு மேல்சாதிப் பெண் கூட

இதுவரை போராட்டத்தில் பங்கேற்கவரவில்லை. இது எவ்வளவு வெட்கக்கேடான செயல் என்று அவர்கள் உணரவில்லை. (Devika, 'Her-self', Stree/Samya, Kolkata,2005).

வைக்கம் சத்தியாகிரகத்தில் கீழ்சாதிப் பெண்களின் பங்களிப்பை மேலும் ஆழமாகச் சோதிப்பது அவசியம். இத்தகைய போராட்டங்களில் ஆண்களின் பங்களிப்பை மட்டும் முன்னிலைப்படுத்திச் சுருக்குவதை ஏற்க இயலாது. போராட்டத்திற்குப் பின்னால் துணை நிற்பதற்கும் போராட்டக்களத்தில் பங்கேற்று கைதாவதற்கும் 1920களிலேயே பெண்கள் முன்வந்தார்கள் என்பது எளிய காரியமன்று. ஆனால், இந்தப் பங்களிப்பின் சூழல்களையும் சமூக முரண்களையும் வரலாற்று உறுதியின்மைகளையும் அவற்றின் சிக்கல்களையும் புரிந்து கொள்வது அவசியம்.

நடமாடும் சுதந்திரம் பதிலின்றி நீண்டபோது சமரச பேச்சுவார்த்தைகளுக்காக காந்தியடிகள் நேரில் வருகை தந்தார். 1925 மார்ச் 10ஆம் தேதி காந்தியடிகள் இண்டம்துருத்தி மனைக்கு வந்தார். கோவில் நிருவாகிகளாக இருந்த நம்பூதிரிகளிடம் பேசினார். காந்தியடிகளை மனைக்குள் அனுமதிக்கவில்லை. மூன்று மணிநேரம் வெளியே அமர வைத்து உரையாடினார்கள்.

காந்தியடிகள் முன்வைத்த மூன்று அறிவுரைகளை இண்டம்துருத்தி நம்பூதிரி நிராகரித்தார். பல அடுக்குகளைக் கொண்ட அரசியல் பாடங்களைப் புரிந்து கொள்ள உதவும் இப்போராட்டம் வெற்றிகரமாக நிறைவுற காந்தியடிகள் நடத்திய முயற்சிகள் ஓரளவு மட்டுமே இலக்கை எட்டின. 1925 மார்ச் 12ஆம் தேதி வர்க்கலாவில் மகாராணியைச் சந்தித்தார். கீழ்ச்சாதிக்காரர்கள் மீது பெரும் கரிசனம் இருந்தபோதிலும் மேல்சாதி இந்துக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய கடமை தமக்கிருப்பதாக மகாராணி கூறினார். காந்தியடிகள் வெறும் கையுடன் திரும்பினார்.

வைக்கம் சத்தியாகிரகம் அது முன்வைத்த தேவைகளில் சிலவற்றை அங்கீகரிக்கப்பட்ட பின்பு திரும்பப் பெறப்பட்டது. கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் பயன்படுத்தும் கோயில் அருகிலுள்ள பாதைகள் எல்லோருக்கும் திறந்து தரப்பட்டது. ஆனால் கோவில் பகுதியில் அமைந்துள்ள பாதை மேல்சாதிக்காரர்களுக்கானது என்பதில் எந்த மாற்றமும் இல்லை. கோவிலின் கிழக்குப்பாதை மேல்சாதிக்கார்களுக்கு மட்டும் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. இது தொடர்பாக ராணியின் அறிக்கை வெளியானதும் 1925 நவம்பர் 23ஆம் தேதி போராட்டம் முடிவுக்கு வந்தது.

அறுநூறு நாட்கள் தொடர்ந்த போராட்டம் வெற்றித் தோல்விகளின் தராசில் எடைபோட இயலாத குழப்பங்களையே கேரள வரலாற்றுக்குப் பரிசளித்தது. இருப்பினும் வைக்கம் சத்தியாகிரகம் நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த கேரளத்தின் சாதி எதிர்ப்பு அறிவார்ந்த அரசியல் பாரம்பரியத்தின் குறியீடாகப் புரிந்து கொள்ளத் தொடங்கியது என்பது எளிய விஷயமன்று. மேல்சாதிக்காரர்களின் ஒரு பெரும்பிரிவைக் காங்கிரசுக்கும் பின்னர் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் எடுத்து வருவதில் வைக்கம் போராட்டம் போன்ற கோயில் நுழைவுப் போராட்டங்கள் பெரும் பங்காற்றியுள்ளன. பின்னர், தலித் போராட்டங்கள் ஓரங்கட்டப்பட்டன.

எனினும் வைக்கம் போராட்டத்திற்கு உந்துசக்தியாக விளங்கிய கேரளத்தின் சாதி எதிர்ப்பு, தலித், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் வரலாற்று ஊற்று பலவழிகளில் தவழ்ந்து கேரளத்தின் குடிமைச் சமூகத்தின் கட்டமைப்புக்கு காரணமானது. கேரளத்தின் கலாச்சாரக் கட்டமைப்பு இப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த யதார்த்தத்திற்காக நம்மை தூய்மைப்படுத்தக் கூடிய பெரியதொரு மரபு, பல தளங்களிலிருந்து எழுந்து வைக்கம் சத்யாகிரகத்தின் நூற்றாண்டு, வரலாற்று நினைவுகளாக உள்வாங்கப்படுகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்வது அவசியம்.

**முனைவர் டி.டி.ஸ்ரீகுமார்:**

**பதினைந்துக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். மாத்யமம் இதழில் இவர் எழுதிய நான்காம் கண் என்ற தொடர் பிரபலமடைந்தது. ஐதராபாத்திலுள்ள ஆங்கிலம் மற்றும் அயலக மொழிகள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். கேரள சாகித்ய அகாதெமியின் அறக்கொடை விருதைப் பெற்றவர்.**

**தமிழாக்கம்: நிர்மால்யா**





# கேரள மறுமலர்ச்சியில் தமிழ் மரபின் வேர்கள்

**வை**க்கம் சத்தியாகிரகம் சட்டென எழுந்த ஒரு போராட்டம் அன்று. ஒன்றேகால் நூற்றாண்டுகளாகத் தொடர் கருத்துப் பரப்புரையும் அதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட அறிவார்ந்த அடித்தளமும் அதற்குண்டு. ஐநூறு வருடங்களுக்கு முன்பு துஞ்சத்து எழுத்தச்சன் எழுதிய அத்யாத்ம ராமாயணம் கிளிப்பாட்டில் அதனுடைய வேர்கள் உள்ளன.

**பிராஹ்மணோஹம் நரேந்ரோஹமட்யோஹ**
**மென்னாம்ரேடிதம் கலர்ன்னீடும் தசாந்தரே...**

எனத் தொடங்கும் வரிகளில் தீண்டாமைக்கு எதிரான முதல் தீப்பொறி வெடித்தது. பின்னர் பழச்சி ராஜாவின் தலைமையில் மலபாரில் நடந்த பிரிட்டிஷ் எதிர்ப்புக் கலகம் தீண்டாமை ஒழிப்பின் அவசியத்தைச் சொல்லாமல் சொல்கிறது. 1809இல் தென் திருவிதாங்கூரில் பிறந்த அய்யா வைகுண்ட சுவாமியின் சமத்துவ இயக்கத்தில் தீண்டாமைக்கு எதிராக எதிர்பார்ப்பு மிக்க தலையீடுகள் நிகழ்ந்தன. தமிழ்நாட்டின் குருமரபைச் சேர்ந்த திருமூலரின் கொள்கைகள், அய்யா வைகுண்ட சுவாமிகளுக்கு உந்துதலைத் தந்தன.

திருவிதாங்கூர் அரண்மனையில் முக்கிய அலுவலராகப் பணியாற்றி வந்த தைக்காடு அய்யாவு சுவாமிகள், இந்த இரண்டாம் மறுமலர்ச்சியில் இரண்டாவதாக



# வைக்கம் சத்தியாகிரகம் பின்னணியில் ஒரு பார்வை



ரவி வர்மா தம்புரான்

எழுந்து வந்த ஆசான். தமிழ்நாட்டில் சைவ வெள்ளாளர்களுக்கிடையில் காணப்பட்ட சில உயரிய சிந்தனைத்துளிகள் அவருக்குத் தூண்டுதலை அளித்தன.

சட்டம்பி சுவாமியும் ஸ்ரீ நாராயணகுருவும் அய்யாவு சுவாமியின் சீடர்களாக இருந்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருத்துவமலையில் இவர்கள் இருவரும் தவம் செய்து ஞானோதயம் பெற்றார்கள். அய்யா வைகுண்ட சுவாமி தவமிருந்து ஞானசித்தி பெற்றதும் இவ்விடத்தில்தான். நாயர் சமுதாயத்தில் பிறந்த சட்டம்பி சுவாமியும் ஈழவச் சமுதாயத்தில் பிறந்த ஸ்ரீ நாராயண குருவும் ஒருதாய் பிள்ளைகளைப்போல தத்தமது சமுதாயங்களில் சீர்திருத்தச் சிகிச்சைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களின் மூலமாக மலையாள நாட்டில் மறுமலர்ச்சி செயல்பாடு மேலும் படர்ந்து விரிந்தது.

தொடர்ந்து வெவ்வேறு சமுதாயங்களிலிருந்து சீர்திருத்தச் சிந்தனைகளுடன் பல மகான்கள் பிறந்தார்கள். அவர்கள் சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும் என்கிற பெரும்பணியை ஏற்று ஓய்வின்றி உழைத்தார்கள். இந்த மகான்களுக்கிடையில் விவரிக்கவியலா வண்ணம் ஆத்மபந்தமும் நட்பும் தழைத்து வந்ததால் மறுமலர்ச்சிச் செயல்பாடு சமுதாயங்களுக்கிடையிலான மோதலாக எழாமல் எல்லாச் சமுதாயங்களிலும், கிட்டத்தட்ட ஒரே காலகட்டத்தில் நிகழ்ந்த சீர்திருத்தச் செயல்பாடுகளாக மாறின.


அய்யா வைகுண்ட சுவாமிகள்


அய்யாவு சுவாமிகள்


சட்டம்பி சுவாமி


ஸ்ரீ நாராயண குரு

எப்போதேனும் சமுதாய மோதல்கள் எழுவதற்கான சூழல் உருவானபோது, மறுமலர்ச்சி நாயகர்களின் ஒன்றிணைந்த பணிகளால் மோதல்கள் பலவீனமடைந்தன. சீர்திருத்த நதியோட்டம் வேகமெடுத்தது. மகாத்மா அய்யன்காளி, ஆறாட்டுபுழா வேலாயுதப் பணிக்கர், வி.டி.பட்டதிரிப்பாடு, கேரள வர்மா வலியகோயி தம்புரான், மூலூர் எஸ்.பத்மநாபப் பணிக்கர், குமாரன் ஆசான் போன்ற பல சீர்திருத்தவாதிகளின் மூலமாகத் தீண்டாமை என்பது ஒரு மூடநம்பிக்கை என்கிற எண்ணம் சமுதாயத்தில் முக்கியத்துவம் பெற்றது. மாற்றங்களுக்கான பாதை அமைத்தது.

பல எழுத்தாளர்கள் தமது படைப்புகளின் ஊடாகத் தீண்டாமையுடனும் சாதி வேற்றுமையுடனும் போராடினார்கள். 1921இல் நடந்த மலபார் கலகத்தைப் பின்னணியாக்கி குமாரன் ஆசான் எழுதிய துர்அவஸ்தா என்கிற குறுங்காவியத்தின் வரிகள் எல்லோரும் முணுமுணுக்கும் முழக்க வாசகம் போல விரைந்து பரவின.

**‘தொடக்கூடாதவர்கள் தீண்டத்தகாதவர்கள்
பார்வையில் பட்டாலும் தீட்டு உண்டாக்குபவர்கள்’**

பல இலக்கிய ஆக்கங்கள், சீர்திருத்தவாதிகளின் இடையறாத பரப்புரை, சமூகத் தொண்டுகள் ஆகியவற்றால் மலையாள நாட்டின் முற்போக்காளர்களுக்கிடையில் சாதி எதிர்ப்பு, தீண்டாமை எதிர்ப்பு சிந்தனைகள் மிகுந்த வலுவுடன் எழுந்த காலத்தில் தான் வைக்கம் சத்தியாகிரகம் தொடங்கியது.

1924 மார்ச் முப்பதாம் தேதி. பொழுது விடிந்தது. சத்தியாகிரகப் பந்தலில் இருந்தவர்கள் நீராடி சந்தனப் பொட்டு வைத்து கோயில் சாலை வழியாகச் செல்ல ஆயத்தமானார்கள். முதல் நாள் சத்தியாகிரகத்திற்குத் தேர்தெடுக்கப்பட்டவர்கள் குஞ்ஞப்பி, பாகுலேயன், கோவிந்தப் பணிக்கர். காலை ஏழு மணிக்கு அனைவரும் பந்தலை விட்டுக் கிளம்பினார்கள்.

இருவராகச் சேர்ந்து நடந்தார்கள். பந்தலிலிருந்து கோயிலுக்கு ஒரு நாழிகை தூரம் உள்ளது. மெல்ல நடந்து கோயில் சாலையை நெருங்கியபோது போலீஸ்காரர்களும் பார்வையாளர்களும் அடங்கிய மக்கள்கூட்டம் நின்றிருந்தது. தீண்டத்தகாதவர்கள் ‘இதைக் கடந்து பிரவேசிக்கக் கூடாது’ என எழுதப்பட்ட ஓர் அறிவிப்புப்பலகை கோயிலிலிருந்து முன்னூறு அடி தொலைவில் நடப்பட்டிருந்தது. அறிவிப்புப்பலகையின் 150 அடிக்குப் பின்னால் எல்லோரும் நின்றார்கள்.

சத்தியாகிரகிகளான மூவர் மட்டும் முன்னேறினார்கள். மற்றவர்கள் எதிர்பார்ப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர். போலீஸ்காரர்கள் பார்வையாளர்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார்கள். மூவரும் அறிவிப்புப்பலகையை நெருங்கினார்கள். அங்கு எட்டு பத்து போலீஸ்காரர்கள் நின்றிருந்தார்கள்.

உங்கள் ஒவ்வொருவரின் சாதி என்ன? போலீஸ்காரர்களில் ஒருவர் கேட்டார். புலையன்... ஈழவன்... நாயர்... ஒவ்வொருவராகக் கூறினார்கள். நாயர் உள்ளே செல்லலாம். மற்ற இருவரும் இதற்குள் நுழையக் கூடாது. போலீஸ்காரர்கள் கட்டளையிட்டார்கள்.

'மற்ற இருவரையும் இதற்குள் அழைத்துப் போவதற்காகவே நான் வந்துள்ளேன். அவர்களையும் அழைத்துக் கொண்டுதான் கோயிலுக்குள் நுழைவேன்.' கோவிந்தப் பணிக்கர் உரத்த குரலில் கூறினார். போலீஸ்காரர்கள் வழிமறித்தார்கள்.

சத்தியாகிரகிகளும் போலீஸ்காரர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி நின்றிருந்தார்கள்.

'எங்களை இந்த வழியில் செல்ல அனுமதிக்க வேண்டும். அல்லது அதற்கு முயற்சித்த காரணத்திற்காகக் கைது செய்ய வேண்டும். இல்லாவிடில் எங்களால் திரும்ப இயலாது' என்று கூறி சத்தியாகிரகிகள் அவ்விடத்தில் அமர்ந்தார்கள். மாவட்ட நீதிபதியும் போலீஸ் உயரதிகாரிகளும் ஆலோசனை நடத்தினார்கள். சத்தியாகிரகிகளைக் கைது செய்ய உத்தரவிடப்பட்டது. அவர்களைக் கைது செய்து அழைத்துச் சென்றதும் மற்றவர்கள் பந்தலுக்குத் திரும்பினார்கள்.

அடுத்த நாட்களில் கே.பி.கேசவ மேனன், டி.கே.மாதவன், கே.கேளப்பன், ஏ.கே.பிள்ளை, வேலாயுத மேனன், டி.ஆர்.கிருஷ்ணசாமி அய்யர் ஆகியோரும் சத்தியாகிரகத்தைக் கடைப்பிடித்துச் சிறை சென்றார்கள். தீண்டத்தகாதவர்களுக்கு நடமாடும் உரிமையை வழங்க வேண்டுமென்று போராடிய பிராமணர்கள், நாயர்கள், ஈழவர்கள், புலையர்கள் அனைவரும் சிறைக்குச் சென்றபோது, காந்தியின் வலது கரமாக விளங்கிய பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் சத்தியாகிரகத்திற்குப் பொறுப்பேற்றார்.

அவர் கைது செய்யப்பட்ட போது பாரதமெங்கும் சர்ச்சைகள் எழுந்தன. தமிழ்நாட்டிலிருந்து சமூகச் சீர்திருத்தவாதி ஈ.வெ.ரா. பெரியார் வைக்கத்துக்கு வந்து சத்தியாகிரகம் இருந்தார். அவரது பிரச்சாரத்தில் அனல் தெறித்தது. விடுதலைக்கானது இப்போராட்டம். மூன்றரை கோடி மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நாடு, 32 கோடி மக்கள்தொகையைக் கொண்ட நாட்டை ஆதிக்கம் செலுத்துகிறது என்றார். தீண்டாமைக் கொடுமைகளும், ஏற்றத்தாழ்வுகளும்தான் இதற்குக் காரணம் என்றார் அவர்.

சத்தியாகிரகம் கடைப்பிடித்த ஈ.வெ.ரா. பெரியாரைக் கைது செய்து பூஜபுரா சிறையிலடைத்தார்கள். தாமதமின்றி பஞ்சாப்பிலிருந்து அகாலிகள் வந்து சேர்ந்தார்கள். சத்தியாகிரகத்தைத் தொடர்ந்தார்கள். அவர்களும் சிறை சென்றார்கள். இந்தியாவின் பலபகுதிகளிலிருந்து சமத்துவத்தை விரும்பும் கட்சிகள் சிறு நதிகளாக வைக்கத்தை நோக்கி வந்தன. வைக்கம், போராட்ட வீரர்களின் கடலாக மாறியது. தீண்டாமைப் பலகையைத் தாண்டிச் செல்வதற்கு ஒவ்வொரு நாளும் முயன்றார்கள். சென்றவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

சிறைகள் நிறைந்தபோது சத்யாகிரகிகளைக் கைது செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக தீண்டாமைப் பலகையைத் தாண்டிச் செல்லாதவாறு போலீஸ்காரர்கள் அணிதிரண்டு நின்றார்கள். சத்தியாகிரகிகள் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். இவ்விடத்தில் இரண்டு பகலும் இரண்டு இரவுகளும் அமர்ந்து உண்ணாவிரதத்தைப் பின்பற்றிய வேளையில் மலபாரைச் சேர்ந்த சாந்து குட்டி நாயர் என்பவர் சாலையில் சுருண்டு விழுந்தார். மயக்கமடைந்த அவரை மருத்துவர்களின் ஆலோசனைபடி பந்தலுக்கு எடுத்துச் சென்றார்கள். அவர் உபவாசம் இருக்கும்போது கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் அங்கு பூமாலைகளையும் பூஜைப் பொருட்களையும் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள்.

சிற்றேடத்து சங்குப்பிள்ளை என்கிற நாயர் இளைஞர் போராட்ட எதிர்ப்பாளர்களின் தாக்குதலால் உயிரிழந்தார். போராட்ட வீரரான ராமன் இளயது என்ற இளைஞரின் கண்ணில் போராட்ட எதிர்ப்பாளர்களின் அடியாட்கள் சுண்ணாம்பை ஊற்றினார்கள். அவர் பார்வையிழந்தார். பின்னர் நாராயணகுருவின் சிகிச்சையின் காரணமாக ஓரளவு பார்வை திரும்பியது.

வைக்கம் கோயிலின் சுற்று வழிகளில் கீழ்ச்சாதிக்காரர்கள் நடந்து செல்வதற்கான உரிமையைப் பெற, 603 நாட்கள் (20 மாதம்) தியாகம் நிறைந்த எழுச்சிமிக்க போராட்டத்தை நடத்த வேண்டியதாயிற்று. இருப்பினும் கீழ்ச்சாதிக்காரர்களுக்குக் கோயிலுக்குள் நுழைவதற்கான உரிமை கிடைக்கவில்லை. அன்றும் இன்றும், முன்னேறிய மேல்சாதி சமுதாயத்தில் அதிக எண்ணிக்கையையும் வலிமையையும் கொண்டவர்கள் நாயர்கள். நாயர்களின் நலனைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட நாயர் சர்வீஸ் சொசைட்டியின் பொதுச் செயலாளராக மன்னத்து பத்மநாப பிள்ளை விளங்கினார். 1929இல் ஈ.வெ.ரா பெரியார், ஈ.வெ.ராமசாமி நாயக்கர் பெயரிலுள்ள நாயக்கர் என்ற சாதிப் பெயரை வெட்டியெறிந்ததைப் போல, வெறும் மன்னத்து பத்மநாபன் ஆனார்.


ரீஜன்ட் மகாராணி சேது லட்சுமி பாய்


மகாத்மா காந்தி


பெரியார்


மன்னத்து பத்மநாபன்

வைக்கம் மகா தேவர் கோயிலை ஒட்டிய வழிகளில் கீழ்ச்சாதிக்காரர்கள் நடமாடும் உரிமைக்கான போராட்டத்தில் முன்னணி தலைவர் மன்னம். இந்திய தேசிய காங்கிரஸின் தலைவர்களான டி.கே.மாதவன். கே.கேளப்பன், கே.பி.கேசவமேனன் போன்ற பல பிரமுகர்கள் போராட்டத்தை எடுத்துச் செல்ல வைக்கத்தில் தங்கினார்கள். பெரும் துன்புறுத்தல்களுக்கு ஆளானார்கள்.

மகாத்மா காந்தி நேரடியாகச் சத்தியாகிரகத்தில் பங்கேற்றார். ஸ்ரீ நாராயண குரு ஆசி வழங்கி உடன் நின்றார். சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக சத்தியாகிரகத்தை காங்கிரஸ் தொடங்கியது. அக்காலத்தில் அவர்ணர் (கீழ்சாதி) என்றும் சவர்ணர் (மேல்சாதி) என்று அழைக்கப்பட்டவர்கள் ஒன்றிணைந்தார்கள்.

ஆயிரக்கணக்கான தொண்டர்கள் ஆறு மாத காலம் வைக்கம் தெருவின் தீண்டாமைப் பலகையின் அருகில் சத்தியாகிரகம் கடைப்பிடித்து, அவ்விடத்தை விட்டு அகலாமல் நின்றிருந்தார்கள். காந்தியடிகளின் அறிவுரைபடி, திருவனந்தபுரத்தை நோக்கி ஒரு நடைப்பயணத்தை மேற்கொள்ளலாம் என்று மன்னத்து பத்மநாபனும் தொண்டர்களும் தீர்மானித்தார்கள்.

திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தை ஆட்சி செலுத்தி வந்த ரீஜன்ட் மகாராணி சேது லட்சுமி பாயை நேரில் சந்தித்து மனு அளிப்பதற்காக சவர்ண பேரணி என்றழைக்கப்பட்ட அந்த நடைப்பயணம் தொடங்கப்பட்டது. 150 கிலோமீட்டர் தூரம் காலணிகளை அணியாமல் நடந்து, சில தினங்களில் திருவனந்தபுரத்தை அடைந்தார்கள். கோயில் நிருவாகிகள் உட்பட சிலர் பலகையை நீக்குவதற்கும் நடமாடுவதற்கும் அனுமதி வழங்கவில்லை. சவர்ணர்கள் அனுமதிப்பதில்லை என்பதுதான் பரப்புரை.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக சவர்ணர்கள் மட்டும் பங்கேற்ற நடைப்பயணமும் ராணியுடனான சந்திப்பும் ஏற்பாடு செய்யப்பட்டது.

வைக்கத்திலிருந்து நாகர்கோயிலிலிருந்தும் ஒரே நேரத்தில் இரண்டு நடைப்பயணங்கள். இரண்டிலும் சவர்ணர்கள் மட்டும் பங்கேற்றார்கள். வைக்கத்தில் தொடங்கிய பயணத்திற்கு மன்னம் தலைமை வகித்தார். நாகர்கோயிலில் தொடங்கிய பயணத்திற்கு டாக்டர் எம்.இ.நாயுடு தலைமை வகித்தார். இரண்டு பேரணியினரும் திருவனந்தபுரம் சங்குமுகத்தில் ஒன்றிணைந்தார்கள். இருபத்தி நான்காயிரம் பேர் பங்கேற்ற பொதுக்கூட்டத்தை நடத்தி மாபெரும் கோரிக்கை மனுவுடன் ராணியைச் சந்தித்தார்கள்.

வைக்கம் போராட்டத்தின் வெற்றி கேரளத்தில் மட்டுமல்ல, ஒட்டு மொத்த இந்தியாவெங்கும் பெரிய அதிர்வுகளை நிகழ்த்தியது. பின்னர், சமூக மாற்றங்கள் துரிதகதியில் நடந்தேறின. வைக்கம் சத்தியாகிரகத்தைத் தொடர்ந்து, திருவிதாங்கூரில் அனுமதி மறுக்கப்பட்டிருந்த பல பொதுவழிகளில் சவர்ணர்களுக்கு அனுமதி கிடைக்கத் தொடங்கியது. 1925 நவம்பர் 23ஆம் தேதி வைக்கம் சத்தியாகிரகம் முடிவடைந்தது.


எம்பெருமாள் நாயுடு


கே.கேளப்பன்


ஈ.எம்.எஸ்.


ஏ.கே.கோபாலன்

ஆறு வருடங்களுக்குப் பிறகு 1931 குருவாயூர் கோயிலுக்குள் சென்று வணங்க அவர்களுக்கு அனுமதி கிடைக்க வேண்டுமென்று கூறி இந்திய தேசிய காங்கிரஸின் தலைமையில் குருவாயூர் கோயிலின் எதிரில் சத்தியாகிரகம் தொடங்கப்பட்டது. வைக்கம் சத்தியாகிரகத்தை வென்றெடுத்த பிரமுகர்களான கே.கேளப்பன், மன்னத்து பத்மநாபன் போன்ற பிரமுகர்களே குருவாயூர் சத்தியாகிரகத்திற்கும் தலைமை வகித்தார்கள்.

மகாத்மா காந்தி ஆலோசகராகச் செயல்பட்டார். பி.கிருஷ்ணபிள்ளை, ஏ.கே.ஜி., சுப்ரமண்யன் திருமுன்பு, இ.எம்.எஸ் போன்ற பிற்கால கம்யூனிஸ்ட் கட்சியினரும் அன்றைய பல காங்கிரஸ் தலைவர்களும் குருவாயூர் சத்தியாகிரகத்தின் முன்வரிசையில் நின்றார்கள்.

குருவாயூர் சத்தியாகிரகத்தின் விளைவாக கோயில் நடைகள் திறக்கப்படவில்லை. இருந்தபோதிலும் மலபாரில் தீண்டாமை ஒழிப்புக்குச் சாதகமாகவும் சாதிப் பாகுபாடுக்கு எதிரான சிந்தனைகளை வளர்க்கவும் அப்போராட்டம் துணைநின்றது எனலாம். 1936இல் திருவிதாங்கூரின் அனைத்து கோயில்களையும் தீண்டத்தகாத சாதியினருக்காகத் திறந்து தர வேண்டுமென்று சித்திரை திருநாள் பால ராமவர்மா கோயில் அனுமதி ஆணையை வெளியிட்டார். வைக்கம், குருவாயூர் சத்தியாகிரகங்கள் அதற்குக் காரணமாக இருந்தன.

வைக்கம் சத்தியாகிரகத்திற்கு பின்னர்தான், தேசிய தளத்தில் தீண்டாமை ஒழிப்பையும் அரிஜனங்களின் முன்னேற்றத்தையும் முக்கிய செயல்திட்டமாக இந்திய தேசிய காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. அந்தப் பரப்புரைக்காக மகாத்மா காந்தி இந்தியா முழுவதும் பயணித்தார்.

வைக்கம் சத்தியாகிரகம், தேசிய சுதந்திரப் போராட்டத்தை மேலும் ஜனரஞ்சகமாகவும் ஏற்புடையதாகவும் வலிமையானதாகவும் ஆக்கியது. வைக்கம், குருவாயூர் சத்தியாகிரகங்களுக்கு இணையாக நடந்த சமூக எழுச்சி நடவடிக்கைகளிலிருந்து உந்துதல் பெற்ற பல எழுத்தாளர்கள் மிகச் சிறந்த படைப்புகளைப் படைத்தார்கள். அவை கேரளம் முழுவதும் முற்போக்குச் சிந்தனைகளின் புயற்காற்றை உருவாக்க உதவின. பண்பாட்டுத் துறையில் நிகழ்ந்த இந்தப் பாய்ச்சல் பின்னாட்களில் கம்யூனிஸ்ட் இயக்கங்களுக்கு உரம் மிகுந்த மண்ணை கேரளம் வழங்கக் காரணமானது.

நூற்றாண்டுகளைத் திரும்பிப் பார்க்கும்போது கேரளத்தை மட்டுமல்ல, இந்தியாவையே புதுப்பித்த இதிகாசப் போராட்டமே வைக்கம் சத்யாகிரகம் என்பதை உணரலாம்.

**ரவிவர்மா தம்புரான்:**

**மலையாளத்தின் பிரபல நாவலாசிரியர். சிறுகதை எழுத்தாளர். மலையாள மனோரமா பத்திரிகையின் முதுநிலை உதவிஆசிரியர். கேரள மறுமலர்ச்சி பின்புலத்தில் 2021இல் இவர் எழுதிய 'முடிப்பேச்சு' என்ற நாவல் விவாதங்களை உண்டாகியது. பல விருதுகளைப் பெற்றுள்ளார்.**

**தமிழாக்கம்: நிர்மால்யா**



# சிற்றேடத்து சங்குப்பிள்ளை: வைக்கம் சத்தியாகிரகத்தின் முதல் ரத்தசாட்சி



முனைவர்
சுரேஷ் மாதவ்

உடல்வலிமையின் பேரில் அறியப்பட்ட சிற்றேடத்து சங்குப்பிள்ளை (1887–1924) என்கிற இளைஞன் பிற்காலத்தின் 'கேரளத்தின் முதல் ரத்தசாட்சி' என்கிற நிலையில் வரலாறு ஆகிறார். ஆரம்ப நாட்களில் வன்முறை மூலம் எதிராளிகளை எதிர்கொண்ட சங்குப்பிள்ளை பின்னர் கதரையும் அகிம்சைக் கொள்கையையும் சொந்தமாக்கிக் கொண்டார். காந்தியடிகளின் 'ஈஸ்வர அல்லா தேரா நாம்' என்கிற வாசகமே அவரது முழக்கமாக மாறியது. அனுதாபத்தின் பாடங்களைப் பொறுமையுடன் பரப்புரையாற்ற முனைந்த சங்குப்பிள்ளையின் ரத்தத்திலிருந்துதான் வைக்கம் சத்யாகிரகம் பெரும் போராட்டமாக உருகொண்டது. அச்சமின்மை சங்குப்பிள்ளையின் அடிப்படை இயல்பாகும்.

1905இல் மத்திய திருவிதாங்கூரின் பொது வழிகள் தலித் சமுதாயத்தினருக்காகத் திறந்து கொடுத்த அம்பலப்பாட்டு ராயிங்ஙன் ஆசானின் (1860–1937) பாதையையே அவரது மகனும் ஏற்றுக் கொண்டார். 'பிரிய மித்ரமணி' என்கிற நீலகண்ட தீர்த்தபாதர் (1872–1921) என்பவரால் சிறப்பிக்கப்பட்ட ராயிங்ஙன் ஆசான் அக்காலத்தின் முக்கிய தொழிலதிபராகவும் விளங்கினார். ஆசானிடமிருந்த சமூக அக்கறையும் நட்புறவுகளும் சிற்றேடத்து சங்குப்பிள்ளையின் பொதுநல வாழ்க்கையின் அடித்தளமாக அமைந்தன.

### வாழ்க்கை வழிகள்:

1887 ஆகஸ்ட் மாதம் சிற்றேடத்து பார்வதியம்மா, அம்பலப்பாட்டு ராயிங்ஙன் தம்பதியரின் மகனாக சங்குப்பிள்ளை பிறந்தார். நிரனத்து ஆசானின் வீட்டுப்பள்ளிக்கூடத்தில் ஆரம்பக்கல்வி பயின்று பின்னர் கோழஞ்சேரி ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் படித்தார். பின்னர் மான்னார் ஆங்கில மீடியம் பள்ளியிலும் படித்தார். சென்னிதல அம்பலப்பாட்டு தறவாட்டில் தங்கியிருந்து கல்வி கற்றார். சுதேசாபிமானி ராமகிருஷ்ண பிள்ளை, நீலகண்ட தீர்த்தபாதர் போன்ற பிரமுகர்கள் வருகை தந்திருந்த அம்பலப்பாட்டுக் குடும்பத்தில் நடைபெற்ற அரசியல் விவாதங்கள் சங்குப்பிள்ளையின் இளமைக்காலத்தைச் செப்பனிட்டன.

நவீனத்துவம் உருவாக்கிய மாற்றங்கள் மத்திய திருவிதாங்கூரில் பிரதிபலிக்கத் தொடங்கிய அக்காலத்தில் சட்டம்பி சுவாமிகள், ஸ்ரீ நாராயணகுரு, சதானந்த சுவாமி போன்ற நவீன மும்மூர்த்திகளின் செயல்பாடுகள் பொதுமக்களுக்கிடையில் விவாதப் பொருளானது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கேரளத்தில் உருவாகி வந்த சமூக இயக்கங்கள் அறிவு கூர்மை கொண்ட இளைஞர்களின் கவனத்தை ஈர்த்தது.



மூடப்பழக்க வழக்கங்களுக்கு எதிரான அமைதிப் போராட்டங்களுக்கு முக்கியத்துவம் தந்த காலம் அது. 1901இல் வேதகுரு சதானந்த சுவாமிகள் நிறுவிய ஸிரபனிஷ்டா மடம் மற்றும் சித்சதா மிஷனின் செயல்பாடுகள் தாழ்த்தப்பட்ட சமூகத்தை அரவணைக்கக் கூடியதாக இருந்தன. கேரளத்தின் மக்கள் நாயகனாக விளங்கிய அய்யன்காளிக்கும் தமிழ்நாட்டின் தேசிய புரட்சியாளர் சுப்ரமணிய சிவாவுக்கும் உந்துவிசையை வழங்கியதில் சதானந்த சுவாமிகளின் பங்கு அளப்பெரியது.

1912 மே 11ஆம் தேதி சதானந்த சுவாமி தொடங்கி வைத்த நாயர் சமாஜத்தின் அமைப்பாளர்களில் முக்கியமானவராகச் சங்குப்பிள்ளை இருந்தார். 1912 அக்டோபர் 3ஆம் தேதி சதானந்த வைத்திய சாலையின் ஒரு பிரிவாக தைலம் மண்ணில் வைத்தியசாலையை (அயிரூர்) ஆத்மானந்த சுவாமிகள் தொடங்கி வைத்தபோது, அந்நிகழ்ச்சிக்குச் சங்குப்பிள்ளை தலைமை வகித்தார். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அங்கு இலவச சிகிச்சை தரப்பட்டது. ஆன்மீக சமூக இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு செயல்பட்ட சங்குப்பிள்ளை தனது இருபதாம் வயதில் காசி யாத்திரையை நடத்தினார்.

1911இல் இருபத்தி நான்காம் வயதில் ஆறாட்டுப்புழாவுக்கு அருகிலுள்ள நீர்விளாகத்து குன்னத்தேது குடும்பத்தின் நாணியம்மாவைத் திருமணம் செய்து கொண்டார். அக்குடும்ப வாழ்க்கையில் கே.என்.ராமகிருஷ்ண பிள்ளை என்கிற மகன் பிறந்தார். குறுகிய காலத்தில் நாணியம்மா மரணமடைந்தார். வேலுகர தோட்டத்தில் லட்சுமியம்மா இரண்டாவது வாழ்க்கைத் துணைவி ஆனார். பின்னர் சிறிது காலம் பொதுப்பணித் துறையில் சாலைப்பணி மேற்பார்வையாளராகப் பணியாற்றினார்.

லட்சுமியம்மா சங்குப்பிள்ளை தம்பதியினருக்கு பிரபாகரன், சந்திரசேகரன் ஆகிய குழந்தைகள் பிறந்தனர். காந்தியடிகள், சதானந்த சுவாமிகள் ஆகியோரின் தாக்கம் காரணமாகப் பிற்காலத்தில்

வாழ்நாள் முழுவதும் பொதுத் தொண்டாற்ற அவரை ஊக்குவித்தது. 1915 பிப்ரவரியில் செறுகோல்புழயில் நடந்த, இந்து மகா யோகத்தில் 'ஸ்வருப நிருபணம்' என்ற நீலகண்ட தீர்த்த பாதரின் பிரபந்தத்தை சிற்றேடத்து சங்குப் பிள்ளை வாசித்தார்.

### தாழ்த்தப்பட்டவர்களுக்கான வாழ்க்கை:

கோழஞ்சேரிக்கு அருகில் மேலுகர காஞ்ஞேற்று கரயில் சிற்றேடத்து குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பிரதிஷ்டை செய்த பாலன் தான் சங்குப்பிள்ளையின் குல தெய்வம். மேல்சாதி சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர், ஒரு தாழ்த்தப்பட்டவருக்குக் கோயில் எழுப்பி வழிபடுவது அரிதினும் அரிதான செயலாகும்.

ஐநூறு வருடங்களுக்கு முன்பு சிற்றேடத்து குடும்பவீட்டைச் சேர்ந்த ஒரு பெரியவரின் அடிமையாக பாலன் என்பவர் இருந்தார். குறியனூர் நெல்வயலில் உழவு செய்ய போனபோது அவருக்குப் புதையல் கிடைக்கிறது. அந்தப் புதையலை பெரியவரிடம் ஒப்படைத்துவிட்டு திரும்பும்போது பாலனை புலியொன்று கடித்துக் கொல்கிறது. இந்த ஐதீகத்தைக் கொண்டதுதான் கோயில் வரலாறு. பிற்காலத்தில் சிற்றேடத்து குடும்ப வீட்டைச் சேர்ந்தவர்கள் பாலனுக்காக ஒரு கோயிலை கட்டி பிரதிஷ்டை செய்தார்கள்.

புலி கடித்த கையுடன் வாளை ஏந்தி நிற்கும் பாலன் தான் இப்போதும் கோயில் பிரதிஷ்டை. சிற்றேடத்து குடும்ப வீட்டாரிடம் பிறவிலேயே ஊறியிருக்கும் இந்த மனித நேயமே, தாழ்த்தப்பட்டவர்களுக்கான போராட்டங்களை நோக்கி சங்குப்பிள்ளையை அழைத்துச் சென்றது எனலாம்.

1913இல் செறுகோல்புழாவில் நிகழ்ச்சி தொடங்கியபோது, மேல்சாதிக்காரர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பந்தலை அமைத்தார் சங்குப்பிள்ளை. 1914–1915 காலகட்டத்தில் புல்லாடு–ஆராட்டுப்புழா ஊர்களில் வெடித்த கலவரங்களில் தாழ்த்தப்பட்டவர்களுடன் சங்குப்பிள்ளை உறுதியாக நின்றார். அவரது தலைமையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இளைஞர்கள் 'யுவ தர்ம சேனா' என்கிற அமைப்பை உருவாக்கினார்கள். அந்த அமைப்பின் நடவடிக்கை மேல்சாதித் தலைவர்கள் மத்தியில் எதிர்ப்பை கிளப்பியது. அய்யன்காளிக்கும் சிற்றேடத்துக்கும் இடையில் ஆழமான நட்புறவு இருந்ததாக வாழ்க்கை வரலாற்றாளர் தெள்ளியூர் கோபால கிருஷ்ணன் குறிப்பிடுகிறார். வைக்கம் சத்தியாகிரகியும் சன்னியாசியுமான ஓமலியின் பிந்தைய தலைமுறையைச் சேர்ந்த அறம்புளா எ.பி.அழகனின் (1894–1956) செறுகோல்புழா நிகழ்ச்சியுடன் தொடர்பை ஏற்படுத்தியவர் சிற்றேடத்து சங்குப்பிள்ளை. அழகனை 'அழகானந்தன்' என்று முதலில் அழைத்தவர் சதானந்த சுவாமிகள். எனினும், 1937இல் அறம்புளாவில் நடந்த புலையர் சம்மேளனத்தில் காந்தியடிகள் அழகானந்தன் என்று பெயர் சொல்லி அழைத்தபோது அந்தப் பெயர் பிரபலமானது.

### காந்திய கொள்கையின் செல்வாக்கு:

1920 டிசம்பரில் சபர்மதி ஆசிரமத்திற்கு வந்த சங்குப்பிள்ளை அங்கு மூன்றுமாதம் தங்கியிருந்தார். அக்காலத்தில் சங்குப்பிள்ளையிடம் பெரும் மாற்றங்கள் நடந்தன. சமத்துவக் கொள்கை, அகிம்சை நெறி ஆகியவற்றின் பொருளை காந்தியடிகளிடமிருந்து நேரில் கற்றுக் கொண்டார். சொந்த ஊருக்குத் திரும்பும் போது, காந்தியடிகள் மூன்று ராட்டைகளை சங்குப்பிள்ளையிடம் தந்தார்.

காந்தித் தொப்பியும் கதர் சட்டையும் அணிந்து கொட்டாரக்கர ரயில்நிலையத்தில் இறங்கிய சிற்றேடம், நண்பர்களைக் கண்டதும் 'வந்தே மாதரம்' என்று கூறி, அவ்விடத்திலேயே அவர்களுக்குக் கதராடைகளை வழங்கினார். கதர் அணிந்தவர்கள் புடைசூழ சிற்றேடம் குடும்ப வீட்டை அடைந்தார். சுதந்திர பாரதத்திற்கான முழக்கங்களுடன் சங்குப்பிள்ளை பேரணியை நடத்தியபோது ஊரெங்கும் பேசு பொருள் ஆனது.

1921 ஜூன் மாதத்தில் தனது குடும்பவீட்டில், அனைத்து சாதியினரையும் ஒன்றுதிரட்டி சமபந்தி போஜனத்தை நடத்தினார். தாழ்த்தப்பட்டவர்கள் மீது தாக்குதலைத் தொடுக்கவும் சமபந்தி போஜனத்தை முடக்கவும் மேல்சாதிக்காரர்கள் முயன்றார்கள். எனினும், அவற்றை அகிம்சைக் கொள்கையின் மூலமாகவே எதிர்கொண்டார் சங்குப்பிள்ளை.

இச்சம்பவத்தைக் குறித்து சிற்றேடத்து தறவாட்டைச் சேர்ந்த தேவகியம்மாவின் வார்த்தைகளை, வரலாற்றாசிரியர் தெள்ளியூர் கோபாலகிருஷ்ணன் இவ்வாறு பதிவு செய்கிறார். "ஆபத்தை எதிரில் கண்ட சங்குப்பிள்ளை, ரான்னி


சட்டம்பி சுவாமி


ஸ்ரீ நாராயண குரு


அய்யங்காளி


சுப்ரமணிய சிவா

முண்டாப்பள்ளி கடவில் தாழ்த்தப்பட்டவர்களைத் தலைமறைவாகத் தங்க வைத்தார். பிறகு விடிவதற்கு முன்பாகவே அவர்களைப் படகுகளிலேற்றி சிற்றேடத்து படகுத்துறையில் சேர்த்தார். குளிப்பதற்கான எண்ணெய், நார் ஆகியவற்றை ஆயத்தப்படுத்தினார். புத்தாடையணிந்து, நெற்றியில் விபூதி பூசி எல்லோரும் சிற்றேடத்து வீட்டு முகப்பில் சம்மணமிட்டு அமர்ந்தார்கள். சங்குப்பிள்ளையும் நண்பர்களும் தாழ்த்தப்பட்டவர்களுடன் அமர்ந்து உணவு உண்ண ஆயத்தமானார்கள். பார்வதியம்மா எல்லோர் எதிரிலும் இலையை வைத்து உணவு பரிமாறினார். விருந்துக்குப் பிறகு தாழ்த்தப்பட்டவர்கள் தத்தமது குடிசைகளுக்குத் திரும்பிய பிறகே விவரம் தெரிந்தது. (வாழ்க்கை வரலாறு பக்கம் 122)

மேலுகர சமபந்தி போஜனம் நடத்தியதற்காக சங்குப்பிள்ளை குடும்ப வீட்டிலிருந்து அறம்புளா என்னுமிடத்திலுள்ள ஒரு வாடகை வீட்டுக்கு மாற நேர்ந்தது.

### வைக்கம் சத்தியாகிரகத்தை நோக்கி:

1923இல் காக்கிநாடாவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் நிகழ்ச்சியில் பங்கேற்ற டி.கே. மாதவனும் சிற்றேடத்து சங்குப்பிள்ளையும் வைக்கம் சத்தியாகிரத்திற்கு வருகிறார்கள். 1924 மார்ச் 30ஆம் தேதி வைக்கம் சத்தியாகிரகம் தொடங்கியது. முதல் நாள் சத்தியாகிரகப் பந்தலில் இருந்து, கோயில் சாலையை நோக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த குஞ்ஞப்பியும் ஈழவரான பாகுலேயனும் கோவிந்த பணிக்கர் என்னும் நாயரும் புறப்பட்டார்கள்.

போலீஸ் தடுத்தபோது தரையில் அமர்ந்து சத்தியாகிரகத்தைத் தொடர்ந்தார்கள். தொடர்ந்து மூன்று நாட்களில் பல தலைவர்கள் கைதானார்கள். ஏப்ரல் 13ஆம் தேதி சத்தியாகிரக செய்தி மடலில் திருமிகு சிற்றேடத்து சங்குப்பிள்ளையைச் சிலர் உடல்ரீதியாகத் துன்புறுத்தியதாகச் செய்தி வந்தது.

கோயில் நுழைவு பரப்புரை குழுவில் ஈ.வெ.ரா பெரியார், மன்னத்து பத்மநாபன் ஆகியோர்களுடன் சிற்றேடத்து சங்குப்பிள்ளையும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கொல்லம் மாவட்ட நீதிபதி, சங்குப்பிள்ளை பொதுக்கூட்டங்களில் உரையாற்றுவதைத் தடை செய்து அவருக்கு எதிராக உத்தரவைப் பிறப்பித்தார். இதற்குப் பதில் தரும் வகையில் ‘சங்குப்பிள்ளையின் அறிக்கை’ என்ற தலையங்கத்துடன் சத்தியாகிரக மடலில் வெளியான குறிப்பின் ஒரு பகுதி இவ்விதமாக இருந்தது:

வைக்கம் கோயிலை சுற்றியுள்ள பொதுச் சாலையில் பொதுமக்கள் நடமாடுவதற்கு அங்குள்ள சிறுபான்மையினரான மேல்சாதி இந்துக்கள் தடை செய்திருக்கிறார்கள். அங்கு சத்தியாகிரகம் கடைப்பிடித்துப் பொதுமக்களுக்கு எங்கள் ஆதரவை வழங்க வைக்கம் சத்தியாகிரகத்தைத் தொடங்கியுள்ளோம். இந்நிலையில், பாரபட்சமற்ற முறையில் நின்று செயல்படாமல், நாற்பது இலட்சம் மக்கள் தொகையில் முப்பத்து ஒன்பது இலட்சம் மக்களின் உரிமைக்கும் விருப்பத்திற்கும் எதிராகச் செயல்படும் இந்த அரசாங்கத்தின் அறியாமையைக்



குறித்து வருந்துகிறோம். சத்தியாகிரகிகளை அடக்குமுறையால் பணியச் செய்து விடலாமென்று கருதுவது அரசாங்கம் சுயமாகவே ஆட்சியமைப்பின் அடிமரத்தை கோடாலியால் வெட்டுகிறது என்பதைத் தெரியப்படுத்துகிறேன். சத்தியாகிரகிகள் தங்கள் பிறப்புரிமையை நிறுவுவதற்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி ஆகியவற்றை தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

இதன் காரணம் உண்மைக்காகவும் அறத்திற்காகவும் நாங்கள் துன்பங்களைப் பொறுத்துக் கொள்கிறோம் என்கிற நன்னம்பிக்கை உள்ளது. அதைப்போல நான்கு இலட்சம் மக்களையும் அவர்களின் உரிமைகளையும் விடுதலையையும் தடுக்க நினைக்கும் அரசாங்கம் வைக்கத்தில் வசிக்கும் சிறுபான்மை மேல்சாதி இந்துக்களின் முகத்தைப் பார்த்து நிற்காமல் பொதுமக்களின் கருத்தை மதித்து நன்மதிப்பைப் பெற முயற்சிக்க வேண்டும்.

எனது செயல்பாடு உண்மையையும் நீதியையும் அடிப்படையாகக் கொண்டதெனப் புரிந்து வைத்துள்ளேன். எனவே, இந்த அரசாங்கம் மட்டுமல்ல, உலகிலுள்ள எந்தவொரு அரசாங்கத்திற்கும் எனது நீதிசார்ந்த கடமையிலிருந்து என்னைப் பின்னுக்குத் தள்ள இயலாது. எனது நடவடிக்கை ஏதோ விதத்தில் இந்நாட்டின் அறத்தைப் பேணுவதற்குத் தடையாக இருக்குமெனில் இந்த அரசாங்கம் தரும் எத்தகைய தண்டனையும் அதிகமானதாக எனக்குத் தோன்றவில்லை.'(சத்தியாகிரக ஆசிரம செய்தி மடல் மே1, 1924)

1924 மே 8ஆம் தேதி வைக்கத்தில் உருவாக்கப்பட்ட தூதுக்குழுவின் ஆறு உறுப்பினர்களில் ஒருவர் சிற்றேடத்து சங்குப்பிள்ளை. அரசாங்கத்தின் தடை உத்தரவை மீறுவதற்குச் சத்தியாகிரகிகளுக்கு அனுமதி வழங்கும் உறுப்பினர்களாக சங்குப்பிள்ளையும் டாக்டர் எம்.இ.நாயுடுவும் இருந்தார்கள். பின்னர் தடையை மீறியதற்காக சங்குப்பிள்ளை கைதான போதிலும், குற்றத்திலிருந்து விடுபட்டு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் பங்கேற்க அகமதாபாத்திற்குச் சென்றதாக 'சத்தியாகிரக செய்திமடல் 1924 ஜூலை1) குறிப்பிடுகிறது. 1924 ஆகஸ்ட் 24ஆம் தேதி வைக்கத்தில் நடந்த தீண்டாமைக் குழு கூட்டத்திலும் சிற்றேடம் கலந்து கொண்டார்.

### தியாகம் நிறைந்த ரத்தசாட்சி:

1924 அக்டோபர் மாதத்தின் இறுதியில் ஒருநாள் சிற்றேடத்து சங்குப்பிள்ளை மீது கடும் தாக்குதல் நடந்ததாக வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் குறிப்பிடுகிறார். 1924 நவம்பர் ஒன்றாம்

தேதி மன்னத்து பத்மநாபன் ஏற்பாடு செய்த சவர்ண பேரணியில் சிற்றேடத்து சங்குப்பிள்ளை பங்கேற்கவில்லை. கைனிக்கர குமாரபிள்ளையின் 'மறக்க முடியாதவர்கள்' என்ற புத்தகத்தில் '1924இன் வரலாற்றுப் புகழ்பெற்ற சவர்ண பேரணியில் சங்குப்பிள்ளை பங்கேற்கவில்லை. அன்று அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்.' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சங்குப்பிள்ளை எதிர்கொண்ட தாக்குலைப் பற்றி கைனிக்கர குமாரபிள்ளை இவ்வாறு எழுதியுள்ளார்:

ஆரம்பம் முதல் அவர் சத்தியாகிரகத்தின் தீவிரத் தொண்டராக இருந்தார். இருப்பினும் ஒரு தொண்டில் ஈடுபடும்போது முழு வலிமையையும் திரட்டி ஓய்வின்றி உழைப்பது அவரது வழக்கம். அது ஒருபோதும் உலகத்தின் கவனத்தில் படும்படியாகவும் இருக்காது. அவரைத் தலைவர்களின் வரிசையில் காண முடியாது. தனது நடவடிக்கையின் பயன்கள் அனைத்தும் செயல்மையத்திற்குத் தங்கு தடையின்றிச் சென்று கொண்டிருக்கும்.

அறப் படையாளிகளைத் திரட்டுவது, அவர்கள் தங்குவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பது, தேவைப்படும் உணவுப்பொருட்களைச் சேகரித்து குறித்த நேரத்தில் சத்தியாகிரக மையத்திற்குச் சேர்ப்பது இவற்றிக்காக சங்குப்பிள்ளை செய்த தொண்டுகள் எல்லையற்றவை. அக்காலத்தில் அவர் அடிக்கடி கைனிக்கரக்கு வருவது வழக்கம்.


டி.கே.மாதவன்

சத்யாகிரகத்தின் முன்னேற்றங்களை நன்கு தெரிந்து வைத்திருந்தார். சத்தியாகிரகிகளுக்கு எதிராக தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுவிட்டது என்கிற மோசமான செய்தியும் கிடைத்தது. சங்குப்பிள்ளை கடும் தாக்குதலுக்கு ஆளானார் என்கிற தகவலும் வந்து சேர்ந்தது. அந்நிகழ்வுக்குப் பிறகு ஒரு வாரம் கழித்து சங்கு பிள்ளை அங்கு வந்தார். நடந்து களைப்படைந்து வருவதை வழக்கமாகக் கொண்டிருப்பார். அன்று வெகுவாகக் களைத்துப் போயிருந்தார். எனினும் நடமாடுவதற்கான ஆரோக்கியநிலை உள்ளதே என மனதிற்குள் ஆறுதலடைந்தோம். உடல்நலத்தைப் பற்றியும் அச்சம்பவத்தைப் பற்றியும் அவர் சொல்வதை ஆவலுடன் கேட்டோம்.

எங்கோ சென்றுவிட்டு மாலைநேரத்தில் சத்தியாகிரகப் பந்தலை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தபோது சில ஆட்கள் எத்தனை பேர் என்று உறுதியாகத் தெரியவில்லை. பின்தொடர்ந்தார்கள். சத்தியாகிரகிகளை நோக்கி தாக்குதல் தொடங்கியிருந்ததால் சங்குப் பிள்ளைக்குச் சந்தேகம் எழவில்லை. எனினும் திரும்பிப் பார்க்கவில்லை. நடையின் வேகத்தைக் கூட்டவில்லை. அவர்களைக் கவனிப்பதாகக் கூட காட்டிக்கொள்ளவில்லை.

சட்டென்று கனமும் உறுதியும் கொண்ட ஏதோ பொருளால் பின்பக்கம் பலமான அடியொன்று விழுந்தது. அய்யோ என்று சன்னமான குரலில் அனிச்சையாகக் கத்தினார். ஆனால், திரும்பிப் பார்க்கவில்லை. ஓடவில்லை. நடையைத் துரிதப்படுத்தவில்லை. அடி தொடர்ந்தது. தொடர்ந்து விழுந்து கொண்டே இருந்தது. சுமார் நூறு அடி தூரம் வரை இந்தக் கொடிய தாக்குதல் நடந்தது. ஓரிருமுறை வேதனை சகிக்க இயலாமல் ஒடுங்கிய குரலில் அய்யோ என்று அலறியதாக அவருக்குத் தோன்றியது. அந்த அளவுக்குப் பலவீனத்தை வெளிப்படுத்தியதற்காக வருந்தினார்.

அவரது மறுப்பைப் பொருட்படுத்தாமல் அவருடன் சங்ஙனாச்சேரி சந்தை கடவிலுள்ள படகுத்துறை வரை துணைக்குச் சென்று அன்றிரவு படகில் ஏற்றி விட்டோம். அது எங்கள் இறுதிச் சந்திப்பு என்றும் பிரிவு என்றும் நாங்கள் அப்போது உணரவில்லை. அந்தக் கொடிய துன்புறுத்தல் அவரது நுரையீரலைப் பாதித்ததாகக் கருத வேண்டியுள்ளது. உற்றார் உறவினர்கள் சற்று ஓய்வெடுத்து உடலைப் பாதுகாத்துக் கொள்ள மன்றாடிய போதிலும் அவர் பொருட்படுத்தவில்லை. டைய்பாய்டு தொடங்கிய நோய் நிமோனியாவாக மாறியது..."

**(மறக்கவியலாதவர் கைனிக்கர குமாரபிள்ளை, 1956)**

புத்தகத்தில் பதிவு செய்யாதபோதிலும் கைனிக்கர நேரில் குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை ‘சுதந்திரத்தின் கதை’ என்ற புத்தகத்தில் பி.ஏ.வாரியர் குறிப்பிட்டுள்ளார்.

‘உடல்நிலையைப் பற்றி விசாரித்தபோது சங்குப்பிள்ளை கைனிக்கரயை உள்அறைக்கு அழைத்துச் சென்றார். அம்மாவுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக அப்படிச் செய்தார். சற்றுத் தயங்கிச் சட்டையைக் கழற்றினார். உடலுடன் ஒட்டியிருந்த ரத்தமும் சீழும் வியர்வையும் கழற்றியெடுக்க இயலாமல் கதர் பனியனை கழற்ற கைனிக்கரயிடம் கேட்டுக் கொண்டார். பனியனைக் கழற்றும் போது வலிதாளாமல் அவரது முகம் கோணியது. பனியனைக் கழற்றியபோது கைனிக்கரயால் அவரது உடலைப் பார்க்க இயலவில்லை. முழுவதுமாகக் கன்றிப் போய் கருநீலநிறத்தில் குறுக்கும் நெடுக்குமாகக் காயங்கள். ஒரு அங்குல உயரத்திற்குத் தடித்துக் காணப்பட்டது. தொட்டால் உயிர்போகும் வேதனை. கைனிக்கர மெதுவாக வெந்நீரில் துவர்த்தை நனைத்து ஒத்தடம் கொடுத்தார். எதுவும் நடக்காததைப்போல அதே பனியனையும் சட்டையையும் அணிந்து முகம் மலர வெளியே வந்தார். கைனிக்கரயின் அம்மாவை எதிர்கொள்வதற்கான தைரியத்தை அடைந்து விட்டார். அந்த அம்மா அவருக்கும் அம்மாவாக இருந்தார்.”

**(விடுதலையின் கதை, பக்கம் 64,65)**

கைனிக்கர குமாரபிள்ளையின் வீட்டிலிருந்து விடைபெற்றுக் கிளம்பிய சங்குப்பிள்ளையால் மேலக்கரயிலுள்ள தனது வீட்டை அடைய இயலவில்லை. தெள்ளியூரைச் சேர்ந்த நண்பர் குடுக்கப்பாதாலில் கிருஷ்ணபிள்ளையின் வீட்டுக்கு ஒருவழியாகப் போய்ச் சேர்ந்தார். களைத்துப்போன சங்குப்பிள்ளையைக் காளைவண்டியில் படுக்கவைத்து அவரது மேலக்கர வீட்டில் சேர்த்தார்கள். 1924 டிசம்பர் 13ஆம் தேதி சிற்றேடத்து சங்குப்பிள்ளை மரணமடைந்தார். அவரது மரணச்செய்தி சத்யாகிரகிகளுக்கு எட்டியது. போராட்டப்பந்தல் துயரில் ஆழ்ந்தது சத்தியாகிரகிகள் சிற்றேடத்து வீட்டை அடைவதற்குள் இறுதிச்சடங்குகள் முடித்துவிட்டன. பின்னர், சத்தியாகிரகம் தொடர்பாக காந்தியடிகள் செங்ஙன்னூருக்கு வந்தபோது, சிற்றேடத்தின் ரத்தசாட்சி நினைவஞ் சலி அங்கு கடைப்பிடிக்கப்பட்டது. 1925 மார்ச் 11ஆம் தேதி செங்ஙன்னூரில் காந்தி உரையாற்றியபோது அவரது மடியில் சிற்றேடத்து சங்குப்பிள்ளையின் இரண்டுவயதான கடைசி மகன் சந்திரசேகரன், எதுவும் தெரியாமல் திகைத்தபடி அமர்ந்திருந்தான். காந்தியடிகளின் அருகில் விசிறி வீசி பணிவிடை செய்தவாறு சிற்றேடத்தின் மனைவி லட்சுமியம்மாவும் மூத்த மகன் பிரபாகரனும் நின்று கொண்டிருந்தார்கள்.’

கேரளத்தின் முதல் அரசியல் ரத்தசாட்சி என்கிற நிலையில் வரலாற்றுப் புகழ்பெற்ற சிற்றேடத்து சங்குப்பிள்ளையின் வரலாறு தக்கமுறையில் அங்கீகாரம் பெறவில்லை. சிற்றேடத்தின் நினைவு மண்டபம் அவரது சொந்த ஊரான மேலுகரயில் நிறுவப்பட்டுள்ளது.

## உதவிய புத்தகங்கள்:

1. சிற்றேடத்து சங்குப்பிள்ளை முதல் அரசியல் ரத்தசாட்சியின் கதை (தெள்ளியூர் கோபால கிருஷ்ணன், கரன்ட் புக்ஸ், கோட்டயம் 2007)
2. வைக்கம் சத்யாகிரக ஆவணங்கள் (தொகுப்பாசிரியர்: வழக்கறிஞர் பி.கே.ஹரிதாஸ், எஸ்.பி.சி.எஸ், கோட்டயம் 2020)
3. வைக்கம் சத்யாகிரகம் ஒரு சத்யாகிரகியின் நேரடி விவரிப்பு (சாது எம்.பி.வாரியர், 1926)
4. விடுதலையின் கதை (ஏழாம் பாகம்) பி.ஏ.வாரியர், கைரளி சில்ரன்ஸ் புக் டிரஸ்ட், கோட்டயம்,1986)
5. காந்தி தரிசனம் காந்தி மாதவன் பிள்ளை, 1974)
6. நீலகண்ட தீர்தபாத வரலாற்றுத் தொகுப்பு, 1920)
7. தீர்த்தபாத பரமஹம்ச சுவாமிகள் வாழ்க்கை வரலாறு, 1962)

**முனைவர் சுரேஷ் மாதவ்:**

மலையாளத்துறை, எஸ்.என்.எஸ்.கல்லூரி, பந்தளம், கேரளா.

**தமிழாக்கம்: நிர்மால்யா**

## வைக்கம் சத்தியாகிரகம்

# சாதி எதிர்ப்பும் பெரியாரும்



கே.கே.கொச்சு

வைக்கம் சத்தியாகிரகப் போராட்ட ஒருங்கிணைப்பிற்குத் தலைமை தாங்கிய டி.கே.மாதவன், 1921 செப்டம்பர் 24ஆம் தேதி திருநெல்வேலியில் காந்தியடிகளைச் சந்தித்தார். கோயில் நுழைவு என்கிற தேவையை முன்வைக்காமல் பொதுக்கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கும் உரிமைக்காகப் போராட வேண்டும் என்பது காந்தியடிகளின் கோரிக்கையாக இருந்தது. இதற்குக் காரணம் ஈழவர்கள் தலித்துகளுக்கு நிகரானவர்கள் என்று அவர் கருதியிருந்தார்.

டி.கே.மாதவன் இவ்வாறு பதிலளித்தார்: “ஈழவர்களின் நிலைமை பஞ்சமர்களைப் போன்றிருப்பதாகத் தாங்கள் கருதுகிறீர்கள். ஈழவச் சமுதாயத்தில் நிலவுடமையாளர்கள், வணிகர்கள், தொழிலதிபர்கள், நீதிபதிகள், மருத்துவர்கள், காவல் ஆய்வாளர்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள். இச்சமுதாயத்தில் ஸ்ரீநாராயணகுரு என்கிற மகான் இருப்பதாகத் தெரிவித்துள்ளீர்கள். இதனடிப்படையில் நீங்கள் கோயில் நுழைவு கருத்துக்கு ஆதரவாக இருக்கிறீர்கள்” என்றார்.

இச்சந்திப்புக்கு முன்பாகவே தனது பத்திரிகையான ‘தேசாபிமானி’ மூலமாகவும் திருவிதாங்கூர் சட்டசபையிலும் தீண்டாமைக்கும் சமூக அநீதிகளுக்கும் எதிராகத் தொடர்ந்து போராடி வந்தார் டி.கே.மாதவன்.

சமுதாய விழிப்புணர்வாகக் கருதப்படும் வழிபாட்டு உரிமை என்பது சமூகம் தொடர்பானது என்பதைப் போலவே அரசியலாகவும் இருக்க வேண்டுமெனக் கருதினார். இதன் அடிப்படையில் 1923இல் காக்கிநாடாவில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸின் ஆண்டு விழாவில் பங்கேற்றார். தீண்டாமை ஒழிப்புக்கு அகில இந்திய தளத்தில் ஒரு செயல்திட்டத்தை வகுக்க வேண்டும் என்கிற அறிக்கையை வெளியிட்டார்.

போராட்டத்திற்கு மாதிரியாக 1924 மார்ச் 17இல் ஆமசாடி தேவன் உள்ளிட்ட தலித் தலைவர்களை அழைத்துக் கொண்டு வைக்கத்தின் அருகிலுள்ள பூந்தோட்டா கோயிலுக்குள் நுழைந்தார். மதவுணர்வைக் காயப்படுத்திய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு ஆறு மாத சிறைதண்டனையை அனுபவித்தார்.






காங்கிரஸ் தொண்டன் என்கிற நிலையில் காந்தியடிகளின் தீண்டாமை ஒழிப்பை ஏற்றுக் கொண்ட போதிலும் டி.கே.மாதவனின் சமூக, தத்துவ அணுகுமுறைக்கு முன்மாதிரியாக இருந்தவர் ஸ்ரீநாராயணகுரு. ஆனால், ஸ்ரீநாராயண குருவின் சிந்தனைகளை அரசியல்படுத்த இயலாததால், காந்தியை ஏற்றுக் கொண்டார். இம்முரண்பாட்டை காந்தியடிகள் உள்வாங்கியிருந்த போதிலும் இந்து அல்லாத தலைமையை ஏற்றுக் கொள்ள துணியவில்லை.

டாக்டர் மாளவிகா பின்னி எழுதுகிறார்: “1925 மார்ச் 12 அன்று திருவிதாங்கூர் மகாராணியைச் சந்தித்தப் பிறகு சிவகிரிக்குத் திரும்பி நாராயணகுருவைச் சந்திக்கிறார் காந்தியடிகள். குரு முன்மொழிந்த ’ஒரு சாதி, ஒருமதம், ஒரு தெய்வம் மனிதனுக்கு’ என்கிற வாசகம் மீதான எதிர்ப்பை காந்தியடிகள் தெரிவித்ததாகச் சமூக விமர்சகர் ராபின் ஜெஃப்ரி கூறுகிறார்.

‘தீண்டாமை ஒழிப்புக்காக மேற்கொள்ளப் போகும் நெறிமுறைகளைச் சார்ந்தும் இருவரும் மாற்றுக்கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள். வைக்கம் சத்தியாகிரகம் உள்ளிட்ட தொடக்கூடாமைக்கு எதிரான போராட்டங்களில் அகிம்சை என்கிற ஒரேயொரு வழியை மட்டுமே காந்தியடிகள் வலியுறுத்தினார். ஆனால், சாதியப் போராட்டங்களைத் தொட்டுணர்ந்த நாராயணகுரு, ஒடுக்கப்பட்ட மக்கள் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் எவ்வழியைப் பின்பற்றினாலும் தவறில்லை என்கிற கருத்தைக் கொண்டிருந்தார்.’

வைக்கம் சத்தியாகிரகத்திற்கும் கோவில் நுழைவு ஆணைக்கும் முன்பாகவே, வைக்கம் சுற்றுப்பகுதிகளில் அய்யன்காளி தலைமையிலான சாதுஜன பரிபாலன சங்கத்திற்குக் குறிப்பிடத்தக்கச் செல்வாக்கு இருந்தது. எழுமாந்துருத்து, உல்லலா, ஆப்பஞ்சிறா, தலயோலப்பறம்பு, உதயனாபுரம் போன்ற பிரதேசங்களுக்கு நேரில் சென்ற அய்யன்காளி பொதுக்கூட்டங்களில் பங்கேற்றார்.

மேலும், அக்காலத்தில் பாம்பாடி ஜான் ஜோசப் தலைமை வகித்து வந்த திருவிதாம் சேரமர் மகாஜன சபையின் செல்வாக்கு காரணமாக வைக்கம் தாலூக்காவின் பலவிடங்களில் சேர, சோழ, பாண்டிய அரசவம்சங்களின் வரலாற்றை ஆதாரமாக்கி, ‘சேரமர் வரலாறு’ என்கிற நாடகத்தையும் நடத்தினார்கள். இத்தகைய செயல்பாடுகளின் நோக்கம் கோயில் நுழைவுப் போராட்டமாக இருக்கவில்லை. ஏனெனில், நிலம்,

தொழில், கல்வி என்பனவற்றுடன் நடமாடும் உரிமைக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருந்தது. ஸ்ரீமூலம் மக்கள்சபையில் அய்யன்காளியும் மற்ற தலித் தலைவர்களும் மேற்சொன்ன தேவைகளை முன்வைத்த விவாதம் நடத்தினார்கள்.

வைக்கம் சத்தியாகிரகத்தைப் பற்றி ஆய்வு நடத்திய பழ.அதியமான் தனது 'வைக்கம் சத்தியாகிரகம்' என்னும் புத்தகத்தில் சாதியும் ஜனங்களும் என்ற பகுதியில் புலையர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். புலையர்கள் தங்கள் சாதிப்பெயரை சேரமர் என்று மாற்றியதாகக் கூறுகிறார். சேரமர் மகாசபை 1925 டிசம்பர் மாதம் கோட்டயத்தில் ஒரு நடமாடும் உரிமைப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தியது. அக்காலத்தில் ஈழவர்கள் உள்ளிட்ட தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு நடமாடும் உரிமை மறுக்கப்பட்ட பல சாலைகள் கோட்டயத்தில் இருந்தன.

இதற்கெதிராக, சேரமர் மகாசபையின் தலைமையில் தலித் மக்கள் இணைந்து கீழ்குன்னு முதல் திருனக்கர குன்னு வரை பேரணி நடத்தினார்கள். ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் பங்கேற்ற பேரணியை போலீஸும் சுரியானி கிறிஸ்தவர்களும் நாயர்களும் ஒன்றிணைந்து தடுத்தார்கள். வன்முறையைக் கட்டவிழ்க்க முயன்றபோது பாம்பாடி ஜான் ஜோசப் தலையிட்டு எதிரிகளை பின்வாங்கச் செய்தார். இவ்வாறு அமைதிவழியில் திருனக்கரகுன்னு பகுதியில் பேரணி நிறைவுற்றது. தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் உரையாற்றினார்கள்.

அய்யன்காளியின் தலைமையிலான சாதுஜன பரிபாலன சங்கத்திற்கும் சேரமர் மகாசபைக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இல்லை. இவ்வமைப்புகள் இணைந்து வைக்கத்தின் அருகிலுள்ள இல்லல என்னுமிடத்தில் 1924 மார்ச் ஒன்றாம் தேதி சேரமர் சம்மேளனம் ஒன்றை நடத்தின. வைக்கம் கோயிலில் நடமாடும் உரிமை மறுக்கப்பட்டிருந்த வழிகளில் நடப்பது இந்நிகழ்ச்சியின் நோக்கமாக இருந்தது.

'தாய்நாட்டின் வரலாறு' என்ற புத்தகத்தில் சேரமர் சம்மேளனத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் விளக்கங்கள் இல்லை. திருவிதாங்கூர் முழுவதும் பல்வேறு தலித் அமைப்புகளின் முன்முயற்சியால் போராட்டங்கள் நடந்திருந்தாலும் வழிபாட்டு உரிமைக்காகவும் கோயில் நுழைவு உரிமைக்காகவும் போராட்டங்கள் நடந்தது கிடையாது. மதம் மாறிய கிறிஸ்தவர்களிடம் பாகுபாடு காட்டப்பட்டபோதிலும் கிறிஸ்தவ தேவாலயங்களில் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது மட்டுமல்ல, பாம்பாடி ஜான் ஜோசப், மேல்சாதி கிறிஸ்தவ சபைகளுக்குப் பதிலாக சேரமர் கிறிஸ்தவ சபையை உருவாக்கினார்.

இத்தகைய காரணிகளின் அடிப்படையில் இல்லலாவில் கூடிய சேரம மகா சம்மேளனம் நடமாடும் உரிமைக்கானது என்று அறுதியிட்டு சொல்லலாம். வைக்கத்தில் நடந்த சேரமர் சம்மேளனம், நடமாடும் உரிமைக்கான உள்ளூர் போராட்டம் என்பதாலும் நடமாடும் சுதந்திரம் சட்ட உரிமை என்பதாலும் அய்யன்காளி வைக்கத்திற்கு வரவில்லை.

காங்கிரஸ் தலைமையில் சத்தியாகிரகம் நடைபெற்றதால் அவர் அதை முற்றிலும் புறக்கணித்தார். ஆனால், சத்தியாகிரகத்தின் பரப்புரை செயல்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட கே.பி.கேசவமேனன், கே.கேளப்பன் நாயர், ஏ.கே.பிள்ளை, கரூர் நீலகண்டன் நம்பூதிரிப்பாடு ஆகியோர் அடங்கிய காங்கிரஸ் குழு இல்லலாவில் சேரமர் பிரதிநிதிகளைச் சந்தித்துப் போராட்டத்தை மார்ச் 30ஆம் தேதி நடத்தலாமெனக் கோரியது. இதனடிப்படையில் வைக்கம் சத்தியாகிரகத்தில் சேரமர்களின் பங்களிப்பு நிகழ்கிறது.

திருவிதாங்கூரின் பலவிடங்களில் காங்கிரஸின் பரப்புரைப் பேரணியின் அங்கமாக சேரமர் நிகழ்ச்சிகள் நடந்தன. வைக்கம் அமைதிப்போராட்டத்தைப் பற்றி எடுத்துரைத்துப் புரிய வைப்பதற்கும் தன்னார்வலர்களைச் சேர்ப்பதற்கும் மிஸ்டர் கே.ஜி. சங்கரனின் முன்னிலையில் ஒரு சேரமர் மகா சபையைக் கூட்டத் தீர்மானிக்கப்பட்டது.

போராட்டத்தின் பரப்புரை நோக்கத்தையும், திருவிதாங்கூர் முழுவதும் நடத்த காங்கிரஸின் விழிப்புணர்வைப் பற்றியும், சேரமர்களின் வருகையைப் பற்றியும் அக்காலத்தில் மாத்ருபூமி பத்திரிகை இவ்வாறு சுட்டிக் காட்டுகிறது: சாஸ்தாம் கோட்டையில் நடந்த நிகழ்ச்சியில் மூவாயிரத்திற்குக் குறையாத மக்கள் கூடினார்கள். அவர்களில் கால்வாசி பேர் சேரமர்கள். 1924 பிப்ரவரி 28ஆம் தேதி பரப்புரைப் பேரணியை வைக்கத்தில் தொடங்கும்போது கூடிய சேரமர் மகா சம்மேளனத்தில் ஏ.கே.பிள்ளை, டி.கே.


டி.கே.மாதவன்


கே.கேளப்பன்


அய்யங்காளி


கே.பி.கேசவ மேனன்

மாதவன், கே.வேலாயுத மேனன் ஆகியோர் உரையாற்றினார்கள். தொடர்ந்து, சேரமரும் ஈழவர்களும் பெரியதொரு பேரணியாக சத்தியாகிரகம் நடத்த தேர்வு செய்யப்பட்ட இடத்தை நோக்கிச் சென்றார்கள். சேரமர்கள் மற்றும் ஈழவர்களின் ஒற்றுமையையும் புத்துயிர்ப்பையும் இந்த சேரமர் மகாசபை வெளிப்படுத்தியது. மேலும், வைக்கம் சத்யாகிரகத்தின் தொடக்கமாகவும் அமைந்தது.

1925 காலகட்டத்தில் பொதுச்சாலைகளில் நடமாட கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை. மட்டுமன்றி, பயணங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன. ஆனால், சிற்சில பகுதிகளில் நீடித்த எதிர்ப்புக்குக் காரணம், தலித் மக்கள் மீதான வெறுப்பும் தீண்டாமைப் பழக்கவழக்கங்களுமே என்பதை பாம்பாடி ஜான் ஜோசப்பின் நடமாடும் உரிமைப் போராட்டம் வெளிப்படுகிறது.

ஆனால், வைக்கம் கோயிலைச் சுற்றி அமைந்திருந்த பொதுச்சாலைகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன. சட்டப்படி அச்சாலைகளைத் தாழ்த்தப்பட்டவர்கள் பயன்படுத்தலாம். ஆட்சியாளர்களின் ஆதரவின் காரணமாகவே கோயில் நிர்வாகிகளான உயர் வகுப்பினர்கள் நடமாடுவதற்குத் தடைவிதித்திருந்தார்கள். போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர்கள், போராட்டம் காலம் முழுவதும் இவ்விஷயத்தைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

போராட்டத்தை எதிர்கொள்ள மிஸ்டர் கேட்டன் என்ற அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். ஈழவ வகுப்பைச் சேர்ந்த அவரது ஓட்டுனருக்கு நடமாடும் உரிமை தரப்பட்டிருந்தது. இவ்விஷயத்தை வைக்கம் பகுதியின் உயர் வகுப்பினரின் ஆதிக்கம் சுட்டிக் காட்டியது. இந்த ஆதிக்கத்திற்கெதிரான தலித் நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்புகளோ, மொழி அறிவுகளோ கிடைக்கவில்லை. மற்ற சமுதாயங்களிலிருந்து தனிமைப்படுத்தி, சத்தியாகிரகிகளான சேரமர்கள் மீது நாயர் அடியாட்களும் போலீஸ்காரர்களும் தாக்குதல் தொடுப்பது அடிக்கடி நிகழ்ந்தது.

அவர்கள் காந்தியின் அகிம்சை கொள்கையைக் கடைப்பிடித்தக் காரணத்தால் ஒருதலைபட்சமாகத் தாக்குதலுக்கு இரையானார்கள். ஆமசாடி தேவனின் கண்களில் சுண்ணாம்பு நீர் ஊற்றப்பட்டதால் அவர் பார்வையிழந்தார். 1924இன் சத்தியாகிரக செய்திமடலில் டாக்டர் மாளவிகா பின்னி, வைக்கம் கோயிலின் தெற்கு நடையில் நிகழ்ந்த ஒரு தாக்குதலை விவரிக்கிறார்.

பஜனைக் குழுவுக்குப் பின்னால் ஒரு சேரமர் இருந்தார். இவர்கள் தெற்குப்பக்கம் திரும்பும்போது, ‘இதில் சேரமன் யாருடா? அங்கே நில்’. என்று கத்தினார்கள். உடனே நாயர்கள் அவரைப் பிடித்திழுத்து அடித்து உதைத்தார்கள். மற்றொரு சேரமர் தன்னார்வலரை முதுகிலும் தலையிலும் அடித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோழிக்கோட்டைச் சேர்ந்த கே.பி.கேசவப்பிள்ளை என்ற தொண்டரைப் சேரமர் என்று கருதித் தாக்கினார்கள். மேல்சாதிக்காரர்கள் மற்றும் போலீஸ்காரர்களின் தாக்குதலுக்கு தலித் சத்தியாகிரகிகளே அதிகமாக இரையானார்கள். போராட்டத்தின் முக்கிய வலிமையாக விளங்கியவர்கள் தலித்துகள் என்பதை இவ்விஷயம் உறுதிப்படுத்துகிறது.

சத்தியாகிரகத்திற்கு அனுமதி வழங்கி, கேரள பிரதேஷ் காங்கிரஸ்

கமிட்டியின் செயலாளர் கேசவ மேனனுக்கு 1924 மார்ச் 19இல் காந்தியடிகள் கடிதம் அனுப்பினார். போராட்டம் நடைபெறும் இடம் திருவிதாங்கூரின் வைக்கமாக இருந்தாலும், கே.பி.கேசவமேனன் உள்ளிட்ட பெரும்பகுதி காங்கிரஸ்காரர்கள் மலபாரைச் சேர்ந்தவர்கள். இதற்கு முதல் காரணம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, சிற்றரசுகள் ஆட்சி செலுத்திய பகுதிகளில் தனது செயல்பாட்டை விலக்கி வைத்திருந்தது.

திருவிதாங்கூரைச் சேர்ந்த காங்கிரஸ் தொண்டர்கள் தனிநபர்களாக, தலைமையேற்றுப் போராட்டத்தில பங்கேற்றார்கள். மலபாரைச் சேர்ந்தவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியையும் காந்தியடிகளையும் சார்ந்திருந்தார்கள். அவர்கள் போராட்டம் முழுவதிலும் கருத்துச் சார்ந்தும் அமைப்பு ரீதியாகவும் தலைமை வகித்தனர்.

திருவிதாங்கூர் சிற்றரசில் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு இல்லாமையாலும் காந்தியடிகளின் அங்கீகாரம் மலபார் காங்கிரஸிடம் இருந்தமையாலும் திருவிதாங்கூரின் பிரதிநிதித்துவத்தை மலபார் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. சேரமர் மகா சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடனான புரிதலின் அடிப்படையில் மார்ச் 30ஆம் தேதி சத்தியாகிரகத்தைத் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டது.

சத்தியாகிரக அறிவிப்பை வெளியிட்டு மார்ச் 13ஆம் தேதி கேசவ மேனன் எழுதிய கடிதத்திற்கான பதிலில் காந்தியடிகள் இவ்வாறு எழுதினார்: ‘சத்தியாகிரகத்தின்போது எதிராளிகள் வன்முறையைக் கையாண்டாலும் சத்தியாகிரகிகள் பொறுமை காக்க வேண்டும். திருப்பித் தாக்கக் கூடாது.’ சத்தியாகிரகக் கொள்கைகள் அடங்கிய துண்டறிக்கையில் கேசவமேனன் “இந்தச் சாலைகள் அரசாங்கத்தின் பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ளன. விலங்குகளும் பறவைகளும் உள்ளடங்கிய அனைவரும் பயன்படுத்தலாம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், இந்துக்களில் உயர்ந்த சாதியினரைத் தவிர தாழ்ந்த சாதிக்காரர்கள் பயன்படுத்தக் கூடாதாம். அனைத்து இந்துக்களின் மரியாதையைப் பாதுகாக்கவும் இந்தச் சாலைகளில் அனைத்துச் சாதியைச் சேர்ந்த இந்துக்களும் நடக்க வேண்டும் என்பதற்காகவும் சத்தியாகிரகத்தைத் தொடங்க முடிவெடுத்துள்ளோம்” இவ்வாறு ஒருமாதம் தொடர்ந்த பிரச்சார நிகழ்ச்சிகள் மூலம் கேரள பிரதேஷ் காங்கிரஸ் கமிட்டி உருவாக்கிய ‘தீண்டாமை ஒழிப்புக் குழு’ வின் தலைமையில் 1924 மார்ச் 30ஆம் தேதி வைக்கம் சத்தியாகிரகம் தொடங்கியது.

திருவிதாங்கூர் இளவரசியின் கோயில் தரிசனத்தை முன்னிட்டு ஆறுநாட்களுக்குச் சத்தியாகிரகம் நிறுத்தி வைக்கப்பட்டது. ஏழாம் நாள் (1924 ஏப்ரல் 7) சத்தியாகிரகிகள் கைதானார்கள். டி.கே.மாதவனும் கே.பி.கேசவ மேனனும் கைது செய்யப்பட்டார்கள். கோயில் அருகில் கீழ்ச்சாதிக்காரர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த சாலைகளில் நடக்க தூண்டியதுதான் இவர்கள் மீதான குற்றச்சாட்டு. இதன்மூலம் மேல்சாதி இந்துக்கள் கோபமடைந்துள்ளார்கள்.

டி.கே.மாதவன் கூறினார்: ‘இந்தப் பொதுவழிகளில் எல்லோரையும் நடக்க அனுமதிக்க வேண்டும். கோயிலைச் சுற்றி அமைந்துள்ள வழி என்பதற்காக இந்த வழியைத் தேர்ந்தெடுக்கவில்லை. சட்டத்தால், அங்கீகரிக்கப்பட்ட ஓர் உரிமை மறுக்கப்பட்ட காரணத்திற்கு எதிராகப் போராடிக் கைதாகி உள்ளோம்.’ இந்த வாதத்தை நிராகரித்த நீதிபதி 500 ரூபாய் அபராதம் விதித்தார். அபராதத்தைச் செலுத்தவில்லையெனில் ஆறுமாத சிறைத்தண்டனை வழங்க உத்தரவிட்டார். அபராதத்தைச் செலுத்தாத காரணத்தால் ஆறுமாத சிறைத்தண்டனைத் தரப்பட்டது.

காங்கிரஸையும் காந்தியடிகளையும் ஏற்றுக் கொண்ட பெரியார், திருவிதாங்கூர் முழுவதும் சத்தியாகிரக வெற்றிக்காக மக்களைத் திரட்டும் பணியைத் தீவிரப்படுத்தினார். தன்னார்வலர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை அரசாங்கம் நிறுத்தியிருந்தது. பெரியார் வைக்கத்தின் சமீப பிரதேசங்களில் விரிவாகப் பரப்புரை செய்தார். இத்தகைய பரப்புரைகளுக்கு காந்தியடிகள் மறுப்பு தெரிவித்தார்.

இருப்பினும் ஜனாப் பரீத் சாகிப்பின் தலைமையில் சத்தியாகிரகிகளின் ஒரு பெரியதொரு கூட்டம் போராட்டத்தில் இணைந்தது. பெரியாரின் கட்டளைப்படி தொண்டர்களின் குழுவொன்று தமிழ்நாட்டிலிருந்து வைக்கத்திற்குப் புறப்படத் தயாரானது. இவ்வாறு வெகுஜனப் பங்களிப்பை உறுதி செய்த பெரியார், சேர்த்தலா, ஆலப்புழா ஆகிய பகுதிகளில் தனியாகவும் பிறருடன் இணைந்தும் பரப்புரை மேற்கொண்டார்.





இத்துடன், வெல்லூர் மடத்தில் நடந்த தீண்டாமை எதிர்ப்பு அமைப்பின் கூட்டம் சத்தியாகிரகத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, பெரியார் அடங்கிய எட்டு உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டி விரிவுப்படுத்தப்பட்டது. அதே நிகழ்ச்சியில் மகளிர் கமிட்டி உருவாக்கப்பட்டது. பெரியார், டி.கே.மாதவன், கோவிந்தன் ஆகியோர்களின் துணைவியர்களை கமிட்டிக்குத் தலைமையேற்க முடிவு செய்யப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் பெரியாரின் மனைவி நாகம்மையின் போராட்டப் பங்களிப்பைச் சுட்டிக் காட்டுவது அவசியம்.

சத்தியாகிரகத்தில் தொண்டர்களுடன் இணைந்து போராட்டக் களத்தில் தீரத்துடன் நின்றார் நாகம்மை. போலீஸாரின் அச்சுறுத்தலை அச்சமின்றி எதிர்கொண்டார். ஆண்கள் சொற்பொழிவாற்ற அரசாங்கம் தடைவிதித்தபோது, நாகம்மை போராட்டத்திற்கான நோக்கங்களையும் இலட்சியங்களையும் விவரித்து சீங்னோலி, முட்டம், கொல்லம், மய்யநாடு, நெடுமங்ஙாடு, திருவனந்தபுரம் ஆகியவிடங்களில் பரப்புரைச் சுற்றுப்பயணம் நடத்தினார்.

பெரியாரின் சிற்றன்னை, தங்கை ஆகியோருடன் சத்யாவிருதனும், கோட்டுகோயிக்கல் வேலாயுதனும் பயணங்களில் பின்தொடர்ந்தார்கள். 1924 மே மாதம் 20ஆம் தேதி நாகம்மையும் அவரது சிற்றன்னையும் அடங்கிய மகளிர் குழுவினர் கோயில் கோபுர வாசலை நெருங்கினார்கள். திருமதி கோவிந்தன் என்பவரைத் தவிர மற்றவர்களுக்கு அனுமதி தரப்பட்டது. பெண்கள் இரண்டு மணிநேரம் கோபுர வாசலின் அருகில் அமர்ந்து எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

எடுத்துக்காட்டாகவும் பின்தொடரக் கூடியதாகவும் விளங்கியது பெரியாரின் அமைப்புச் செயல்பாடு. ஒவ்வொரு முறையும் கூட்டம் நடத்தி, விவாதங்கள் மூலம் உருவாகும்



முடிவுகள் ஏற்கப்பட்ட பிறகே அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்தார்கள். இவ்வாறு எடுக்கப்படும் முடிவுகள் உடனுக்குடன் காந்தியடிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. சத்தியாகிரகத்திற்கெதிராக எதிர்ப்புகள் வலுத்தபோது பெரியார், மதுர தாஸ் ஆகியோர் காந்தியடிகளால் மறுக்கப்பட்டிருந்த உண்ணாவிரதத்தை தொடங்க முடிவெடுத்து அவருக்குத் தகவல் அனுப்பி வைத்தார்கள். சத்தியாகிரகத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்த தொண்டர்களையும் நிதியையும் திரட்டினார்கள். பெரியார் தெற்குத் திருவிதாங்கூரின் பல கூட்டங்களில் பங்கேற்றார். நாகர்கோயிலில் ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டத்தில் பல்வேறு இந்து அமைப்புத் தலைவர்களுடன் குலாம் ஹைதர் என்கிற இஸ்லாமியர் உரையாற்றினார். தக்கலையில் நடந்த கூட்டத்தில் சத்தியாகிரகம் குடியுரிமை என்றும் மனித உரிமை என்றும் கருத்துரைத்தார் பெரியார்.

ஆகச்சிறந்த ஒருங்கிணைப்புச் செயல்பாடுகளாலும் எழுச்சியூட்டும் சொற்பொழிவுகளாலும் மேல்சாதிக்காரர்களின் முக்கிய எதிரியாக மாறினார் பெரியார். அவருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அதற்குச் சான்று.

திருவிதாங்கூர் தண்டனைச் சட்டம் 27ஆம் பிரிவின்படி சொற்பொழிவாற்றவும் பிற நடவடிக்கைகளுக்காகவும் கோட்டயம் மாவட்டத்தில் நுழைய பெரியாரை அனுமதிக்கவில்லை. உத்தரவை வாங்கிய பெரியார், தடையை மீறுவதாக அதிகாரிகளிடம் தெரிவித்தார். பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

பெரியார் சிறையில் இருந்தபோது, நாகம்மையின் தலைமையில் பெண்கள் போராட்டத்தைத் தொடர்ந்தார்கள். பின்னர், விடுதலையடைந்த பெரியாருக்கு பாணாவள்ளியில் வரவேற்பு வழங்கப்பட்டது. ஆனால், நீதிபதியின் உத்தரவை மீறியதற்காக 1924 ஜூலை 16ஆம் தேதி மீண்டும் கைது செய்யப்பட்டார். நான்கு மாத சிறைத்தண்டனை தரப்பட்டது. சிறையில் இருந்த மற்ற கைதிகளிடம் நடந்து கொள்வதைப் போல அரசாங்கம் பெரியாரையும் நடத்தியது.

சிறை நிலைமைகளைப் பற்றி கே.பி.கேசவ மேனோன் எழுதினார்: ‘காலில் இரும்புச் சங்கிலி. தலையில் கைதிகள் அணியும் தொப்பி. முழங்கால் வரையிலான வேட்டி. கழுத்தில் கைதிகளை அடையாளம் காண்பதற்கான எண்கள் பொறிக்கப்பட்ட அட்டை.’ இத்தோற்றத்தில் கொலைக்கைதிகளுடன் சேர்ந்து ஈ.வெ.ரா வேலை செய்தார். சிறையிலிருந்து விடுதலை பெற்ற பெரியார் ஏற்கெனவே செய்ததைப்போல பல்வேறு பகுதிகளுக்குச் சென்று சொற்பொழிவாற்றினார். சத்தியாகிரகம் தடைப்படாமல் இருக்க நிதி திரட்டினார்.

போராட்டம் கேரளத்தில் நடந்தபோதிலும் தமிழ்நாட்டின் சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோயில், சென்னை ஆகிய மாவட்டங்களிலிருந்து தன்னார்வலர்கள் பெரும் திரளாகப் பங்கேற்றார்கள். தமிழ் மக்களின் பங்களிப்பு இவ்வாறாக இருந்தது. இக்னேன்வஷஸ் என்கிற கிறிஸ்தவர் அடங்கிய 57 சத்தியாகிரகிகள்,

குலாம் ஹைதர் என்கிற இஸ்லாமியர் அடங்கிய 8 சத்யாகிரகிகள், நிதியுதவி வழங்கிய பிரமுகர்கள் 5 பேர், அப்துல் ஹமீத்கான் என்கிற இஸ்லாமியர் அடங்கிய தொண்டர்கள் 14 பேர், பரப்புரை கமிட்டியைச் சேர்ந்த 7 பேர்.

சத்தியாகிரகத்தில் இந்துக்கள் அல்லாதவர்கள் பங்கேற்கக் கூடாது என்கிற காந்தியின் கருத்துக்கு எதிராக செயல்பட்டார் பெரியார். காந்தியடிகளின் தீண்டாமை ஒழிப்பு என்பது மேல்சாதி ஆதிக்கத்திற்கு ஊறு நேராமலும், வர்ணாசிரம முறையை அங்கீகரிக்கக் கூடியதாகவும் இருந்தது.

கலப்புத் திருமணம் மூலமாகவும் அகிம்சை வழியிலும் வைதீகர்களுக்கு மனமாற்றங்கள் நிகழுமென்று காந்தி கருதினார். வைதீகர்கள் ஆட்சியாளர்கள் போன்றவர்களை அதிருப்திப்படுத்தாமல் சத்தியாகிரகத்தை நடத்த வேண்டுமென விரும்பினார். காங்கிரஸாரின் நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் துறவி வேடமும் காந்தியடிகளுக்குப் பெரிய அங்கீகாரத்தைப் பொதுமக்களிடையே பெற்றுத் தந்தது. ஆனால், பெரியாரைப் பொருத்தவரை காந்தியடிகள் மீதான விமர்சனமாக இதை வைத்தார்.

தீண்டாமை முடிவுக்கு வராமல் சுதந்திரம் கிடைத்துப் பயனில்லை. இத்துடன் அவர் குறிப்பிட்ட சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்பனவற்றைக் கொண்ட ஒரு சமூகம் நடைமுறைக்கு வர வேண்டுமெனில் தீண்டாமைத் துடைத்தெறியப்பட வேண்டும் என்றார்.

நடமாடும் சுதந்திரத்தின் அடுத்த கட்டம் கோயில் நுழைவுப் போராட்டமே என்கிற கருத்தைக் கொண்டிருந்தார் பெரியார். காந்தியடிகளை மீறிச் செல்லத் தயங்கினார். 1925 மார்ச் மாதம் 12ஆம் தேதி நாராயணகுருவையும் மகாராணியையும் காந்தியடிகள் சந்தித்தார். அப்போது பெரியாரும் உடன் இருந்தார். மார்ச் 13ஆம் தேதி பெரியாரிடம் உரையாடிவிட்டு காந்தியடிகள் மகாராணியைச் சந்தித்தார்.


குமாரன் ஆசான்


நாகம்மையார்


ஆமசாடி தேவன்

மகாராணி கூறினார்: ‘பாதைகளைத் திறந்து விட தயார். ஆனால், நடமாடும் சுதந்திரம் கிடைத்தவுடன் கோயில் நுழைவுக்காகச் சத்தியாகிரகம் ஆரம்பிக்கப்போவதாக ஈ.வெ.ரா பேசியிருக்கிறார். அத்தகையதொரு போராட்டத்தைத் தொடரக் கூடாதென நீங்கள் அறிவுறுத்த வேண்டும். கோயில் நுழைவுப் போராட்டம் செய்யப் போவதில்லையென உறுதியளித்தால் இப்போதே நடமாடும் சுதந்திரத்திற்கான உத்தரவைப் பிறப்பிக்கிறேன்.’ இச்சமயத்தில் பெரியாரும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

மகாராணியின் அபிப்பிராயத்திற்கு என்ன பதிலளிப்பதென காந்தியடிகள் கேட்டார். பெரியார் கூறினார். ‘நமது குறிக்கோளான நடமாடும் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டால் தீண்டாமை நீங்கிவிடாது. மூடப்பழக்க வழக்கங்களுக்கு முடிவு கட்டவே நாம் போராடுகிறோம். ஆனால், தற்போதைக்குக் கோயில் நுழைவு கிடையாது. அதற்கு மக்களைத் தகுதிப்படுத்திய பிறகே போராட்டம் நடத்தப்படும்.” பெரியாரின் கருத்துக்கேற்ப இப்போது கோயில் நுழைவு, செயல்நிரலில் கிடையாது என்று மகாராணியிடம் தெரிவித்தார் காந்தி.

காந்தியடிகளின் வருகையால் ஏற்பட்ட விளைவு ‘பிட் உடன்படிக்கை’ என்று கருதப்படுகிறது. திருவிதாங்கூர் போலீஸ் கமிஷனரான பிட்டும் காந்தியடிகளும் சேர்ந்து உருவாக்கிய உடன்படிக்கை இவ்வாறாக இருந்தது. சத்தியாகிரகிகள் தடையை மீற மாட்டோம் என்றும் தடுப்புகள் வைக்கப்பட்ட இடத்திற்கு அப்பால் தாண்ட மாட்டோம் என்று உறுதியளித்தால், போலீஸ் தடுப்புகளை அகற்றத்

தயாராக உள்ளது. மட்டுமல்ல, சத்தியாகிரகிகள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்.

பிட் உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தும் சத்தியாகிரகம் பெரியதொரு சம்பவத்தை எதிர்கொண்டது. வைக்கம் உள்ளிட்ட எல்லாப் பொதுவழிகளிலும் எல்லா மக்களுக்கும் பிரவேசிக்க அனுமதி வழங்க வேண்டும். இந்தத் தேவையை முன்வைத்து ஸ்ரீமூலம் மக்கள் சபையில் ஒரு அறிக்கையை 1925 அக்டோபர் 3ஆம் தேதி குமாரன் ஆசான் முன்வைத்தார். நடமாடும் உரிமை, சட்டத்திற்குப் புறம்பானது என்றால் சிவில் நீதிமன்றத்தை அணுக வேண்டும் என்றார் சபைத்தலைவர்.

மேற்குறிப்பிட்ட அறிக்கை தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிப்ரவரி 7ஆம் தேதி கூட்டத்தில் கிருஷ்ண அய்யங்கார், வைக்கம் கோயிலுக்கு அருகிலுள்ள பாதைகளை எல்லா சாதியினரும் நடக்கத் திறந்து தரவேண்டுமெனக் கோரி புதியதொரு மசோதாவை முன்வைத்தார். சாதகப் பாதக அம்சங்களை விவாதித்தப் பிறகு மசோதாவை ஓட்டெடுப்புக்காக வைத்தபோது ஒரு ஓட்டு வித்தியாசத்தில் மசோதா தோல்வியடைந்தது.

அதே சமயம், சத்தியாகிரகத்தின் கடைசி கட்டப் பயணம் வளைந்து நெளிந்து ஏற்ற இறக்கங்களைக் கொண்ட பாதையில் சென்று கொண்டிருந்தது. பிட் உடன்படிக்கை நடைமுறைக்கு வந்ததும் கோயிலின் கிழக்குப்பக்கத்திலுள்ள சாலையைத் தவிர மற்ற மூன்று பாதைகளையும் தீண்டத்தகாதவர்களுக்காகத் திறந்து கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

போராட்டக்குழு இந்த அறிவுரையை நிராகரித்தது. கிழக்குக் கோபுரத்தின் அருகில் சிறியதொரு கதவை நிறுவவும், வழிபட வரும் பக்தர்கள் பிரவேசிக்கவும் அனுமதித் தரப்படுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பொருட்டு, கிழக்கு நடை, பக்தர்களுக்காகவும் பூசாரிகளுக்காகவும் அனுமதிக்கப்படும். அதனுடைய கட்டுப்பாடு தேவஸம் போர்டிடம் இருக்கும். மட்டுமல்ல, கிழக்குப் பக்கத்திலுள்ள சாலை வடக்குப் பக்கத்திலிருக்கும் சாலையுடன் இணைக்கப்படும். அந்தப் பாதை வழியாகப் பிராமணர்கள் தீட்டுப் படாமல் நடக்கலாம். மகாராணியின் இந்த முடிவு ராஜகோபாலாச்சாரி மூலம் காந்தியடிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

உத்தரவைப் படித்த காந்தியடிகள் இவ்வாறு எழுதினார். 'நீங்கள் சத்தியாகிரகத்தை நிறைவு செய்ய வேண்டும்.' தீண்டாமை முழுவதுமாக அகற்றப்படவில்லை என்பதைக் காந்தியடிகள் அறிவார். இருப்பினும், அரசாங்கத்தின் சமரசத்தை மதித்து சத்தியாகிரகத்தை நிறைவு செய்யத் தீர்மானிக்கப்பட்டது. பிந்தைய சம்பவங்கள் இவ்வாறு இருந்தன. தீண்டாமை வழக்கத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் நடமாடும் உரிமைக்குத் தலைமை வகித்த பெரியார், தமிழ்நாட்டுக்கு திரும்பினார்.

காங்கிரஸ் தலைவர் பதவி உட்பட எல்லாப் பதவிகளையும் ராஜினாமா செய்து, உறுதிமிக்க ஒரு திராவிடக் கட்சியை வடிவமைத்தார். காந்தியடிகளின் அறிவுரைப்படி முழுமையற்ற நடமாடும் சுதந்திரம் தலித்-பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் காலம் வழங்கியபோது, வைக்கம் காங்கிரஸிடமிருந்து கைமாறி கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்டையாக பரிணமித்தது.

**கே.கே.கொச்சு:**

**'அம்பேத்கர்- வாழ்வும் பணியும்' என்னும் நூலின் தொகுப்பாசிரியர். 'சீடியன்' என்கிற தலித் அமைப்பின் இதழாசிரியராக இருந்தவர். இவரது தன்வரலாறு 'நான் தலித்' என்ற பெயரில் வெளியாகியுள்ளது. கேரள வரலாறும் சமுதாய உருவாக்கமும் போன்ற பதினாறுக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார்.**

தமிழாக்கம்: **நிர்மால்யா**



முனைவர்
ஓ.கே. சந்தோஷ்

# வைக்கம் சத்தியாகிரகம்: வரலாறும் சமகாலமும்



பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முதல் தசகங்களிலும் அன்றுவரை இல்லாத சமூகப் புத்தெழுச்சிகள் பல்வேறு சமுதாயங்களில் உருவாகுவதற்குக் கேரளம் சாட்சியாக விளங்கியது. தேசியத் தளத்தில் விடுதலை எழுச்சிகளும் காலனிய எதிர்ப்புப் போராட்டங்களும் தீவிரமடைந்தபோது அரசியல் அமைப்புகளிலிருந்து விலகி, சமூகப் புத்தெழுச்சிக்காகச் சமுதாயத்தின் உள்சக்திகள் முளைவிட்டது முரண்பாடாகத் தோன்றலாம்.

அரசியல் மாற்றம், சமூக மாற்றம் இவற்றில் எது இந்தியாவைப் போன்றதொரு சமூகத்தில் முதலில் நிகழ வேண்டும் என்கிற விவாதம் தொடர்ந்தது. அவ்வேளையில் திருவிதாங்கூர், கொச்சி, மலபார் என்று பிரிக்கப்பட்ட பிரதேசங்கள் சமுதாயச் சிறப்புவாய்ந்த அரசியல் வகைமைக்கு மாறின என்பதே உண்மை. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் போன்றவர்கள் சமூக மாற்றமின்றி அரசியல் மாற்றம் நிகழுமெனில் நீண்ட கால அடிப்படையில் அது நன்மை பயக்காதெனக் கருதினார்கள். சமூக அடிப்படையில் பகுக்கப்பட்டவர்கள், அரசியல் சார்ந்தும் பகுக்கப்பட வேண்டுமென விரும்பிய அவரது நிலைப்பாட்டின் கருத்தாக்கம் இந்தப் பாகுப்பாட்டில் ஆழமாகப் பதிந்திருப்பதைக் காணலாம்.

ஆனால், தேசியத்தளத்தில் காந்தி தலைமையில் தீவிரமடைந்த அரசியல் எழுச்சிகள் சமூக சீர்திருத்தத்தை இரண்டாவதாகக் கணித்தன. பின்னர், கருத்துத்தளத்தில் பிரபலமான இடதுசாரி அமைப்புகளும் அவற்றைச் சார்ந்த சமுதாயங்களும் தேவையின்றி விமர்சிக்கப்படுவதாகக் கருதப்பட்டது. இதற்கிடையில், கேரளத்தில் உருவான உரிமைப்போராட்டங்களில் சமுதாயம் என்பது மையப் பொருளாக மாறியது.

சம உரிமையும் மனித உரிமையும் மறுக்கப்படுவதற்கு அடிப்படையாக இருப்பது சாதியே என்று பொதுவெளியில் நிறுவப்பட்டது. அதற்கான தெளிவான சான்றுகள்தான் மலையாளி மெம்மோரியல் (1892) ஈழவ மெம்மோரியல் (1896) போன்ற தீர்மானங்கள். பின்னர் விவேகோதயம், மிதவாதி, சாது ஜன பரிபாலினி, உண்ணி நம்பூதிரி, சகோதரன், சேரமர் தூதன் போன்ற சமூகப்பிரச்சினைகளைப் பிரதானமாக முன்வைக்கும் பத்திரிகைகளின் உள்ளடக்கமும் பரப்புரையும் அதுவாக இருந்தது. அவை சாதியச் சர்ச்சைகளை விமர்சனம் சார்ந்தும் நன்மை சார்ந்தும் நிறுவ முற்பட்டதைக் காணலாம்.



வைக்கம் சத்தியாகிரகத்தின் வரலாற்றுப் பின்னணி வெறும் நடமாடும் உரிமைக்கானது மட்டுமல்ல, ஆங்காங்கே உருவான பண்பாட்டு வரலாற்று நிகழ்வுகளின் எதிர்வினைகளும் அந்த எழுச்சியின் பின்னணியில் உள்ளன.

வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டைக் கொண்டாடும் வரலாற்றுப் பின்புலத்தில் வெவ்வேறு கோணங்களில் போராட்டத்தைப் புரிந்து கொள்வதற்கான முயற்சிகள் உயிர்ப்படைந்துள்ளன. காந்தி, பெரியார் ஆகியோரின் தலையீடும் முன்னிலையும் சத்தியாகிரக எழுச்சியைத் தேசியத் தளத்திற்கு எவ்வாறு உரம் ஊட்டின என்கிற தேடலில் தொடங்கி, ஈழவர்களுக்குக் கீழ்த்தட்டிலுள்ள சமுதாயங்களின் பங்களிப்பு வரலாற்றில் தென்பட்டது எப்படியெனச் பரிசோதிக்கும் ஆய்வுகள் வரை சமீப காலத்தில் உருவாகியுள்ளது.

காந்திய நிலைப்பாடுகள், அம்பேத்கரின் கருத்துகள் ஆகியவற்றை ஒட்டியும் வெட்டியும் நிறுவப்பட்ட போராட்டமாக சுனில் பி. இளையது போன்றவர்கள் மதிப்பிடுகிறார்கள். ஆனால், ஈழவச் சமுதாயத்தில் உருவான மத்தியதர வகுப்பினரின் அதிருப்திகளையும் மேல்சாதி அரசியலின் பிந்தைய காலனிய அச்சுறுத்தல்களையும் சத்தியாகிரகப் போராட்டம் உருவாக்கிய காரணிகளாக டி.டி.ஸ்ரீகுமார் சுட்டிக் காட்டுகிறார். மேலும் ‘இந்து அமைப்புகள் மதமாற்றங்களைத் தடுப்பதற்கான எதிர்ப்பாற்றலை முழுவதுமாக இழந்துவிட்டதை உணர்ந்து, காங்கிரஸின் உதவியை நாடும் சூழ்நிலை ஏற்பட்டது. இந்தப் பின்னணியில்தான், தீண்டாமை ஒழிப்பு என்கிற இந்து மத புத்தாக்கச் செயல்நிரல் அகில இந்தியத் தளத்தில் உருவானது.

1917இல் அன்னிபெசன்ட் தலைமையில் கல்கத்தாவில் நடத்த ‘பாரத மகாசபை’ கோயில் நுழைவை அரசியல் செயல்நிரலாக ஏற்றுக் கொண்டது. கேரளத்தின் அடித்தட்டு–தலித் சமுதாயத்தினரைப் பொருத்தவரை மதமாற்றம் என்கிற செயல்பாடு இந்து அமைப்பின் உள் பலவீனங்களைக் குறித்துக் கேள்வி எழுப்புவதுடன், தங்கள் மக்கள் தொகை சார்ந்த உரிமைக்குரல்களையும் ஆதிக்கத்தையும் திறந்து காட்டும் சமூகச் செயல் நிரலாகவும் இருந்தது. வடக்கு மலபாரில் இஸ்லாமிய மதத்திற்கும் திருவிதாங்கூரில் கிறிஸ்தவ மதத்திற்கும் மேற்குறிப்பிட்ட வகுப்பினர் ஈர்க்கப்பட்டார்கள். மனித உரிமைக்கும் சுயமரியாதைக்குமான தேடலின் பகுதியாகவே இதற்குரிய காரணம் உணரப்படுகிறது. இத்தகைய விடுதலைச் செயல்பாடுகள் சுருக்கப்பட்டு, சுய லாபங்களுக்கான நகர்த்தல்கள் என்கிற விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

தெற்குத் திருவிதாங்கூரைச் சேர்ந்த வைகுண்ட சுவாமியின் அமைப்பைப் பற்றிய ஆய்வில் வரலாற்றாளரும் சமூகவியலாளருமான எம்.எஸ்.எஸ்.பாண்டியன் இவ்விஷயத்தை ஓரளவு அங்கீகரிக்கிறார். மத காலனியத்துவத்தை எதிர்ப்பதற்கும் தங்கள் உரிமைகளை அதிகாரிகளின் எதிரில் சேர்ப்பதற்குமான பயனுள்ள சந்தர்ப்பமாக நாடார் வகுப்பினர், கிறிஸ்தவ மத மாற்றத்தைக் காண்பதாகச் சுட்டிக் காட்டுகிறார். டி.எம்.யேசுதாஸன் என்பவர் மதமாற்றம் என்கிற செயல்பாட்டை மதத்தின் ஏறுமுகம் என்கிற குறியீடு மூலம் வேறொரு தளத்தில் விளக்க முயல்வதைப் ‘பலியாடுகளின் மரபுத்தொடர்’ என்ற புத்தகத்தில் காணலாம். இவை அனைத்தும் சாதிப்படிநிலையைக் கோட்பாட்டு அடிப்படையிலும் நடைமுறை சார்ந்தும் ஏற்றுக்கொள்ளும் மத, உயர்வகுப்பு அமைப்பினரின் கடும் கண்டனத்துக்குக் காரணமாயின. அதே காலகட்டத்தில் சுயமரியாதை அமைப்பின் மூலம் இதே எதிர்ப்பையும் விமர்சனத்தையும் பெரியார் தமிழ்நாட்டில் முன்னெடுத்தார்.

பொதுத்தளத்தில் வைக்கம் சத்தியாகிரகத்தை விளக்குவதற்கான கருத்தியல் முயற்சிகள் இருந்தபோதிலும், அவை பொதுவிடங்களில் உரிமை, பயன்பாடு என்பவற்றைப் பற்றிய அடிப்படை வினாக்களை எழுப்பின என்பதும் உண்மை. உயர்வகுப்பினரின் சிறப்பு அதிகாரமாகக் கருதப்பட்ட வழிபாட்டு உரிமையை நாராயணகுரு சிவன் பிரதிஷ்டை மூலமாக உடைத்தெறிந்தார். நடமாடும் உரிமை மறுக்கப்பட்ட பொதுவழிகளில் அய்யன் காளி வில்வண்டி ஓட்டினார். இச்சம்பவங்கள் மதம் என்கிற நிலையைக் கடந்து மனித உரிமைக்கான அறிவிப்பையும் நடைமுறையையும் விவாதிக்க உதவின.

பொய்கையில் யோஹன்னன் மத்திய திருவிதாங்கூரின் முக்கிய வழிகளின் ஊடாகத் தனது தொண்டர்களுடன் பயணிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்பதை அவரது வாழ்க்கை வரலாற்றில் காணலாம். இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் பொதுக்



கல்வி, வேலைவாய்ப்பு, பொது வழிகளில் நடமாடுவது என்கிற சமூகச் செயல்பாடுகளையும் சமூகப் பார்வையையும் ஒப்பிடும் போது இன்று கற்பனைக்கு அப்பாற்பட்ட மாற்றங்கள் உருவாக்கியிருப்பதைக் காண்கிறோம்.

1924 மார்ச், ஏப்ரல் மாதங்களில் 'மலையாளி' பத்திரிகையில் எழுதப்பட்ட தலையங்கத்தைப் பரிசீலிப்பது இதற்கு வலு சேர்க்கும்: வைக்கம் கோயில் சாலை, பொதுப்பாதை ஆகும். இதில் மாற்றுக் கருத்து இல்லை. திருவிதாங்கூர் அரசாங்கத்தின் நிதியை வைத்துத்தான் அந்தப் பாதைப் பராமரித்துப் பாதுகாக்கப்படுகிறது. அந்தப் பாதையில் திருவிதாங்கூர் அரசாங்கத்தின் எல்லாக் குடிமக்களுக்கும் சாதி வித்தியாசமின்றி நடப்பதற்கான உரிமை உள்ளது. இந்தப் பிறப்புரிமையை ஒழிக்கத் தயாராகி நிற்பவர்களுக்குச் சாதகமான ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நடமாடும் சுதந்திரம் என்பது பிறப்புரிமை என்றும் அது மேல்சாதி இந்துக்களின் உறுதிப்பாட்டுக்கு அப்பாற்பட்ட மனித உரிமை என்றும் புரிந்து கொள்ளக் கூடிய சூழல், ஒரு மக்கள்கூட்டத்தின் அடிப்படைப் புரிதலில் எழுந்த ஒட்டுமொத்த மாற்றத்தைக் குறிப்பிடுகிறது. தோள்சீலைப் போராட்டத்தின் ஊடாக ஆடை உடுப்பதற்கான சுதந்திரத்தைப் பெற்று நீண்ட காலம் ஆகவில்லை என்பதையும் நினைவு கூர வேண்டியுள்ளது.

மேல்சாதி இந்துக்களின் 'தர்ம சாசனங்கள்' காலம் கடந்து நிலைநிற்கும் என்பது ஒரு பொய்யெனச் சமூகம் உணரத் தொடங்கியபோது எதிர்ப்புகள் வலுத்தன. அதிகாரச் சக்தியுடன் சமரசம் செய்து, அவர்களின் நம்பிக்கைக்குரிய பணியாளர்களாகச் செயல்பட்ட மலையாள சூத்திரர் என்று சிறப்பிக்கப்பட்ட நாயர் வகுப்பினரின் பொது உணர்வும் ஆரம்ப கட்டங்களில் நம்பூதிரிகளுக்குச் சார்பாகவே இருந்தது.

ஆனால், காந்தியுடன் டி.கே.மாதவன் நடத்திய சந்திப்பில் அன்றைய சூழல்கள் விரிவாக விவாதிக்கப்பட்டன. பெரும்பான்மை மக்களின் உடல் சார்ந்த மனம் சார்ந்த ஒத்துழைப்பு இருப்பதை உணர்த்த மாதவனால் இயன்றது. ஆகவேதான், காங்கிரஸின் முற்போக்குவாத நாயர்களின் ஒத்துழைப்புடன் சத்தியாகிரகத்தைத் தொடங்க முடிந்தது. இருப்பினும் முழுமையான மாற்றத்திற்கும் சனாதன நெறி மீறலுக்கும் காந்தி எதிராக


அய்யா வைகுண்ட சுவாமிகள்


ஸ்ரீ நாராயண குரு


இ.எம்.எஸ்.நம்பூதிரிப்பாட்

இருந்தாரென்று அவ்விவாதத்தை நுணுக்கமாகப் பின்தொடரும்போது தெரியவரும்.

அந்த உரையாடலில் காந்தி இவ்வாறு குறிப்பிடுகிறார்: 'ஆமாம். நீங்கள் கோயில் நுழைவைப் பற்றி கேட்கும்போது தீண்டாமையைத் தடுக்க வேண்டும் என்கிற சாமான்யக் கருத்து ஒரு பருண்மை வடிவத்தைப் பெறுகிறது. ஆனால், சட்டம் தொடர்பான காரணங்களை முன்னிட்டு நீங்கள் கோயில் நுழைவுப் போராட்டத்தைக் கைவிட்டு பொதுக் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கும் உரிமையைப் பெற போராட வேண்டுமென உபதேசம் செய்கிறேன். அதன்பிறகு, பொதுப் பள்ளிகள் என்கிற விஷயத்திற்குச் செல்லலாம்.' சட்டம் தொடர்பான என்று இங்குக் குறிப்பிடப்படுவது பிராமண அறநெறி என்பதையும் மேல்சாதி இந்து சமுதாயம் பல்லாண்டுகளாகப் போற்றிப் பாதுகாத்து வைத்திருக்கக் கூடிய ஒன்று என்பதையும் காந்தி அறியாதவர் அல்ல.

டாக்டர் அம்பேத்கரின் 'சாதி ஒழிப்பு' என்ற புத்தகத்தின் மீதான கூரிய விமர்சனம் பத்தாண்டுகளுக்குப் பிறகு நடத்தும்போது அவர் இவ்விஷயத்தைத் திரும்பக் கூறுகிறார். 1936 ஜூலை 18ஆம் தேதி அரிஜன் இதழில் இவ்வாறு எழுதினார்: 'சைதன்யர், ஞானதேவ், துக்காராம், திருவள்ளுவர், ராமகிருஷ்ண பரமஹம்சர், ரவீந்திரநாத் தாகூர், சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் எளிதாக மதிப்பாய்வு செய்யக் கூடிய, மற்றவர்கள் ஏற்கக்கூடிய ஒரு மதம், டாக்டர் அம்பேத்கர் தனது உரையில் தெளிவுப்படுத்தியதைப் போல முற்றிலும் பயனற்றதா? மோசமான எடுத்துக்காட்டை வைத்து ஒரு மதத்தை மதிப்பிடக் கூடாது. அது தொடங்கி வைத்துள்ள மிகச் சிறந்த எடுத்துக்காட்டை வைத்துத்தான் மதிப்பிட வேண்டும். அதுவே விரும்பத்தக்க ஒரேயொரு அளவீடு.

அகச் சுத்திகரிப்பை சாத்தியமற்ற காரணியாக மதம் வரையறுத்து வைத்திருப்பதால் சாதியின் கொடிய இயல்பைத் தனிமைப்படுத்தினார் டாக்டர் அம்பேத்கர். சாதியமைப்பு இறந்தகாலத்தில் எங்கோ நிலைப்பெற்றிருந்த சிறப்புமிக்க அமைப்பு என்று மனப்பூர்வமாக நம்பும் ஒரு பிரிவினர் இன்றும் இருக்கிறார்கள் என்பது வேடிக்கையானது.

வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டைக் கொண்டாடும் கேரளத்தில் பிரபலமான பல கோயில்களில் பூஜை நடத்தும் உரிமையும் கோயில் நுழைவும் இன்னமும் உயர் பிரிவினரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்கிற யதார்த்தம் நீடிக்கிறது. சாதிக்கொடுமையின் வெளிப்படைத் தோற்றங்கள் குறைந்திருந்தாலும் சமூகத்தின் அகத்திற்குள் கட்டமைக்கப்பட்டு மறுசீரமைக்க இயலாதவாறு உறைந்திருப்பதை நினைவுகூர வேண்டியுள்ளது.

சமுதாய ஒருங்கமைப்பு மற்றும் பண்பாட்டு முன்னேற்றங்களின் காலம் என்று இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகள் விவரிக்கப்படுகின்றன. அதேவேளையில் சாதி எல்லைகளைக் கடந்து, சாதி ஒருங்கிணைப்பும் விவாதங்களும் உருவானதற்கான வரலாற்றுச் சான்றுகள் இல்லை. ஏற்றத்தாழ்வுகளை

வகைப்படுத்தல் என்கிற அம்சம் இந்த சமுதாயத்தின் பௌதீகம் மற்றும் ஆன்மீக ஸ்திரத் தன்மைக்குக்கும் மோதல்கள் இல்லாத சமூக வாழ்க்கைக்கும் தவிர்க்க இயலாத சக்தியாக விளங்குகிறதென நம்பப்பட்டதே அதற்கான காரணம்.

1940களின் பாதியில் வெளியான இ.எம்.எஸ்.நம்பூதிரிப்பாடின் 'கேரளம் மலையாளிகளின் தாய்நாடு' என்ற புத்தகத்தின் முதல் பாகத்தில் சாதுர் வர்ணத்தைச் சிறப்பிக்கும்போது, சமூகப் பாதுகாப்புக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் பயனளிக்கும் அமைப்பு என்று கூறுகிறார். ஆனால் காந்தி, பெரியார் ஆகியோரின் முன்னிலையும் ஆதரவும் போராட்டம் தேசியக் கவனத்தைப் பெற துண்டுதலாக இருந்தது. பல்வேறு வகுப்பினரின் பொருளாதார ஆதரவும் கிடைத்தது. இந்து மதத்தின் உள்கட்டமைப்பைப் பேண வேண்டியது இந்துக்களின் பொறுப்பு என்கிற நிலையில், வைக்கம் சத்தியாகிரகத்திற்கு இந்து அல்லாத சமுதாயத்தினரிடமிருந்து கிடைத்த ஆதரவைக் காந்தியடிகள் எதிர்த்தார்.

வைக்கம் சத்தியாகிரகப் பந்தலில் சேரமர்களின் மிகப் பெரிய கூட்டம் காந்தியடிகளின் முன்னிலையில் நடந்தது. எனினும், அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கான தவிர்க்கவியலாத தார்மீகத்தையும் நடைமுறைக்கு உகந்த அறிவுரைகளையும் மட்டும் அவர் வழங்கினார்.

அக்காலத்தில் தலித் மக்களிடையே உருவான அமைப்புகள் கூட மேல்சாதி இந்துகளுடன் நேரில் மோதுவதற்கான செயல்நிரல்களைத் தவிர்த்தன. பள்ளிக்கூட அனுமதி, தொழில்களில் பங்கு வகித்தல், மாணவர்களுக்கான உதவித்தொகைள் போன்ற விஷயங்களுக்கு முன்னுரிமை அளித்தன. இவ்விஷயங்களை அய்யன்காளி, பொய்கையில் யோஹன்னன், கே.பி.வள்ளோன், பாம்பாடி ஜான் ஜோசப் போன்றவர்கள் ஸ்ரீமூலம் மக்கள்சபையிலும் கொச்சி சட்டசபையிலும் நடத்திய உரைகளிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

டி.டி.ஸ்ரீகுமார் இவ்வாறு எழுதுகிறார்: 'தலித் தலைவர்கள் கோயில் நுழைவுப் போராட்டத்தில் பெரிய அக்கறை செலுத்தவில்லை. இப்போராட்டம் கோயிலுடன் தொடர்புடைய பொதுவழிகள் சார்ந்ததாக இருந்தமையால் நேரடியான பொதுவழி உரிமையையும் கல்விநிலையங்களில் அனுமதியையும் வலியுறுத்தினார்கள்.' அம்பேத்கரின் செயல்பாட்டைக் கவனிக்கும்போது இவ்விஷயம் மேலும் விளங்கும்.

கேரளத்தில் சமூக எழுச்சிகளின் வரலாற்றில் சீரிய பங்கு வகித்த வைக்கம் சத்தியாகிரகம், குருவாயூர் பாதயாத்திரை போன்ற சம்பவங்கள் மேல்சாதியினரை நேரடியாகப் பாதித்த காரணத்தால் கோயில் நுழைவு அறிக்கை என்கிற முக்கிய நோக்கம் நிறைவேறியது.

இதனுடைய தொடக்கம் என்கிற வகையில் வைக்கம் சத்தியாகிரகம் வரலாற்றில் அடையாளப்படுத்தப்படுகிறது. சாதியையும் அதனுடைய பகுதியான நவீனத்துவத்தையும் அமைப்பு ரீதியான நீக்குதல் என்பது நிகழ்காலத்தில் யதார்த்தமாகிக் கொண்டிருக்கிறது. இவ்வேளையில், வைக்கம் சத்தியாகிரகத்தின் நூறு வருடங்களில் கேரளம் பயணித்த வழிகளைப் பற்றி விமர்சனம் சார்ந்த வினாக்களை முன்வைப்பது பொருத்தமானதாகும்.

**ஓ.கே.சந்தோஷ்:**

**இலக்கிய விமர்சனம், சமூக ஆய்வு போன்ற விஷயங்கள் தொடர்பாகப் பத்துக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். சமகால மலையாள இதழ்களிலும் ஆய்வு இதழ்களிலும் கட்டுரைகள் எழுதி வருகிறார். தற்போது சென்னைப் பல்கலைக்கழகத்தில் மலையாளத்துறை உதவிப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.**

**தமிழாக்கம்: நிர்மால்யா**





முனைவர் எஸ்.ஷாஜி

# சாதியமைப்பும் வைக்கம் சத்தியாகிரகமும்

இந்திய சாதியமைப்பு தொடர்பாக எண்ணற்ற ஆய்வுகள் உள்ளன. அதைப் போலவே கேரளத்தின் சாதியமைப்பைப் பற்றியும் பல ஆய்வுகள் நடந்தேறி உள்ளன. இந்திய சாதியமைப்பின் மிகக் கொடியதும் இரக்கமற்றதுமான முகத்தை வெளிப்படுத்திய இடமாக கேரளம் விளங்கியது. இந்திய வரைப்படத்தில் தீண்டாமையைக் கோடிட்டுக் காட்டும் மிகவும் இருண்ட பிரதேசமே கேரளம் என்றார் காந்தியடிகள். 'இந்த மலபாரைச் சேர்ந்தவர்கள் எல்லாம் மனநோயாளிகள் அவர்களின் வீடுகள் மனநோயாளிகளின் விடுதிகள்' என்றார் சுவாமி விவேகானந்தர்.

பிரபல மானுடவியலாளர் டாக்டர். ஏ.அய்யப்பன் இவ்வாறு எழுதுகிறார்: பதினாறாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை, அதாவது பிரிட்டிஷார் தலையிடுவதற்கு முன்பு வரை கேரளத்தில் நிலவிய சாதியமைப்பு,



நமக்குத் தெரிந்தவரை தென்னாப்பிரிக்காவின் நிறவெறிக்கு நிகரானது. உறுதியான சில பாகுபாடுகள் இருந்தன.

முதலாவதாகக் கேரளத்தில் தோல் நிறத்தில் பாகுபாடு என்கிற கேள்வி எழவில்லை. தென்னாப்பிரிக்காவின் சில ரிசர்வ் பிரதேசங்களிலிருந்து அகற் நிறுத்தப்பட்ட இடத்தில், மேல்சாதிக்காரர்களின் வீடுகளிலிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் எப்போதும் வெகுதொலைவுக்குத் தள்ளி நிற்க வைத்தல் என்கிற கொடிய மூடநம்பிக்கைகள் பின்பற்றப்பட்டன. மட்டுமின்றி, நிலத்தின் மீதான உரிமையைத் தடைசெய்வது என்கிற பொருளாதாரத் தாக்குதல் முறையும் இருந்தது.

சமஸ்கிருத மந்திரங்களில் இருந்தும் விலக்கி வைக்கும் நடைமுறையும் இருந்தது. கர்மச் சித்தாந்தத்தின் அடிப்படையில், மதத்தின் அதிகார வலிமையின் பின்னணியில், மதத்தின் சட்டத்திற்குள் நின்று இவற்றைச் செய்தார்கள் என்பது நிறவெறியைக் கடந்த மற்றொரு பாகுபாடு. இதன் காரணமாகக் கேரளத்தில் துன்புறுத்தலுக்கு உள்ளானவர்கள், தாங்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறோம் என்கிற விஷயத்தை ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்றாகக் கருதக்கூடிய அறியாமையில் இருந்தார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலகட்டத்தில் திருவிதாங்கூரின் கன்னியாகுமரி மாவட்டத்தில் இறைப்பணியாற்றிய மதப்போதகர் சாமுவேல் மெட்டீர் (1835–1893) கேரளத்தின் சமூக வாழ்க்கையைத் தனது அனுபவத்தின் வெளிச்சத்தில் வெளிப்படுத்தினார். 'Native Life in Travancore' என்ற புத்தகத்தில் பல்வேறு சாதிகளுக்கிடையிலான இடைவெளியைப் பற்றி காணலாம்.'

சாதிகளை ஒன்றிலிருந்து ஒன்றாகப் பாகுபடுத்தும் இடைவெளி மிகவும் பரவலானது. கிட்டத்தட்ட இரண்டு மாறுபட்ட இனங்களைச் சேர்ந்த விலங்குகளுக்கிடையிலுள்ள அத்தனை ஆழமான இடைவெளி இது. வேறொரு அர்த்தத்தில் சொன்னால் கால்நடைகளுக்கும் நாய்களுக்கும் இடையிலுள்ள தொலைவுடன் அதற்கு ஒற்றுமை உள்ளது. இயல்புக்கு மாறான பாகுபாடின் வரிசை செயலாற்றலும் அதனுடைய பிரயோகமும் முழுமையானது. ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த விலங்குகளுக்கிடையிலுள்ள பரஸ்பரத் தொடர்பு கூட மனித இனங்களுக்கிடையில் இல்லை என்று பொருள்.

விலங்குகளுக்கு இருக்கும் விவேகம் கூட மனிதனிடம் இல்லையே என்கிற அவலமான உண்மையை உணர்ந்தமையால், இதே தேச, காலங்களில் வாழ்ந்திருந்த நாராயணகுரு:

**'மனுஷ்யாணாம் மனுஷ்யத்வம்**
**ஜாதிர் கோத்வம்கவாம்யதா**
**ந பிராஹமணாதிர ஸ்யைவம்**

ஹா! தத்வம் வேத்திகோபினா' என்கிற சுலோகத்தை உள்ளடக்கிய 'ஜாதி நிர்ணயம்' என்கிற படைப்பை எழுதத் தூண்டுதலைத் தந்திருக்குமெனத் தோன்றுகிறது. பசுவுக்குப் பசுவின் குணம் என்பதைப்போலதான் மனிதனுக்கு மனித குணம். பிராமணர், சத்திரியர் போன்ற பிரிவுகள் எதுவுமில்லை. இந்தத் தத்துவத்தை யாரும் உணர்வதில்லையே.

**'ஒரு சாதி ஒரு மதம் ஒரு தெய்வம் மனிதனுக்கு ஒரு யோனி ஒரு ஆகாசம் ஒரு பேதமும் மில்லதில் ஒரு சாதியில் நின்னல்லோ பிறன்னீடுன்னு சந்ததி நர ஜாதியிதோர்க்கும்போளொரு சாதியிலுள்ளதாம் நரஜாதியில் நின்த்ரே பிரனிடுன்னு விப்ரனும் பறயர்தானுமெந்துள்ளந்தரம் நர ஜாதியில்.'**

என்று தூய மலையாளத்தில் உயிரியல் அடிப்படையில் தெளிவுப்படுத்தித் தந்தார் குரு.

கேரளத்தில் ஜாதி உறவுகளைப் பற்றி அதனுடைய நெருப்பு வளையங்களின் ஊடாகப் பயணித்து எஸ்.என்.டி.பி அமைப்பின் பொதுச்செயலாளராகவும் ஸ்ரீ மூலம் மக்கள் சபையின் உறுப்பினராகவும் விவேகோதயம் இதழின் ஆசிரியராகவும் மகா கவிஞனாகவும் விளங்கியவர் குமாரன் ஆசான். 'துர் அவஸ்தா' என்கிற குறுங்காவியத்தில் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார்:

**'தொட்டுகூடாத்தவர் தீண்டிக்கூடாதவர் திருஷ்டியில் பெட்டாலும் தோஷமுள்ளோர் கெட்டில்லாத்தோர் தம்மிலுண்ணாத்தோர் இங்ஙனே யொட்டல்லஹோ ஜாதி கோமரங்கள்.'**

மகாதேவ தேசாயின் The Epic of Travancore என்ற புத்தகத்தின் தொடக்கத்தில் மிகவும் கவனிக்கத்தக்க இத்தகையதொரு வாசகம் உள்ளது: 'It was the Vaikam Satyagraha that for the first time revealted to India the depth of the evil. Untouchability was known in every part of India but unapproachability was something unknown.' இந்திய வரைப்படத்தில் மிகவும் இருண்ட நிலப்பகுதியாகக் கேரளத்தை அடையாளமிட காந்தியடிகளுக்குத் தூண்டுதலாக இருந்தது இத்தகைய தீண்டாமைதான்.

ஆனால், அதையும் கடந்து பார்வையில் பட்டாலும் தீட்டு உண்டாக்கக் கூடிய ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கூட கேரளத்தில் வாழ்ந்து வந்தார்கள் என்பதே உண்மை. இதில் நமக்கு வியப்பூட்டும் காரணி, வைக்கம் கோயில் மதிலைச் சுற்றியுள்ள பொது வழியில் தீண்டத்தகாதவர்கள் நடமாடும் உரிமைக்காக காந்தியடிகள், இந்திய தேசிய காங்கிரஸ் ஆகியோரின் அறிவுரைபடி கேரளத்தில் காங்கிரஸ்காரர்களின் தலைமையில் சத்தியாகிரகம் நடந்தது. இந்த நேரத்திலும் நால்வர்ண மரபும் சாதியமைப்பும் தூய்மையானவை என்று காந்தியடிகள் நியாயப்படுத்தினார்.

**'கெட்டில்லாத்தோர் தம்மில் உண்ணாத்தோர் இங்ஙனெ யொட்டல்லஹோ சாதி கோமரங்கள்.'**

என்ற ஆசானின் எதிர்ப்பு, சமபந்தி போஜனத்தையும் கலப்பு திருமணத்தையும் அக்காலத்தில் எதிர்த்த காந்திஜிக்கும் பாதகமானது. டி.கே.மாதவனுடன் 1921இல் திருநெல்வேலியில் நடைபெற்ற சந்திப்பில் காந்தி இவ்வாறு கூறினார்: என் மகனுடன் அமர்ந்து சமபந்தி உணவை உண்ண மாட்டேன். வெவ்வேறு சாதியினரிடையே நிகழும் கலப்பு திருமணத்தை எனது மகளுக்கும் மகனுக்கும் இடையே திருமணம் நடந்தால் எப்படி இருக்குமோ அப்படி நினைத்துக் கொள்வேன்.

வைக்கம் சத்தியாகிரக காலத்தில் 1924 மே மாதம் 27ஆம் தேதி சி.ராஜகோபாலாச்சாரி வைக்கத்தில் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதியை வாசிக்கலாம்: 'Let not the people of Vaikom or any other place fear that Mahatmaji wants caste to be abolished. Mahatmaji does not want the caste system to be done away with but he holds that untouchability should be abolished.... Mahatmaji does nit want you to dine with Thiyyas or Pulayas. What he wants is we must be prepare to touch and go hear other human beings as you touch and go hear a cowor horse.' அவர்ண ஜாதியினரைப் பொருத்தவரை எத்தனை அவமானகரமானது இதனுடைய கடைசி வார்த்தைகள் என்பதை நினைத்துப் பாருங்கள்.

பழமைவாத கீழ்ச்சாதி இந்துக்களின் மனநிலையைக் காயப்படுத்தும் விதமாக, சாதியமைப்பை எதிர்க்கவும், சமபந்தி போஜனத்தையும் கலப்புத் திருமணத்தையும் ஆதரிக்கவும் காந்தியடிகளோ காங்கிரஸ் தலைமையோ அன்று தயாரில்லை. சத்தியாகிரகக் காலத்தில் நாராயணகுருவைச் சந்தித்த வேளையில் (1925 மார்ச் 12) தாழ்த்தப்பட்டவர்களின் துன்பங்களைக்களையவும் தீண்டாமை ஒழிப்புக்கும்




வேறு எதையெல்லாம் செய்ய வேண்டும் என்று சுவாமி கருதுகிறீர்கள்?' என்று காந்தியடிகள் கேட்டார். 'அவர்களுக்கு கல்வியும் செல்வமுமே தேவை. சமபந்தி போஜனமும் கலப்புத் திருமணமும் வேண்டுமென்பது அவசியமில்லை.' என்று குரு எதிர்வினையாற்றினார்.

மனிதனுக்கு மதம், தோற்றம், மொழி போன்றவை எப்படியிருந்தாலும் அவர்களின் சாதி ஒன்றாக இருப்பதால் கலப்புத் திருமணமும் சமபந்தி போஜனமும் கடைப்பிடிப்பதில் எவ்வித தீமையும் கிடையாது' என்பதுதான் குருவின் உபதேசம்.

காந்தியடிகளின் சிவகிரி வருகையின் முக்கிய காரணம், வைக்கம் சத்தியாகிரகத்திற்கு நாராயணகுருவின் ஆதரவையும் ஆசியையும் பெறுவது அல்ல. மாறாக, மேல்சாதி இந்துக்களிடமிருந்தும் திருவிதாங்கூர் ஆட்சியாளர்களிடமிருந்தும் சாதிக் கொடுமையிலிருந்தும் மீண்டெழ மதம் மாற துணிந்த ஈழவ மக்களை, குருவின் தலையீடு மூலம் பின்வாங்கச் செய்யவும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அவர்களைப் பங்கேற்க வைக்க வேண்டும் என்பதுதான். குருவுக்கும் காந்தியடிகளுக்கும் இடையில் நடந்த உரையாடல்களை நுட்பமாக வாசிப்பவர்களால் இதைப் புரிந்து கொள்ள இயலும். இந்து மதத்தைத் துறந்து புத்த மதத்தைத் தழுவிய 'மிதவாதி' பத்திரிகையாசிரியர் சி.கிருஷ்ணன், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கெதிரான போராட்டத்திற்குக் கூடுதல் எண்ணிக்கையில் ஆட்களை, குறிப்பாக ஈழவர்களை வசீகரிக்க காங்கிரஸ் உருவாக்கிய சூழ்ச்சியாகவே வைக்கம் சத்தியாகிரகத்தைக் கண்டார்.

1948 வரையிலான காந்தியடிகளின் சொற்பொழிவுகளையும் எழுத்துகளையும் பின்தொடரும் ஒருவர் நால்வர்ணத்தையும் சாதியமைப்பையும் அவர் முழுமையாகப் புறக்கணிக்கவில்லை என்பதை உணர்ந்து கொள்வார். 'கம்யூனல் அவார்டு'க்குப் பிறகு (1932) சாதி ஒழிய வேண்டும் என்று சில சந்தர்ப்பங்களில் அவர் விரும்பியிருந்தார். எனினும், பழைய சாதியமைப்பு ஒழிந்ததற்காக வாழ்நாள் முழுவதும் வருத்தப்பட்டார். தீண்டாமை ஒழிப்பை வாழ்க்கை விரதமாகக் கடைப்பிடித்த

காந்தியடிகள் ஒருமுறை கூட சாதி ஒழிப்புக்காக சத்தியாகிரகத்தைக் கடைப்பிடித்ததில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

காந்தியடிகளால் ஈர்க்கப்பட்டு காங்கிரஸுக்கும் வைக்கம் சத்தியாகிரகத்திற்கும் வந்து சேர்ந்தவர் மன்னத்து பத்மநாபன். என்.எஸ்.எஸ் இயக்கத்தின் செயலாளராக இருந்தவர். வைக்கம் சத்தியாகிரகம் தொடர்பாக, காந்தியடிகளின் அறிவுரைப்படி ஒருங்கிணைக்கப்பட்ட சவர்ண பேரணிக்குத் தலைமை வகித்தவர். சாதியமைப்புக்கு எதிரான குறியீடாக விளங்கிய பெயருடன் இணைந்திருந்த சாதி வாலை அகற்றிய சாதனையாளராகவும் தியாகியாகவும் அவரை வரலாற்றுப் பக்கங்களில் பார்க்கிறோம்.



குமாரன் ஆசான்

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தான் சாதியமைப்பு கேரளத்தில் உருவாகிறது. பல்வேறு சாதியினருக்கிடையிலான ‘தீண்டாப்பாடு’ தூரங்கள் அன்றே நிச்சயிக்கப்பட்டிருந்தன. கேரளத்தின் சமூக அரசியல் துறைகளில் உயர்வகுப்பு ஆதிக்கம் வலிமையும் திடமும் பெறும் பனிரெண்டாம் நூற்றாண்டில், தொடுவதால் உண்டாகும் தீட்டு, நெருங்குவதால் உண்டாகும் தீட்டு இவற்றுடன் சில சாதியினர் பார்வையில் பட்டாலும் தீட்டு உண்டாகும் நிலையை எட்டியது.

மேலே குறிப்பிட்டதைப்போல பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம்வரை கேரளத்தின் சாதியமைப்பு தென்னாப்பிரிக்காவின் நிறவெறியைக் காட்டிலும் கொடூரமாக இருந்தது. சாதிப் பாகுபாடு அரசாங்கத்தின் வரி வசூலிலும் நீதி நியாய அமைப்பிலும் தண்டனை முறையிலும் பரவியிருந்தது. மார்புவரி, தலைவரி, ஏத்தி பணம், வலபணம் இப்படி எத்தனையே நிரல்படுத்த இயலாத வரி முறைகள் இருந்தன. 1865இல் 105 விதமாக வரிகளை திருவிதாங்கூர் அரசாங்கம் நீக்கியதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

தோள்சீலைப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு 1806இல் இருநூற்றுக்கு மேற்பட்ட ஈழவ இளைஞர்கள், அனுமதி மறுக்கப்பட்டிருந்த வைக்கம் கோயிலுக்குள் வணங்குவதற்காக நுழைந்தபோது திவான் வேலுத்தம்பியின் நாயர் பட்டாளம் இரக்கமின்றி வெட்டிக் கொன்று கோயில்குளத்தில் புதைத்த வரலாறும் உள்ளது.

தளவா குளம் படுகொலை என்ற பெயரில் அறியப்பட்ட இச்சம்பவம் கேரளத்தின் பொது நீரோட்ட வரலாற்றில், குறிப்பாக மேல்சாதி வரலாற்று ஆய்வாளர்களின் படைப்புகளில் கண்டடைய முடியாது. வைக்கம் கோயிலின் தடைக்கு எதிரான முக்கிய போராட்டம் என்று நம்பப்படும் தளவா குளம் கலகத்திற்கு முன்பு தொட்டு குடியேற்றக் காலம் வரை, சாதியமைப்பு உருவாக்கிய மூடநம்பிக்கைகளுக்கு எதிராக இங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் எண்ணற்ற மோதல்களைச் சந்தித்திருக்கக் கூடும்.

1865இல் டி.மாதவராவ் திவானாக ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தபோது (1857–1872) எல்லாப் பொதுச் சாலைகளிலும் எல்லாக் குடிமக்களும் நடமாட அனுமதியளித்து ஆணை வெளியானது. 1870இல் அலுவலகங்கள், நீதிமன்றங்கள், ராஜவீதிகள், சந்தைகள் போன்றவிடங்களில் மட்டுமல்ல, அனைத்து அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலும் சாதிப் பாகுபாடின்றி குடிமக்கள் அனைவரையும் அனுமதிப்பதற்கான ஆணை வெளியானது.

இருப்பினும், கோயில் அருகிலுள்ள சாலைகளில் நடமாடுவதற்கான சுதந்திரம், அவர்ணவத்தவர்களுக்கு வழங்கப்படவில்லை. உண்மையில் முன்னேற்றம் என்கிற மேல்சாதி வரலாற்றாளர்கள் புகழ்ந்துரைக்கும் திருவிதாங்கூர் அரசாணைகளில் பெரும்பாலானவை மோதல்களின்றி நடைமுறைக்கு வந்ததில்லை.

1900க்கு பிறகுதான் திருவிதாங்கூரில் தலித்துகளுக்குப் பொதுச்சாலைகளில் நடக்கவும் அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் படிக்கவும் அரசுப் பணிகளில் பிரவேசிக்கவும் ஸ்ரீமூலம் மக்கள் சபையில் உறுப்பினராகவும் இயன்றது. இக்கால கட்டத்தில் வரம்புக்கு உட்பட்டு ஈழவர்களுக்கு அரசாங்கப் பணிகள் வழங்கப்பட்டன.

அரசாங்கச் சத்திரங்களில் அனைத்துப் பிரிவினருக்கும் அனுமதி வழங்கும் உத்தரவு

1913இல் வெளியிடப்பட்ட போதிலும் 1921இல் குமாரன் ஆசானுக்கும் 1927இல் நாராயண குருவுக்கும் சத்திரம் மறுக்கப்பட்டதற்கான வரலாறுகள் உள்ளன. இருபத்தி ஐந்துக்கு மேற்பட்ட சந்திரங்களும் நூற்றுக்கு மேற்பட்ட பொதுச்சாலைகளும் குளங்களும் கிணறுகளும் இன்னும் அனுமதிக்கப்படாமல் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.' என்று திருமூலம் மக்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் போது 1933இல் அரசாங்கம் கூறியது. அப்போது வைக்கம் சத்தியாகிரகம் முடிந்து எட்டாண்டுகள் கடந்திருந்தன. அடிமை முறையைத் தடை செய்ததற்கான உத்தரவு 1855ஆம் வருடம் முதல் இருந்தபோதிலும் 1920களிலும் அது தொடர்ந்தது என்பதே உண்மை.



மன்னத்து பத்மநாபன்

**'நரன்னு நரனசுத்த வஸ்து போலும்**
**தரயில்நடப்பது தீண்டலாணுபோலும்**
**நரகமிவிடமாணுஹந்து கஷ்டம்!**
**ஹர! ஹர! இங்ஙனெ வல்லநாடுமுண்டோ?'**

என்று 1919இல் குமாரன் ஆசான் எழுதினார். அடுத்த வருடம் 1920இல் நாராயணகுரு வைக்கம் கோயிலை ஒட்டிய சாலையில் ரிக்ஷா வண்டியில் பயணித்தபோது, 'இங்கிருந்து ஈழவர் போன்ற சாதியினருக்கு அனுமதி இல்லை.' என்கிற பலகையைச் சுட்டிக் காட்டி மேல்சாதிப் பிரமுகர்கள் தடை விதித்தனர். நாய்க்கும் பூனைக்கும் அந்நிய மதத்தினருக்கும் தடையின்றிப் பயணிக்கக் கூடிய வழியின் ஊடாகப் பரிசுத்த ஆத்மாவான ஒரு புண்ணிய மனிதர் நடக்கக் கூடாது என்கிற கட்டுப்பாடு எத்தனை கேவலமானது என்பதை நினைத்துப் பாருங்கள்.

குருவின் பக்தர்களுக்குச் சினமூட்டிய இச்சம்பவம், 1921இல் திருநெல்வேலியில் காந்தியை சந்திப்பதற்கும் 1923இல் காங்கிரஸின் காக்கிநாடா நிகழ்ச்சியில் பங்கெடுக்கவும் டி.கே.மாதவனை ஊக்குவித்தது. இறுதியாக, காங்கிரஸ் ஆதரவுடன் வைக்கம் கோயிலில் சத்தியாகிரகம் நடத்தக் காரணமானது.

தீண்டாமைப் பலகையை நடுவதற்கு முன்பு திருவிதாங்கூர் கோயில் சாலைகளில் நடமாட தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி இருந்தது. வைக்கம் கோயிலுடன் வரலாற்றுத் தொடர்பான சில முந்தைய உறவுகள் ஈழவர்களுக்கு இருந்து வந்தது. நாயர் மகாஜன சபையும் எஸ்.என்.டி.பியும் இணைந்து 1924 மே 16ஆம் தேதி திருவிதாங்கூர் திவான் ராகவ அய்யரிடம் தந்த கோரிக்கை மனுவில் அந்த வரலாறு தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது: 'We would mention the existence of an Ezhava temple called Kallakkal close by the main temple with which the former is connected and the custom of taking 'Kodikkayar' in procession during ; Utsavam' by some of the prohibited castes of the very steps of the Western gate. There is also a tradition that in former days four Ezhava families had the previlage of supplying the firewood for the use of the temple and they had the right to take it to the steps of the four gates. We,therefore, submit that this prohibition is only recent and has not yet acquired the sanctity of ages or the status of an invariable custom.'

வைக்கம் கோயிலில் தீண்டாமைப் பலகை நிறுவப்பட்ட வருடத்தில், ஹரிப்பாடு கோயில் சாலையில் நடக்க ஈழவர்களை அனுமதிக்க வேண்டுமென்கிற கோரிக்கையை ஆலும்மூட்டில் கொச்சு குஞ்ஞு சான்னான், ஸ்ரீமூலம் மக்கள் சபையில் முன்வைத்தார். 1915இல் வைக்கம், திருனக்கர, சுசீந்திரம் போன்ற கோயில்களின் சுற்றுப்பகுதிகளில் நடப்பட்டிருந்த தீண்டாமைப் பலகைகளை அகற்ற வேண்டுமென்று குமாரன் ஆசான் வேண்டுகோள் விடுத்தார்.

கொல்லத்தில் நடத்த ஈழவர் நிகழ்ச்சி ஒன்றில் தலைமை வகித்த உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சி.ராமன்தம்பி என்பவர், ஈழவர் போன்றவர்களுக்கு எல்லாப் பொதுக் கோயில்களிலும் நுழைய அனுமதியளிக்க வேண்டுமென திருவிதாங்கூரில் முதல்முறையாகக் (1917) கருத்து தெரிவித்தார்.



அதைத் தொடர்ந்து 1918இல் கோயில் நுழைவைப் பற்றி சி.வி.குஞ்ஞுராமன் எழுதிய கட்டுரையொன்று டி.கே.மாதவனின் 'தேசாபிமானி' பத்திரிகையில் பிரசுரமானது. கோயில் நுழைவு வாதத்திற்கு வித்திட்ட கட்டுரையாக அது விளங்கியது.

1914–1920களில் எம்.கிருஷ்ணன் நாயர் திவானாகப் பதவி வகித்தார். டி.கே.மாதவன் 1919, 1920 ஆகிய வருடங்களில் கோயில் நுழைவு அனுமதிக்கான மசோதாவைத் தாக்கல் செய்தார். ராகவய்யரின் பதவி காலத்தில் (1920–1925) மதத்தைக் காரணம் காட்டி மசோதா நிராகரிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. அரசாங்கத்தின் கீழுள்ள கோயில்களையும், அரசாங்கத்தின உதவி பெறும் கோயில்களையும் இந்து மதத்தைச் சேர்ந்த அனைத்து வகுப்பினருக்காகத் திறந்து விடவேண்டும் என்கிற கோரிக்கையுடன் திருவிதாங்கூரின் இந்துக்களான பிரஜா சபை உறுப்பினர்கள் 46 பேர் ஒரு கோரிக்கை மனுவை 1922இல் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தார்கள்.

1923இல் குமாரன் ஆசானின் தலைமையில் கூடிய எஸ்.என்.டி.பி ஆண்டு நிகழ்ச்சியில், கேரளக் கோயில்களின் அருகிலுள்ள தீண்டாமைப் பலகைகள் அனைத்தையும் அகற்ற வேண்டும் என்கிற வேண்டுகோள் அறிக்கை வெளியிடப்பட்டது. வைக்கம் சத்தியகிரகத்தைப் பற்றி விவாதிக்கும்போது இந்தப் பின்னணியை மறக்க இயலாது.

உயர்சாதி ஆதிக்கத்தையும் கோயிலை மையமாகக் கொண்ட கேரள சமூக, அரசியல்,

பண்பாட்டு வாழ்க்கையையும் கோயில் பிரதிஷ்டைகளின் மூலமாக உடைத்தெறிந்து முன்னேறிய நாராயணகுரு ஒரு கட்டத்தில் இனி கோயில்கள் அல்ல கல்விக்கூடங்கள் தான் தேவையென்று தொண்டர்களுக்கு உபதேசித்தார். தனது குறிக்கோளிலிருந்து விலகி மூடநம்பிக்கைகளையும் மூட பழக்கவழக்கங்களையும் மையப்படுத்தி மீண்டும் கோயில்கள் மாறிவிடக் கூடும் என்கிற ஐயம் குருவின் உபதேசத்திற்குக் காரணமாக இருந்தது.

வைக்கம் சத்தியாகிரகத்தில் சொல்லாலும் செயலாலும் வலிமையும் உயிர்ப்பையும் வழங்கியவர்கள் ஈழவர்கள். பாதிஅளவில் மட்டுமே வெற்றியடைந்த சத்தியாகிரகம் முடிவடைந்த சத்தியாகிரகத்தைப் பாராட்டி காந்தியடிகள் எழுதினார். ஆனால், நாராயணகுருவிடமிருந்து எவ்வித எதிர்வினையும் இருக்கவில்லை. பாராட்டுக்குத் தகுதி இருப்பதாக குரு கருதியிருப்பார் போலும். உண்மையில் ஈழவர்களைப் பொருத்தவரை முன்னர் இழந்த சுதந்திரத்தின் பகுதியளவை மீட்டெடுப்பது மட்டுமே வைக்கம் சத்தியாகிரகம்.

ஆகவே, அதில் மகிழ்ச்சியடைய எதுவுமில்லை. வருந்தத்தக்கச் சம்பவங்களே நடந்தன.

அதனுடைய கொடிய பலனைத் தாமதமின்றி குரு எதிர்கொள்ள நேர்ந்தது. 1926இல் நாராயணகுருவுடன் மதுரை, ராமநாதபுரம், ராமேஸ்வரம், இலங்கை போன்றவிடங்களில் பயணிக்கும்போது ஏற்பட்ட அனுபவத்தை குருவின் சீடரான வித்யானந்த சுவாமிகள் பதிவு செய்கிறார். ‘எல்லாம் அனுகூலமாக இருந்தபோதிலும் நடுவில் ஒரு சங்கடம் நிகழ்ந்தது. வைக்கம் சத்தியாகிரகத்தின் செய்தி ராமேஸ்வரத்தையும் எட்டியிருந்தது. முன்பு தீண்டத்தக்கவராக இருந்த நாராயணகுரு சுவாமிகள் வைக்கம் சத்தியாகிரகத்திற்குப் பிறகு தீண்டத்தகாதவர் ஆனார்.

முன்னர் குரு ராமேஸ்வரத்திற்குப் போனபோது தீண்டாமை இருக்கவில்லை. சுவாமிகளின் சாதியினரான ஈழவர்களுக்கும் தீட்டு இருக்கவில்லை. தீண்டத்தகாத சாதியைச் சேர்ந்த நாராயணகுரு வருகிறார். கோயிலுக்குள் அனுமதிப்பதில் மிகுந்த கவனம் தேவை என்று ராமநாதபுர கலெக்டரின் முன்னறிவிப்பு ராமேஸ்வரம் கோயில் அறங்காவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதைத் தெரிந்து கொண்டோம். நாங்கள் ராமேஸ்வரத்திற்கு சென்றதற்கு அடுத்தநாள் அறங்காவலர் ஒருவர் சுகுணானந்த குரு சுவாமிகளை வழியில் சந்தித்துப் பல கேள்விகளைக் கேட்டுத் தொல்லை தந்தார். கோயிலில் நுழையக் கூடாது என்று எச்சரித்தார். இந்த விவரங்களைத் தெரிந்து கொண்ட நாராயணகுருவுக்கு வெறுப்பு மேலிட்டது.

அப்போது வைக்கம் சத்தியாகிரகம் பற்றி அவர் கூறிய கருத்துகளை இங்கு பதிவு செய்வதில்லை. ராமேஸ்வரத்தில் இரண்டு மாதங்கள் தங்க வேண்டுமென்கிற எண்ணத்தை கைவிட்டு, ராமேஸ்வரத்திலிருந்து கிளம்ப முடிவெடுத்தார்.’ வைக்கம் சத்யாகிரகத்தைப் பற்றி வெறுப்புடன் நாராயணகுரு என்ன கூறி யிருப்பார்? நிச்சயமாக அதைக்குறித்து ஆரம்பம் முதல் குருவின் மனதில் நிறைந்து நின்றிருந்த அனைத்து எதிர் சிந்தனைகளையும் அப்போது வெளியிட்டிருப்பார். டி.கே.மாதவனின் வேண்டுகோளுக்கு மதிப்பளிப்பதற்காகவே குரு சத்தியாகிரகத்திற்கு ஒத்துழைத்தார்.

**முனைவர் எஸ்.ஷாஜி:**

**திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள காந்தி கிராமம் கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் மலையாள ஆய்வு மைய இயக்குநராகவும் பேராசிரியராகவும் பணியாற்றுகிறார்.**

**தமிழாக்கம்: நிர்மால்யா**



# ARTICLES


IN MEMORY OF
VAIKOM SATHYAGR
STONE LAID BY
Smt: INDIRA GAN
PRIME MINISTER OF I
ON 20th APRIL 19



*TK Madhavan was a good example of the 'ezhavas' educated elite. He was born in 1885 into one of the wealthy matrilineal joint families of central Travancore; his father came from another. The extensive Travancore school system allowed him to take his primary education close to home. He attended high school in the nearby town of Mavelikara, and eventually matriculated from a Roman Catholic high school in Quilon. His school experiences impressed on him the disabilities of 'ezhavas', disabilities which he later realized were shared by 'ezhavas' throughout the state: "My companion on my daily trip to and from the school was a Nair boy... whose poor mother was a dependent of ours. He could go straight along all the roads, whereas I, inspite of being economically better off, had to leave the road every now and then to avoid polluting. This used to cut me to the quick".*

Before he was 20 he was involved in social affairs, organizing and speaking to 'ezhavas' in central Travancore, and acting as an English translator for 'ezhavas' notables attending the representative assembly in Trivandrum. He came under the influence of Sri Narayana Guru and the SNDP Yogam, the 'ezhavas' caste association, and worked for the Yogam from 1914. In the following year he founded the newspaper Deshabhimani to publicize 'ezhavas' grievances and achievements.

Madhavan's experience with the Civic Rights League probably influenced his views on how 'ezhavas' should campaign for the attainment of their civil rights. In the Civic Rights League, they had been used chiefly as an additional social category to bolster the arguments of educated Syrian Christians, Madhavan saw that this alliance with the Syrian Christian elite was not the



வைக்கம் போராட்டம்
(1924-2023)

# Temple-entry Movement in Travancore, 1860-1940

ROBIN JEFFREY





only one open to educated ‘ezhavas’, Indeed, it was perhaps not even the most desirable, for Christians did not rule Travancore; caste-Hindus did that. Madhavan turned away from the Christian alliance, and stressed the need for Ezhavas to win the cooperation of educated, progressive caste-Hindus. Such support, he argued, would demonstrate the changing times and cause the Government to abolish the old disabilities. The rise to prominence of Gandhi and the Gandhian ethic greatly aided Madhavan in his pursuit of the new strategy, for hundreds of caste-Hindus revered Gandhi and looked for a way to participate in his campaigns.

